சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள்

பெரியார் பல்கலைக்கழகப் பகுதிநேர முனைவர் பட்டத்திற்காக (பிஎச்.டி.)
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

அ.மோகனா

(பதிவு எண். R16TAM01)

நெறியாளர்

முனைவர் ரா.தேவணன்

தமிழ்த்துறை

பெரியார் பல்கலைக்கழகம்

(தேசியத்தர மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டின் கீழ் 'A++' தரச் சான்றிதழ் பெற்றது NIRF 63 Rank, ARIIA Rank 10)

சேலம்–636 011.

ஜனவரி – 2023

நெறியாளர் சான்றிதழ்

முனைவர் ரா.தேவணன்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் – 636 011.

பெரியார் பல்கலைக்கழகம் அளிக்கும் பகுதிநேர முனைவர் பட்டத்திற்காக (பிஎச்.டி.,) **சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள்** என்னும் தலைப்பில் **அ.மோகனா** அவர்கள் அளிக்கும் இவ்வாய்வேடு எனது மேற்பார்வையின்கீழ் இவருடைய சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என்றும் இதற்குமுன் இவ்வாய்வேடு வேறு எந்தப்பட்டத்திற்கும் எந்த ஆய்வாளருக்கும் அளிக்கப்படவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

இடம்: சேலம்–11

நாள்:

தமிழ்த்துறைத் தலைவர் கையொப்பம் **நெறியாளர் கையொப்பம்**

ஆய்வாளர் உறுதிமொழி

அ.மோகனா
பதிவு எண்.R16TAM01
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்–636 011.

பெரியார் பல்கலைக்கழகம் அளிக்கும் பகுதிநேர முனைவர் பட்டத்திற்காக (பிஎச்.டி.,) **சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள்** என்னும் தலைப்பில் என்னால் செய்யப்பட்ட இவ்வாய்வேடு எனது சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என்றும் இதற்குமுன் இவ்வாய்வேடு வேறு எந்தப்பட்டத்திற்கும் அளிக்கப்படவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம்: சேலம்–11 ஆய்வாளர் கையொப்பம்

நாள்:

PERIYAR UNIVERSITY, SALEM–636011
Tamil Nadu, India
NAAC '**A++**' Grade - State University - NIRF Rank 63 – ARIIA Rank 10

CERTIFICATE OF PLAGIARISM		
1.	Name of the Research Scholar	**A. MOHANA**
2.	Course of Study	Ph.D.
3.	Subject	TAMIL
4.	Name of the Supervisor	**Dr. R. DEVANAN**
5.	Department/Institution/ Research Centre	DEPARTMENT OF TAMIL, PERIYAR UNIVERSITY, SALEM
6.	Title of the Thesis/ Dissertation	**சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள்**
7.	Acceptable limit	20 %
8.	% Of similarity of content identified	0 %
9.	Software used	URKUND
10.	Date of verification	10.01.2023

Report of the plagiarism check, items with a percentage of similarity is attached

Signature of the Scholar **Signature of the Supervisor**

University Librarian

Document Information

Analyzed document	A_Mohana_Tamil_Ph.D.pdf (D155334439)
Submitted	2023-01-10 07:31:00
Submitted by	M.Jayaprakash
Submitter email	plagiarism@periyaruniversity.ac.in
Similarity	0%
Analysis address	plagiarism.periyar@analysis.urkund.com

Sources included in the report

Entire Document

K‹Diu r§f üšfŸ jäHf¤Â‰F« jäœebkhê¡F« bgUik jUtd. m¡fhy k¡fë‹ fhjš, Åu«, g©ghL, tuyhW ngh‹wt‰iw m¿a ÏaY«. jäHf¤Â‹ tuyh‰W¥ bg£lfkhf¢ r§f Ïy¡»a« mikªJŸsJ. mt‰¿š Ïa‰ifæ‹ tuyh‰iwÍ« Ïiz¤J¡ T¿ÍŸsd®. g©ila jäœ k¡fŸ Ïa‰ifnahL Ïiaªj thœÎ thœªJŸsd®. mjdhš mt®fŸ Ïa‰ifia k£L« jå¥ghlyhf¥ ghléšiy. kåj‹ Ïa‰ifæl« ÏUªJ gy ghl§fis¡ f‰WŸsh‹. jh‹ thG« NHèš cŸs Ïa‰if ãfœÎfis c‰Wneh¡» cz®ªJ j‹ thœéaiy K‹bdL¤J¢ br‹wh‹. kåj thœéaèš Ïa‰if gy jh¡f§fis V‰gL¤ÂÍŸsJ. mªj¤ jh¡f§fŸ kåj thœéš kh‰w§fis V‰gL¤ÂÍŸsJ. r§f fhy k¡fë‹ thœéaèš Ïa‰if X® m§fkhfnt ÏUªJŸsJ. m«k¡fë‹ thœéaiy¥ ghL«bghGJ Ïa‰ifÍ« Ïiz¤J¥ ghoÍŸsd®. mt‰¿š m~¿iz cæçd§fŸ Kj‹ik Ïl«bgW»‹wd. Ïit k¡fë‹ thœéaèš bgU«g§F t»¤JŸsd. m~¿iz cæçd§fŸ Ïšiy våš k¡fë‹ thœéaèš beU¡foahd ãiy V‰g£oU¡F«. m¤jF m~¿iz cæçd§fSl‹ thHnt©Lbkåš mt®fŸ mt‰¿‹ cz®Îfis m¿ªÂU¤jš nt©L«. m~¿iz cæçd§fë‹ thœéaiy c‰Wneh¡» mt‰¿‹ cz®ÎfŸ tUzidÍl‹ és¡f¥gL»wJ. òyt®fŸ m~¿iz cæçd§fë‹ cz®ÎfisÍ« cz®¤ÂÍŸsd®. m›tifæš r§f Ïy¡»a¤Âš Ïl«bgW« m~¿iz cæçd§fë‹ cz®Îfis és¡FtJ Ï›thŒnt£o‹ neh¡fkhF«. 1

MŒÎ¤ jiy¥ò r§f Ïy¡»a¤Âš m~¿iz cæçd§fë‹ cz®ÎfŸ v‹gJ Ï›thŒé‹ jiy¥ghF«. MŒÎ všiy r§f Ïy¡»a üšfshd g¤J¥gh£L v£L¤bjhifæš >u¿Î Kjš lªj¿Î cŸs cæçd§fŸ všiyahf¤ Âfœ»‹wd. MŒÎ neh¡f« Ï›Îyf thœéaèš m~¿iz cæçd§fS¡F Kj‹ik ÏlK©L. k¡fŸ mt‰Wl‹ ÏizªJ thHnt©Lbk‹whš mt‰¿‹ cz®Îfis cz®ªJ brašglnt©oaJ Kj‹ikahdJ. m›tifæš r§f Ïy¡»a¤Âš fhz¥gL« m~¿iz cæçd§fis tif¥gL¤Â mt‰¿‹ cz®Îfis és¡FtJ Ï›thŒé‹ neh¡f«. MŒÎ¢ Á¡fš r§f Ïy¡»a¤Âš k¡fë‹ fhjš, Åu« v‹W thœéaiy Kj‹ik¥gL¤J« ghlšfë‹ Cnl F¿¥ò¥ bghUshf cŸs m~¿iz cæçd§fë‹ cz®Îfis cz®ªJ mt‰iw¥ gF¤J és¡FtJ MŒÎ¢ Á¡fyhf mikªjJ. MŒÎ¡ fUJnfhŸ r§f Ïy¡»a§fŸ k¡fë‹ cz®Îfis btë¥gL¤Jtj‰F m~¿iz cæçd§fë‹ cz®ÎfisÍ« F¿¥ò¥ bghUshf¥ 2

ga‹gL¤ÂÍŸsd®. m›Ïæçd§fë‹ cz®ÎfisÍ« gÂÎ brŒJŸsikia btë¥gL¤JtJ MŒé‹ fUJnfhshF«. MŒÎ K‹ndho jäœ Ïy¡»a§fëš cæçd§fŸ bjhl®ghd MŒÎfŸ btëtªJŸsd. lh¡l® K.tujuhrç‹ gHªjäœ Ïy¡»a¤Âš Ïa‰if, Kidt® Ã.vš. rhäæ‹ r§f Ïy¡»a¤Âš éy§»d és¡f«, r§f Ïy¡»a¤Âš Áy cæçd§fŸ, Kidt® nrh.FUrhäæ‹ Ïy¡»a¤Âš Ïa‰if, Ïuh. trªj Fkhç‹ m¿éaš f©nzh£l¤Âš r§f Ïy¡»a éy§FfŸ, Kidt® g.thâ$æ‹ r§f mf¥ ghlšfëš éy§FfŸ tê m¿ayhF« fU¤Âaš M»a üšfŸ Ï›thŒé‰F K‹ndhoahf és§F»‹wd. MŒÎ¢ rh‹whjhu§fŸ MŒÎ¡fhd mo¥gil Mjhu§fŸ Kj‹ik¢ rh‹whjhu§fŸ (Primary Sources) Jizik¢ rh‹whjhu§fŸ (Secondary Sources) vd Ïu©L tifahf¤ Âu£l¥g£LŸsd. Kj‹ik¢ rh‹whjhu§fŸ (Primary Sources) r§f Ïy¡»a üšfshd v£L¤bjhif, g¤J¥gh£L M»a gÂbd£L üšfS« Kj‹ik¢ rh‹whjhu§fshf¤ Âfœ»‹wd. Jizik¢ rh‹whjhu§fŸ (Secondary Sources) r§f Ïy¡»a§fŸ bjhl®ghd ÂwdhŒÎ üšfŸ, MŒÎ ÏjœfŸ, MŒntLfŸ, MŒtu§f¡ f£LiufŸ, fiy¡ fsŠÁa§fŸ, thœéa‰ 3

fsŠÁa§fŸ, mfuhÂfŸ, ãf©LfŸ, brh‰bghêÎfŸ ngh‹wit Jizik¢ rh‹whjhu§fshf¥ ga‹gL¤j¥g£LŸsd. MŒÎ mQFKiw r§f¥ ghlšfëš Ïl«bgW« m~¿iz cæçd§fis tif¥gL¤Â¥ gF¥gjhš gF¥ghŒÎ mQFKiw ga‹gL¤j¥gL»‹wJ. m~¿iz cæçd§fë‹ cz®Îfis és¡»¡ TWtjhš és¡féaš mQFKiw Ïl«bgW»‹wJ. MŒÎ¥ gF¥ò Ï›thŒÎ K‹Diu KoÎiu Ú§fyhf lªJ Ïašfshf¥ gF¡f¥g£LŸsJ. mit, 1. m~¿iz cæçd§fë‹ cz®ÎfŸ- és¡f« 2. éy§Ffë‹ cz®ÎfŸ 3. gwitfë‹ cz®ÎfŸ 4. Ú®thœ cæçd§fë‹ cz®ÎfŸ 5. Ãw cæçd§fë‹ cz®ÎfŸ v‹gdthF«. Ïaš és¡f« Ïaš x‹W : m~¿iz cæçd§fë‹ cz®ÎfŸ – és¡f« m~¿iz cæçd§fë‹ cz®ÎfŸ - és¡f« v‹gJ KjyhäayhF«. Ï›éaèš cæUŸs mid¤J« cæçd« 4

Certificate of Genuineness of the Publication

This is to certify that Ph.D Candidate **A. MOHANA** working under my supervision has published a research article in the **UGC Care Referred-** list of journals named **1. International Research Journal of Tamil** with **Vol.4 Issue No. 4** Page No. **125-130** and year of publication **2022** published by **IOR Press, 2. Modern Thamizh Research** with **Vol.8 Issue No. 4,** Page No. **711-715** and year of publication **October – December 2020** published by **Raja Publications.** The contents of the publication incorporate part of the results presented in her thesis.

Research Supervisor

Countersigned

Head of the Department

நன்றியுரை

பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொள்வதற்கு வாய்ப்பளித்த பெரியார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் இன்னாள் துணைவேந்தர் ஆகியோருக்கு எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்த்துறையைச் சிறந்த முறையில் வழி நடத்தியும் மாணவர்கள் ஆய்வாளர்கள் நலனையே முதன்மையாகக் கருதி உறுதுணையாக இருந்து ஊக்கமளித்து வரும் தமிழ்த்துறைத் தலைவர் **பேராசிரியர் தி.பெரியசாமி** ஐயா அவர்களுக்கு எனது மனம்நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்வுத் தொடர்பான கருத்துக்களை வழங்கியும் என்னை ஊக்கப்படுத்தியும் இவ்வாய்வேடு உருவாவதற்குக் காரணமான எனது நெறியாளர் **முனைவர் ரா.தேவணன்** அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியினைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்வுச் சிறப்பாக அமைவதற்கு அறிவுரைகளை வழங்கிய பேராசிரியர்கள் **முனைவர் ம.சுந்தரமூர்த்தி, முனைவர் சு.வேலாயுதன், முனைவர் இரா. வசந்தமாலை** இணைப்பேராசிரியர் **முனைவர் க.மைதிலி** ஆகிய அனைவருக்கும் எனது நன்றி உரியது.

நான் கல்வி பயிலவேண்டும் என்று விரும்பிய எனதுதாய் **க.செல்லம்மாள்,** எனது மாமா **க.வெங்கடாசலம்** ஆகியோருக்கும் நான் உயர்கல்வி பயின்று முனைவர்பட்டம் பெற வேண்டும் என்று விரும்பிப் படிக்க அனுமதியளித்த என் கணவர் **கீ.ம.பரசுராமன்** மற்றும் குடும்பத்தார் அனைவருக்கும் எனது நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். மேலும்

எனது முனைவர்பட்ட படிப்பில் எனது குழந்தைகள் **கீ.ப. நந்திதா, கீ.ப.நந்தனா** ஆகியோரின் உதவிகளை மறக்க இயலாது. அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என் இணைபிரியா நண்பர்களான **த.நர்மதா, ம.செந்தில்குமார், மா.செல்வபிரியா, வெ.சதீஸ்** மற்றும் அனைத்து நண்பர்களுக்கும் எனது நன்றியினைக் கூறிக் கொள்கின்றேன்.

ஆய்விற்குத் தேவையான நூல்களைத் தந்துதவிய பெரியார் பல்கலைக்கழக நூலகத்திற்கும், நூலகக்காப்பாளர் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றி உரியது.

ஆய்வேட்டினைச் சிறந்த முறையில் தட்டச்சுச் செய்து கட்டமைத்துக் கொடுத்த **சி.கௌதமன் (ஜீ.வி.பிரிண்ட் பார்க்)** அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்

அ.மோகனா

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகநா.	–	அகநானூறு
இறை.அகப்.	–	இறையனாரகப் பொருள்
உ.ஆ.	–	உரைஆசிரியர்
ஐங்.	–	ஐங்குறுநூறு
கலித்.	–	கலித்தொகை
குறுந்.	–	குறுந்தொகை
சிறுபாண்.	–	சிறுபாணாற்றுப்படை
திருமுருகு.	–	திருமுருகாற்றுப்படை
தொல்.	–	தொல்காப்பியம்
நம்பி.	–	நம்பியகப்பொருள்
நற்.	–	நற்றிணை
நெடுநல்.	–	நெடுநல்வாடை
நூ.ப.	–	நூற்பா
ப.	–	பக்கம்
பக்.	–	பக்கங்கள்
பட்டினப்.	–	பட்டினப்பாலை
புறநா.	–	புறநானூறு
பெரும்பாண்.	–	பெரும்பாணாற்றுப்படை
மதுரைக்.	–	மதுரைக்காஞ்சி
மலைபடு.	–	மலைபடுகடாம்
முல்லை.	–	முல்லைப்பாட்டு

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

Tamil Virtual Academy
Chennai - 600 025.

[www.tamilvu.org ● www.tamildigitallibrary.in]

சான்றிதழ் / Certificate

திரு./திருமதி./செல்வி. அ. மோகனா பதிவு எண் R16-TAM-01 (2016) அவர்களின் முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்புக்கான "சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள்"

ஆய்வுச் சுருக்கம், ஆய்வுத் தொகுப்பு மற்றும் கலைச்சொற்களின் பட்டியல் ஆகியவற்றின் மின் நகல்கள் பெரியார் பல்கலைக்கழகம் மூலமாக தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் 10.09.2022 அன்று பெறப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

This is to certify that the digital copies of research abstract, synopsis and list of glossaries of the Thesis entitled "Sanga Ilakkiyathil Agrinai Uyrinangalin Unarvugal" done by Thiru. / Thirumathi./ Selvi. A. MOHANA Reg. No R16-TAM-01 (2016) student of Ph.D. programme in PERIYAR UNIVERSITY, have been received by the Tamil Virtual Academy on 10.09.2022.

முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப.,
இயக்குநர்

TVA/2022/0087

பொருளடக்கம்

இயல்	தலைப்பு	பக்க எண்
	முன்னுரை	1–8
ஒன்று	அஃறிணை உயிரினங்கள் – விளக்கம்	9–38
இரண்டு	விலங்குகளின் உணர்வுகள்	39–150
மூன்று	பறவைகளின் உணர்வுகள்	151–214
நான்கு	நீர்வாழ் உயிரினங்களின் உணர்வுகள்	215–238
ஐந்து	பிற உயிரினங்களின் உணர்வுகள்	239–261
	முடிவுரை	262–265
	துணைநூற்பட்டியல்	
	பின்னிணைப்பு	

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியம் தனிப் பாடல்களின் தொகுப்பு. பல புலவர்கள் அவர்கள் வாழ்ந்த சூழலில் தாம் கண்டு உணர்ந்தவற்றைப் பாடல்களாகப் பாடியுள்ளனர். அவர்களின் மனநிலையும் மக்களின் வாழ்வியலும் இணைந்தே சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன. தொல்காப்பியர் அஃறிணை உயிரினங்களின் புலன் உணர்வுகளையும் அவர்காலத்தில் அவற்றிற்கு வழங்கப்பட்ட பெயர்களையும் சுட்டியுள்ளார். சங்ககாலத்தில் மக்கள் வாழ்வியலில் இயற்கைக்குச் சிறப்பான இடமுண்டு. அவர்கள் இயற்கையோடு இயந்து வாழ்ந்துள்ளனர். இயற்கையோடு ஒன்றிவாழ இயற்கை நிகழ்வுகளையும் அஃறிணை உயிரினங்களின் வாழ்வியல் முறைகளையும் அறிந்தும் உணர்ந்தும் வாழ்ந்துள்ளனர். மக்கள் உணர்ந்திருந்த அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளைச் சங்கப்புலவர்கள் தங்களின் பாடல்களில் கூறியுள்ளனர். அவற்றைக் கொண்டு அஃறிணை உயிரினங்களான விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள், ஊர்வன, பூச்சிகள், வண்டுகள் போன்றவற்றின் காதல், இன்பம், குடும்பம், தாய்மை, மகிழ்ச்சி, சினம், வீரம், துன்பம் போன்ற உணர்வுகளை பகுத்து ஆராய்வதே இவ்வாய்வேட்டின் நோக்கமாகும்.

முன்னுரை

சங்க நூல்கள் தமிழகத்திற்கும் தமிழ்மொழிக்கும் பெருமை தருவன. அக்கால மக்களின் காதல், வீரம், பண்பாடு, வரலாறு போன்றவற்றை அறிய இயலும். தமிழகத்தின் வரலாற்றுப் பெட்டகமாகச் சங்க இலக்கியம் அமைந்துள்ளது. அவற்றில் இயற்கையின் வரலாற்றையும் இணைத்துக் கூறியுள்ளனர். பண்டைய தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்துள்ளனர். அதனால் அவர்கள் இயற்கையை மட்டும் தனிப்பாடலாகப் பாடவில்லை. மனிதன் இயற்கையிடம் இருந்து பல பாடங்களைக் கற்றுள்ளான். தான் வாழும் சூழலில் உள்ள இயற்கை நிகழ்வுகளை உற்றுநோக்கி உணர்ந்து தன் வாழ்வியலை முன்னெடுத்துச் சென்றான். மனித வாழ்வியலில் இயற்கை பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அந்தத் தாக்கங்கள் மனித வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. சங்க கால மக்களின் வாழ்வியலில் இயற்கை ஓர் அங்கமாகவே இருந்துள்ளது. அம்மக்களின் வாழ்வியலைப் பாடும்பொழுது இயற்கையும் இணைத்துப் பாடியுள்ளனர். அவற்றில் அஃறிணை உயிரினங்கள் முதன்மை இடம்பெறுகின்றன. இவை மக்களின் வாழ்வியலில் பெரும்பங்கு வகித்துள்ளன. அஃறிணை உயிரினங்கள் இல்லை எனில் மக்களின் வாழ்வியலில் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கும். அத்தகு அஃறிணை உயிரினங்களுடன் வாழவேண்டுமெனில் அவர்கள் அவற்றின் உணர்வுகளை அறிந்திருத்தல் வேண்டும். அஃறிணை உயிரினங்களின் வாழ்வியலை உற்றுநோக்கி அவற்றின் உணர்வுகள் வருணனையுடன் விளக்கப்படுகிறது. புலவர்கள் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளையும் உணர்த்தியுள்ளனர். அவ்வகையில் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளை விளக்குவது இவ்வாய்வேட்டின் நோக்கமாகும்.

ஆய்வுத் தலைப்பு

சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள் என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

ஆய்வு எல்லை

சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டு எட்டுத்தொகையில் ஈரறிவு முதல் ஐந்தறிவு உள்ள உயிரினங்கள் எல்லையாகத் திகழ்கின்றன.

ஆய்வு நோக்கம்

இவ்வுலக வாழ்வியலில் அஃறிணை உயிரினங்களுக்கு முதன்மை இடமுண்டு. மக்கள் அவற்றுடன் இணைந்து வாழவேண்டுமென்றால் அவற்றின் உணர்வுகளை உணர்ந்து செயல்படவேண்டியது முதன்மையானது. அவ்வகையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் அஃறிணை உயிரினங்களை வகைப்படுத்தி அவற்றின் உணர்வுகளை விளக்குவது இவ்வாய்வின் நோக்கம்.

ஆய்வுச் சிக்கல்

சங்க இலக்கியத்தில் மக்களின் காதல், வீரம் என்று வாழ்வியலை முதன்மைப்படுத்தும் பாடல்களின் ஊடே குறிப்புப் பொருளாக உள்ள அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளை உணர்ந்து அவற்றைப் பகுத்து விளக்குவது ஆய்வுச் சிக்கலாக அமைந்தது.

ஆய்வுக் கருதுகோள்

சங்க இலக்கியங்கள் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளைக் குறிப்புப் பொருளாகப்

பயன்படுத்தியுள்ளனர். அவ்வுயிரினங்களின் உணர்வுகளையும் பதிவு செய்துள்ளமையை வெளிப்படுத்துவது ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு முன்னோடி

தமிழ் இலக்கியங்களில் உயிரினங்கள் தொடர்பான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. டாக்டர் மு.வரதராசரின் பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, முனைவர் பி.எல். சாமியின் சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், புள்ளின விளக்கம், சங்க இலக்கியத்தில் சில உயிரினங்கள், முனைவர் சோ.குருசாமியின் இலக்கியத்தில் இயற்கை, இரா. வசந்த குமாரின் அறிவியல் கண்ணோட்டத்தில் சங்க இலக்கிய விலங்குகள், முனைவர் ப.வாணிஸ்ரீயின் சங்க அகப் பாடல்களில் விலங்குகள் வழி அறியலாகும் கருத்தியல் ஆகிய நூல்கள் இவ்வாய்விற்கு முன்னோடியாக விளங்குகின்றன.

ஆய்வுச் சான்றாதாரங்கள்

ஆய்வுக்கான அடிப்படை ஆதாரங்கள் முதன்மைச் சான்றாதாரங்கள் (Primary Sources) துணைமைச் சான்றாதாரங்கள் (Secondary Sources) என இரண்டு வகையாகத் திரட்டப்பட்டுள்ளன.

முதன்மைச் சான்றாதாரங்கள் (Primary Sources)

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய பதினெட்டு நூல்களும் முதன்மைச் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன.

துணைமைச் சான்றாதாரங்கள் (Secondary Sources)

சங்க இலக்கியங்கள் தொடர்பான திறனாய்வு நூல்கள், ஆய்வு இதழ்கள், ஆய்வேடுகள், ஆய்வரங்கக் கட்டுரைகள், கலைக் களஞ்சியங்கள், வாழ்வியற்

களஞ்சியங்கள், அகராதிகள், நிகண்டுகள், சொற்பொழிவுகள் போன்றவை துணைமைச் சான்றாதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு அணுகுமுறை

சங்கப் பாடல்களில் இடம்பெறும் அஃறிணை உயிரினங்களை வகைப்படுத்திப் பகுப்பதால் பகுப்பாய்வு அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது. அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளை விளக்கிக் கூறுவதால் விளக்கவியல் அணுகுமுறை இடம்பெறுகின்றது.

ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வு முன்னுரை முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

அவை,

1. அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள்– விளக்கம்
2. விலங்குகளின் உணர்வுகள்
3. பறவைகளின் உணர்வுகள்
4. நீர்வாழ் உயிரினங்களின் உணர்வுகள்
5. பிற உயிரினங்களின் உணர்வுகள்

என்பனவாகும்.

இயல் விளக்கம்

இயல் ஒன்று : அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள் – விளக்கம்

அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள் – விளக்கம் என்பது முதலாமியலாகும். இவ்வியலில் உயிருள்ள அனைத்தும் உயிரினம்

என்பதற்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உலகம் தோன்றி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு உயிரினங்கள் பின் தோற்றம் பெற்றமை பற்றி அறிவியலாளர்களின் கூற்றுகள் வழி விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள உயிரினங்களின் இளமைப்பெயர் ஆண்பாற் பெயர், பெண்பாற்பெயர் ஆகிய பகுப்புகள், உயர்திணை, அஃறிணைக்கு அகராதிகள் கொடுக்கும் விளக்கம், தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள கருப்பொருள்களில் அஃறிணை உயிரினங்கள், உணர்வுக்கான அகராதிகள் விளக்கம், அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள் போன்றவைகள் விளக்கம் பெறுகின்றன.

இயல் இரண்டு : விலங்குகளின் உணர்வுகள்

விலங்குகளின் உணர்வுகள் என்பது இரண்டாம் இயலாகும். விலங்குகளின் காதல் உணர்வையும், மெய்யுறுபுணர்வையும் விளக்குகின்றது. விலங்குகளின் குடும்ப உணர்வில் தந்தையாகிய ஆண் இனம் முக்கியத்துவம் பெறுகின்றது. விலங்குகளிலும் தாய்மை மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் இரண்டுமே கூட்டமாக இணைந்து சமூக அமைப்புடன் தங்களின் தேவைகளைப் பெற்றுக் கொண்டும் பகிர்ந்துகொண்டும் வாழ்கின்றன. வீட்டு விலங்குகள் தங்களின் பாதுகாவலர்களுக்குத் தங்களின் நன்றியைத் தெரிவித்து வாழ்கின்றது. விலங்குகளின் மகிழ்வுணர்வு என்பது அவைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் உள்ளது. விலங்குகளின் சினம் தூண்டலின் அடிப்படையில் தோன்றும் உணர்வு என்பது விளக்கப்படுகின்றது. விலங்குகளின் செருக்கு அதன் திறமையைக் கொண்டு அமைகின்றது. சமபலம் கொண்ட விலங்குகளுக்கு இடையில் பகை ஏற்படும் என்பது உணர்த்துகின்றது.

விலங்குகளுக்குத் துன்பம் மனிதர்களாலும் இயற்கை நிகழ்வுகளாலும் ஏற்படுகின்றது. விலங்குகளுக்கு இயற்கையாலும் மனிதர்களாலும் அச்சம் தோன்றுகின்றது. விலங்குகளுக்கு இயற்கையாக உள்ள போர்க்குணத்தை மக்கள் பழக்கப்படுத்தி தம் தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர். இவைபோன்ற பல்வேறு செய்திகள் ஆராயப்படுகின்றன.

இயல் மூன்று : பறவைகளின் உணர்வுகள்

பறவைகளின் உணர்வுகள் என்பது மூன்றாம் இயலாகும். பறவைகள் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த ஒலியைப் பயன்படுத்துகின்றன. பறவைகளின் காதல் உணர்வு ஒலியின் வழி வெளிப்படுத்துகின்றது. பறவைகள் தனித்தனி குடும்பத்துடன் வாழ்ந்து தமது கடமைகளை நிறைவேற்றுகின்றன. பறவை மகிழ்ச்சியும் துன்பத்தையும் அனுபவிக்கின்றன. பறவைகளின் சமூக ஒற்றுமைக்கு காக்கை உதாரணமாக அமைந்துள்ளது. பறவைகளுக்கு மற்ற உயிரினங்களினால் மிகுதியான பாதிப்பு ஏற்படுகின்றது. அதனால் அவை எப்பொழுதும் விளிப்புடன் வாழ்கின்றன. இயற்கையின் மாற்றங்களைப் பறவைகள் அறிந்து செயல்படுகின்றன. பறவைகள் வேறுபட்ட ஒலிக்கு அச்சம்கொள்ளும் என்பதை சங்ககால மக்கள் அறிந்து செயல்பட்டுள்ளனர். பறவைகளுக்குப் பலவழிகளில் துன்பம் ஏற்படுகின்றது என்பதை இவ்வியல் அறிவுறுத்துகின்றது.

இயல் நான்கு: நீர்வாழ் உயிரினங்களின் உணர்வுகள்

நீர்வாழ் உயிரினங்களின் உணர்வுகள் என்பது நான்காம் இயலாகும். நீர்வாழ் உயிரினங்களும் தங்களுக்கான வாழ்வியலைச் சிறப்பாக வாழ்ந்துள்ளன. அவையும் காதல் கொண்டு குடும்பத்துடன் வாழ்கின்றன.

நீர்வாழ் உயிரினங்களுக்கும் தாய்மை உணர்வுகள் காணப்படுகின்றன. நீர்வாழ்வனவற்றின் உணர்வுகளில் ஆமை, முதலையின் தாய்மையுணர்வுகள் மாறுபட்டுள்ளமையைச் சங்க இலக்கியம் வழி விளக்கப்படுகின்றது. எதிரிகளால் ஏற்படும் இடையூறுகளை எதிர்கொள்ளும் நிலைகளில் அதன் வீரம் நீர்நிலைகளில் மட்டுமே சிறப்பாகக் காணப்படுகின்றது. இயற்கை நிகழ்வுகளை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் திறன் பெற்றவையாகத் திகழ்கின்றன என்பன போன்ற உணர்வுகள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

இயல் ஐந்து : பிற உயிரினங்களின் உணர்வுகள்

பிற உயிரினங்களின் உணர்வுகள் என்பது ஐந்தாம் இயலாகும். மிகச் சிறிய உயிரினங்களுக்கும் உடல் உணர்வுகள் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்றது. சிறு பூச்சியினங்கள் கூட்டுக் குடும்ப உணர்வுடன் செயல்படுகின்றன. அவை எதிர்காலத் தேவையை உணர்ந்து செயல்படுவது மக்களைச் சிந்திக்க வைக்கின்றது. தங்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் கண்டு அச்சப்படுகின்றன. சில நிகழ்வுகளுக்குச் சினம் கொண்டும் செயல்படுகின்றன. இயற்கை நிகழ்வுகள் அவற்றை துன்பமடையச் செய்கின்றன.

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்வதற்கு அஃறிணை உயிரினங்களின் வாழ்வியல் உணர்வுகளை அறிந்து செயல்பட்டனர். சங்ககாலப் புலவர்கள் வெளிப்படையாகக் கூற இயலாத காதல், இன்பியல் போன்றவற்றிற்கு அஃறிணை உணர்வுகளைக் கூறி அவற்றில் மானிட உணர்வுகளை மறை பொருளாகக் கூறியுள்ளனர். விலங்குகள் தங்களின் இன்பியல் உணர்வுகளை உணவுப் பகிர்வு, பாதுகாப்பு ஆகியவற்றின் மூலமாக

வெளிப்படுத்துகின்றன. காட்டு விலங்குகளின் வாழ்வியல் உணர்வுகள் மிகுதியாகச் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. இணைபிரியாமல் வாழும் பறவைகளும் உள்ளன. இன்னல்களை ஒலி எழுப்பி தன் இனத்தை விழிப்படையச் செய்கின்றன. சிறு உயிரினங்கள் ஊர்வன ஆகியவற்றின் உணர்வுகள் மிகுதியாகப் பாடப்படவில்லை. தம் குட்டிகளுக்குத் தாயே தீங்கு ஏற்படுத்துவதால் சில நீர்வாழ் உயிரினங்களின் தாய்மை உணர்வு மாறுபட்டதாக உள்ளது.

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் தொகுப்புரை இடம்பெற்றுள்ளது. அதன்பின் சான்றெண் விளக்கம் கொடுக்கப்பெற்றுள்ளன. ஆய்வில் கண்ட முடிவுகள் முடிவுரையாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட தரவுகள் துணைநூற்பட்டியலில் அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக அஃறிணை உயிரினங்களின் உணர்வுப் பட்டியல்கள் கொடுக்கப்பெற்றுள்ளன.

இயல் – 1

அஃறிணை உயிரினங்கள் – விளக்கம்

பொருளடக்கம்

1.0. முன்னுரை

1.1. உயிரினங்கள் – விளக்கம்

1.2. உயிரினங்களின் தோற்றம்

1.3. உயிரினங்களின் பகுப்பு

1.3.1. உயர்திணை– விளக்கம்

1.3.2. அஃறிணை– விளக்கம்

1.4. உயிரினங்களின் வகைப்பாடு

1.5. கருப்பொருளில் அஃறிணை உயிரினங்கள்

1.5.1. குறிஞ்சித்திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

1.5.2. பாலைத்திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

1.5.3. முல்லைத்திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

1.5.4. மருதத்திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

1.5.5. நெய்தல் திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

1.6. தொல்காப்பியத்தில் அஃறிணை உயிரினங்கள்

1.7. சங்கப்புலவர்களின் உற்றுநோக்கல்

1.7.1. உள்ளுறையும் இறைச்சியும்

1.8. உணர்வு – விளக்கம்

1.9. அஃறிணை உயிரினங்களின் உணர்வும் சங்க இலக்கியமும்

1.10. தொகுப்புரை

இயல் – 1

அஃறிணை உயிரினங்கள் – விளக்கம்

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் பெருவெடிப்பு கொள்கையின் மூலமாக இவ்வுலகம் தோன்றியது. பின்னர் ஒவ்வொரு உயிரினமாக தோன்றி மனித இனம் வரை பரிணாமவளர்ச்சி அடைந்துள்ளது. அஃறிணை உயிரினமான குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்கிறது அறிவியல். உயிரினங்களை உயிருள்ளவை உயிரற்றவை என்றும் உயர்திணை அஃறிணை என்றும் பகுத்து கூறியுள்ளனர். உயர்திணையில் மக்கள் தேவர் ஆகியோரை கூறுகின்றனர் இவைதவிர மற்ற உயிருள்ள உயிரற்ற அனைத்தும் அஃறிணை. மக்கள் நாடோடிகளாக வாழ்ந்த போதும் இனக்குழு வாழ்வியலிலும் காடுகளில் விலங்குகளின் அருகில் வாழ்ந்துள்ளான். இயற்கையைக் கண்டு அஞ்சி அவற்றை கடவுளாக வணங்க தொடங்கினான். அஃறிணை உயிரினங்களின் வாழ்வியலில் இருந்து வாழ்வியலை கற்று மேம்பட்டான். சங்ககாலங்களிலும் அவன் அஃறிணை உயிரினங்களோடு நெருங்கி வாழ்ந்துள்ளான். சங்ககால மக்களின் வாழ்வியலில் அஃறிணை உயிரினங்களின் பங்கு அதிகம். அப்படியான காலக்கட்டத்தில் பாடப்பட்ட பாடல்களில் அஃறிணை உயிரினங்களான மரம், செடி, கொடி, விலங்கு, பறவை, நீர்வாழ்வன, பூச்சியினங்கள் ஆகியவற்றை தங்களின் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். இவ்வாறான அஃறிணை உயிரினங்களை விளக்குவது இவ்வியலின் நோக்கமாகும்.

1.1. உயிரினங்கள் – விளக்கம்

உயிருள்ள அனைத்தும் உயிரினங்கள் என்று அழைக்கப்படுகின்றது. “உயிருள்ளவை அனைத்தையும் குறிக்கும் பொதுப்பெயர். Common term de-

noting organisms life forms life"[1] என்கின்றது க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. "உயிர், ஆன்மா, உயிரெழுத்து, காற்று, சிவன், அழியாதிருப்பது, மூச்சு, மூச்சுவிடு, உயிரை உடையது, ஐம்பூதங்கள்"[2] என்று மதுரைத் தமிழ் பேரகராதி கூறுகின்றது. "விலங்கு அல்லது செடி போன்ற எல்லா உயிருள்ள பொருள்களையும் உயிரினங்கள் என்ற பெயரால் அழைக்கின்றோம்"[3] என்கிறார் எஸ். சங்கரன். உயிர் என்பதற்கு "ஆன்மா, காற்று, சிவன்"[4] என்று யாழ்பாண அகராதி குறிப்பிடுகின்றது. உயிருள்ளவை, உயிரற்றவை எனப் பொருட்களை இரண்டாகப் பகுப்பர். அவற்றில் ஐம்பூதங்களின் கொடையால் தோன்றி வாழ்வன உயிருள்ளவை. மேலும் மனிதனால் உருவாக்கப்பட்டது அல்லாமல் இயற்கையாக உருவான உயிருள்ள அனைத்தையும் உயிரினம் என்று அழைப்பர். எனவே தாவரங்கள், ஊர்வன, பறப்பன, விலங்குகள், நீர்வாழ்வன என அனைத்தையும் கொண்டது தான் உயிரினத் தொகுதியாகும்.

1.2. உயிரினங்களின் தோற்றம்

பெருவெடிப்புக் கொள்கையின் மூலம் உலகம் தோன்றியது என்பதே பெரும்பாலானோரின் கருத்தாக உள்ளது. இவ்வுலகம் தோன்றி பலஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர்தான் உயிரினங்கள் தோன்றின. உலகில் முதலில் தோன்றிய உயிரினம் எது என்று இன்றும் குறிப்பிட்டுக் காட்ட இயலவில்லை. முதலில் தாவரங்கள் தோன்றி பின்னர் உயிரினங்கள் தோன்றின என்றும் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் மற்ற உயிரினங்கள் தோன்றின என்றும், அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். "உலகின் முதல் உயிரினம் எப்படி தோன்றி இருக்கமுடியும் என்ற கேள்வி நீண்ட காலமாக முன் வைக்கப்பட்டு வருகின்றது. இதற்கு பதிலளிக்கும் வகையில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த

விஞ்ஞானிகள், புதிய கண்டுபிடிப்பை வெளியிட்டுள்ளனர். இது குறித்து ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைகழகம் பேராசிரியர், ஜோசன் புரூக்ஸ் கூறியதாவது, ஆஸ்திரேலியாவின் மத்தியப் பகுதியில் உள்ள பண்டைய பாறைகளை ஆய்வு செய்தோம். அதை உடைத்து தூள் தூளாக்கியதில் உயிரிழந்து மக்கிப்போன உயிரினங்களின் மூலக்கூறுகள் கிடைத்தன. இந்த மூலக்கூறுகள் 65 கோடி ஆண்டுகளுக்கு முந்தையவை, சூழ்நிலை இயல் வரலாற்றில் இது முக்கியமான மாற்றம். அதற்குமுன், கடும் குளிரான பனிப்பாறையாகவே பூமி காட்சியளித்துள்ளது. இதன்பின், வெப்பத்தின் தாக்கம் உணரப்பட்டு, பனி உருகி, பூமியில் நீரோட்டம் ஏற்பட்டுள்ளது. ஆறுகள் உருவாகின, தாவரங்கள் வளர்ந்தன, அதன் பின்னரே உயிரினங்கள் தோன்றின இந்த சூழலியல் மாற்றத்தால் கடலில் பாசியும், அதில் இருந்து பாக்டீரியாவும் தோன்றி இருக்கக்கூடும். அதுவே பிற உயிரினங்களாக பரிணாம வளர்ச்சி அடைய ஏதுவாக இருந்திருக்கும். எனவே பூமியில் முதல் உயிரினம் தோன்றியது 65 கோடி ஆண்டுகளுக்கு முன் நடந்திருக்கலாம் எனக் கருதுகின்றோம்''[5] என்பதில் தாவரங்கள் முதலில் தோன்றியது என்பதை அறியமுடிகிறது.

ஒவ்வொரு உயிரினமாக இயற்கைச் சூழலுக்கு ஏற்பத் தோன்றியுள்ளது. அதன் பின்னர் ஊர்வன, பறப்பன, முதுகெழும்பு உடைய விலங்குகள் போன்றவையும் பரிணாம வளர்ச்சி பெற்றன. பல மில்லியன் ஆண்டுகள் சிறுக சிறுக மாற்றம் ஏற்பட்டு மனிதன் தோன்றியுள்ளான். ஆனால் ஒருசாரார் டார்வினின் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. உயிரினங்கள் கடவுளால் தோன்றியவை என்று கருதினர். ''வரலாற்றுக் காலம் முழுவதிலும் விலங்குள் ஒரு வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன என்று நம்பியவர்கள் இந்த வரலாற்று

நிகழ்ச்சி எதையும் புலப்படுத்துவதாக எண்ணவில்லை. காலத்தால் முற்பட்டதும் எளியதுமான ஒரு வகையிலிருந்து உயர்ந்த வகை விலங்கு தோன்றியிருக்கும் என்று அவர்கள் எண்ணியும் பார்க்கவில்லை. உதாரணமாக ஐரோப்பாவில் மத்திய காலத்தில் பலர் உயிரிகளின் பெரிதொடர்' பற்றிப் பேசினார்கள் கீழ்நிலையிலுள்ள கடற்பஞ்சு, ஜெல்லிமீனிலிருந்து மனிதன் வரை வரிசைக் கிரமமாக உயிர்களைக் கூறும் ஏற்பாடு இது. ஆனால் அதையெல்லாம் ஒரே சமயத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை என்று கருதப்பட்டது''[6] என்று எஸ். சங்கரன் கூறுகிறார். என்றாலும் இறுதியாக டார்வினின் பரிணாம வளர்ச்சி கோட்பாட்டின் படியே உயிரினங்கள் தோன்றியது என்ற கருத்தையே அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

1.3. உயிரினங்களின் பகுப்பு

உலகில் உள்ள பொருட்கள் பொதுவாக உயிருள்ளவை உயிரற்றவை என்று இரண்டாகப் பகுக்கப்படுகின்றன. உயிருள்ளவையில் உயர்திணை அஃறிணை என்று குறிப்பிடப்படுகின்றது. இவற்றில் உயர்திணையில் மனிதன் மற்றும் தெய்வத்தை அடக்குவர். இதனை,

''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே'' (தொல். 484)

என்ற தொல்காப்பியர் கூற்றும் மெய்ப்பிக்கும். மக்களை உயர்திணை என்றும் அவை அல்லாத பிறவற்றை அஃறிணை என்றும் கூறுகின்றார் தொல்காப்பியர். மேலும் நன்னூலார்

“மக்கள் தேவர் நரகர் உயர்திணை

மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை” (நன். 261)

என்கிறார். மக்கள், தேவர், நரகர் உயர்திணை என்றும் மற்ற உயிருள்ளனவும் உயிர் அல்லனவும் அஃறிணை என்றும் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் மக்களை மட்டும் உயர்திணை என்கிறார். நன்னூலார் மக்கள், தேவர், நரகர் மூவரையும் உயர்திணை என்கின்றனர். “உயிர்களும், உயிரில் பொருள்களும் சிந்தனைத்திறனை அடிப்படையாகக் கொண்டு தமிழில் உயர்திணை, அஃறிணை எனப் பகுக்கப்பட்டுள்ளன”[7] என்கிறார். பண்டித க. வீரகத்தி உயிரினங்கள் தங்களின் அறிவுக்கு ஏற்ப சிந்திக்கின்றன.

1.3.1. உயர்திணை – விளக்கம்

ஆறறிவு உடைய உயிரினங்களை உயர்திணை என்று குறிப்பிடப்படுகிறது. உயர்திணை என்பதற்கு “உயர்ந்த குணம், மேற்குலம்”[8] என்று கழகத்தமிழகராதி கூறுகின்றது. மேலும் “உயர்ந்தகுலம், மேற்குலம்”[9] என்று தமிழ் இலக்கிய அகராதி கூறுகின்றது. மேலும் “உயர் என்பது மிகுதி, திணை என்பது பெருள், உயர்ந்த திணை உயர்திணை”[10] என்று Solalvallan.com மும் “உயர்வாகிய சாதி, மேற்குலம்; உயர்ந்த குலம்; மானிடர், தேவர், நரகர் ஆகியோரைக் குறிக்கும் சொல்”[11] என்று valaitamil.com ஆகியன கூறுகின்றன. உயர்ந்த குணம், உயர்ந்தகுலம் உயர்ந்த பொருள் உயர்வாகிய சாதி என்ற பொருளை உயர்திணைக்கு விளக்கமாக அகராதிகள் கூறுகின்றன.

1.3.2. அஃறிணை – விளக்கம்

ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை கொண்ட உயிரினங்கள், உயிரற்ற பொருட்கள் ஆகியவற்றை அஃறிணை என்று குறிப்பிடப்படுகின்றது.

“அஃறிணை மனிதர், தேவர், அரக்கர் அல்லாத பிற உயிர்களையும் உயிரற்ற பொருள்களையும் உள்ளடக்கிய பெயர்ச்சொல் பகுப்பு, a class if nouns for non-ani-mate things and for being other than human and celestial”[12] என்று க்ரியாவின் தற்கால தமிழ் அகராதியும் “அஃறிணை இழிநிலை, மலை, மண் முதலிய உயர்நிலை அல்லாத சாதி”[13] என்றும் மதுரை பேரகராதியும் “இழிநிணை”[14] என்று யாழ்ப்பாண அகராதியும் கூறுகின்றது. “அஃறிணைச் சொல் akrinai–c–col பெ(n) அஃறிணை பற்றிய அல்லது குறித்த சொல் word or term relating to the class of irrational things”[15] என்று தேவநேயப்பாவாணர் தனது செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலியில் கூறுகின்றார். மேலும் “பகுத்து அறியும் தன்மை இல்லாத உயிர்களும், உயிர் இல்லாத பொருட்களும் a class of nouns which inclvdes any subsrorce other than human beings”[16] என்று நர்மதாவின் தற்காலத் தமிழ் அகராதியும் கூறுகின்றது. மக்கள், தேவர், அரக்கர் அல்லாத ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள உயிருள்ள உயிரினங்களும் உயிரற்ற பொருட்கள் அனைத்தும் அஃறிணை உயிரினங்கள் ஆகும்.

1.4. உயிரினங்களின் வகைப்பாடு

உயிரினங்களை உயர்திணை, அஃறிணை என்று பகுத்துக்கூறுவதோடு மட்டும் அல்லாமல் அவற்றை வகைப்படுத்தியும் உணர்வை வெளிப்படுத்தியும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

“ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே

நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்த அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே'' (தொல். 1526)

என்று உணர்வை உணர்ந்து அறிவதைக் கொண்டு உயிரினங்களைப் பகுத்துள்ளார். மேலும் ஒவ்வொரு உயிரினத்திற்கும் உணர்வு உண்டு என்பதை வகைப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர்.

''புல்லும் மரனும் ஓர் அறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' (தொல். 1527)

என்ற நூற்பாவில் புல் மற்றும் மரத்திற்கு தொடுதல் என்ற உணர்வு மட்டுமே உண்டு என்று விளக்குகின்றார். எனவே அது ஓர் அறிவு உயிரினமாகும்.

''நந்தும் முரளும் ஈர் அறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' (தொல். 1528)

என்ற நூற்பாவில் நந்து எனப்படும் நத்தை மற்றும் முரள் எனப்படும் இப்பிக்கும் தொடு உணர்வோடு நாசுவையும் சேர்த்து இரண்டு வகை அறிவு உண்டு என்று கூறப்படுகின்றது.

''சிதலும் எறும்பும் மூஅறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' (தொல். 1529)

சிதல், எறும்பு போன்ற உயிரினங்களுக்கு தொடுதல், சுவையறிதல், மோத்தல் ஆகிய மூன்று உணர்வுகளை அறியும் அறிவு உண்டு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

“வண்டும் தும்பியும் நான்கு அறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே” (தொல். 1530)

என்பதில் வண்டுக்கும் தும்பிக்கும் தொடுதல், சுவைத்தல், மோத்தல் மற்றும் கண்களால் பார்க்கும் பார்வை திறனும் உண்டு.

“மாவும் புள்ளும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே” (தொல். 1531)

என்னும் நூற்பா தொடுதல், நாக்கு, மூக்கு, கண்ணுடன் செவியறிவுடையன மாவும் புள்ளும் ஆகும். இதில் “பிறவும் என்றதால் பாம்பு, மீன், முதலை, ஆமை, வௌவால் சேர்ப்பர். மக்களுள் ஆறாவது அறிவு பெறாதாரும் உறுப்புக் குறையுடையாரும் (ஊமை, குருடு, செவிடு) இதில் அடங்குவர் என்பர் உரையாசிரியர்கள்”[17] என்கிறார் தமிழண்ணல் இதன் மூலம் ஏதாவது ஓர் உணர்வு குறைபாடு உள்ள மக்களையும் விலங்குகளுடன் ஒப்பிட்டுரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“மக்கள் தாமே ஆறு அறிவுயிரை
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே” (தொல். 1532)

என்ற நூற்பாவில் மக்களுக்கு ஐந்தறிவுடன் மனம் என்ற ஆறாவது அறிவைப் பெற்றுத் தனிச்சிறப்புடன் விளங்குகின்றனர். விலங்கு, பறவை போன்ற அஃறிணை உயிரினங்களுக்கு மனதில் சிந்தித்து செயல்படும் ஆற்றல் இல்லை.

1.5. கருப்பொருளில் அஃறிணை உயிரினங்கள்

பண்டைத் தமிழ் சான்றோர் நிலத்தை ஐவகையாக பிரித்து அவற்றிற்கு முதல் கரு, உரி என்று பொருள் கூறியுள்ளனர். அவற்றில் முதல் என்பது நிலமும்

பொழுதும் உரி என்பது நிலத்திற்கு உரிய ஒழுக்கமாகும் . கரு என்பது முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலத்திற்குமான சூழலில் தெய்வம் முதலாக கூறப்பட்டுள்ளது.

''தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப'' (தொல். அகத். 20)

என்ற தொல்காப்பிய நூற்பா எண்வகைக் கருப்பொருட்களை விளக்குகின்றது.

''ஆரணங்கு குயர்ந்தோர் ரல்லோர் புள்விலங்
கூர்நீர் பூமர முணாப்பறை யாழ்பண்
டொழிலெனக் கருவீ ரெழுவகைத் தாகும்'' (ந.அகப். 19)

என்று நம்பியகப் பொருளும் தெய்வம், உயர்ந்தோர், அல்லோர், பறவை, விலங்கு, ஊர், நீர், மலர், மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என்ற பதினான்கையும் கருப்பொருளாகக் கூறுகின்றது.

1.5.1. குறிஞ்சித்திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

குறிஞ்சித்திணைக்கு உரிய விலங்குகளாக புலி, கரடி, பன்றி, யானை, சிங்கம் என்றும் பறவைகளாக கிளி, மயில் என்றும் மரங்களாக அகில், ஆரம், தேக்கு''[18] போன்றவற்றையும் நம்பியகப்பொருளில் கூறப்பட்டது. மேலும் ''கிளி, மயில் என்னும் பறவைகளையும் மறப்புலி, குடாவடி, கறையடி, சீயம்''[19] ஆகிய விலங்குகளையும் தொன்னூல் விளக்கம் கூறுகிறது. வீரசோழியம் ''மயில் (மஞ்ஞை) யானை''[20] ஆகிய உயிரினங்களை கூறுகின்றது.

1.5.2. பாலைத்திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

பாலைத்திணையை தொல்காப்பியர் கூறவில்லை. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்

''முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்'' (சிலம்பு, கரிடுகாண், 663)

என்று கூறுவதில் இருந்து குறிஞ்சி, முல்லை ஆகிய இருநிலங்கள் வறட்சியால் மாறுபட்டு இயல்புக்கு மாறாக காணப்படுவது பாலைத்திணை ஆகும். பாலைத்திணைக்கு உரிய விலங்காக ''செந்நாய், பறவையாக புறா, பருந்து, எருவை, கழுகு''[21] ஆகியன நம்பியகப்பொருளில் கூறப்பட்டுள்ளது. வீரசோழியத்தில் ''செந்நாய், பருந்து''[22] காணப்படுகின்றது. ''புறா பருந்து, எருவை, செந்நாய்''[23] போன்ற பறவை விலங்குகளைத் தொன்னூல் விளக்கம் கூறுகின்றது.

1.5.3. முல்லைத்திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

முல்லைத்திணைக்குரிய கருப்பொருளில் அந்நிலத்தில் காணப்படும் விலங்குகளும், பறவைகளும் கூறப்பட்டுள்ளன. ''விலங்குகளாக மான், முயல் பறவைகளாக கானவாரணம்''[24] கூறப்பட்டுள்ளது. வீரசோழியத்தில் ''புன்கு''[25] என்ற உயிரினம் மட்டும் கூறப்பட்டுள்ளது. தொன்னூல் விளக்கத்தில் 'கானவராணம், எருவை செந்நாய்' [26] போன்ற உயிரினங்கள் சுட்டப்பட்டுள்ளது.

1.5.4. மருதத்திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

மருதத்திணை மிகவும் செழிப்பான பகுதியாகும் இப்பகுதியின் விலங்காக ‘‘எருமையும், நீர்நாயும் பறவைகளாக வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், போதா, கம்புல், குருகு, தாரா’’[27] போன்றவையும் காணப்படுகின்றன. ‘‘எருமை, நீர்நாய், மகன்றில்’’[28] போன்றவற்றை வீரசோழியம் கூறுகிறது. மருதத்திணையில் ‘‘வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், போதா, கம்புள், குருகு, தாரா, எருமை, நீர்நாய்’’[29] போன்ற அஃறிணை உயிரினங்கள் உள்ளன.

1.5.5. நெய்தல் திணைக்குரிய அஃறிணை உயிரினங்கள்

நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருளில் கடல்வாழ் விலங்குகள் பறவைகள் சுட்டப்பட்டுள்ளன. ‘‘சுறாமீன், கடற்காகை’’[30] ஆகியவை நம்பியகப்பொருளில் காணப்படுகின்றது. ‘‘மீன், அன்னம், சுறா, முதலை’’[31] போன்றவற்றை வீரசோழியம் கூறுகின்றது. ‘‘காக்கை, சுறவம்’’[32] ஆகியன தொன்னூல் விளக்கத்தில் உள்ளது. தொல்காப்பியத்தில் கருப்பொருள்கள் கூறப்பட்டாலும் எவை எந்நிலத்திற்கு உரியவை என்று விளக்கவில்லை. பின்னர் தோன்றிய நம்பியகப்பொருளில் ஒவ்வொரு நிலத்திற்குமான கருப்பொருட்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அதற்கு பின் தோன்றிய இலக்கணங்களும் அவற்றை விளக்கி கூறியுள்ளன.

1.6. தொல்காப்பியத்தில் அஃறிணை உயிரினங்கள்

தொல்காப்பியர் திணைப்பகுப்பாக உயர்திணை அஃறிணை என்று சொல்லதிகார கிளவியாக்கத்தில் கூறுகின்றார். மேலும் அத்திணையின் பால் பகுப்பையும் உயர்திணைக்குரிய பால்கள் அஃறிணைக்குரிய பால்கள் என்றும்

வகைப்படுத்தி கூறுகின்றார். பொருளதிகார அகத்திணையியலில் நிலப்பிரிவுக்கான கருப்பொருளில் அஃறிணை உயிரினங்களையும் கூறியுள்ளார். மேலும் பொருளதிகார மரபியலில் அஃறிணை உயிரினங்களுக்கான மரபுபெயர்களை விளக்கிக்கூறியுள்ளார். அவற்றில் இளமைப்பெயர், ஆண்பால் பெயர், பெண்பால் பெயர் என்று வரிசைப்படுத்தியும் உள்ளார்.

''மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்று
ஒன்பதும் குழவியொடு இளமைப் பெயரே'' (தொல். 1500)

என்னும் நூற்பாவில் பார்ப்பு, பறழ், குட்டி, குருளை , கன்று, பிள்ளை , மகவு, மறி, குழவி என்றும் ஒன்பது பெயர்களும் உயிரினங்கள் அனைத்திற்கும் வழங்கப்படும் இளமைப்பெயராகும்.

''ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்
மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப'' (தொல். 1501)

என்பதில் எருது, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் என்ற பதினைந்தும் ஆண்மைப் பகுப்பை குறிக்கின்றது. பிறவும் என்றதனால் காளை, விடை என்ற பெயர்களையும் சேர்த்துக் கொள்வர்.

“பேடையும் பெட்டையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகும் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணாவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே” (தொல். 1502)

என்று பெண்பால் பெயர்களாக பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளர், மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி ஆகிய பதின்மூன்றையும் கூறியுள்ளார். மேலம் ஒவ்வொரு உயிரினத்திற்குமான இளமைப்பெயர் ஆண்பால் பெயர், பெண்பால் பெயர்களையும் தொல்காப்பியர் சுட்டிகாட்டியுள்ளார்.

விலங்குகளின் இளமை பெயர்களாக பறழ், குட்டி, குழவி, மறி, கன்று, பார்ப்பு, பிள்ளை, மகவு, குருளை, குஞ்சரம் ஆகிய பத்தையும் ஆண்பால் பெயராக அப்பர், இரலை, உதள், ஏற்றை, ஏறு, ஒருத்தல், கடுவன், கண்டி, கலை, களிறு, சேவல், தகர், போத்து மோத்தை என்ற பதினான்கையும் பெண்பால் பெயராக ஆ, கடமை, நாகு, பாட்டி, பிடி, பிணவல், பிணவு , பிணை பெட்டை, பேடை, மந்தி, மூடு என்னும் பன்னிரெண்டையும் கூறியுள்ளார்.

பறவைகளின் இளமை பெயர்களாக பார்ப்பு, பிள்ளை ஆகிய இரண்டையும் ஆண்பால் பெயராக மயிலை தனிந்த ஏனைய பறவைகளுக்கு சேவல் என்றும் மயிலுக்கு போத்து என்றும் கூறுகிறார். மேலும் பெண்பால் பெயர்களாக பெட்டை, பெடை, பேடை, அளகு ஆகிய நான்கு பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

நீர்வனவற்றில் கராம் என்பதன் இளமைப்பெயராக கன்று என்பதை கூறியுள்ளார் மற்றவற்றிற்கு இளமைப்பெயர்களை கூறவில்லை. ஆண்பால்

பெயர்களாக போத்து, ஒருத்தல், ஏறு என்ற மூன்றையும் கூறியுள்ளார். நந்து என்ற உயிரினத்திற்கு மட்டும் பெண்பால் பெயராக நாகு என்பதை கூறியுள்ளார். ஏனைய நீர்வாழ்வனவற்றிற்கு பெண்பால் பெயர்களைக் கூறவில்லை.

ஊர்வன அனைத்திற்குமான இளமைப்பெயர்களாக பார்ப்பு, பிள்ளை என்ற இண்டையும் கூறியுள்ளார். ஊர்வனவற்றிற்கு ஆண்பால் பெயர்கள் பெண்பால் பெயர்களை கூறவில்லை. மேலும்

"ஆண்பா லெல்லாம் ஆண்எனற் குரிய
பெண்பா லெல்லாம் பெண் எனற் குரிய
காண்ப அவையவை அப்பா லான" (தொல். 1550)

என்னும் நூற்பாவின் ஆண்பால் அனைத்தையும் ஆண் எனவும் பெண்பால் அனைத்தையும் பெண் எனவும் அழைப்பதற்குரியன என்கிறார். மரபுபெயர்களைப் பகுத்துக் கூறியதில் தொல்காப்பியர் விலங்குகளுக்கு அதிக பெயர்பகுப்புகளை கூறியுள்ளமையை அறியமுடிகின்றது.

1.7. சங்கப்புலவர்களின் உற்றுநோக்கல்

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்துள்ளனர். சங்கப்புலவர்கள் இயற்கையைத் தனி ஒரு பொருளாகப் பாடவில்லை. தங்களின் பாடல்களுக்கு பின்புலமாக இயற்கையை அமைத்துப் பாடியுள்ளனர். தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளைக் கூறும்பொழுது பறவை, விலங்குகளின் செயல்பாடுகளும் கூறப்பட்டுள்ளது. மேலும் அஃறிணைப் பொருட்களும் உயிரினங்களும் பாடல் இயற்றுவதற்கு மிகவும் தேவையான ஒன்றாக இன்றளவும் உள்ளது. சங்கப்பாடல்களில் அஃறிணை உயிரினங்களின் நடத்தைகள் மனித மனநிலையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சங்கப்பாடல்களில் காணப்படும் உவமை, உள்ளுறை இறைச்சி போன்ற குறிப்புப் பொருள்களில் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள் காணப்படுகின்றன. ‘‘மானிட உணர்வுகளோடு இயற்கையின் எழிலை இணைத்துக் காட்டியது பண்டைய தமிழ் இலக்கிய மரபு. அதோடு மட்டுமின்றி காதல் உணர்வின் பல நிலைகளைக் குறிப்பிட்ட நிலங்களையும், பருவங்களையும் நேரங்களையும் வகுத்தனர்’’[33] சங்கப்புலவர்கள் மனித உணர்வை இயற்கையோடு பிணைத்துப் பாடியுள்ளனர். ‘‘பழந்தமிழ் இலக்கியத்தின் இயற்கைக் காட்சிகளிலே மானிட உணர்வு இயைந்து வருவதை இங்குக் காட்டியவற்றால் நன்கு உணரலாம். இந்த மரபு எவ்வாறு இலக்கியத்தில் இடம்பெற்றது? ஆபர்கிராம்பி கூறுவது போல கவிஞனின் அனுபவத்தைப் புலப்படுத்தும் புறப்பாட்டே இலக்கியம். பழந்தமிழ்க் கவிஞர்கள் கண்டு துய்த்துத்திளைத்த அனுபவத்தையே கவிதைகளில் வடித்துள்ளனர். இயற்கையிலும் மானிட வாழ்விலுமாக அவர்கள் கண்டு அனுபவித்தவையே சொல்லோவியங்களாக வருவதால், இயற்கைக் காட்சிகளிலே மானிடத்துடிப்பும் அமைவதைக் காணுகின்றோம். பழந்தமிழ்க் கவிஞர்கள் தங்கள் அனுபவித்ததைக் கூறுவதோடு அமைவதில்லை. அவர்கள் அனுபவத்தையே நம்மையும் அனுபவிக்கச் செய்கிறார்கள். பழந்தமிழ்க் கவிதைகளைப் படிக்கும்போது அவற்றை எழுதிய கவிஞர்கள் பெற்ற உணர்ச்சிகளையெல்லாம் நாமும் பெறுகிறோம்’’[34] பழந்தமிழ் கவிஞர்கள் இயற்கையில் தாம் கண்டு உணர்ந்ததை படிப்பவரும் உணரும் வண்ணம் பாடல்களில் காட்டியுள்ளார்.

‘‘இயற்கை வருணனைகளில் மரபுவழிச் செய்தியாக ஒன்றுமில்லை. அவர்களின் நேர்முகமான அனுபவமே அவற்றின் உயிர்நாடி. ஆகவே அவற்றில் போலித்தன்மையும் இயல்பிறந்த தன்மையும் காணவல்ல கூர்ந்த நோக்கில்

இயற்கையைக் கண்டு விளங்கி பலவகையான சொல்லோவியங்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன. பிற்காலப் புலவர்கள் சிலர் இயற்கையைத் தாமே காணாது, பழைய நூல்களில் உள்ளனவற்றைக் கற்று, அவற்றையே திரும்பக் கூறியுள்ளார்கள். அவர்கள் தரும் இயற்கை வருணனைகளில் உண்மை இல்லை. தெளிவும் இல்லை. ஆயின் சங்க இலக்கியம் கற்போர் இயற்கையைத் தாமே நேரில் காண்பதாக உணர்வர். நாட்டினை நன்கு அறிந்து என்றும் இன்பம் தரும் அழகினை எங்கிருந்தாலும் போற்றும் புலவர் பெருமக்களின் இலக்கியப் படைப்புக்களே சங்க இலக்கியங்கள் என அறிவர். விலங்குகளின் வாழ்க்கை முறைகளை எடுத்துரைக்கும் பகுதியில் மலர்களின் வடிவு வண்ணம் மரஞ்செடி கொடிகளின் இலைகள், விலங்கு பறவை இனங்களின் உறுப்புக்கள் ஆகியவற்றைப் புலப்படுத்தும் உவமைகள், பறவைகள் கூடுகட்டுதற்கும் குஞ்சுகளை வளர்ப்பதற்கும் இருந்து கூவுவதற்கும் பகையினங்கள் தாக்கும்போது அடைக்கலம் புகுவதற்கும் நேர்ந்து கொள்ளும் மரங்களையும் இடங்களையும் வருணிக்கும் பகுதிகள் இவற்றால் புலவர்கள் இயற்கையோடு நெருங்கிய உறவு கொண்டமையும் எதையும் செவ்வையாகக் கண்டுணர்ந்தமையும் புலனாகின்றன''[35] எனவே சங்க இலக்கியத்தில் அக்கால நிகழ்வுகளை உற்றுநோக்கி அக்கால சூழலை நன்கு உணர்ந்து பாடல்களில் கூறியுள்ளனர்.

1.7.1. உள்ளுறையும் இறைச்சியும்

சங்கப்பாடல்களில் அஃறிணை உயிரினங்கள் பற்றிய செய்திகள் உள்ளுறையாகவும் இறைச்சியாகவும் குறிப்பாக கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர்,

“உள்ளுறை உவமம் ஏனைஉவமம் எனத்
தள்ளா தாகும் திணைஉணர் வகையே” (தொல். 992)

என்கிறார். உள்ளுறை உவமம் முதற்பொருளையும் கருப்பொருளையும் கொண்டே பாடலில் புனையப்படுகிறது.

“உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே” (தொல். 993)

கருப்பொருளில் தெய்வம் தவிர்த்த மற்றவற்றை கொண்டே உள்ளுறை கூறப்படும்.

“அந்தமிழ் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே” (தொல். 1188)

உள்ளுறையானது வெளிப்படையான பொருளை விரித்து வேறுபாடுகளை உணர்ந்து கூறுவது. இது கூறவந்த பொருளை மறைமுகமாக நாகரிகமாகக் கூறுவது. உள்ளுறையில் மறைமுகமாகக் கூறும் சொற்களாகத் தொல்காப்பியர்,

“மங்கல மொழியும் வைஇய மொழியும்
மாறில் ஆண்மையின் சொல்லிய மொழியும்
கூறியல் மருங்கில் கொள்ளும் என்ப” (தொல். 1189)

மங்கலச் சொற்கள், வசைச்சொற்கள், மாறுபாடில்லாத ஆண்மையை உணர்த்தும் சொற்கள் போன்றவை உள்ளுறையாகச் சொல்லப்படும்.

“சினனே பேதைமை நிம்பிரி நான்கு
அனைநால் வகையும் சிறப்பொடு வருமே” (தொல். 1190)

சிறப்பு உள்ளுறை சினமிகுதி. அறியாமை, பொறாமை, வறுமை ஆகிய நான்கு வகைக்கருத்தையும் வெளிப்படுத்தவும் மிகுந்து கூறவும் வரும் என்கிறார்.

"பிறதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபின் கூறுங்காலைத்
துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே"(தொல். 1244)

என்பதில் உள்ளுறைப் பொருளை அறிய பாடலில் வரும் உயிரினங்களை பிறப்பியல்பொடு நோக்க வேண்டும். "பிறப்பொடு நோக்குதல் – தலைவனை வண்டு, எருமை, வாளைமீன், நீர்நாய் போன்றவற்றோடும் தலைவியை நெல், நெய்தல் பூ போன்றவற்றோடும் பரத்தையைத் தாமரை, கரும்பு, மாங்கனி போன்றவற்றோடும் பொருத்தி உள்ளுறை உவமை கூறுதல். அவை அகமாந்தர்தம் இயல்பு நோக்கிக் கூறப்பட்டு படிமமாக ஆகியவை துணிவினோர்தாம் இவற்றைத் துணிதல் சாலும். அதாவது உலக இயல்பும் இலக்கியமரபும் அறிந்தவர்களே உள்ளுறை பொருளை உணரமுடியும்"[36] உள்ளுறையை உணர்ந்து கொள்ள இலக்கியமரபோடு உலக இயல்பும் அறிந்திருக்க வேண்டும். "உள்ளுறை பொதுவாகத் தொடர்ச்சியான ஒரு நீண்ட வாக்கியத்தில் இடம்பெறும் விலங்குகள் – செடிகொடி மரங்கள் போன்ற கருப்பொருள் வாயிலாக வெளிப்படுகின்றன. கருப்பொருள்கள், இணையாக அமைவதோடு அக்கருப் பொருள்களிடையே நிகழும் செயல்பாடு, குறிஞ்சித்திணையில், முதல் நிலையில் வழி ஏதும் என்பதை வெளிப்படுத்த அதன் இரண்டாவது அல்லது புதைநிலையில் தலைவனது களவு ஒழுக்கத்தை ஊகித்தறியும் நிலையில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக, தலைவனது களவுஒகுழுக்கத்தின் நீட்சியை அங்கீகரிக்காது. அவன் மணவாழ்க்கைக்குச்

செல்ல வேண்டிய கட்டாயத்தையும் வெளிப்படுத்துகிறது. குறிஞ்சித்திணையில் இது போன்ற புதைபொருள் செய்தி குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய பாடல்களின் திணைக்கு ஏற்ப வெவ்வேறாக அமைகிறது. தலைவனது களவு நீட்டிப்பு அல்லது காமகிழத்தியின்பால் உள்ள தொடர்பு ஆகியவை தலைவன் குற்றம் இழைக்கிறான் என்னும் வகையல் அறிவுறுத்தப்படுகிறது. பொதுவாக, கருப்பொருள்களின் (விலங்குகள் முதலியன) செயல்பாடுகள் தலைவனது செயல்பாட்டோடு ஒத்துப்போகின்றன''[37] என்று உள்ளுறையாக கூறப்படும் கருப்பொருளின் செயல்பாடுகள் தலைவன், தலைவியின் செயல்பாடுகளுடன் சங்க இலக்கியங்களில் இணைத்து கூறப்பட்டுள்ளன.

''அன்பு தகுந இறைச்சியுள் சுட்டலும்
வன்புறை ஆகும் வருந்திய பொழுதே'' (தொல். 1176)

இறைச்சியில் உயிரினங்கள் காதல், அன்பு போன்றவை சுட்டப்படுவதுண்டு.

''இறைச்சி தாங்கிய பாடல் பகுதி ஒரு வரியிலோ அல்லது பல வரிகளிலோ இடம்பெறலாம் பொதுவாக இறைச்சி, முல்லைத்திணையிலும் பாலைத்திணையிலும் இடம்பெறும். விலங்குகள், பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள் போன்றவை கருப்பொருள்களாக இடம்பெறுகின்றன. விலங்குகள் என்றால் களிறு – பிடி, ஆண்முயல் – பெண்முயல், காளை – பசு என்னும் இணைகள், பறவைகள் எனின் அதன் இணைகள் என்ற அன்புறு வகையிலேயே இடம்பெறுகின்றன. உள்ளுறை போலல்லாது இறைச்சியின் காட்சிப்படிமம் மென்மையானதாக இருக்கும். இணைகளுக்கு இடையே உள்ள அன்பு வெளிப்படும்''[38] இறைச்சியில் அஃறிணை உயிரினங்களின் உள்ளுணர்வுகள் வெளிப்படுகின்றமை காட்டப்படுகின்றது. எனவே சங்க இலக்கியங்களில்

மானிடர்களின் உணர்வுகளை வெளிப்படுத்த அஃறிணை உயிரினங்களின் செயல்பாடுகளும் உணர்வுகளும் கையாளப்பட்டுள்ளது.

1.8. உணர்வு – விளக்கம்

தொல்காப்பியர் ஐம்பொறி உணர்வுகளைக் கொண்டு உயிரினங்களை பகுத்துள்ளார். உணர்வு என்பதற்கு "ஒன்றை அனுமதிக்கும், விரும்பும், வேண்டும் மனநிலை, மனஎழுச்சி, மனத்தொடர்பானது, awareness, consciousness, feling, sentiments, inttion, instinct "[39] என்று நர்மதாவின் தமிழ் அகராதியும் "அறிவு, ஊடலுந்துயிலுமிலது, தெளிவு, புலன், ஒழிவு, ஆன்மா, விஞ்ஞானம்"[40] என்று மதுரைத் தமிழ்பேரகராதியும், "அறிவு, காற்ற, நீங்கல் என்று"[41] யாழ்பாண அகராதியும் "ஒன்றை குறித்த அழுத்தமான அல்லது வலுவான மனநிலை, ஒன்றைக் குறித்த தீவிரமான உணர்ச்சி, உள்ளுணர்வு, சுயநினைவு, பிரக்ஞை"[42] என்று க்ரியாவின் தற்கால தமிழ் அகராதியும், "அறிவு, தெளிவு, உறழ்வு"[43] என்று திவாகரமும் "அறிவுத்தெளிவு, மொழிவு முணர்வெனல் என்றும் அறிவு, தெளிவு, நீங்கள்"[44] என்று பிங்கல நிகண்டும் கூறுகின்றது. உணர்வு என்பதற்கு அறிவு, மனநிலை, உள்ளுணர்வு என்று அகராதிகள் கூறுகின்றது.

உணர்வு என்பதற்கு ஆல்ஃபிரட் மோகன்தாஸ் "பெரும்பான்மையாகத் தோன்றும் உள்ளுணர்வுகள், பொதுவாக அறஅனுபவம் காரணமாகத் தாமாகவே ஏற்றப்பட்டவை. சான்றாக பழக்கப்பட்ட தொழிலாளி தன் தொழிலைச் செய்யும் போது முன்னதாக அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதில்லாமல் அதில் ஈடுபடுகிறான். அதேபோல் அறவழியில் செல்லும் மனிதனும் தானாகவே நல்லதை அறிகிறான். அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்ற

கருத்தை ஆழ்ந்து சிந்திக்காமலே கொள்கிறான். ஆனால் தனிப்பட்ட சில உள்ளுணர்வுகள் நமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்டனவாகத் தோன்றுகின்றன. 1.குறிப்பிட்ட சில செயல்களைப் பொறுத்தமட்டில் அந்த சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் அறப்பொருத்தம் (Airal fittingness) அமைவதைக் காண்கிறோம். இந்த அறப்பொருத்தத்தை எவ்வகை அறிவினாலும் பகுத்துணர முடியாது. இதை நாம் உள்ளுணர்வினாலே தான்அறியமுடியும். 2.குறிப்பிட்ட சிலவகைச் செயல்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் சிலவிதமான செயல்கள் இயற்கை விதிகளுடன் பொருந்துவனவாகவும், சிலவிதச் செயல்கள் பொருத்தமற்றனவாகவும் இருப்பது தெரிகிறது. இதையும் உள்ளுணர்வினாலேதான் அறிய இயலுகிறது. 3. இப்படிச் செய்யவேண்டும் இதைச் செய்யக் கட்டமைப்பட்டிருக்கிறோம் என்பன போன்ற அறக்கருத்துகளை வெறும் புறநிலை காட்சியால் அறியமுடிகிறது. இப்படித்தான் செய்ய வேண்டும் போன்ற கூற்றுகளை உள்ளுணர்வைக் கொண்டு மட்டுமே அறியமுடியும் அனுபவமூலமாக இந்த உள்ளுணர்வின் தன்மையை அறிவதுடன், அப்படி அறிந்ததைத் தொடர்ந்து நம் அனுபவ நிலைகளுக்கு பயன்படுத்தவும் வேண்டும். இத்தகைய உண்மை உள்ளுணர்வால் அறியும் அறக்கருத்துகளுக்கும் எண்ணங்களுக்கும் பொருந்தும் எனக் கொள்ளலாம்”[45] உள்ளுணர்வே செயல்பாடாக வெளிப்படுகின்றது என்பதை அறியமுடிகின்றது.

1.9. அஃறிணை உயிரினங்களின் உணர்வும் சங்க இலக்கியமும்

அஃறிணை என்பது தேவர், மனிதன், நரகர் தவிர்த்த அனைத்தும். அதில் அஃறிணை உயிரினங்கள் என்பது அஃறிணையில் உயிருள்ளவையைக்

குறிக்கின்றது. அவையான தாவரங்கள், விலங்குகள், பறவைகள், நீர்வாழ்வன, ஊர்வன, பூச்சியினங்கள் என உயிருள்ளவை அனைத்தையும் கொண்டது.

இவ்வாறான உயிரினங்களின் உணர்வுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. "தமிழ் நூல்களில் உயிருள்ள பொருட்களைப் பற்றியும், உயிரில்லாத பொருள்களைப் பற்றியும் பாடப்பட்ட பல பாக்கள் நிறைந்துள்ளன. அவற்றில் பறவைகள், விலங்குகளைப் பற்றிப் பாடியுள்ள பாக்களை நோக்கும்பொழுது தனிப்பட்ட உணர்ச்சி – ஒருவித ஆர்வம் இயற்கையாக எழுகின்றது. மன உணர்வினை உடைய கவிஞன் ஏனைய விலங்கு, பறவை முதலிய மன உணர்வில்லா நண்பர்களோடு உறவாடி, தான் சொல்லவேண்டிய கருத்தினை விளக்கமுற எடுத்தியம் விழைகின்றான். இந்த நண்பர்களின் உதவியால் கவிஞன் தன் கருத்தை மக்கள் மனதில் பதியுமாறு எளிதாக எடுத்து இயம்புகிறான். வண்டு, தும்பி, கிளி, குயில், காகம், அன்றில் முதலிய பறவைகளையும், குரங்கு, வேழம் முதலிய விலங்குகளையும் துணிந்து அறிந்து அவை அறிவுறுத்தும் செய்திகளாகக் கவிதைகள் பலவற்றைப் பைந்தமிழ்ப் புலவர்கள் நமக்கு யாத்து தந்துள்ளனர். பொதுவாக இத்தன்மை புலவர்கள் யாவருக்கும் அமையீனும் சிறப்பாகத் தமிழ் மக்கள் வாழ்க்கையின் வழிகாட்டியாய் ஊக்கத்தின் உறவிடமாய், உண்மைக் கருத்துக்கள் பலவற்றை நவில்வனவாய் தமிழ்மணம் வீசும் சங்க இலக்கியங்களைச் சமைத்த நாவீறு படைத்த நல்லிசைப் புலவர் பெருமக்களும் சொல்லிசை வாய்ந்த மெல்லியரும் விலங்குகளையும் பறவைகளையும் சிறப்புடன் விளித்து பல சுட்டி, பல வருணித்து, பலவற்றை அவற்றின் வாழ்க்கையை குறித்து பாடியுள்ளனர்"[46] சங்ககாலப் புலவர்கள் பறவை, விலங்குளை அவற்றின் வாழ்வியலை கூர்ந்து கவனித்து பாடல்களில் பதிவிட்டுள்ளனர்.

சங்க இலக்கியத்தில் முப்பத்தெட்டு விலங்குகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் பதினெட்டு வகையான விலங்குகளின் உணர்வுகள் மட்டும் கூறப்பட்டுள்ளன. ‘‘ஆ’’[47] ‘‘ஆனேறு’’[48] ‘‘ஆடு’’[49] ‘‘எருமை’’[50] ‘‘எலி’’[51] ஒட்டகம்[52] கரடி[53], கழுதை[54], குதிரை[55], குரங்கு[56], கேழல்[57], நாய்[58], செந்நாய்[59], நரி[60], புலி[61], பூனை[62], மான்[63], யானை[64] ஆகிய விலங்களின் உணர்வுகள் காணப்படுகின்றன.

ஐம்பத்து ஒன்பது பறவை இனங்கள் காணப்படுகின்றன. அன்றில்[65], அன்னம்[66], காக்கை[67], கிளி[68], குயில்[69], குருகு[70], குருவி[71], கொக்கு[72], கோழி[73], கூகை[74], நாரை[75], பருந்து[76], புறா[77], மயில்[78], முதுசிறல்[79], ஆகிய பறவைகளின் உணர்வுகள் கூறப்பட்டுள்ளன.

நீர்வாழ்வன பத்து வகையானவற்றின் உணர்வுகள் கூறப்பட்டுள்ளன. அவை ஆமை[80], சங்கு[81], நண்டு[82], நத்தை[83], நீர்கோழி[84], நீர்நாய்[85], தவளை[86], மீன்[87], சுறா[88], முதலை[89] முதலானவையாகும்.

பிறஉயிரினங்கள் என்ற பகுப்பில் அணில்[90], எறும்பு[91], பல்லி[92], பாம்பு[93], வண்டு[94], தம்பளப்பூச்சி[96], தேன்வண்டு[97], தேனி[98] ஆகிய எட்டு உயிரினங்களின் உணர்வுகள் கூறப்பட்டுள்ளன.

தொகுப்புரை

உயிருள்ள அனைத்தும் உயிரினங்கள். உலகில் தோன்றிய முதல் உயிரினம் கடலில் தோன்றியது.

பகுத்தறிவு கொண்ட மக்கள், தேவர், நரகர் மட்டும் உயர்திணை மற்ற உயிருள்ள உயிரற்ற அனைத்தும் அஃறிணை.

தொல்காப்பியர் உயிரினங்களை உணர்வின் அறிவை அடிப்படையாகக் கொண்டு பகுத்துள்ளார். பறவைகள் அவை வாழும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு திணைக்குக் கருப்பொருளில் சுட்டியுள்ளார்.

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்வதற்கு அஃறிணை உயிரினங்களின் நடத்தைகளையும், வாழ்வியலையும் அறிந்து கொண்டு அவற்றின்வழி அவைகளின் உணர்வுகளை உணர்ந்து செயல்பட்டதே காரணமாகும்.

சங்க இலக்கியங்களில் புலவர்கள் மானிட உணர்வுகளை அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளின் வழி வெளிப்படுத்தியுள்ளனர்.

சங்கப்புலவர்கள் அஃறிணை உயிரினங்களை உற்றுநோக்கியே அவற்றின் உணர்வுகளைப் பாடல்களில் பதிவிட்டுள்ளனர்.

சான்றெண் விளக்கம்

1. ஆசிரியர்குழு, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.22
2. ஆசிரியர் குழு, மதுரை தமிழ் பேரகராதி, ப.345
3. சங்கரன். எஸ், உயிரினங்களின் தோற்றமும் வளர்ச்சியும், ப.8
4. ஆசிரியர்குழு, யாழ்ப்பாண தமிழ் அகராதி, ப.345
5. m.sinamalar.com, August 19, 2017
6. சங்கரன். எஸ், உயிரினங்களின் தோற்றமும் வளர்ச்சியும், ப.133
7. வீரகத்தி. க. பண்டிதர், இலக்கணவிளக்கம், ப.1
8. கழகப்புலவர் குழு, கழகத் தமிழகராதி, ப.157
9. வித்துவான் பாலூர் கண்ணப்பமுதலியார், தமிழ் இலக்கிய அகராதி, ப.66
10. solvalam.com. october 2021
11. valaitamil.com. ISSN. 2581–7132
12. ஆசிரியர் குழு, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.1
13. சந்தியா நடராஜன் (ப.ஆ.) மதுரைத் தமிழ் பேரகராதி, ப.2
14. சந்திரசேகர பண்டித, சரவணமுத்துப்பிள்ளை, யாழ்ப்பாண அகராதி, ப.1
15. தேவநேயப் பாவாணர், ஞா. செந்தமிழ் அகராதி, ப.11
16. ஆசிரியர் குழு, நர்மதாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.11
17. தமிழண்ணல் (உ.ஆ.), தொல்காப்பியம் , ப.528
18. நாற்கவிராசநம்பி, நம்பியகப்பொருள், நூ.ப.20
19. வீரமாமுனிவர்,தொன்னூல் விளக்கம், 176–4–5
20. புத்தமித்திரர், வீரசோழியம், நூ.ப .90
21. நாற்கவிராசநம்பி, நம்பியகப்பொருள், நூ.ப.21
22. புத்தமித்திரர், வீரசோழியம், நூ.ப.91
23. வீரமாமுனிவர்,தொன்னூல் விளக்கம், நூ.ப.177

24. நாற்கவிராசநம்பி, நம்பியகப்பொருள், நூ.ப.22

25. புத்தமித்திரர், வீரசோழியம், நூ.ப.92

26. வீரமாமுனிவர்,தொன்னூல் விளக்கம், நூ.ப.178

27. நாற்கவிராசநம்பி, நம்பியகப்பொருள், நூ.ப.93

28. புத்தமித்திரர், வீரசோழியம், நூ.ப.23

29. வீரமாமுனிவர்,தொன்னூல் விளக்கம், நூ.ப.179

30. நாற்கவிராசநம்பி, நம்பியகப்பொருள், நூ.ப.24

31. புத்தமித்திரர், வீரசோழியம், நூ.ப.94

32. வீரமாமுனிவர்,தொன்னூல் விளக்கம், நூ.ப.180

33. குருசாமி. சோ. இலக்கியத்தில் இயற்கை, ப.1

34. மு.வரதராசனார், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.446

35. மு.வரதராசனார், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.50

36. தமிழண்ணல் (உ.ஆ.) தொல்காப்பியம், ப.433

37. ஞானசுந்தரம், வ. சங்கஅகப்பாடல்களில் உள்ளுறை, இறைச்சி மற்றும் குறிப்பு (கட்டுரை) அரிமாநோக்கு இதழ், அக்டோபர் 2018, ப.54

38. மேலது, ப.56

39. ஆசிரியர் குழு, நர்மதாவின் தமிழ் அகராதி, ப.135

40. சந்தியா நடராஜன், (ப.ஆ.) மதுரைத் தமிழ் பேரகராதி, ப.32

41. சந்திரசேகர பண்டிதர், சரவணமுத்துப்பிள்ளை, யாழ்ப்பாண அகராதி, ப.142

42. ஆசிரியர் குழு, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.188

43. ஆசிரியர் குழு, திவாகரம் II தொகுதி, ப.992

44. ஆசிரியர் குழு, பிங்கல நிகண்டு, பக்.318–319

45. வில்லியம். லில்லி, தமிழாக்கம் கோ.மோ, காந்தி, அறிவியல் ஓர் அறிமுகம்– பக். 199–200

46. திருமலை முத்துசுவாமி. அ, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், பக். 5–6

47. பின்னிணைப்பு எண்.2.I.1

48. மேலது. 2.I.2

49. மேலது. 2.I.3

50. மேலது. 2.I.4

51. மேலது. 2.I.5

52. மேலது. 2.I.6

53. மேலது. 2.I.7

54. மேலது. 2.I.8

55. மேலது. 2.I.9

56. மேலது. 2.I.10

57. மேலது. 2.I.11

58. மேலது. 2.I.12

59. மேலது. 2.I.13

60. மேலது. 2.I.14

61. மேலது. 2.I.15

62. மேலது. 2.I.16

63. மேலது. 2.I.17

64. மேலது. 2.I.18

65. பின்னிணைப்பு எண் 2.II.1

66. மேலது, 2.II.2

67. மேலது, 2.II.3

68. மேலது, 2.II.4

69. மேலது, 2.II.5

70. மேலது, 2.II.6

71. மேலது, 2.II.7

72. மேலது, 2.II.8

73. மேலது, 2.II.9

74. மேலது, 2.II.10

75. மேலது, 2.II.11

76. மேலது, 2.II.12

77. மேலது, 2.II.13

78. மேலது, 2.II.14

79. மேலது, 2.II.15

80. மேலது, 2.III.1

81. மேலது, 2.III.2

82. மேலது, 2.III.3

83. மேலது, 2.III.4

84. மேலது, 2.III.5

85. மேலது, 2.III.6

86. மேலது, 2.III.7

87. மேலது, 2.III.8

88. மேலது, 2.III.9

89. மேலது, 2.III.10

90. மேலது, 2.IV.1

91. மேலது, **2.**IV.2

92. மேலது, **2.**IV.3

93. மேலது, **2.**IV.4

94. மேலது, **2.**IV.5

95. மேலது, **2.**IV.6

96. மேலது, **2.**IV.7

97. மேலது, **2.**IV.8

98. மேலது, **2.**IV.9

இயல் – 2

விலங்குகளின் உணர்வுகள்

பொருளடக்கம்

2.0. முன்னுரை

2.1. தொல்காப்பியத்தில் விலங்குகள்

2.2. விலங்குகளின் காதல் உணர்வு

2.2.1. ஆக்களின் காதல் உணர்வு

2.2.2. குரங்குகளின் காதல் உணர்வு

2.2.3. கேழலின் காதல் உணர்வு

2.2.4. நாயின் காதல் உணர்வு

2.2.5. புலிகளின் காதல் உணர்வு

2.2.6. பூனையின் காதல் உணர்வு

2.2.7. மான்களின் காதல் உணர்வு

2.2.8. யானைகளின் காதல் உணர்வு

2.3. விலங்குகளின் இன்பவுணர்வு

2.3.1. ஆவின் இன்பவுணர்வு

2.3.2. குரங்குகளின் இன்பவுணர்வு

2.3.3. செந்நாயின் இன்பவுணர்வு

2.3.4. மான்களின் இன்பவுணர்வு

2.3.5. யானைகளின் இன்பவுணர்வு

2.4. விலங்குகளின் குடும்ப உணர்வு

2.4.1. ஆக்களின் குடும்ப உணர்வு

2.4.2. கரடியின் குடும்ப உணர்வு

2.4.3. குரங்குகளின் குடும்ப உணர்வு

2.4.4. புலிகளின் குடும்ப உணர்வு

2.4.5. மான்களின் குடும்ப உணர்வு

2.4.6. யானைகளின் குடும்ப உணர்வு

2.5. விலங்குகளின் தாய்மையுணர்வு

2.5.1. ஆக்களின் தாய்மையுணர்வு

2.5.2. எருமைகளின் தாய்மையுணர்வு

2.5.3. குரங்குகளின் தாய்மையுணர்வு

2.5.4. புலிகளின் தாய்மையுணர்வு

2.5.5. பூனைகளின் தாய்மையுணர்வு

2.5.6. மான்களின் தாய்மையுணர்வு

2.5.7. யானைகளின் தாய்மையுணர்வு

2.5.8. யானைத் தந்தையின் அன்புணர்வு

2.6. விலங்குகளின் சமூகவுணர்வு

2.6.1. ஆக்களின் சமூகவுணர்வு

2.6.2. ஆக்களின் சமூகத்தில் ஆணினம் தலைமையேற்றல்

2.6.3. கரடிகளின் சமூகவுணர்வு

2.6.4. குரங்குகளின் சமூகவுணர்வு

2.6.5. நரிகளின் சமூகவுணர்வு

2.6.6. பன்றிகளின் சமூகவுணர்வு

2.6.7. பூனைகளின் சமூகவுணர்வு

2.6.8. மான்களின் சமூகவுணர்வு

2.6.9. யானைகளின் சமூகவுணர்வு

2.7. விலங்குகளின் நன்றியுணர்வு

2.7.1. நாய்களின் நன்றியுணர்வு

2.8. விலங்குகளின் வேட்டையாடும் உணர்வு

2.8.1. நாய்களின் வேட்டையாடும் உணர்வு

2.8.2. பழக்கப்படுத்தப்பட்ட வேட்டை நாயின் உணர்வு

2.9. விலங்குகளின் சேமித்தல் பண்பு

2.9.1. எலியின் சேமிக்கும் பண்பு

2.10. விலங்குகளின் அறிதலுணர்வு

2.10.1. ஆக்களின் அறிதலுணர்வு

2.10.2. ஆடுகளின் அறிதலுணர்வு

2.10.3. எருமைகளின் அறிதலுணர்வு

2.10.4. குதிரைகளின் அறிதலுணர்வு

2.10.5. யானைகளின் அறிதலுணர்வு

2.11. விலங்குகளின் மகிழ்வுணர்வு

2.11.1. ஆக்களின் மகிழ்வுணர்வு

2.11.2. எருமைகளின் மகிழ்வுணர்வு

2.11.3. குதிரைகளின் மகிழ்வுணர்வு

2.11.4. புலிகளின் மகிழ்வுணர்வு

2.11.5. கேழலின் மகிழ்வுணர்வு

2.11.6. மான்களின் மகிழ்வுணர்வு

2.11.7. யானைகளின் மகிழ்வுணர்வு

2.12. விலங்குகளின் சினம்

2.12.1. ஆனேறுகளின் சின உணர்வு

2.12.2. கேழலின் சின உணர்வு

2.12.3. நாயின் சின உணர்வு

2.12.4. புலியின் சின உணர்வு

2.12.5. யானைகளின் சின உணர்வு

2.13. விலங்குகளின் செருக்கு

2.13.1. ஆனேறுகளின் செருக்கு

2.13.2. குதிரைகளின் செருக்கு

2.13.3. யானைகளின் செருக்கு

2.14. விலங்குகளின் பகையுணர்வு

2.14.1. ஆனேறுகளின் பகையுணர்வு

2.14.2. புலிகளின் பகையுணர்வு

2.15. விலங்குகளின் துன்பம்

2.15.1. மனிதர்களால் விலங்குகளுக்கு ஏற்படும் துன்பம்

2.15.2. ஆக்களுக்கு மனிதர்களால் ஏற்படும் துன்பம்

2.15.3. காலநிலை மாற்றத்தால் ஆக்களுக்கு ஏற்படும் துன்பம்

2.15.4. ஒட்டகத்தின் துன்பம்

2.15.5 கழுதைகளுக்கு மக்களால் ஏற்படும் துன்பம்

2.15.6. கழுதைகளுக்கு மற்ற விலங்குகளால் ஏற்படும் துன்பம்

2.15.7. குதிரைகளின் துன்பவுணர்வு

2.15.8. குரங்குகளின் துன்பவுணர்வு

2.15.9. நாய்களின் துன்பவுணர்வு

2.15.10. மான்களின் துன்பவுணர்வு

2.15.11. யானைகளின் துன்பவுணர்வு

2.15.11. 1. யானைகளுக்கு மக்களால் ஏற்படும் துன்பம்

2.15.11.2. யானைகளுக்கு இயற்கையால் ஏற்படும் துன்பம்

2.16. விலங்குகளின் வருத்தவுணர்வு

2.16.1. ஆக்களின் வருத்தவுணர்வு

2.16.2. குரங்குகளின் வருத்தவுணர்வு

2.16.3. மான்களின் வருத்தவுணர்வு

2.17. விலங்குகளின் வெறுப்புணர்வு

2.17.1. குதிரைகளின் வெறுப்புணர்வு

2.18. விலங்குகளின் அச்சவுணர்வு

2.18.1. ஆவின் அச்சவுணர்வு

2.18.2. எருமைகளின் அச்சவுணர்வு

2.18.3. கரடிகளின் அச்சவுணர்வு

2.18.4. குரங்குகளின் அச்சவுணர்வு

2.18.5. நரிகளின் அச்சவுணர்வு

2.18.6. புலிகளின் அச்சவுணர்வு

2.18.7. கேழல்களின் அச்சவுணர்வு

2.18.8. மான்களின் அச்சவுணர்வு

2.18.9. யானைகளின் அச்சவுணர்வு

2.19. விலங்குகளின் வீர உணர்வு

2.19.1. ஆக்களின் வீர உணர்வு

2.19.2. புலிகளின் வீர உணர்வு

2.19.3. கேழலின் வீர உணர்வு

2.20. விலங்குகளின் தற்காப்புணர்வு

2.21. புலியின் தன்மானவுணர்வு

2.22. விலங்குகளின் போர் உணர்வு

2.22.1. ஆக்களுக்கு இடையேயான போர் உணர்வு

2.22.2. புலிகளின் போர் உணர்வு

2.22.2.1. புலிகளுக்கும் யானைகளுக்குமான போர் உணர்வு

2.22.3. யானைக்கும் யானைக்குமான போர் உணர்வு

2.22.4. போர்க்களங்களில் யானைகளின் உணர்வு

2.23. தொகுப்புரை

இயல்–2

விலங்குகளின் உணர்வுகள்

சங்க இலக்கியங்களில் விலங்குகளுக்கு என்று தனி ஒரு நூலோ பாடலோ பாடப்படவில்லை. ஆனால் சங்கப்புலவர்களுக்கும் அன்றைய மக்களுக்கும் விலங்குகளைப் பற்றிய அறிவும் அவற்றோடு பழகிய அனுபவமும் அவைகளின் செயல்பாடுகளை எடுத்துக்கூறும் திறமையும் அவற்றின் வாழ்வியலை உற்றுநோக்கும் பொருமையும் விலங்குகளின் உளவியல் அறிவும் காணப்பட்டது என்பதைச் சங்கப்பாடல்கள் வழி அறியமுடிகின்றது. விலங்குகளின் உணர்வுகளை அனைவராலும் உணர்ந்து கொள்ளஇயலாது. விலங்குகளுக்கு தனி உடற்கூறு மொழிகள் உண்டு. ஒவ்வொரு விலங்கினமும் தனிப்பட்ட வாழ்வியலைக் கொண்டுள்ளது. அவைகள் தன் தேவைக்காகத் தனது திறனைச் செயல்படுத்துகின்றன. அவைகள் தங்களின் தேவைகளையும் நிறைவுசெய்து கொண்டு புவியின் சூழலையும் மேம்படுத்துகின்றன. இவ்வாறான விலங்குகளின் வாழ்வியலை அறிந்து அவற்றின் உணர்வுகளை அறிந்து கொண்டு செயல்பட்டால் புவியின் சுற்றுச்சூழல் சிறப்பாக அமையும் என்பதை சங்ககால மக்கள் உணர்ந்து அவற்றின் செயல்பாடுகளை அறிந்து அவற்றோடு இயந்து வாழ்ந்துள்ளனர். சங்கப்புலவர்கள் தங்கள் வாழ்ந்த பகுதிகளில் வாழ்ந்த விலங்குகளின் பெயர்களையும் அவற்றின் இயல்புகளையும் புலவர்கள் அனுபவத்தில் அறிந்தவற்றையும் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். அவ்வாறு விலங்குகள் பற்றிய பாடல்களில் விலங்குகளின் உணர்வுகளை மக்களின் உணர்வுகளோடு இயந்து கூறியுள்ளதில் விலங்குகளின் உணர்வுகளை விளக்குவது இவ்வியலின் நோக்கமாகும்.

2.1. தொல்காப்பியத்தில் விலங்குகள்

தொல்காப்பியர் அகத்திணையியலில் திணைக்கு ஏற்ற விலங்குகளைக் கூறவில்லை. ஆனால் நம்பியகப்பொருளில் திணைக்கு உரிய விலங்குகளை கூறியுள்ளார். தொல்காப்பியர் கூறியுள்ள கருப்பொருளில் விலங்கும் இடம்பெற்றுள்ளது. மரபியலில் உயிரினங்களில் உணர்வுகளை,

''மாவும் புள்ளும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' (தொல். 1531)

என்று குறிப்பிடுகின்றார். விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் ஐந்தறிவு மட்டுமே உள்ளது என்கிறார். ''பிறவும் என்பதால் உரையாசிரியர்கள் பாம்பு, மீன், ஆமை, வௌவால் போன்றவற்றைச் சேர்ப்பர். மக்களுள் ஆறாவது அறிவு பெறாதாகும் உறுப்புக் குறையுடையாரும் (ஊமை, குருடு, செவிடு) இதில் அடக்குவர்''[1] என்று தமிழண்ணல் கூறுகிறார்.

2.2. விலங்குகளின் காதல் உணர்வு

காதல் என்பது மிகையான அன்பு. அனைத்து உயிரினத்திற்குமானது காதல் உணர்வு. காதலுக்கு மொழி தேவையில்லை. உள்ளுணர்வே போதுமானதாக உள்ளது. ஒரு பாலினம் எதிர் பாலினத்தின் மேல் கொண்டுள்ள அன்பே காதல் என்கின்றனர். விலங்குகள் தம் காதலை பல செயல்பாடுகள்வழி வெளிப்படுத்துகின்றன.

2.2.1. ஆக்களின் காதல் உணர்வு

காட்டில் ஆண்புலி எருதைக் கொன்றுவிடுகிறது. தொலைவில் மேய்ந்த பசு அதனை அறிந்து துன்பக் குரலோடு கதறியது. இது பசு எருதின் மீது கொண்ட காதலை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது. இச்செய்தியை,

“பனைமருள் எருத்தின் பல்வரி இகும்போத்து
மடக்கண் ஆமான் மாதிரத்து அலறத்
தடக்கோட்டு ஆமான் அண்ணல் ஏஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சவப்ப ஈர்க்கும்” (அகநா. 238: 5–9)

என்ற அடிகள் வழி அறியமுடிகின்றது. தன் இணைபிரிந்தது துன்பமே ஆகும். என்றாலும் காதலில் வலியும், வேதனையும் துன்பத்தையே கொடுக்கும். எதோ ஒரு மாடு இறந்திருந்தால் கதறி அழுதிருக்காது. இப்பசு காதல் இணை என்பதால் தான் கதறி அழுதுள்ளது.

2.2.2. குரங்குகளின் காதலுணர்வு

பெண் குரங்கு தன் காதலை மெய்பிக்க உடன்கட்டை ஏறுவதுபோல தன் குட்டிகளுக்கும் ஒரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்து தன் உயிரை மாய்த்துக் கொள்கிறது. இதனை

“கருங்கண் தாக்கலை பெரும்பிற துற்றெனக்
கைமை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் களைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்’’ (குறுந். 69: 1–4)

என்ற குறுந்தொகை அடிகள் கூறுகின்றது. “சங்க இலக்கியத்தில் குரங்குகளுக்கு மனித உணர்ச்சிகளையும் மனிதச் செயல்களையும் கற்பனையாக ஏற்றி கூறுவது வழக்கம்.”[2] பெண் குரங்கும் குட்டியும் சிறிதுநேரம் காணாமல் இருக்க இயலாத ஆண் குரங்கு தேடுகிறது.

''கல்லாக் கடுவண் நடுங்க முள்ளெயிற்று

மாடமா மந்தி மானா வண்பறழ்

கோடுயர் அடுக்கத் தாடுமழை ஒலிக்கும்'' (நற். 233: 1–3)

இதில் குரங்குகளின் காதல் உணர்வை அறியமுடிகின்றது. ''பெண்குரங்கும் ஆண் குரங்கும் ஒன்றாகக் காதலுடன் வாழும் குரங்குகள் ஒன்றாகக் காதலுடன் திரியும்''[3] காதலுடன் வாழும் குரங்குகள் ஒன்றாக சேர்ந்தே வாழ விரும்புகின்றன என்பதை அறியமுடிகின்றது.

2.3. கேழலின் காதல் உணர்வுகள்

பன்றிகளும் காதலுடன் இணைந்து வாழும் என்பதை ''பன்றிகள் தன் துணையுடன் இணைந்து வாழும்.''[4] மேலும் ''ஆண் பற்றியும் பெண் பற்றியும் இணைந்து அன்பொடு தண்ணீர் பருகும்''[5] என்ற செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

2.2.4. நாயின் காதல் உணர்வு

பெண் நாயின் பேறுகாலத்தில் ஆண்நாய்தேவையான உணவைச் சேகரித்துக் கொடுக்கிறது. இதனை,

''மென்புனிற் நம்பிணவு பசித்தெனப் பைங்கண்

செந்நாய் ஏற்றை கேழல் தாக்க

இரியற் பிணவல் தீண்டலின் பரிஇச்'' (அகநா. 21: 17–19)

என்ற அடிகள் விளக்குகின்றன. ''பாலை நிலத்தில் பசிக் கொடுமையில் வருந்தும் தனது பெண் நாயிக்குப் பசியை நீக்கும் பொருட்டு மானை அடித்து வீழ்த்தி உண்ணக் கொடுக்கிறது.''[6] இதே போன்று ''குட்டியை ஈன்ற பெண் நாய்

வேட்டையாட முடியாத காலத்தில் ஆண்நாய் உணவை கொடுக்க எண்ணி வேட்டைக்குச் செல்கின்றது.''[7]

2.2.5. புலிகளின் காதல் உணர்வுகள்

கருவுற்றுள்ள பெண்புலியின் பசியைப் போக்க ஆண்புலி இரையைத் தேடித்தருகிறது.

''ஈருயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய
இருங்களி நட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலர ஈர்க்கும்'' (அகநா. 72: 12–15)

என்ற அகநானூற்று பாடலடிகளில் குட்டியை ஈன்ற பெண் புலியின் பசியைப் போக்க ஆண்புலி யானையைக் கொன்று நல்லப்பாம்பு உமிழ்ந்த மணியின் வெளிச்சத்திற்கு இழுத்துச் செல்லுகின்றது.

''ஈன்றணி வயவுப்பிணப் பசித்தென மறப்புலி
ஒளிறேந்து மருப்பின் களிறட்டுக் குழுமும்
பனியிருஞ் சோலை யெமியம் என்னாய்'' (அகநா. 112: 5–7)

என்ற அடிகளில் தன் இணைக்கு உணவு கிடைத்த மகிழ்ச்சியில் ஆரவாரித்துத் தன் காதலை வெளிப்படுத்துகிறது. மேலும் ''குட்டியை ஈன்ற பெண் புலிக்கு ஆண்புலி உணவு சேகரித்து கொடுத்து அதன் பசியை போக்கி அதன் மிகையான அன்பை வெளிப்படுத்தியது.''[8] இதே போன்று ''கருவுற்ற பெண்புலியின் கடும் பசிக்கு ஆண்புலி யானையைக் கொன்று வலப்புறம் வீழுமாறு செய்து இழுத்து வந்தது.''[9] அன்பை வெளிப்படுத்த ஆண்புலி பெண்புலிக்கு உணவை கொடுக்கின்றது.

“வெண்கோட் டியானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியம் கல்லளைச் செறிய
முழுக்களும் பண்ண வள்ளுகிர் வயப்பிணவு
கடிகொள வழங்கார் ஆறே ஆயிடை” (அகநா. 362: 3–6)

என்ற அடிகளில் ஆண் யானையால் தாக்கப்பட்ட ஆண்புலி குகையில் இருக்க அக்குகையை பெண்புலி காவல் செய்கிறது. பெண்புலி ஆண்புலியின் மீதுகொண்டுள்ள பாசம் தெளிவாகிறது. ஆண்புலியும் பெண்புலியும் தங்களுக்குள் உதவிகளைச் செய்து கொடுத்து தங்களின் காதலை வெளிப்படுத்திக் கொள்கின்றன.

2.2.6. பூனையின் காதல் உணர்வு

ஆண் பூனை பெண்பூனையின் பசியைப் போக்க இரையைத் தேடுகின்றது. இதனை,

“குவியடி வெருகின் பைங்கண் ஏற்றை
ஊன்சைப் பிணவின் உயங்குபசி கலைஇயர்
தளிர்புரை கொடிற்றிற் செறிமயிர் எருத்தின்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ அன்ன
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும் (அகநா. 367: 8–12)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. இது பூனையின் அன்பு மிகுதியை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

2.2.7. மான்களின் காதல் உணர்வு

மான்கள் தங்களின் காதலை வெளிப்படுத்தும் விதம் மிகவும் அழகாக உள்ளது. அதை காணும்போதே மனம் காதல் வயப்படும்.

“கருங்கோட் டிரலை காமர் மடப்பினை
மருண்டமான் நோக்கம் காண்டொறும் நின்னினைந்து”

(அகநா 74: 9–10)

என்ற அகநானூற்றுப் பாடலில் ஆண்மானின் காதல் பார்வையை எடுத்துக்காட்டுகிறார் மதுரைக்கவுணியன் பூந்தனார்.

“நின்மறந் துறைதல் யாவது புல்மறந்து
அலங்கல் வான்கழை உதிர்நெல் நோக்கிக்
கலைபிணை விளிக்குங் கானத் தாங்கண்” (அகநா. 129: 3–5)

என்னும் அடிகளில் உணவு கிடைக்காது வறுமையான பாலைநிலத்தில் மூங்கிலில் இருந்து நெல் உதிர்வதைக் கண்டவுடன் தான் உண்ணாமல் தன் இணையான பெண்மானை அழைக்கின்றது. பாலைநிலத்தில் வறுமையிலும் இணைந்து இருந்தன. “முல்லை நிலத்தில் மகிழ்ச்சியாக ஆண்மானும் பெண்மானும் இணைந்து நீரைப் பருகிவாழ்கிறது”[10] வறுமையிலும் இணைந்தே மான்கள் வாழ்கின்றன.

“சிறியிலை நெல்லித் தீம்சுவைத் திரள்காய்
உதிர்வன தாஅம் அத்தம் தவிர்னின்று
புள்ளி அம்பினை உணீஇய உள்ளி
அறு மருப்பு ஒழித்த தலைய தோல்பொதி
மறுமருப்ப பிளங்கோ டதிரக் கஉஞ்
சுயர்தெற வருந்திய அருஞ்சுரம் இறந்தாங்கு (அகநா. 291: 16–21)

இவ்வடிகளில் உதிர்ந்து கிடக்கும் நெல்லிக்காய்களைப் பார்த்த ஆண்மான் தன்கொம்புகள் உதிர்ந்து புதிய கொம்புகள் தோன்றும் இடங்கள் அதிருமாறு

தன் இணையைக் குரலெடுத்து அழைக்கும் என்ற கூற்று மானின் காதல் தன்மை மேலோங்கிய நிலையைக் காட்டுகின்றது. ‘‘இருப்பை மலரைத் தான் உண்ணாமல் பெண்மானை அழைக்கும் என்ற செய்திக் காணப்படுகின்றது.’’[11] மான்கள் உணவை தன் இணையுடன் பகிர்ந்துண்டு தம் காதலை வெளிப்படுத்துகின்றன.

‘‘கலைநின்று விளக்குங் கானமூ ழிறந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினந்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர் (மலைபடு. 405– 407)

என்ற மலைபடுகடாம் பாடலடிகளில் புலிக்கு அஞ்சி ஓடிய பெண்மானை ஆண்மான் அழைக்கும் செய்தி மான்களின் காதல் உணர்வை புரியவைக்கும்.

2.2.8. யானைகளின் காதல்உணர்வு

யானைகளின் காதல் உணர்வை சங்கப்புலவர்கள் அவற்றின் செயல்பாடுகள் மூலம் நுண்ணிதின் கண்டறிந்து பாடல்களில் பதிவு செய்துள்ளனர். ‘‘ஆண்யானை தன் பெண்யானை பசியால் வாடுவதைக் கண்டு மாமரத்தின் பட்டையை உரித்துப் பெண்யானைக்கு உண்ணக் கொடுக்கின்றது. இங்கு ஆண்யானையும் பசியோடுதான் இருக்கிறது என்றாலும் அன்பு மிகுதியால் தனக்குக் கிடைத்த உணவை உண்ணாது பெண்யானைக்குக் கொடுக்கிறது. இந்த காட்சியைக் கண்டால் பொருள்தேடிச் சென்ற தலைவன் விரைந்து வருவான் என்கிறாள் தோழி.’’[12] இதே போன்று நற்றிணையில் ‘‘பசியால் வாடிய பெண்யானைக்கு ஆண்யானை ஓமை மரத்தை

முறித்துத்தள்ளிப் பசியைத் தீர்த்தது.''[13] மற்றொருப் பாடலில் ''பாலை நிலத்தில் நீர் இல்லாமல் துன்பப்படும் வேலையில் கற்களுக்கு இடையே ஊறும் நீரைத் தன்னுடைய துதிக்கையில் உறிஞ்சிக் கொண்டு பெண்யானையின் தாகத்தைத் தணிக்க விரைந்து கொண்டு செல்கிறது.''[14] மேலும்,

''ஆறுசெல் வம்பலர் சேறுகிளைந்து உண்ட
சிறுபல் கேணி பிடியடி நசைஇ
களிறுதொடுஉக் கடக்குங் கான்யாற்று அத்தஞ்
சென்றுசேர்பு ஒல்லார் ராயினும் நினக்கே'' (அகநா. 137: –4)

என்ற அகநானூற்றுப் பாலைப் பாடலில் வறட்சியினால் யானைகள் தண்ணீர் தேடி அலைகின்றன. அப்போது பெண்யானை வழி தவறிச் சென்றுவிடுகிறது. தண்ணீரையும் பெண்யானையையும் தேடி ஆண்யானை செல்கிறது. வழியில் காட்டாற்றில் தண்ணீர் இல்லை அதனால் வழிச் செல்வோர் சிறுகுழி தோண்டி நீர்பருகிய வடுக்காணப்படுகிறது. அதைக்கண்ட ஆண்யானை பெண்யானை மீது உள்ள பாசத்தினால் பெண்யானையின் கால்சுவடு என்று கருதி அச்சுவட்டைத் தொடர்ந்து ஓடுகிறது. இங்கு நீர் வேட்கையைவிட தன் துணைக்காணவில்லை என்ற காதல் உணர்வை அறியமுடிகிறது. மேலும் ''குழியில் அகப்பட்டு கொண்ட ஆண்யானையை காப்பாற்ற பெண்யானை மரங்களை முறித்தது''[15] என்று கூறியுள்ளதில் ஆண் யானையின் மீது பெண்யானை கொண்டுள்ள காதலை அறியமுடிகின்றது.

2.3. விலங்குகளின் இன்பவுணர்வு

இன்பியல் உணர்வு இல்லாத உயிரினங்களைக் காண்பது மிகவும் அரிதான செயல் ஆகும். அனைத்து உயிரினங்களுக்குமான உணர்வாக

இன்பியல் உணர்வு காணப்படுகின்றது. இன்ப உணர்வு என்பது அனைத்து உயிரினங்களுக்கும் உண்டு என்பதை தொல்காப்பியர்,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்" (தொல். 1168)

என்ற நூற்பாவில் கூறியுள்ளார். இவ்வுணர்வை சங்கப்புலவர்கள் விலங்குகளின் உணர்வின்மேல் ஏற்றி மானிடர்களின் உணர்வை விளக்கியுள்ளனர். "உலகிலுள்ள ஓரறிவுயிர் முதல் எல்லாவுயிர்க்கு இன்பவுணர்வு என்பது உண்டு. சிற்றெறும்பு முதல் யானைவரை உண்டு. மலர்களில் மொய்க்கும் வண்டுகளுக்கு மட்டுமன்று மலர்களுக்கே உண்டு. ஓரறிவுயிர் முதல் வரும் இவ்வின்ப உணர்வு அவ்வுயிர்களின் பிறப்பிலேயே தானாக விரும்பிப் பொருந்தி வருவதாகும். காம இன்பவுணர்வு மக்களுக்கே அன்றி மற்றைய உயிர்களுக்கும் உண்டு"[16] என்பதில் அனைத்து உயிரினங்களுக்கும் இன்பவுணர்வு பொதுவானது என்கிறார்.

2.3.1. ஆவின் இன்பவுணர்வு

'ஆ'இனம் மிகவும் பொறுமையும் மனிதர்களிடம் நன்றாகப் பழகும் தன்மையும் கொண்ட விலங்காகும்.

"நல்லேறு இயங்குதொறு இயம்பும்
பல்ஆன் தொழுவத்து ஒடுமணிக் குரலே' (குறுந். 190: 6–7)

என்ற குறுந்தொகை அடிகளில் தொழுவத்தில் உள்ள ஆனேறுகள் ஆக்களை விரும்பிச் செல்லும் என்பது ஆனினம் மெய்யின்பத்திற்காகப் பெண் இனத்தைத் தேடுகிறது என்பதைக் கூறுகின்றது. இதேபோல் 'ஆ' க்கள் தங்களுக்குள்

இன்பவுணர்வு விருப்பம் இருந்தால் மட்டும் தான் இணைந்து இருக்கும்.''[17] மேலும்,

''வியன்புலம் படர்ந்தபல்லா நெடுவேறு
மடலை மாணிடி லசைவிடக் கோவலர்'' (புறநா. 339: 1–2)

என்ற அடிகளில் பசுக்களோடு காளைகள் நிழலில் அசையிடும் என்பது பசுவும் காளையும் இணைந்து இன்பமாக வாழும் வாழ்க்கையைக் கூறுகின்றது.

''துணைபுண ரேற்றின் னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயில்
லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன தற்கொண்'' (குறிஞ்சிப். 235–237)

எனும் அடிகளில் பசுவைக்கூடிய காளை இன்பமாக பசுவைப் பிரியாமல் இருக்க எண்ணுவதுபோல் தலைவன் தன்னைப் பிரிய மனமில்லாமல் சென்றான். இன்பவுணர்வு என்பது இருபால் உயிரினத்திற்குமானது. பசுக்கள் காளைகளோடு கூடி தங்கும் என்ற கருத்து கூறப்பட்டுள்ளது. பருவத்து ஒரு பாலினம் எதிர்ப்பாலினத்தை விரும்புவது என்பதும் இன்பம் துய்க்க விரும்புவது என்பதும் இயற்கையை ஆகும்.

2.3.2. குரங்குகளின் இன்பவுணர்வு

குரங்குகளின் இன்பவுணர்வுகள் மற்ற விலங்களை விட வேறுபட்டவை. தனக்கு உணவாகக் கிடைத்த பலாபழத்தைக் கையில் வைத்துக் கொண்டு பெண்குரங்கு ஆண்குரங்குடன் துள்ளி விளையாடுகிறது. இதனை,

''அள்ளிலைப் பலவின் கனிகவர் கைய

கல்லா மந்தி கடுவனோ டுகளுங்

கருந்திறல் அணங்கின் நெடும்பெருங் குன்றத்துப்'' (அகநா. 378: 20–23)

என்ற அடிகளில் அறியலாம். மேலும்

''கறிவளர் அடுக்கத்துக் களவிற் புணர்ந்த

செம்முக மந்தி செயற்குறிக் கடுவனொடு

பொன்னிணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇக்

குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்துதன்

புன்றலைப் பாறுமயிர் திருத்தும்'' (நற்.151: 7–11)

என்ற நற்றிணை பாடலில் ஆண்குரங்கு மந்தியுடன் கூடிய பின்னர் சுற்றத்தார் அறிவார்கள் என்று மந்தியின் புல்லிய மயிர்களைத் திருந்துமாம் என்பது குரங்குகளின் களவு வாழ்க்கையை வெளிப்படுத்தி தலைவன் தலைவியின் களவு வாழ்க்கை குறிப்பால் உணர்த்தப்படுகின்றது. இதே போன்ற செய்தியை ''பெண் குரங்கு அருவியில் ஆடியும் ஊசல் தூங்கியும் ஆண் குரங்கோடு திளைத்திருக்கும் நாடன்''[18] என்கிறது நற்றிணை. குரங்குகளின் இன்பியல் வாழ்வு நிகழ்வுகள் மற்ற குரங்குகள் அறியாத வண்ணம் நிகழவேண்டும் என்று எண்ணுகின்றது.

2.3.3. செந்நாயின் இன்பவுணர்வு

இன்பத்தால் தனக்கு கிட்டிய உணவைக் கூட வேட்டையாடாமல் விடுவதை,

“ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நா யேற்றை

மறியுடை மாண்பினை கொள்ளாது கழியும்” (ஐங். 354: 1–2)

என்ற ஐங்குறுநூற்றுப்பாடல் தெளிவுறுத்துகின்றது.

2.3.4. மான்களின் இன்பவுணர்வு

மெய்யுணர்வை அடைவதற்கு முதலில் தனக்குத் துணையான பெண்மானின் ஒப்புதலைப் பெற வேண்டும். அதற்காக ஆண்மான் பெண்மானுடன் துள்ளி விளையாடிப் பெண்மானைக் கவரும்.

“இரலை நன்மான் நெறிமுதல் உகளும்” (குறுந். 250:2)

“பிணிகால் மென்கொம்பு பிணையொடும் ஆர்ந்த

மான்ஏறு உகளும் கானம் பிற்பட ” (குறுந். 256: 2–3)

என்ற அடிகளில் ஆண்மான் தன் இணையோடு துள்ளி விளையாடுகின்ற காட்சியைக் காண இயலும். இதே போன்று மகிழ்ந்திருக்கும் நிலையைப் (அகநா. 139: 10, 154: 8–9) என்ற பாடலடிகளிலும் கூறப்பட்டுள்ளது. “திணைப்பாடல்கள் கருத்துக்களுக்கு முதன்மை அளிப்பனவேயன்றிஅலங்கார அணிகளுக்கன்று. ஆனால் தம் கற்பனையை காட்சிப்பட உரைக்கவும் புலப்பாட்டு அணிகள் தேவைப்படுகின்றன என நினைத்த போழ்தில் அவற்றின் உதவியை அவர்கள் உடனடியாக நாடியுள்ளனர்.”[19] சங்கப்புலவர்கள் தம் எண்ணத்தை முழுமையாக வெளிகொணர விலங்குகளின் உணர்வைப் பயன்படுத்தியுள்ளனர்.

“வன்பரற் தெள்ளால் பருகிய இரலைதன்

இன்புறு துணையொடு மறுவந் துகளத்” (குறுந். 65: 1–2)

இவ்வடிகளில் இரலைமான் தன் துணையான பிணையொடு இன்புற்று இருந்த களிப்பினால் துள்ளி விளையாடாமல் நின்றது. இன்பத்தைத் தூண்டி விளையாடிய மான்கள் இன்பக் கழிப்பில் மகிழ்ந்தன.

''மான்ஏறு மடப்பினை தழிஇ மருள்கூர்ந்து
கானம் நண்ணிய புதல்மறைந்து ஒடுங்கவும்'' (குறுந். 319: 1–2)

என்பதில் ஆண்மான் தன் பிணைகளைத் தழுவிக்கொண்டு காட்டில் காணப்படும் புதர்களிடையே ஒதுங்கி மறைந்து இருக்கும் என்பது மான்களின் இன்பவுணர்வையும் அதனால் அவை அடையும் நாணத்தையும் காட்டுகின்றன. நற்றிணையில்

''மடப்பினை தழிஇய மாஎருத் திரலை'' (நற். 256:8)

என்ற அடியில் இன்ப வேட்கைய அடையும் பொருட்டு ஆண்மான் பெண்மானைத் தேடி அழையும் என்ற செய்தி உள்ளது.

''அங்காட டாரிடை மடப்பினை தழிஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள்'' (அகநா. 14: 5–6)

இதில் ஆண்மான் பெண்மானோடு ஓரிடத்தில் தங்கும் காலத்தில் தலைவன் வரவில்லை என்பது மான்கள் கூடுதற்கு ஏற்ற காலமாகக் கார்காலம் உள்ளது. இதைக் கொண்டுதான் தலைவன் கூடுதற்கு உரிய காலமாக கார்காலத்தைக் கூறுகின்றனர். ''மான்களின் கூடுதலை குழைக்க அன்றைய மக்கள் விரும்பவில்லை''[20] மேலும்,

''கணைக்கால் அம்பினை ஏறும்புறம் நக்க
ஒல்குநிலை யாஅத்து ஒங்குசினை பயந்த'' (அகநா. 287: 10–11)

என்னும் அடிகளில் பெண்மானின் முதுகுப்புறத்தை ஆண்மான் அன்போடு தன் நாவினால் வருடிக்கொடுக்கின்றது. இது ஆண்மானின் இன்ப வேட்கையை வெளிப்படுத்துகிறது. மேலும் ''பெண்மான் ஆண்மானோடு சேர்கை பெற்று மகிழ்ச்சியாக இருந்த காட்சியுமுண்டு''[21] உயர்திணையான தலைவன் தலைவியின் மெய்யுணர்வையும், இன்பவேட்கையையும் நேரடியாகக் கூறுவது தமிழ்மரபு இல்லை. எனவே அவர்களின் உள்ளத்தைக் கூற விலங்குகளின் செயல்பாடுகள் புலவர்களுக்கு தேவைப்பட்டுள்ளது.

2.3.5. யானைகளின் இன்பவுணர்வு

யானையின் உணர்வு துண்டலுக்கு பொழுது ஏதும் இல்லை. ஒரு யானை பருவத்திற்கு வந்த பின்னர் அது இனப்பெருக்கத்திற்குத் தயாராகின்றது. ''ஆண்யானை தனது பத்தாவது வயதில் பருவத்திற்கு வந்துவிடுகின்றது. ஆனால் பெண்யானையோ ஆறு வயதிலேயே இனப்பெருக்கத்திற்குத் தயாராகிவிடுகிறது.''[22] என்கிறார் குன்றில்குமார். யானைகள் பருவம் அடைந்த பின்னர்தான் மதம் ஏற்படுகின்றது.

''..... யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்து அது காணுநர்ப் பெறினே'' (குறுந். 136: 3–5)

என்ற குறுந்தொகை அடிகளில் யானை மதம் கொண்டதற்குக் காரணம் தழையுணவுதான். ''மதம் என்பது ஆண் யானைகளுக்கே வரும். பெண்யானையுடன் இணை சேருவதற்கான உணர்ச்சி மிகுதியாகி அது நிறைவேறாத நிலையில் மதம் பிடிப்பதாகக் கூறப்படுகிறது. இது அறிவியல் பூர்வமாக இதுவரை உண்மை என்று நிரூபிக்கப்படவில்லை.''[23] ''சுதந்திரமான

யானைக்கு மதம் என்ற நிலையானது அதன் உடலியங்கியலில் இயல்பான ஒரு கட்டமே. அப்போது அதன் வாழ்க்கை புதுப்பிக்கப்படுகிறது எனலாம். இன்னும் மதநிலை குறித்து தீர்மானமான முடிவுகள் இல்லை. ஆய்வுகள் தொடர்கின்றன.''[24] இவற்றை பார்க்கும் பொழுது மதம் ஏற்படும் காலத்தில் யானைகள் கோபமாகவும் அதிக வலிமையுடனும் காணப்படும். ஆனால், எதனால் மதம் ஏற்படுகின்றது என்பதை தெளிவுறுத்தவில்லை. மேலும் அகநானூற்றில்,

''வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்
இரும்புணர்த் தடக்கையின் ஏமுறத் தழுவ
கடுஞ்சூன் மடப்பிடி நடுங்குஞ் சாரல்'' (அகநா. 78: 3–6)

மதநீர் ஒழுகும் பேராற்றல் உடைய களிறு சூழ்கொண்ட பெண்யானையை தழுவ அது நடுங்கும் என்பதில் மதம் கொண்ட ஆண்யானையின் உணர்வை அறியமுடிகிறது.

இது போன்ற, ''மதம் கொண்ட யானை பெண்யானைக் கூட்டத்தை விட்டு விலகியும் பகை விலங்குகளைக் கொல்லாமலும் அவற்றை வென்று பகையைப் போக்கிக் கொல்லமாலும் தணியாகத்திரிகிறது.''[25] ''காட்டு ஆண் யானைகளுக்கும் மதநீர் சுரந்து, பெண் யானையுடன் இணைசேர முடியாதநிலை ஏற்படும். காரணம் வலிமை மிகுந்த வேறு ஆண்யானையுடன் சண்டையிட்டு வெற்றி பெற்றால் மட்டுமே இணைசேர முடியும் அது முடியாத பட்சத்தில் பெண் யானையுடன் உறவுகொள்ள முடியாத நிலை ஏற்படும். இப்படிப்பட்ட நிலையில் அந்த யானைக்கு மதம் பிடிக்கவும் செய்யும். அவ்வாறு மதம் பிடித்தால் மற்ற

ஆண் யானைகள் அனைத்தும் அதற்கு எதிரிகளாகி விடும். தங்கள் கூட்டத்தில் சேரவிடாமல் அடித்துத் துரத்திவிடும். இதனால் கூட்டத்தில் இருந்து விலக்கப்பட்டு தனித்து விடப்பட்ட அந்த மத யானைக்கு மன அழுத்தம் இன்னும் அதிகமாகும். கோபத்தில் காட்டில் உள்ள மரங்களைப் பிடுங்கி எரியும். வாழை, தென்னை, பாக்கு பயிரிடப்பட்டுள்ள தோட்டத்தில் புகுந்து அனைத்தையும் தாக்கி அழிக்கும்.''[26] மதம் கொண்ட யானைகள் கூட்டத்தை விட்டு தானே விலக்கிக் கொள்வது இல்லை. அது மற்ற யானைகளால் விலக்கித் துரத்திப்படுகிறது. மதநீர் சுரப்பெடுத்த யானை தனது இச்சை நிறைவடையாத போது மதம் பிடித்து முரட்டுச் செயல்களில் ஈடுபடுகிறது.

''..... நாறுஉயிர்
மடப்பிடி தழிஇத் தடக்கை யானை
குன்றச் சிறுகுடி இழிதரு
மன்றம் நண்ணிய மலைகிழ வோற்கே'' (குறுந். 332: 3–6)

இவ்வடிகளில் களிறு தனது இளைய பிடியைத் தழுவிக் கொண்டு சிற்றூரது மன்றங்கள் வழியாக இறங்கிச் செல்லும் என்ற செய்தி உள்ளது. இது தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நடத்தல் வேண்டும் என்ற உள்ளுறை உள்ளது. மற்றொரு குறுந்தொகைப் பாடலில்,

''நாகுபிடி நயந்த முளைக்கோட் இளங்களிறு
குன்றம் நண்ணிக் குறவர் ஆர்ப்ப
மன்றம் போழும் நாடன்....'' (குறந். 346: 1–3)

என்று இளங்களிறு இளம்பிடியைக் கூடுதல் கண்டு ஆரவாரித்தால் அக்களிறு மன்றத்தின் உள்செல்லும். இதில் தலைவன் இரவுக்குறிக்கு மனையருகே

வருவான் என்பதை உள்ளுறையாகக் கூறப்பட்டுள்ளது. களிறு பிடியைக்கூடி இன்பம் துய்க்கும் வெளிப்படைச் செய்தியும் உள்ளது. இதே போன்று ஆண் யானையும் பெண்யானையும் கூடி மகிழ்த்த செய்தி நற்றிணையிலும் காணப்படுகிறது.''[27] ''மதங்கொண்ட யானைதான் இனச்சேர்க்கை செய்யும் என்று எண்ணுவது தவறு. மதநீர் சுரக்காத நிலையிலும் இவை இனச்சேர்க்கை செய்யவல்லவை. கொம்பன் யானையின் கண்களிலிருந்து மதநீர் வடிவது அது முதிர்ச்சியடைந்ததைக் காட்டுகிறது. எது எவ்வாறாயினும், இறுதியில் பெண் யானையே தன்னுடன் புணரும் ஆண் யானையும் தேர்ந்தெடுக்கும். பெண் யானை உணர்ச்சி நிலையில் இல்லையெனில், ஆண்யானை செய்யும் முயற்சிகளையெல்லாம் முறியடித்துவிடும். பெண்யானை உணர்ச்சிநிலையில் இருப்பது பெரும்பாலும் வெளிப்படத் தெரியாது. ஆயினும் அது உணர்வோடு இருப்பின் ஒருவித மனத்தை வெளிப்படுத்தி ஆண் யானையை ஈக்கும் ஆயினும் சில நேரங்களில் எப்படி ஆண் யானைகள் உணர்ச்சி வயப்பட்ட பெண் யானையை அடையாளம் காண்கின்றன என்பது புதிராகவே உள்ளது.''[28] மேலும் பரிபாடலில் ''ஆண்யானை பக்கத்தில் உள்ள பெண் யானையைப் பார்த்து மயங்கிப் பாகன் நடத்த நடவாமல் நின்றது. பெண் யானையும் களிற்றின் மேல் மனம் செல்ல மாடத்தில் உள்ள பொம்மைப் புலி, களிற்றின் மேல் பாயும் என அஞ்சியது. பாகன் நடத்தவும் செல்லாது திமிரியாது.''[29] களிறும் பிளிரியது அதனால் பிடியின் அருகில் களிற்றைச் செலுத்திப் பிடியின் மேல் அமர்ந்திருந்த பெண்களின் அச்சத்தைப் போக்கினர் பாகர். இதில் யானைகளின் பாலியல் உணர்வு வெளிப்படுகிறது. மதுரைக்காஞ்சி,

''பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவரிப்'' (புறநா. 676)

என்ற அடியில் பிடியைப் புணர்ந்த களிறு முழங்கியது என்ற செய்தி யானைகளின் இன்பியல் உணர்வை எடுத்துக்கூறுகிறது.

2.4. விலங்குகளின் குடும்ப உணர்வுகள்

குடும்பம் என்பது இரத்த உறவு முறையைக் கொண்டு அமைகிறது. தாய், தந்தை, குழந்தைகள் என்ற அமைப்பில் காணப்படுகிறது. உயர்திணையாகிய மனிதனின் குடும்ப அமைப்பில் முன்னேற்றம் காணப்படுகிறது. கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அடிப்படையில் இன்று வாழ்கின்றான். "குடும்பம் என்பது இயக்குமுள்ள கோட்பாட்டைக் குறிக்கிறது. அது ஒருபோதும் இயங்காதிருப்பதில்லை. சமூகம் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு முன்னேறுகின்ற பொழுது அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்துக்கு முன்னேறுகிறது"[30] என்று மார்கன் கூறுவதாக எங்கெல்ஸ் கூறுகின்றார். விலங்குகளும் குடும்ப அமைப்புடன் வாழ்கின்றன.

2.4.1. ஆக்களின் குடும்ப உணர்வு

பசுக்களைத் தற்காலத்தில் வீட்டுவிலங்காக மட்டுமே பார்க்க முடிகிறது. எருமைகளில் காட்டு எருமை என்ற இனம் இருப்பது போல் 'ஆ' இனத்தில் தற்காலத்தில் இல்லை. ஆனால் பழங்காலத்தில் இருந்திருக்க கூடும் ஏனென்றால் தற்காலத்தில் 'ஆ' இனத்தில் 'மலைமாடு' என்ற ஒரு இனம் உள்ளது.

"மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏஎறு
உடனிலை வேட்கையின் மடநாடு தழிஇ
ஊர்வயிற் பெயரும் பொழுதில் சேர்புடன்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுநகும்" (அகநா. 64: 11–14)

என்ற அகநானூற்று அடிகளில் ஏறுகள் பசுக்களுடன் மேய்ச்சலுக்குச் சென்று திரும்பும் போது கன்றுகளை நினைத்து அழைக்கின்றது. அச்செயல் கன்றுகளிடம் பசுவும், ஏறும் வந்துவிட்டோம் என்ற செய்தியைக் கூறுவதாக உள்ளது. இது மாலை நேரம் வந்துவிட்டது என்று தலைவன் தேர்ப்பாகனிடம் உரைப்பதாக இருந்தாலும் பசுக்களின் குடும்ப உணர்வையும் எடுத்துரைக்கின்றது.

''..... யேறொடு
கன்றுடை யாயந் தரீஇப் புகல்சிறந்து
புலவுவில் லிளைய ரங்கை விடும்ப
மத்துக்கவி றாடா வைகற்பொழுது நினையூஉ
ஆண்பயம் வாழ்நர்.....'' (பதிற். 71: 13–17)

இவ்வடிகளில் வீரர்களுக்கு பரிசிலாகக் கொடுக்கும் 'ஆ'க்களைக் கூட ஆண், பெண் கன்று என்று குடும்பமாகக் கொடுத்துள்ளனர்.

2.4.2. கரடியின் குடும்ப உணர்வு

கரடிகளும் குடும்ப அமைப்பைப் பின்பற்றி வாழ்ந்துள்ளன என்பதைச் சங்கப் பாடல்கள் கூறியுள்ளன.

''வான்புகு தலைய குன்றத்துக் கவாஅன்
பெருங்கை எண்கின் பேழ்வாய் ஏற்றை
இருள்துணிந்து தன்ன குவவுமயிர்க் குருளை
தோன்முலைப் பணிவொடு திளைக்கும்
வேனில் நீடிய சுரன்இறந் தோரே'' (அகநா.201: 15–20)

என்ற அகநானூற்றுப் பாடலில் ஆண்கரடியும் பெண்கரடியும் குட்டிகளுடன் அன்பாகக் குடும்பம் நடத்துகின்றன. இங்கு கரடியின் குடும்ப உணர்வு தலைவனின் குடும்ப உணர்வை தூண்டும் விதமாக உள்ளது. அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள் உயர்திணை உயிரினங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தப் பயன்பட்டுள்ளது.

2.4.3. குரங்குகளின் குடும்ப உணர்வுகள்

குரங்குகளின் வாழ்வியலை மிகவும் நுட்பமாக உற்றுநோக்கி அவைகள் குடும்ப அமைப்பைக் கொண்டே வாழ்ந்துள்ளன என்று கூறியுள்ளனர். "குரங்கின் குடும்ப வாழ்க்கையைப் பற்றிச் சங்கப் புலவர்கள் சில செய்திகள் கூறியுள்ளனர் விலங்கு நூலார். குரங்குகள் ஆண், பெண்ணாக இணைவதையும் ஆணும் பெண்ணுமாக வாழ்வதையும் கூறியுள்ளனர். ஆனால் ஓர் ஆண் பல பெண் குரங்குகளைத் துணையாக வைத்திருப்பதையும் கண்டுள்ளனர். குரங்கினத்தில் ஒருதார மணமும் பலதார மணமும் நிலவுகின்றது என்பர்"[31] குரங்குகளின் குடும்ப அமைப்பைச் சங்க புலவர்கள் அறிந்து அவற்றை தம் பாடல்களின் குறிப்பிட்டுள்ளனர்.

குரங்குகளின் குடும்ப அமைப்பில் ஆண் இனமே தலைமை வகிக்கிறது. அதனால் அவ்வினத்திற்குப் பொறுப்புகள் அதிகமாக உள்ளது.

"கொடியர் வாழி – தோழி– கடுவன்
ஊழுறு தீங்கனி உதிர்ப்பக் கீழிருந்தது
ஏற்பன வேற்பன உண்ணும்
பார்புடை மந்தில மலையிறஞ் தோரே" (குறுந். 278: 4–7)

இதில் ஆண்குரங்கு தன் குடும்பத்தின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டுக் கனிகளை உதிர்த்து விடுகின்றன. அந்நிகழ்வைக் கண்ட பிறகும் தலைவனுக்குப் பொருப்புணர்வு வரவில்லை. நான் எவ்வாறு ஆற்றிலிருப்பேன் என்று தலைவி தோழியிடம் வினவுகிறாள்.

"கல்லாக் கடுவன் நடுங்க முள்ளெயிற்று
மடமா மந்தி மானா வன்பறழ்
கோடுயர் அடுக்கத்து தாடுமழை ஒளிக்கும்" (நற். 233:1–3)

என்பதில் பெண் குரங்கும் குட்டிகளும் மறைந்து கொள்கின்றன. அவைகளைக் காணாமல் ஆண்குரங்கு பாசத்தால் தவிக்கிறது.

"முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்ன தாகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்றுணைப் பயிருங் குன்ற நாடன்" (அகநா. 352: 1–7)

தன் இனத்தின தலைவனாக இருந்தாலும் தான் சேகரித்துக் கொண்டுவரும் பொருளைத் தன் துணையான பெண் குரங்கிடமே கொடுக்கின்றது. இப்பண்பு இன்றும் மானுட குடும்பத்தில் நடப்பதைக் கண்கூடப் பார்க்க முடிகின்றது. மேலும் "குரங்குகள் குடும்ப அமைப்புடன் இருந்தது என்பதை ஐங்குறுநூற்று பாடலும் கூறுகின்றது"[32] குரங்குகளும் குடும்ப அமைப்புடன் வாழ்கின்றன.

அவற்றிற்கும் குடும்ப பொருப்புகள் உள்ளன. அவை குடும்பத்தில் அன்புடன் வாழ்ந்துள்ளன என்பதைச் சங்க இலக்கியம் கூறுகின்றது.

2.4.4. புலிகளின் குடும்ப உணர்வு

புலிகள் மனிதர்களுக்கு அச்சம் தரும் விலங்கு என்பதாலும் அவை மனிதர்கள் காணும்படி தன் வாழ்வை அமைத்துக் கொள்ளாதக் காரணத்தாலும் சங்கப்புலவர்கள் அவற்றின் குடும்ப அமைப்பை மிகுதியாகக் காணவில்லை. சிலர் காணநேர்ந்ததை மட்டும் கூறியுள்ளனர். "பெண்புலி குட்டிகளை ஈன்று பசியுடன் இருப்பதை உணர்ந்த ஆண்புலி இரைதேடச் செல்கின்றது என்பது புலிகளின் குடும்ப அமைப்பைக் காட்டுகின்றது."[33] "பெருவாரியான புலிகள் ஒன்றை ஒன்று சந்திப்பதைத் தவிர்க்கின்றன. இருப்பினும் ஆண் மற்றும் பெண் புலிகள் இரையை ஒன்றாகப் பகிர்ந்து கொள்வதற்கான சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு ஆண் புலியானது தான் கொன்ற இரையை இரண்டு பெண் புலிகள் மற்றும் நான்கு குட்டிகளுடன் பகிர்வதை ஜார்ஜ் ஸ்கால்லெர் பார்த்துள்ளார். பெண்புலிகள் பெரும்பாலும் ஆண்புலிகள் அதன் குட்டிகளின் அருகில் இருப்பதை விரும்புவதில்ல. ஆனால் ஸ்கால்லெர் இந்தப் பெண்புலிகள் தனது குட்டிகளை ஆண்புலிகளிடமிருந்து, காப்பதற்காக எந்த முயற்சியும் எடுப்பதில்லை என்பதைக் கண்டு அது குட்டிகளுக்குத் தந்தையாக இருக்கலாம் எனக் கருதுகிறார்"[34] என்று விக்கிப்பீடியாவில் கூறப்பட்டுள்ளது. புலிகளுக்குக் குடும்ப உணர்வு காணப்படுகிறது என்பதை அறியமுடிகிறது.

2.4.5. மான்களின் குடும்பவுணர்வு

மான்களைக் காண்பதே ஓர் இனிமையான செயலாகும். மான்கள் குடும்பத்துடன் வாழ்வது மனக்கண் முன் படமாகக் காட்சிப்படுத்துகிறது.

“தொடுதோற் கானவன் சுவைபொறுத் தன்ன
இருதிரி மருப்பின் அண்ணல் இரலை
செறியிலைப் பதவின் செங்கோல் மென்குரல்
மறியாடு மருங்கின் மடப்பினை யருத்தித்
தெள்ளறல் தழீஇய வார்மணல் அடைகரை
மெல்கிடு கவுள துஞ்சபுறங் காக்கும்
பெருந்தகைக் குடந்தை நெஞ்சம் ஏமுறச்” (அகநா. 34: 3–9)

என்ற அடிகளில் ஆண்மான் பெண்மான்களையும் குட்டிகளையும் பாதுகாக்கிறது. அதை தலைவன் பார்க்கும் பொழுது மான் தன் குடும்பத்தை காப்பது போல தானும் குடும்பத்தைக் காக்க வேண்டும் என்ற உணர்வு எழும். மானின் குடும்ப உணர்வு மானிடனின் குடும்ப உணர்வைத் தூண்டுகிறது. “கலைமான் குட்டிகளுடன் பெண்மானைத் தழுவி நிற்கும் காட்சியைக் கூறுகிறார் புலவர்”[35] இந்த மானின் குடும்ப அன்பு தலைவிக்கு ஏக்கத்தை ஏற்படுத்துகிறது.

3.4.6. யானைகளின் குடும்பவுணர்வு

யானைகள் களிறு, பிடி, கன்று என்று உறவுடன் வாழ்கின்ற விலங்கு ஆகும்.

“வேட்டச் சீறூர் அகன்கட் கேணிப்
பயநிரைக் கெடுத்த மணிநீர்ப் பத்தர்
புன்றலை மடப்பிடி கன்றொ டார
வில்கடிந் தூட்டின பெயரும்
கொல்களிற் றொருத்தல சுரன்இறந் தோரே” (நற். 92: 5–9)

என்ற நற்றிணை பாடலில் யானைகள் குடிப்பதற்கு நீர் கிடைக்கவில்லை. வேட்டுவர் குடியிருக்கும் பகுதிக்கு அருகில் கிணற்றில் இருந்த நீரை இறைத்து, ஆனிரைகளுக்காக வில் பொறியால் மூடி வைத்திருக்கின்றனர். அந்நீரைத் தன் இளம்பிடியும் கன்றும் அருந்துமாறு செய்கிறது களிறு. ‘‘ஆண்யானை வேங்கை மரத்தின் பருத்த அடியை முறித்துக் கன்றுக்கும் பெண் யானைக்கும் உண்ணுமாறு ஊட்டுகின்றது.’’[36] ‘‘பெண்யானை முதல் கன்றை ஈன்று உணவு கிடைக்காமல் வருந்தியதைக் கண்ட ஆண் யானை கானவர்கள் விளைவித்துள்ள திணையைக் கவர்கிறது அதைக் கண்ட கானவர்கள் எரி கொள்ளியினை எறிகின்றனர்’’[37] இங்கு பெண் யானையின் பசியை போக்க ஆண்யானை படும் துன்பம் அவைகளின் குடும்பப் பாசப்பிணைப்பை வெளிப்படுத்துகின்றது. ‘‘பாலை நிலம் நாளுக்கு நாள் மிக வரண்டுகொண்டே செல்கிறது. அப்போது யானைக் குடும்பம் ஒன்று பசியால் வாடுகிறது. பசி துயர் தாங்காமல் வற்றிய குளத்தில் ஆண்யானை, கன்றையும் பெண் யானையின் சிறிய தலையையும் கழுவி ஆச்சமரத்தடியில் நிர்க்கும்’’[38] ‘‘கடுமையான கோடைகாலத்தில் பூமி வறண்டு போய்விடுவதால் தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படும். அந்த நேரத்தில் தண்ணீரைத் தேடி வெகு தொலைவுக்கு அலையும் தன்மை யானைகளுக்கு உண்டு. நீர் நிலைகளைத் தேடிக் கண்டுபிடித்தாலும் பெண் யானைகளுக்கு முன்னுரிமை அளிக்கும்’’[39] யானைக்குடும்பத்தில் பெண் யானைக்கும் குட்டிகளுக்கும் முன்னுரிமை கொடுக்கும் மாண்பு காணப்படுகின்றது. இச்செயல்பாட்டை அன்றே சங்கப் புலவர்கள் கண்டு உணர்ந்து பாடல் இயற்றியுள்ளார்.

குழந்தைகளின் கொஞ்சல் விளையாட்டுகள் அனைவரையும் பேரின்பத்தில் ஆழ்த்தும் இந்த யானை குடும்பத்திலும் அவ்வாறே காணப்படுகிறது.

''புன்தலைப் புதல்வன் ஊர்பிழிந் தாங்குக்
கடுஞ்சூல் மடப்பிடி தழீஇய வெண்கோட்டு
இனஞ்சால் வேழங் கன்றூர்பு இழிதரப்
பள்ளி கொள்ளும் பனிச்சுரம் நீந்தி'' (அகநா. 197: 13–15)

என்ற பாடலில் யானைக் கூட்டத்தில் ஒரு குடும்பம் மடப்பகுணம் வாய்ந்த மனைவியோடு இருக்கும்போது அவர்களது குழந்தை விளையாடுவது போல இந்த யானைக் குடும்பத்திலும் ஆண்யானையும் பெண்யானையும் விளையாடும் போது அதன் மீது கன்று விளையாடும். அதனால் ஏற்படும் பேரானந்தத்தை அனுபவித்த வாறே யானை உறங்கும்.

புலவர்கள் பரிசில் கேட்கும் போது கூட யானைக் குடும்பத்தையே கேட்கின்றனர் என்பதை,

''ஓடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி'' (புறநா. 369: 25–28)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன.

''கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்குவர பாகிய கவை னோம்பலி
னொண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு

நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்கு குரல்'' (மலைபடு. 307–310)

என்ற மலைபடுகடாம் அடிகளில் கருவுற்றிருந்த பெண் யானையை ஆண் யானை பாதுகாத்து வருகிறது என்பதை அறியமுடிகிறது.

யானைகளின் குடும்ப அமைப்பில் ஆண் யானையே தன் குடும்பத்தின் மீது அதிகப் பாசம் கொண்டுள்ளது. உணவு, தண்ணீர் போன்ற அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளைத் தன் குடும்பத்திற்காக ஆண் யானை விட்டுக் கொடுக்கிறது. யானைக் குடும்பத்திற்கும் கூட்டத்திற்கும் பாதுகாப்பாக விளங்குவதும் ஆண்யானையே ஆகும்.

2.5. விலங்குகளின் தாய்மையுணர்வு

தாய்மை என்பது பெண் இனத்திற்கு மட்டுமே படைக்கப்பட்ட ஓர் உன்னதமான தன்மை ஆகும். தாய்மை இல்லை என்றால் உயிரினங்களின் பிறப்பு என்பதே இல்லாமல் போய்விடும். அதனால் தான் தாய்மையை அனைவரும் போற்றுகின்றோம். தாய்மை என்பது புவியில் உயிரினங்கள் நிலைத்திருக்க இயற்கையால் படைக்கப்பட்ட ஒரு செயல்பாடு ஆகும்.

2.5.1. ஆக்களின் தாய்மையுணர்வு

பசுக்களைத் தாயாகத் தெய்வமாக வணங்குகின்றனர். பசு தம் கன்றிடம் தாய்மையுணர்வை அனைவரும் வியக்கும் வண்ணம் வெளிப்படுத்துவதை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

''கறவை கன்றுவயிற் படரப் புறவிற்'' (குறுந். 108: 2)

என்ற குறுந்தொகை அடிகளில் மேய்ச்சலுக்காகச் சென்ற பசுக்கள் மாலை நேரத்தில் தம்கன்றின் நினைவெழுந்தனவாகத் தத்தம் இல்லத்தை நாடிச் செல்கின்றன. மேலும் நற்றிணையில்,

"தடங்கோட் டாமான் மடக்கண் மாநிரை
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்" (நற். 57: 1–2)

என்ற அடிகளில் காட்டுப்பசு தன்னுடைய கன்றொடு துயில்கிறது என்பது தாயின் அரவணைப்பில் கன்று வளர்கிறது என்பதை உணரமுடிகிறது. மேலும் மாலையில் பசுக்கள் கன்றைப் பார்க்கும் ஆசையோடு மன்றத்திற்கு வரும்"[40] மாலையில் கன்றின் நினைவுத் தாய்ப் பசுவுக்கு எழுகின்றது.

"பதவுமேயல் அருந்து மதவுநடை நல்லான்
வீங்குமான் செருத்தல் தீம்பால் பிலிற்றக்
கன்றுபயிர் குரல மன்றுநிரை புகுதரு" (அகநா. 14: 9–11)

பால்சுறந்த மடிச்சுடையுடன் சென்று கன்றுகளிடம் சேர்ப்பிக்கும் தாய்ப்பசு,

"புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்
டெம்மனைப் புகுதற் தோனே அககண்டு" (அகநா. 56: 11–12)

கன்றை ஈன்ற தாய்ப்பசு அதை பாதுகாக்கவும் செய்கிறது என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. "முதன் முறையாக கன்று ஈன்ற பசு கன்றை சுற்றியே வருகின்றது மேய்ச்சலுக்கு கூட செல்லவில்லை"[41] என்பது பசுக்களின் தாய்மை உணர்வின் உச்சம் ஆகும்.

"நீருற்றா வருப்பிற் போற்றுபு நோக்கிநூங்" (பொருந். 151)

என்ற பொருநர் ஆற்றுப்படை அடியில் கரிகாலனின் பார்வை கன்றை ஈன்ற பசுவைப் போன்றது என்பது குடிமக்களிடம் பாச உணர்வையும் தாயைப் போன்ற அன்பையும் உடையவன் என்று விளக்குகிறார் புலவர்.

2.5.2. எருமைகளின் தாய்மையுணர்வு

எருமைகளில் காட்டு எருமைகள் என்ற இனமும் உண்டு. வீட்டு விலங்காக உள்ள எருமைகளும் உண்டு. வீட்டு எருமையின் கன்றை கட்டி வைத்து விட்டான் உழவன். தாய் எருமை மேய்ச்சலுக்குச் செல்லாமல் கன்றுடனே இருந்தது என்பதை,

"இருமருப்பு எருமை ஈன்றணிக் காரண்" (குறந். 181: 3)

என்ற குறுந்தொகை அடிகள் விளக்குகின்றன.

2.5.3. குரங்குகளின் தாய்மையுணர்வு

குரங்குகளின் தாய்மையுணர்வு என்பது மற்ற விலங்குகளை விட வேறுபட்டுக் காணப்படுகிறது. தனது குட்டிகளை மிகவும் பாதுகாப்புடன் வளர்கின்றன.

"பெரிதால் அம்மநின் பூசல் உயர்கோட்டு
மகவுடை மந்தி போல" (குறுந். 29: 5–6)

என்ற குறுந்தொகை பாடலில் குரங்குகள் குட்டிகளைத் தன் அடிவயிற்றில் அணைத்துக் கொண்டேதான் இருக்கிறது என்பது கூறப்பட்டுள்ளது. குரங்குகள் தங்களின் தாய்மை உணர்வின் செயல்பாட்டை எக்காலத்திலும் மாற்றிக் கொள்ளவில்லை என்பதை அறியமுடிகின்றது.

“துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென சுற்றங் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்” (நற். 57: 3–6)

என்ற பாடலில் குரங்குகள் தாய்மை உணர்வால் தந்திரமாகச் செயல்படுகிறது. காட்டுபசு கண்ணயறும் நேரம் பார்த்துத் தன் குட்டிக்கான பாலைக் கரந்து ஊட்டுகிறது. இங்கு குரங்குகளின் தாய்மையுணர்வு அவற்றின் அறிவிற்குத் தூண்டலாக அமைகிறது என்ற உளவியலும் பேசப்பட்டுள்ளது. குரங்குத் தந்திரமாகச் செயல்படுவது போல் தலைவியை கொண்டு சென்று மணம் செய்துகொள் என்பதாகும்.

“கைக்கோணி மறந்த கருவிரண் மந்தி
யருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிடையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பி னெடுவரை’’ (மலைபடு . 311–315)

என்ற அடிகளில் தன்னால் தாவமுடியாத சூழலில் கூட தன் குட்டிகளுக்காகத் தளிரைத் தின்று வாழும்.

2.5.4. புலிகளின் தாய்மையுணர்வு

புலி என்ற சொல்லை கேட்டாலே அனைவரின் உள்ளத்திலும் சிறு அச்சம் ஏற்படும். அப்படிப்பட்ட புலிகளின் மனத்தில் உள்ள தாய்மை உணர்வைப் புலவர்கள் அறிந்து அதனை தெளிவுற எடுத்துக்கூறியுள்ளனர்.

“புலிபுறங் காக்கும் குருளை போல” (புறநா. 42:10)

என்ற புறநானூற்றுப் பாடலடியில் புலியால் காக்கப்படும் குட்டியைப் போலக் குறையாத செங்கோலாட்சி செய்கின்றாய் என்பதில் புலி குட்டிகளைச் சிறப்பாக வளர்ப்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

2.5.5. பூனைகளின் தாய்மையுணர்வு

காட்டுப்பூனைகள் சிறியதாக இருந்தாலும் சில இடங்களில் புலிகளின் குணங்களை ஒத்திருக்கும். புலியும் புனையும் ஒரே இணத்தைச் சேர்ந்தவை.

“பிள்ளை வெருகிற்கு கல்சிரை யாகிக்” (குறுந். 107:4)

என்ற அடியில் பூனைகள் தன் குட்டிகளுக்கான இரையைத் தேடியும் அவ்வாறு கிடைத்த உணவுகளைச் சேமித்தும் வைத்திருக்கும் என்பதை அறியமுடிகிறது. இல்லத்தில் வளர்க்கும் பூனைகள் கூட குட்டிகளுக்கு இரையை அடித்துக் கொண்டு வந்து கொடுப்பதைக் காணமுடிகிறது.

2.5.6. மான்களின் தாய்மையுணர்வு

மான்கள் மக்கள் மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும் காட்டு விலங்காகும். அவைகள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தனது குட்டிகளைப் பாதுகாப்பாக வளர்க்கும்.

“செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பால் ஆர மந்திப்
பெருவரை நிழல் உகளும் நாடன்” (குறுந். 187:1–2)

என்ற அடிகளில் மான் குட்டிகள் தாய்மடியில் பாலை உண்ணும் மகிழ்வான உணர்வு மிக்க காட்சியை எடுத்துரைக்கின்றார் கபிலர்.

2.5.7. யானைகளின் தாய்மையுணர்வு

யானைகளின் தாய்மையுணர்வு மற்ற விலங்குகளை விட வேறுபாடானது. யானைகளின் உணர்வுகளில் தன் இளம் உயிரியை பெற்றெடுக்கவும் அவற்றை வளர்க்கவும் தம் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற யானைகளும் உதவுகின்றன. விலங்கியலாளர்கள் ‘‘யானைகளின் சினைக் காலத்தை சரியாக கணக்கிட்டு கூற முடியாது. 18 முதல் 22 மாதங்கள் யானையின் சினைகாலம். 13 மாத சினையாக இருக்கும் போது வயிற்றிலுள்ள குட்டி அசைவதை பெண் உணரும்’’[42] என்கின்றனர். யானை குட்டியை ஈன்ற பிறகு அக்கூட்டத்தில் உள்ள அனைத்து உறவுகளும் அக்குட்டியை பாதுகாத்து வளர்க்கும். ‘‘பிறந்த குட்டியை கூட்டத்திலுள்ள எல்லா யானைகளும் தொட்டு முகர்ந்து பார்த்து அறிமுகமாகி அன்பைப் பொழிகின்றன. குறிப்பாக பெரியம்மா (Aunt) அல்லது பாட்டியான தலைமைப் பெண்யானையும், மற்ற மூத்த பெண்யானைகளும் மிகுந்த பரிவுடன் பாதுகாப்பு அளிக்கின்றன’’[43] அனைத்து உறவுகளும் பாதுகாப்புக் கொடுத்தாலும் தாய்மை என்பதும் தாயின் அரவணைப்பில் குட்டி வளர்வதும் ஓர் மகத்தான உணர்வு நிலையே ஆகும்.

‘‘குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்றுகாத்து அல்கும்
ஆரிருள் கருகிய அஞ்சுவடு சிறுநெறி’’ (நற். 85: 4–6)

என்ற நற்றிணைப் பாடலடிகளில் தலைவன் இரவுக்குறி வரும் வழியில் புலியிடம் இருந்து தன் குட்டியைப் பாதுகாக்கிறது யானை. அவ்வாறு அச்சம் தரும்

வழியில் வரவேண்டாம் திருமண செய்து கொள் என்பதாக உள்ளது. தாய்மை உணர்வு பாதுகாப்பை எண்ணிச் செயல்படுகிறது.

"கயந்தலைக் குழவிக் கவியுதிர் மடப்பிடி
குளகுமறுத் துயங்கிய மருங்குல் பலவுடன்
பாழூர் குரம்பையில் தோன்றும் ஆங்கண்" (அகநா. 229: 4–6)

இவ்வடிகளில் தனக்கு கிடைத்த சிறிது தழையைத் தன் கன்றுக்குப் பசியாறக் கொடுத்துவிட்டுத் தாய்யானை உண்ணாமல் பட்டினி கிடந்தது என்ற தகவலை அறியமுடிகின்றது.

"மன்றுபடு பரிசிலர்க் காணிற் கன்றொடு
கறையிக யானை யிரியல் போக்கும்
மலைகெழு நாடன்....." (புறநா. 135: 11–15)

என்ற புறநானூற்றுப் பாடலடிகளில் மன்னன் புலவர்களுக்கு வழகும் பரிசிலில் கூட யானைகளை அவற்றின் கன்றுகளுடனேயே கொடுப்பர் என்கிறது புறநானூறு. குழந்தைகளைப் பாதுகாத்து வளர்ப்பதில் தாயிக்கு ஈடானவர்கள் எவருமில்லை என்பதை யானைத் தாய்களும் நிருபித்துக் காட்டுகின்றன.

2.5.8. யானைத் தந்தையின் அன்புணர்வு

கன்றை ஈன்று காப்பது பெண்யானையின் கடமை என்று இராமல் தந்தையான ஆண்யானை அந்த கன்றைப் பாதுகாக்கின்றது. இதனை அகநானூற்றுப் பாடலடிகள்,

"ஈன்றணி இரும்பிடி தழிஇக் கன்றுதன்

தூங்குநடைக் குழவி துயில்புறங் காப்ப'' (அகநா. 168: 9–10)

என்று விளக்குகின்றன. இரவுக்குறியை விலக்கி திருமணம் செய்துகொள்க என்று கூறும்பொழுது இரவுக்குறி வரும் வழியின் இன்னல்களாக யானைக் களிறு தன் இளங்கன்றையும் பிடியையும் பாதுகாத்து நிற்கும் என்று கூறப்பட்டுள்ளது.

2.6. விலங்குகளின் சமூகவுணர்வு

சமூகம் என்பது குழுவாகச் சேர்ந்து ஒரு பகுதியில் கூட்டமாக வாழ்வதும், தங்களுக்காக ஒரு சட்டத்தை வகுத்துக் கொண்டு வாழ்வதும் ஆகும். சமூகம் என்பதற்கு ''திரள் (Assembly)''[44] என்ற பொருளை கூறுகின்றது. தமிழ் லெக்சிகன். எனவே திரளாக உள்ள அனைத்து விலங்குக் கூட்டத்தையும் சமூகம் என்ற அடிப்படையில் நோக்க இயலும்.

2.6.1. ஆக்களின் சமூக உணர்வு

காட்டில் வாழும் பசுக்கள் எப்பொழுது தனித்தனிச் சமூகமாக ஒற்றுமையுடன் தான் வாழும் வீட்டில் வளர்க்கப்படும் பசுக்களும் தனியாக இருப்பதைவிட தன் இனத்துடன் சேர்ந்து வாழவே விரும்பும் அதனை அன்றைய மக்களும் மன்னர்களும் அறிந்திருந்தனர். பகை அரசர்களுடன் போர் செய்வதில் முதல்படியாக, அந்நாட்டின் பசுக்களைக் கவரும் போதும் கூட்டத்துடன் தான் கவர்ந்து வந்துள்ளனர். இதனை,

''மாயிரு முள்ளூர் மன்னர் மாவூர்ந்து
எல்லித் தரிஇய இனநிரைப்'' (நற். 291: 7–8)

என்ற அடிகள் விளக்குகின்றன. ‘‘பாலூட்டிகளிலும் சமுதாய ஒழுங்கமைப்பில் பணி பரிவமைப்புக் காணப்பட்டாலும் இஃது உணர்ச்சியை (Emotion) மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவற்றின் சமுதாய வாழ்வு கூட்டுக் குடியிருப்புகளில் அல்லாமல் சிறுசிறு குடும்பங்களை (Family system) வைத்து அமைக்கப்பட்டுள்ளது. நல்லதொரு சமுதாயம் என்பது சிறப்பு மிக்க குடும்ப வாழ்க்கையைப் பொறுத்திருக்கிறது’’[45] என்கிறார் ஆல்பர்ட் மேகன்தாஸ்.

‘‘படுமணி இனநிரை உணீஇய கோவலர்
விடுநிலம் உடைத்த கலுழ்.....’’ (அகநா. 321: 7–8)

என்னும் அடிகள் பசுக்கள் கூட்டமாக வாழும் என்கின்றன.

2.6.2. ஆக்களின் சமூகத்தில் ஆனினம் தலைமையேற்றல்

பசுக்களின் கூட்டத்தில் ஆனினம் தலைமையேற்கிறது.

‘‘கனஞ்சால் கோவலர் நெடுவிளிப் பயிரறிந்து
இனந்தலைத் தரூஉற் துளங்கிமில் நல்லேர்றுத்
தழூஉப்பினர் எருத்தந் தாழப் பூட்டிய’’ (அகநா. 253:12–14)

என்ற அகநானூற்றுப் பாடலடிகளில் ஆயர்கள் மாலையில் குரல் கொடுத்ததும் காளைகள், பசுக்கள் கூட்டத்தை ஒன்று திரட்டி இல்லத்திற்கு அழைத்துவரும். காளை தான் அந்த பசு கூட்டத்திற்கு தலைமை ஏற்றுள்ளது. தலைமையின் கட்டளைக்கு மற்ற பசுக்கள் கீழ்படிந்து நடக்கின்றன.

‘‘நெறியிருங் கதுப்பிற் கோதையும் புனைக
ஏறுடை யினநிரை பெயரப் பெயராது
செறிசுரை வெள்வேல் மடிவர்த் தாங்கிய’’ (அகநா. 269: 2–4)

என்ற அடிகளிலும் காளை மாடு பசுக்களின் கூட்டங்களுக்கு தலைமை ஏற்கின்றது.

2.6.3. கரடிகளின் சமூகவுணர்வு

கரடிகள் கூட்டமாக வாழ்வதையே அதன் சமூகவாழ்வு என்கின்றோம். கரடிகள் கூட்டமாக வாழும் என்பதனை,

"இளைத லான்றகின் நீயே சினைபாய்ந்து
உதிர்த்த கோடை உட்குவரு கடத்திடை
வெருக்கடி யன்ன குவிமுகிழ் இருப்பை
மருப்புக் கடைந்தன்ன கொள்ளை வான்பூ
மயிர்க்கால் எண்கின் ஈரினங் கவர
மைபட் டன்ன மாமுக....." (அகநா. 267: 5–9)

என்ற பாடலடிகள் கூறுகின்றது. "குட்டிகரடிகளின் பெரிய கூட்டம் அதிகப் பசியால் இருப்பைப் பூவை அள்ளி உண்ணும்"[46] "குட்டிகளை ஈன்றெடுத்த பெண் கரடிகளின் கூட்டம் மரக்கிளைகளில் எறி உணவைப் பறித்து உண்ணும்"[47] இவற்றை பார்க்கும் போது கரடிகள் கூட்டமாக வாழ்பவை என்பதை அறியமுடிகின்றது. மேலும் குட்டிக்கரடிக் கூட்டம் தனியாகவும் குட்டிகளை ஈன்றதாய்க் கரடிகள் கூட்டம் தனியாகவும் வாழ்ந்துள்ளன என்பதை அறியஇயலும்.

2.6.4. குரங்குகளின் சமூகவுணர்வு

குரங்குகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழும் தன்மை கொண்டது. அவைகள் தங்களுக்குள் சில கட்டுபாடுகளுடன் வாழும் தன்மை கொண்டது.

"குரங்குஒருங்கு இருக்கம் பெருங்கள் நாடன்" (குறுந். 288:2)

என்ற அடிகளில் தளிரை உண்ணுகின்ற தன்மை கொண்ட குரங்குகள் பலவும் ஒருங்கே திரண்டிருக்கின்றன என்று பாடப்பட்டுள்ளது. ஒரே தன்மை கொண்ட குரங்குகள் ஒன்று இணைந்து ஒரு சமகமாக வாழ்கின்றன. "குரங்குகளில் ஆண்குரங்கு தலைவனாக இருந்து தம் இனத்தை அழைக்கின்றது"[48] என்கிறது. மேலும் "சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது சீதை கழற்றியெறிந்த அணிகலன்களை குரங்குகளின் பெரிய சுற்றம் தாம் எடுத்து அணிந்து கொண்டு மகிழ்ந்தன என்ற உவமையை இளஞ்சேட்சென்னி அளித்த பரிசுப்பொருளை பெற்ற பசுங்குடையாரிர் குடும்பத்திற்கு கூறியுள்ளார் புலவர்."[49] குரங்குகள் தங்கள் இனத்துடன் ஒற்றுமையாக இருப்பதைப் போல மற்ற உயிர்களுடனும் சேர்ந்து இருக்கும் என்பதை,

"குறுமுலைக் கலமரும் பாலார் வெண்மறி
நரைமுக வூகமொ டுகளும் வரையாமல்
..... குன்றுபல நெழீஇய" (புறநா. 383: 20–23)

என்ற புறநானூற்று அடிகள் குரங்கு ஆட்டுக்குட்டியுடன் இணைந்து விளையாடுகிறது என்பதை அறியஇயலும்.

2.6.5. நரிகளின் சமூகவுணர்வு

நரிகள் கூட்டமாக வாழும் என்பதை "நரிகூட்டமடா இது" என்று கூறும் பேச்சுவழக்கு விளக்குகிறது.

"கனநரி இனனொடு குழீஇ நிணனருந்தும்" (அகநா. 373: 6)

என்ற அடியில் நரிகள் கூட்டமாய்க் கூடித் தசையை உண்கிறது.

2.6.6. பன்றிகளின் சமூகவுணர்வு

பன்றிகள் கூட்டமாக வாழும் தன்மை கொண்டது. ‘‘காட்டுப் பன்றி பல குட்டிகளை ஈனும் சக்தியுடையது. ஆதலின் காட்டுப்பன்றி விரைவில் காட்டில் பல்கிப்போய் விடுகின்றது. காட்டுப் பன்றிகள் கூட்டமாகவே காணப்படும்’’[50] என்று பி.எல். சாமி கூறுகிறார்.

‘‘அருவி யார்க்கும் கழைபசி னனந்தலைக்
கறிவாள ரடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழ லுழுத பூமி’’ (புறநா. 168: 1–4)

என்ற அடியில் பன்றிகளின் கூட்டம் தங்களின் உணவுத் தேவைக்காக ஒன்று சேர்ந்து பூமியின் அடியில் இருக்கும் கிழங்குகள் வெளிப்படும் வண்ணம் கிளறித் தங்களின் உணவுத் தேவையை நிறைவு செய்துகொள்கின்றன.

2.6.7. பூனைகளின் சமூகவுணர்வு

பூனைகளில் இரண்டு வகையுண்டு. காட்டுப்பூனை, வீட்டுப்பூனை என்பதாகும். வீட்டுப்பூனைகளை விட காட்டுப் பூனைகளுக்குச் சுதந்திரம் அதிகம். அவைகள் தங்களின் விருப்பம் போல வாழலாம். எனவே, காட்டுப் பூனைகளிடம் தான் சமூகவுணர்வுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

‘‘மனையுறை கோழிக் குறுங்காள் பேடை
வேலி வெருசினம் மாலை உற்றெனப்
புகுமிடம் அறியாது தொகுப்புடன் குழிஇய’’ (குறுந். 139: 1–3)

எனும் குறுந்தொகை அடிகளில் காட்டுப்பூனைக் கூட்டம் மாலை நேரத்தில் தன் இருப்பிடத்தை விட்டு வெளிவருகின்றது. அதைக் கண்டு கோழிகுஞ்சுகள் அச்சமுறுகின்றன. வெருகினம் ஒன்று சேர்ந்து தங்களுக்கான உணவைத் தேடுகின்றன.

2.6.8. மான்களின் சமூகவுணர்வு

மான்கள் கூட்டமாக வாழும் இயல்புடையவை குறுந்தொகை, மான் கூட்டத்தை மரையினம் என்கிறது.

''..... நெல்லி
மரையினம் ஆகும் முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோன் உரே''(குறுந். 235: 3–5)

என்ற அடிகளில் தலைவன் நாட்டின் அழகைக் கூறும் போது மரையின் கூட்டம் நெல்லிக்காய்களை உண்கின்ற முற்றங்களைக் கொண்டது என்பதில் மான்கள் கூட்டமாக வாழ்கின்றன என்ற செய்தி இடம்பெறுகின்றது.

''மான்கண மரமுதற் றெவிட்ட.....'' (குறிஞ்சிப். 217)

என்ற அடியிலும் மான் கூட்டங்கள் மரத்தடியில் கூடின. இதில் மான்கள் ஒரு சமூகமாக வாழும் தன்மை உடையன என்பதை உணர்த்துகின்றன.

2.6.9. யானைகளின் சமூகவுணர்வு

யானைகள் எப்போதும் தனித்து வாழாது ஒரு சமூக அமைப்போடுதான் வாழ்கிறது. காடுகளில் ஒற்றை யானை தனித்துச் சுற்றித் திரிந்தால் மன அளவில் பாதிக்கப்பட்டு இருக்கும். எனவே அதனிடம் மனிதர்கள் விழிப்புடன்

இருக்க வேண்டும். யானைகளின் வாழ்வியலைப் பற்றி கூறும் ச.முகமது அலி மற்றும் க. யோகானந்தர், ‘‘யானைகள் புலிகளைப் போல தனித்து வாழும் விலங்குகள் அல்ல 15, 20 என கூட்டமாகவே வாழ்பவை. எந்த ஒரு யானைக்கூட்டத்திற்கும் ஒரு மூத்த பெண் யானையே தலைமை தாங்கி வழிநடத்தும். அந்தத் தலைவி, காட்டில் உணவு கிடைக்குமிடங்கள், பாகாப்பு, கட்டுப்பாடு பற்றிய அறிவோடு விளங்குகிறது. எனவே அதுதான் அக்கூட்டத்தின் முடிசூடா முதலமைச்சர். ஒருயானைக் கூட்டத்தில் பாட்டி, பெரியம்மா, சித்தி, மாமா, சகோதர சகோதரி, பேரன், பேத்தி என அனைத்து உறவுக்காரர்களும் இருக்கின்றன. ஆண் யானைகள் கூட்டத்தில் 12–15 வயது வரை சேர்ந்திருக்கும். பின்னர் அவை விலகிச் செல்கின்றன. அல்லது விலக்கப்படுகின்றன. இதுபோன்ற நிலைபாடுகள் நெருங்கிய உள்ளினப்பெருக்கம் (Inbreeding) நடைபெறாமல் தடுக்கவே ஏற்பட்டுள்ளன எனலாம்’’[51] என்கிறார்கள் ச.முகமது அலி மற்றும் க. யோகனந்த் யானைகள் கூட்டமாக வாழும்.

‘‘..... உயங்குநடைக்
சிறுகண் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தடமருப்பு யானை கண்டனர் தோழி’’ (குறுந். 255: 3–5)

என்ற அடிகளில் யானைகள் கூட்டமாக வாழும் நிலை கூறப்படுகின்றது. அச்சமூகத்தின் தலைமை யானை மற்ற உறுப்பினர்களின் பசியைத் தீர்க்கும். இச்செய்தியை புலவர்கள் யானைகளின் வாழ்வியலை உற்றுநோக்கியே கூறியுள்ளனர். இஃது அன்றைய மக்கள் விலங்குகள் மேல் கொண்டிருந்த பற்றினை மிகத் தெளிவாக விளக்குகின்றது.

''முனைவளர் முதல மூங்கில் முருக்கிக்
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நிலை மருங்கின்.....'' (அகநா. 332: 1–3)

''காக்கை கரைந்துண்ணும்'' என்பார்கள் அதுபோல யானைகளும் உணவுகிடைத்தவுடன் தன் இனத்துடன் சேர்ந்து உண்ணுகின்றன. ''கார்கால மேகத்திற்கு உவமையாக பெண்யானையின் கூட்டங்களை உவமையாக்கியுள்ளார் புலவர். மேலும் வளம் நிறைந்த காட்டில் இனிய சுளைகளை உடைய பலா மரங்களின் தோப்புகளில் பழங்களை ஆண் யானைகளின் கூட்டம் தம் கைகளால் தோண்டி உண்ணும்.''[52] ஆண்யானைகளும் பெண்யானைகளும் தனித்தனிக் கூட்டங்களாகவும் வாழ்ந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது.

2.7. விலங்குகளின் நன்றியுணர்வு

பழக்கப்படுத்தி பாசத்துடன் வளர்க்கும் வீட்டு விலங்குகளுக்குப் பாசம் மிகுதி. அதன் காரணமாகத் தன் பாதுகாவல்களுக்கு இடையூறு வரும்போதும் புதியவர்களைக் காணும்பொழுதும் எச்சரிக்கும்.

2.7.1. நாய்களின் நன்றியுணர்வு

விலங்குகளின் அதிகம் நன்றியுணர்வு உடையது நாய் அதனால் தான் இல்லத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை அதனிடம் கொடுத்துள்ளனர்.

''சினவுகொள் ஞமலி செயிர்த்துப்புடை யாடச்'' (அகநா. 388: 14)

சேரியில் உப்புவிற்பவர் கூவியதால் வேற்றாள் குரல் கேட்டு வீட்டுநாய் குரைத்து எச்சரிக்கின்றது.

2.8. விலங்குகளின் வேட்டையாடும் உணர்வு

தனக்கான உணவுத் தேவையை நிறைவு செய்யவும் பாதுகாவலர்களின் கட்டளைக்குப் பணிந்து வேட்டையாடிக் கொடுக்கவும் விலங்குகள் பழக்கப்படுத்தப்பட்டுள்ளன.

2.8.1. நாய்களின் வேட்டையாடும் உணர்வு

நாய்களில் வேட்டை நாய் என்ற ஓர் இனமே உண்டு.

''..... தொகுநிலை
அரந்தின் ஊசித் திரள்நுதி அன்ன
வரிமுனைப் பூளையின்.....'' (அகநா. 197: 7–10)

இங்கு செந்நாய் உணவிற்காக வேட்டையாடுகிறது.

''முயல்வேட்டு எழுந்த முருகுவிடைக் கரநாப்
தன்னாப் புரையுஞ் சீறடிப்'' (நற். 252: 10–11)

என்பதில் உணவுக்காகவே முயலை நாய் வேட்டையாடுகின்றது.

2.8.2. பழக்கப்பட்ட வேட்டை நாயின் உணர்வு

நாய்களைப் பழக்கப்படுத்தித் தங்களின் உணவுத் தேவைக்காகவோ அல்லது பாதுகாப்பிற்காகவோ வளர்க்கின்றனர். இது தற்காலத்திலும் உள்ளது.

''பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலொ டமைந்தனை யாழநின்'' (அகநா. 28: 7–8)

என்ற அடிகளில் தலைவன் வேட்டை நாயை உடையவன் என்கிறார் புலவர். இங்கு வேட்டைநாய் பாதுகாப்பிற்காகப் பயன்பட்டுள்ளது.

“கல்லா நீண்மொழிக் கரநாய் வடுகர்

வல்லான் அருமுனை நீந்தி அல்லாந்து” (அகநா. 107: 11–12)

என்ற அடிகளில் வேட்டை நாயின் சினத்தைக் கூறி அவற்றின் வேட்டையாடும் திறம் மற்றவர்களை அச்சப்படுத்தும் என்பதில் அதனால் ஏற்படும் விளைவையும் கூறுகிறார் புலவர். “தலைவன் வேட்டை நாயுடன் இருந்தமை”[53] “குறிஞ்சி நிலத்தலைவன் தனது பாதுகாப்பிற்காக வேட்டை நாயை பயன்படுத்தியுள்ளமை”[54] போன்ற செய்திகள் நாயை மனிதர்கள் பழக்கப்படுத்தி தம் தேவைகளை நிறைவு செய்தமை புலப்படும்.

“ஞமலி தந்த மனவுச்சூழ லுடும்பின்” (பெரும்பாண். 132)

என்ற அடியில் நாயினால் வேட்டையாடப்பட்ட உடும்பின் மாமிசத்தை உண்டுள்ளனர்.

“பிணவுநாய் முடுக்கிய தடியொடு வரைஇ” (மலைபடு.177)

என்பதிலும் நாய் வேட்டையாடிய இறைச்சியை உண்டுள்ளனர். எனவே நாய் பாதுகாப்பிற்காகவும், வேட்டையாடி உணவு பொருளைப் பெற்றுத்தரவும் பழக்கப்படுத்திப் பயன்படுத்தியுள்ளன.

2.9. விலங்குகளின் சேமித்தல் பண்பு

சேமித்தல் என்பது எதிர்காலத் தேவையை உணர்ந்து செயல்படல் ஆகும். விலங்குகள் மனிதர்களைப்போல அடுத்த தலைமுறைக்கு சேமிக்காமல் பருவகால மாற்றத்தினால் ஏற்படும் சூழ்நிலைகளை உணர்ந்து தங்களின் உணவுத் தேவையை பூர்த்திச் செய்வதற்காகவே சேமிக்கின்றன.

2.9.1. எலியின் சேமிக்கும் பண்பு

பருவநிலை மாறி மழைக்காலம் தொடங்கினால் எலிகளால் உணவுதேட முடியாத சூழ்நிலை ஏற்படும் இதனை முன்கூட்டியே உணர்ந்து உணவைச் சேகரித்துப் பாதுகாக்கின்றன.

"விளைபதச் சீறிய நோக்கி வளைகதிர்
வஞ்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்" (புறநா. 190:1–3)

எலிகளிடம் மழைக்காலத்தில் உணவு சேகரிக்க முடியாது என்ற மன உணர்வு இருந்தால் தான் அவை நன்கு விளைந்த முற்றிய கதிர்களைச் சேமித்து வைக்கின்றன.

2.10. விலங்குகளின் அறிதலுணர்வு

விலங்குகள் இயற்கையாகவும் செயற்கையாகவும் நடைபெறும் தூண்டல்களை அறியும் தன்மை உடையன தூண்டல்களை அறிந்து அவற்றிக்கான துலங்களை வெளிப்படுத்துவதே அறிதல் உணர்வு.

2.10.1. ஆக்களின் அறிதலுணர்வு

மக்கள் பசுக்களைக் கடவுளாக வணங்குகின்றனர். அவை குழந்தைகளுக்கு இன்னொரு தாயாக உள்ளன. வீட்டில் வளர்க்கப்படும் அனைத்து விலங்குகளும் மக்களிடம் நன்றாகப் பழகும் தன்மை கொண்டவை ஆகும். அவற்றை வளர்ப்பவர்களும் அவ்விலங்குகளின் குணாதிசயங்களையும் உணர்வுகளையும் அறிந்து செயல்படுகின்றனர்.

“காலை யெய்தக் கடவுமதி மாலை
அந்திக் கோவலர் அம்பணை யிமிழிசை
அரமிய வியலகத் தியம்பும்
நிரைநிலை ஞாயில் நெடுமதில் ஊரே” (அகநா. 124: 18–16)

என்ற அடிகளில் கோவலர்கள் பசுக்களை ஒன்றிணைத்து அழைப்பதற்காகப் புல்லாங்குழலின் இசையை இசைத்துள்ளனர். அவ்விசையை பசுக்கள் அறிந்துகொள்கின்றன. இவ்வகையான இசை தம்மை அழைப்பதற்கானது என்பதை உணர்ந்து கொண்டு அதன் பிரதிபளிப்பாகப் பசுக்கள் ஒன்றினைந்து கோவலன் இருக்கும் இடம் நோக்கி வருகின்றன. இது பழக்கத்தின் அடிப்படையில் நிகழும் நிகழ்வாகும்.

2.10.2. ஆடுகளின் அறிதலுணர்வு

ஆடுகள் வளர்ப்பு விலங்காகவும், தன்னிச்சையாகக் காடுகளில் வளரும் விலங்காகவும் உள்ளன. அவற்றில் வீட்டு விலங்காக வளரும் ஆடுகள் தனது பாதுகாவலர் கொடுக்கம் ஒலியை அறிந்து தூண்டலுக்கு ஏற்ற துலங்களை வெளிப்படுத்துகின்றன. இதனை,

“பறிப்புறத் திட்ட பால்றொடை இடையன்
நுண்பஃ றுவலை ஒருபுறம் றனைப்பத்
தண்டுகால் வைத்த தனிநிலை மடிவிளி
சிறுதலை தொகுதி ஏமார்ந் தல்கும்” (நற். 142: 4–7)

என்ற அடிகள் புலப்படுத்தும். இடையன் ஆடுகளை அழைக்கும் பொருட்டு வாயைக் குவித்து ஒருவகை ஒலி எழுப்புகின்றான். அந்த ஒலியை ஆடுகள்

அறிந்து பிற ஆட்டினத்தொகுதியை விட்டுப் பிரிந்து இடையனை அடைகின்றன. இதன்வழி ஆடுகள் ஒலியைப் பிரிந்தறியும் திறனை அறியஇயலும்.

2.10.3. எருமைகளின் அறிதலுணர்வு

காடுகளில் வாழும் எருமைகள் வீடுகளில் வாழும் பழக்கப்படுத்தப்பட்ட எருமைகள் என்று பிரித்துரைக்கப்படுகின்றன.

''கருங்கோட் டெருமை கயிறுபரிந் தசைஇ
நெடுங்கதிர் நெல்லி னான்மேய வாரும்'' (ஐங். 95: 1–2)

என்ற அடிகளில் எருமை தனக்கான உணவு உள்ள இடத்தை அறிந்தும் கயிற்றை அறுத்துக்கொண்டும் செல்கின்றது. கயிற்றை இழுத்து அறுப்பது அறிதல் அடிப்படையில் செய்திருக்கின்றது.

2.10.4. குதிரைகளின் அறிதலுணர்வு

குதிரைகள் காடுகளிலும் வாழ்கின்றன. வளர்ப்பு விலங்காக வீடுகளிலும் வளர்க்கப்படுகின்றன. குதிரைகளைப் பழங்காலம் முதல் படைகளிலும் போக்குவரத்திற்காகவும் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர்.

''இவர்நிரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வகுத் தபுக்கும்'' (அகநா. 130: 9–10)

அலைகள் வீசிச் சென்ற குளிர்ந்த ஒலியையுடைய முத்துக்கள் அவ்வழியில் வரும் தேர்க்குதிரைகளின் காலில் மோதி அவற்றின் விரைவைக் குறைத்திருக்கின்றன.

2.10.5. யானைகளின் அறிதலுணர்வு

யானைகளுக்கு அறிதல்திறன் மிகவும் அதிகமாக இருக்கின்றது. அவற்றை மனிதன் மிகுதியாகப் பயன்படுத்துவதை கொண்டே அறிந்துகொள்ள முடிகின்றது. ‘‘மட்டற்ற நினைவாற்றல் உள்ளபடியால் பழைய அனுபவங்களை நினைவில் மீண்டும கொண்டு வந்து நல்ல முடிவுகளை எடுப்பதாக ஆப்பிரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் அறியப்பட்டுள்ளது.’’[55] யானைகளுக்கு நினைவாற்றல் உள்ளதால்தான் அவற்றைப் பழக்கப்படுத்தி மக்கள் தங்களின் தேவைகளுக்குப் பயன்படுத்த முடிகின்றது.

‘‘கயம்நாடு யானை கவளம் மாந்தும்’’ (குறுந். 170: 3)

என்ற அடியில் ஆழமான நீர்நிலைகளை ஆய்ந்து சென்று யானை நீராடுகின்றது என்கின்றது. ‘‘நிலத்தடியில் நீர் இருப்பதை மோப்ப சக்தி மூலமாக அறிந்து கொள்ளும் திறன் யானைகளுக்கு உண்டு’’[56] என்று குன்றில்குமார் கூறியுள்ளார். இதன் மூலம் யானைகள் நீர்நிலைகளின் ஆழத்தை மட்டுமல்லாமல் நிலத்தடி நீர் இருப்பதையும் அறிந்து கொள்ளும் என்ற செய்தி வியப்பில் ஆழ்த்துகின்றது. கொல்லுகின்ற இயல்பை உடைய பெரிய புலியை ஆண் யானை தாக்கியது. அதனால், அவ்யானையின் நீண்ட தந்தங்களில் கறைபடிந்து தன் தந்தங்களை யானை மலைமீதிருந்து வீழும் அருவியில் கழுவும் என்பதை,

‘‘கொண்முரண் இரும்புலி வெண்கோட் டியானை
கன்டிசை அருவியிற் கழூஉம் ஆங்கண்
வாரற்க தில்லை தோழி’’ (நற். 151: 2–4)

என்ற அடிகள் விலக்குகின்றன. மேலும்,

''நீடுகுழி யகப்பட்ட

பீடுடைய வெறுழ்முன்பிற்

கோடுமுற்றிய கொல்களிறு

நிலைகலங்கக் குழிகொன்று

கிளைபுகலத் தலைக்கூடியாங்கு'' (புறநா.17:15–19)

என்ற அடிகளில் பெரிய குழி மூடி வைக்கப்பட்டதை அறியாமல் நெடிய குழிக்குள் அகப்பட்ட யானை அக்குழியில் இருந்து வெளிவரக் குழியை மூடிச் சமன்செய்து மேல்வந்து தன் கூட்டத்தோடு இணைகின்றது. இது யானையின் அறிவு நுட்பத்தை வெளிப்படுத்துகின்றது.

2.11. விலங்குகளின் மகிழ்வுணர்வு

மகிழ்வுணர்வு என்பது அனைத்து உயிரினங்களுக்கும் இருக்கும். ஆனால் விலங்குகளின் மகிழ்வுணர்வை அறிவதற்கு மிகவும் நுட்பமாக உற்றுநோக்கில் தேவைப்படுகின்றது. ஏனெனில் விலங்குகளின் செயல்பாடுகளை அறிய அவற்றின் வாழ்வியலை அறிந்திருத்தல் முதன்மையாகின்றது. சங்கப்புலவர்கள் விலங்குகளின் வாழ்வியலை நன்கு அறிந்திருக்கின்றனர்.

2.11.1. 'ஆ'க்களின் மகிழ்வுணர்வு

'ஆ'க்களுக்கு நல்ல தீனி கிடைத்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

''பல்லா னன்னிரை புல்லருந் துளைப்'' (பரி. 89: 5)

பசுக்கள் நல்ல உணவுகிடைத்து மகிழ்ச்சியாக இருந்ததாக சங்கப்புலவர்கள் கூறுகின்றனர். காடுகளில் வாழும் ஆக்களுக்கு எல்லாப் பருவத்திலும் நல்ல மேய்ச்சல் இருப்பது கிடையாது.

2.11.2. எருமைகளின் மகிழ்வுணர்வு

எருமைகள் சேரும் சகதியுமாக உள்ள இடத்தை கண்டால் மிகவும் மகிழ்ச்சியாக புகுந்து புரலும்.

''சேற்றுநிலை முளைஇய செங்கட் காரான்
ஊர்மழ கங்குலின் நோன்தலை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயங்கித் தாமரை'' (அகநா. 46: 1–5)

என்னும் அடிகளில் எருமை கொம்பால் வேலியை நீக்கி மீன்கள் அச்சேறுமாறு வள்ளைக் கொடிகளைச் சிதைத்தது. இறுதியாக தாமரை மலரை உண்ணுகிறது. இப்பாடல் தலைவனின் பரத்தமை கூறுவதற்காக எருமையின் செயல்கள் கூறப்பட்டிருக்கின்றது. ''குளத்தில் இறங்கி ஆம்பல் இலைகளைக் கிழித்து குவளை மலர்களைத் தின்பதும் உண்டு.''[57] இதில் எருமையின் மகிழ்ச்சிக் கூறப்பட்டுள்ளது.

''கழுநீர் மேய்ந்த கயவர் யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழன்
மஞ்சண் மெல்லிலை மயிர்புறந் தைவர
விளையா விளங்க ணாற மெல்குடி பெயராக்

குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுப்

குடப்புலங் காவலர் மருமா னொன்னார்

வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த'' (சிறுபாண். 42–48)

இதில் எருமைகள் நிர் நிலைகளிலுள்ள கழுநீர்ப் பூக்களைத் தின்று காட்டு மல்லிகைக் கொடியில் படுத்து உறங்கும் என்று சேரநாட்டின் செழுமை கூறப்படும்பொழுது எருமைகளின் மகிழ்ச்சி கூறப்பட்டுள்ளது. எருமைகளின் மகிழ்ச்சி சேற்றில் புகுந்து மேய்ந்து புரல்வதாகவே உள்ளது. அதனால் எருமைகளின் மகிழ்வைத் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்திற்கு உள்ளுரையாகக் கூறப்பட்டுள்ளவை புலப்படும்.

2.11.3. குதிரைகளின் மகிழ்வுணர்வு

நெடுநாட்கள் கட்டப்பட்டிருந்த கட்டினின்றும் அவிழ்த்துவிடப்பட்ட குதிரையானது துள்ளி எழுதலைப் போன்று மூங்கில்கள் உள்ளமையை,

''விட்ட குதிரை விசைப்பி னன்ன

விசும்புநோய் புசுங்கழைக் குன்ற நாடன்

யாம்தள் படர்ந்தமை அறியான் தானும்'' (குறுந். 74: 1–3)

என்ற பாடலடிகள் புலப்படுத்தும். ''தலைவன் தலைவியை காண வந்திருக்கின்றான் மாலை நேரம் முடிந்து இருள் தொடங்குகின்றது. அதனால் நீயும், பணியாளரும் குதிரைகளும் மகிழ்ச்சியாக இங்கு தங்கிச் செல்லலாம் என்கிறாள் தோழி. நெடுந்தொலைவு பயணித்த குதிரை தீனிதின்று ஓய்வில் இருக்கும் பொழுதுதான் மகிழ்ச்சியடைகின்றது''[58] குதிரைக்கு உணவும், ஓய்வும் மகிழ்ச்சியை கொடுக்கின்றது.

2.11.4. புலிகளின் மகிழ்வுணர்வு

புலி தன் பகைவிலங்கான யானை சண்டையிட்டு வெற்றி பெற்ற களிப்பில் முழக்கமிடுகின்று என்பதை,

''பெருங்கடல் விடரகம் சிலம்ப இரும்புலி'' (நற். 344: 9)

என்ற நற்றிணைப் பாடலடி விளக்குகின்றது. புலி தன் பகையான யானையை வென்றால் அதற்கு நல்ல உணவுகிடைக்கும். ''புலி எங்களைக் கண்டுகொள்ளாமல், தனது இடப்பக்கமாக சாய்ந்தது இரண்டு நிமிடம் கழித்து தனது முதுகுப்புறமாக படுத்துக் கொண்டு கால்களை மேலே எழுப்பியது. வயிற்றுப்புறம் அடர்ந்திருந்த வெள்ளைமுடி பிரகாசித்தது. வயிறு நிரம்பிக் காணப்பட்டது. ஒரு காட்டில் இப்படி முழுமையாக சந்தோசமாக ஓய்வெடுக்கும் புலியை நான் இதற்குமுன் பார்த்ததில்லை மிக அருகில் இருந்துகொண்டு நாங்கள் படம்பிடிப்பதை அது உணர்ந்திருந்தாலும், எங்களை லட்சியம் செய்யவில்லை''[59] என்று ஓ.ஹென்றி ஃபிரான்சிஸ் கூறியுள்ளார். புலிகள் நல்ல உணவுக்காக யானையைக் கொல்கிறது. நல்ல உணவு கிடைத்தவுடன் புலிகள் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

2.11.5. கேழலின் மகிழ்வுணர்வு

காட்டில் வாழும் விலங்குகளுக்கு வாழ்வியல் என்பது எளிதானது அல்ல. அதிலும் அவை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வது என்பது மிகவும் சில காலம். ''பன்றி சேப்பங்கிழங்கைத் தின்று சுனையில் நீர் பருகி பின்னர் பின்னர் தினைப்புனத்தில் நுழைந்து தினைப்பயிரை மேய்ந்து இனிது கண்ணுறங்கிற்று.''[60] பன்றிகளுக்கு நல்ல உணவு, நீர் கிடைத்ததால் அவற்றை உண்டு மகிழ்ச்சியாக இருந்தன.

2.11.6. மான்களின் மகிழ்வுணர்வு

மான்களின் மகிழ்ச்சியை அதன் உணவும் தட்பவெட்ப நிலையுமே தீர்மானிக்கின்றன.

"நரந்தை நறும்புன் மேய்த்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி யயல
தகரத் தன்னிழற் பிணையொடு வதியும்" (புறநா. 132:4–6)

என்ற புறநானூற்றுப் பாடலடிகளில் கவரி மான்கள் சுனை நீரை அருந்தித் தகர மரத்தின் குளிர் நிழலில் மகிழ்ச்சியாக தங்குகின்றன.

2.11.7. யானைகளின் மகிழ்வுணர்வு

யானைகளின் மகிழ்வு என்பது அதன் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதிலும், பெருமிதம் என்பது எதிரி விலங்குகளிடம் போரிட்டு வெற்றி பெறுதல், இளம்கன்றை ஈன்றுப் பாதுகாத்தல் போன்ற செயல்பாடுகளிலும் உள்ளது.

மலை நாட்டில் திரியும் வலிமையான பருத்த துதிக்கையும், தந்தமும், உடம்பில் மதநீர் ஊற்றும், செருக்குடன் சினமும் அதற்கேற்ற வலிமையும் பெற்ற யானை, புலியைக் குத்திக் கொன்றது.

புலி யானையைவெல்லும் என்ற வழக்கத்தை மாற்றியது. அம்மகிழ்வுடன் தினைப்புனத்தில் தன் விருப்பம் போல் மேய்ந்தது. இதனை,

"பனைத்திரள் அன்ன பரேர்எறுழ்த் தடக்கைக்
கொலைச்சினந் தவிரா மதறுடை முன்பின்

வண்டுபடு கடாஅத்து உயர்மருப்பு யானை
தன்கமழ் சிலம்பின் மரம்படத் தொலைச்சி
உறுபுலி உரறக் குற்றி விறல்கடிந்து
உறுதிணைப் பெரும்புனம் வவ்வும் நாட'' (அகநா. 148: 1–6)

என்ற பாடலடிகள் புலப்படுத்தும். ''யானைக் கூட்டங்களில் ஓர் ஆண் யானை வெகுநாட்களாகத் தங்களைத் தொடர்ந்த ஒரு புலியை தாக்கி வெற்றதால் அவ்யானை புன்னுற்றிருத்தாலும் அதன் பெண் யானையும் மற்ற யானைகளும் மகிழ்ந்து வெற்றியைக் கொண்டாடி பெருமிதமடைந்தன.''[61]

''உறுபுலி யுழந்த வடுமருப் பொருத்தற்குப்
பிடியிடு பூசலின் அடிபடக் குழிந்த
நிரம்பா நீளிடைத் தூங்கி'' (அகநா. 379: 24–26)

என்ற அடிகளில் தலைவன் தான் முன்பு பொருள் தேடச் சென்ற வழியைத் தன் நெஞ்சிற்குப் புலியுடன் போரிட்டு வெற்றி பெற்ற யானையின் பொருட்டு அதன் பெண் யானை பெருமிதத்தோடு ஆரவாரம் செய்து சென்றமை பற்றி நினைவு கூறுகின்றான்.

2.12. விலங்குகளின் சினம்

விலங்குகள் தன் இனத்துடனும், எதிரி இனத்துடனும் உயர்திணை ஆகிய மனிதர்களிடமும் தன் சினத்தைக் காட்டும் என்றாலும் சூழலுக்கு ஏற்றவாறு இவற்றில் மாற்றம் காணப்படும்.

2.12.1. ஆனேறுகளின் சின உணர்வு

ஏறுதழுவுதல் என்ற விளையாட்டில் இன்றளவும் சினத்துடன் வலம்வரும் ஏறுகளைக் காணமுடிகின்றது. இயற்கையாக அதனிடம் உள்ள பண்பு பழக்கத்தின் அடிப்படையில் தோன்றும் தன்மை 'ஆ'க்கள் மனிதனிடம் நெருங்கிப் பழகும் குணமுடையது. அவைகளை சாதுவாகவும் வளர்க்களம் முரட்டுக் குணமுடையதாகவும் வளர்க்களாம். ஆனால் அவற்றிற்குப் பிடிக்காததனைச் செய்தாலோ அல்லது துன்புறும் வகையில் ஏதாவது செயலைச் செய்தாலோ அவை சினத்துடன் தாக்கும்.

கலித்தொகை 102:9–40 அடிகளில் ஏறுதழுவுதல் நிகழ்வில் காளைகள் சினத்துடன் பாயும் என்ற செய்தி உள்ளது. மேலும் கலித்தொகை 103:10–30 அடிகளிலும் காளையின் சினம் கூறப்பட்டுள்ளது. கலித்தொகை 104:10–80 அடிகளில் காளைகளுக்கு ஒரு மருத்தின் புகையை நூகரக் கொடுத்து அதன் சினத்தை மிகைப்படுத்துகின்றனர் என்ற செய்தி உள்ளது. இதன் மூலமாக காளைகளுக்கு இயற்கையாக உள்ள சினத்தை மிகைப்படுத்த மக்கள் மிகுந்த பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது வெளிப்படுத்துகின்றது.

2.12.2. கேழலின் சினவுணர்வு

காட்டுப்பன்றி மிகவும் மூர்க்கத்தனம் வாய்ந்தது. ''காட்டுப்பன்றி மிகுந்த மனவலிமையும் தறுகண்மையும் உடையது. யானை மிக்க உடல் வலிமையுடையதாயினும் மனவலிமை உடையதன்று. காட்டுப்பன்றி உருவில் சிறியதாயினும் வீரமும் தறுகண்மையும் மிக்கது''[62] என்கிறார் பி.எல். சாமி. காட்டுப்பன்றியின் சினம் மனவலிமையால் தோன்றியது.

“..... நாவற் போக்கருங் கவலைச்

சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்

சேறா புருமபுறம் நீறொடு சிவண

வெள்வசிப் படீஇயர்மொயத்தவள் பழீஇக்

கோணாய் கொண்ட கொள்ளை

கானவர்.....” (நற். 82: 7–11)

என்ற அடிகளில் சினம் கொண்டு பன்றியை வேட்டை நாயின் உதவியுடன் பொறிவைத்து பிடித்தனர்.

“சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தலொடு

குறுங்கை யிரும்புலி பொரூஉ நாட” (ஐங். 266: 1–2)

தலைவன் சினம் கொண்ட ஆண்பன்றி புலியுடன் போரிடுகின்ற நாட்டைச் சேர்ந்தவன். பன்றியின் மனதில் உள்ள சினம் புலியையும் எதிர்த்துப் போரிடச் செய்கின்றது.

2.12.3. நாயின் சினவுணர்வு

சினம் கொண்ட நாயுடன் வடுகர்கள் வேட்டைக்குச் செல்வர் என்பதை,

“கடுங்குரள் பாம்பைக் கதநாய் வடுகர்” (நற். 212:5)

என்ற அடிகள் விளக்குகின்றன. “தலைவன் தலைவியைக் காணவரும் பொழுது சினம் கொண்ட நாயுடன் வந்தான்.”[63] சினத்துடன் காணப்படும் நாயாக வேட்டை நாயையே புலவர்கள் கூறியுள்ளனர்.

2.12.4. புலியின் சினவுணர்வு

புலி தனது உணவாகிய யானையை தப்பவிட்டதால் சீறிய தாய் முழங்குகின்றது என்பதை,

''மயிர்வார் முன்கை வளையுஞ் செறூஉம்
களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தொழுபுலி'' (ஐங் . 218: 2–3)

என்ற அடிகள் விளக்குகின்றன.

2.12.5. யானைகளின் சினவுணர்வு

சினம் என்பது ஒரு வெளிப்புறச் செயல்பாட்டின் தாக்கத்தால் ஏற்படக்கூடிய உள் உணர்வு. ஆனால் யானைகளுக்கு உடலில் சுரக்கும் சுரப்பிகளின் மாற்றத்தாலும் சினம் ஏற்படுகின்றது. மதம் எனவும் அழைக்கப்படுகின்றது.

''அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇய விடர்முகைக்
கோடை ஒற்றிய கடுங்கால் வேற்கை'' (குறுந். 348: 2–5)

மதம் கொண்ட யானை தனது சினத்தால் புலியைக் குத்தி கொன்றது.

''சிறியிலை வேலின் பெரிய கொன்று

கடாஅம் செருக்கிய வலிமையையும் கொண்டு மதத்தால் வேப்ப மரத்தின் பெரிய கிளைகளை முறித்துத் தள்ளி நின்றது.

''இடுநீ றாடிய கடுநடை ஒருத்தல்
ஆட்பெறல் நசைஇ நாட்சுரம் விலங்குத்

துனைதரும் வம்பலர்க் காளை வெஞ்சினம்
பனைக்காண் நாறும் பாழ்நாட் டத்தம்'' (நற். 126: 3–6)

மனிதர்களைக் கொல்லும் ஆட்கொல்லி யானை காலையில் கொல்லும் எண்ணத்துடன் செல்லும் பொழுது அயலார் யாரும் வராததால் பனை மரத்தில் மோதி அதனை சிதைக்கும். யானைக்கு மக்களால் ஏதேனும் தீங்கு நேர்ந்திருந்தால் தான் மக்களைக் கண்டவுடன் கொல்லும் எண்ணத்துடன் செயல்படும்.

''முனைபாழ் பட்ட ஆங்கண் நாட்பார்த்துக்
கொலைவல் யானை சுரங்கடி கொள்ளும்'' (அகநா. 247: 8–9)

தலைவன் பொருள் தேடச் செல்லும் வழியில் உண்ண உணவு ஏதும் கிடைக்காத யானை எவரேனும் வந்தால் கொல்லும் சீற்றத்துடன் சுற்றிக் காவல் செல்வதுபோல் திரியும். ''இதே செய்தியை மாமூலனாரும் குறிப்பிடுகிறார்.''[63] மேலும்,

''உரவுச்சின வேழம் உறுபுலி பார்க்கும்'' (நற். 336: 7)

தலைவன் இரவுக்குறி வரும் வழியில் ஆண் யானையானது சினமுடன் புலியைத் தாக்க எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

''பல்லோர் பழித்தல் நாணி வல்லே
காழிற் குத்திக் கதழ்ந்தவர் அலைப்பக்
கையுடைக் கவலம் மெய்யிடைத் திமிரும்
முனிவுடை இளங்களிறு போல நனிபெரிது
உற்றனை விழுமம்.....'' (நற். 360: 6–10)

பாகன் இரும்பு முள்ளால் குத்தியதால் சினம் கொண்டு துதிக்கையில் வைத்த கவளத்தினை உண்ணாது அடிக்கின்றது. மேலும் ‘‘சினத்தால் கட்டுத்தறியை முறித்ததுமுண்டு.’’[65] தன்னைக் கட்டி வைத்தலை விரும்பவில்லை. பசியோடு இருந்தால் கோபம் அதிகமாகும். இது மக்களுக்கு மட்டுமல்ல யானைகளுக்கும் பொருந்தும்.

‘‘பாகன் நெடிதுயிர் வாழ்தல் காய்சினக்
கொல்களிற் றியானை நல்கல் மாறே’’ (அகநா. 336: 13–14)

யானைப் பாகன் நெடுங்காலம் உயிருடன் வாழ்தல் கூட சினம் கொண்டு தாக்கும் தன்மையுடைய ஆண்யானை அருள்செய்வதால் தான். ‘‘சினம் கொண்ட யானைகள் உள்ள காட்டில் தலைவன் பொருள் தேடச் செல்லும் தன்மையும் உரைக்கப்படுக்கின்றது.’’[66] ‘‘இளசேட் சென்னியின் யானைகள் சிவந்த கண்களுடன் கொம்பால் மதிற் கதவுகளை உடைக்கும்.’’[67] மேலும் புறநா.307: 2–4, 337: 15, பதிற்று 16: 6–9, 41: 7–10 ஆகிய பாடல்களிலும் யானைகளின் சினம் கூறப்பட்டுள்ளது.

‘‘நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்
துரவுச்சினந் தணித் பெருவளி பிணிமார்’’ (மலைபடு. 325–326)

என்ற அடிகளில் பாகர்கள் காட்டாற்றின் வெள்ளத்தில் சிக்கிய யானையின் சினத்தைத் தணிக்க வடமொழியும் தமிழும் கலந்து ஓசை எழுப்பினர். பாகர்களின் சொற்களுக்கு யானைகள் கட்டுப்பட்டுள்ளன.

‘‘கார்ப்பெய லுருமிற் பிளறிச் சீர்த்த
விரும்பினர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு’’ (குறிஞ்சி. 160–165)

என்ற அடிகளில் யானை பிளிறி துதிக்கையை நிலத்தில் அறைந்து மதம் பொழிந்து அதன் சீற்றத்தை வெளிப்படுத்தியமையைக் காண இயலும். ‘‘அதிமதுரத் தழையைத் தின்றால் யானைக்கு மதம் பெருகி யாரையும் விடாது என்கிறது சீவகசிந்தாமணி.’’[68] ‘‘அதமரத்தினை தின்றால் மதம் பெருகும்’’[69] என்பதும் குறுந்தொகைச் செய்தி. மதம் ஏற்பட்டால் கடும் சினம் தோன்றி கண்டவர்களைக் கொல்லும் என்பதை அறியமுடிகிறது.

2.13. விலங்குகளின் செருக்கு

விலங்குகள் இயற்கையாக கொண்டுள்ள திறமையைப் பயன்படுத்தும் பொழுது அவை செருக்கடைகின்றன. மேலும் விலங்குகளைப் பழக்கப்படுத்தும் பொழுது அவை அச்செயலை முறையாகப் பழகிக் கொண்டதால் செருக்குடன் காணப்படும்.

2.13.1. ஆனேறுகளின் செருக்கு

காளைகள் தான் ஒரு செயலைக் கற்றுக்கொண்டால் அவை ஒரு கர்வத்துடன் செம்மாந்து நிற்கின்றது.

‘‘பேராரா ஏற்றின் பொருநா கிளம்பாண்டில்
தேரூரச் செம்மாந் ததுபோன் மதைஇனள்’’ (கலி. 109:4–5)

பசுக்கூட்டத்தில் காணப்படும் ஓர் இளைய எருது புதிதாக வண்டியில் பூட்டப்பெற்று அச்செருக்கால் நிமிர்நிற்கின்றது எல்லா எருதுகளையும் வண்டியில் பூட்டமாட்டார்கள். நல்ல உடல்நலத்துடனும் அமைப்புடனும் இருக்கும் எருதுகளையே வண்டியில் பூட்டுவர். வண்டி இழுக்கும் ஆனேற்றிற்கும் நல்ல

உணவும் பாதுகாப்பும் கொடுப்பர். அதனால் வண்டியில் பூட்டப்படும் எருதுகள் செருக்குடன் காணப்படும்.

2.13.2. குதிரைகளின் செருக்கு

குதிரைகள் விரைந்து ஓடக்கூடிய விலங்கு அவற்றிற்கு இயற்கையாகவே அத்தன்மை காணப்படுகின்றது. அதனால் சங்ககால மக்கள் போருக்காகவும், போக்குவரத்திற்காகவும் குதிரைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இன்றும் சில இடங்களில் போக்குவரத்துக்காகக் குதிரைகளைப் பயன்படுத்துகின்றனர்.

''கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலமாவும்
நெடுங்கொடிய நிமர்தேரு நெஞ்சுடைய புகனமறவரும் என''

(புறநா. 55: 7–8)

என்ற அடிகளில் அரசனின் படையில் மனச் செருக்குடைய குதிரைகளும் இருந்தமை புலப்படும். குதிரைகளில் போருக்குச் செல்லும் படைக் குதிரைகளுக்கு சிறிதளவு ஆணவம் மிகுந்துக் காணப்படும்.

2.13.3. யானைகளின் செருக்கு

யானையையே காடுகளின் அரசன் என்று கூறும் அளவிற்குத் துணிச்சலாகச் செயல்படும் விலங்கு. யானைப்படையின் அளவைக் கொண்டே அரசனின் பெருமையைக் கூறுகின்றனர்.

''களியியல் யானைக் கரிகால் வளவ'' (புறநா. 66: 33)

என்ற அடி செருக்குடைய யானைகளைக் கொண்ட கரிகால் வளவன் என்று புகழ்வதில் திறமையான யானைகளைப் படையில் வைத்திருப்பது சிறப்பு

என்பதும் திறமையான யானை, செருக்குடன் இருக்கும் என்பதும் வெளிப்படுகின்றது.

2.14. விலங்குகளின் பகையுணர்வு

விலங்குகள் தன் எதிரி விலங்குகளிடம் பகை கொண்டு இருக்கும்.

2.14.1. ஆனேறுகளின் பகைவுணர்வு

கார்ப்பருவம் அனைத்து விலங்குகளுக்கும் இன்ப உணர்வைக் கொடுக்கின்றது. ஆனால் எருதுகள் மட்டும் கார்ப்பருவ வரவைப் பகைகொண்டு பார்க்கின்றன. "இடிமுழக்கம் கேட்டு எருதுகள் பகையுணர்ச்சியுடன் எதிர்முழக்க போட்டன."[70] இடி இடித்தால் மழைபொழியும் மழைபொழிந்தால் எருதுகளுக்கு உழும் வேலை வரும். அதனால் இடிமுழக்கமும் கார்காலவரவும் எருதுகளுக்குப் பகையானது.

2.14.2. புலிகளின் பகையுணர்வு

புலிகளின் பகைவிலங்கு யானை. ஏனென்றால் இரண்டும் சமவலிமை கொண்ட விலங்குகள் அதனால் புலியும் யானையும் பகைவிலங்காகக் காணப்படுகின்றது.

"நெருங்கை வன்மான் கடும்பகை உழந்த
குறுங்கை இரும்புலித் கொலைவல் ஏற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆர்இருள் நடுநாள் வருந்தி
சாரல் நாட வாரலோ எனவே'' (குறுந். 141: 3–8)

யானையின் மீது கொண்ட பகையின் காரணமாகக் கொல்லும் தன்மை கொண்ட புலிகள் உலாவும் காட்டுவழியில் தலைவன் இரவுக்குறி வருவது அச்சத்தைக் கொடுக்கின்றது.

2.15. விலங்குகளின் துன்பம்

இன்பம் என்பது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது போலவே துன்பமும் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. இயற்கையினால் ஏற்படும் துன்பங்களை தவிர்க்க இயலாது. மக்களின் நடத்தையால் ஏற்படும் துன்பங்களைத் தவிர்க்க முடியும். மக்களால் அஃறிணை உயிரினங்களுக்கு ஏற்படும் துன்பத்தை தவிர்த்தால் தான் இப்பூமியில் உயிரியல் நிலைப்பாடு உயிர்ப்புடன் காணப்படும்.

2.15.1. மனிதர்களால் விலங்குகளுக்கு ஏற்படும் துன்பம்

விலங்குகளுக்கு இயற்கையால் ஏற்படும் துன்பத்தை விட மக்களால் ஏற்படும் துன்பமே மிகுதி. மக்கள் விலங்குகளின் வாழ்வியலை மிகவும் கடினமானதாகவும் வலிகள் உடையதாகவும் ஏற்படுத்தி விடுகின்றனர். இன்றைய காலக்கட்டத்தில் பல விலங்குகளின் அழிவிற்கு மனித இனம்தான் காரணமாக உள்ளது.

2.15.2. ஆக்களுக்கு மனிதர்களால் ஏற்படும் துன்பம்

'ஆ'க்களைச் சார்ந்து தான் மக்கள் வாழ்கின்றனர். மக்களுக்கு மிகவும் உதவும் விலங்காக 'ஆ'க்கள் உள்ளன.

''நல்லெருது நடைவளம் வாய்க்கென உழவர்
புல்லுடைக் காவில் தொழில்விட் டாங்கு'' (நற். 315: 4–5)

எருதுகள் உழவனின் கடவுள் எனக் கொண்டாடக் கூடிய விலங்காக உள்ளது என்றால் அவைகளின் உழைப்பை மக்கள் எந்நிலையிலும் மறக்க முடியாது. அதனால், சங்ககால மக்கள் எருதின் வயது முதிர்ந்த காலத்தில் புல் நிறைந்த தோட்டத்தில் விட்டுவிடுவர். ‘‘வண்டி இழுக்கும் எருது உப்பு வண்டிகளை இழுத்து வெகுதொலைவுச் செல்கின்றன. அப்போது எருதுகளை இளைப்பாரவிடுகின்றனர். எருதுகளின் துன்பத்தை சங்ககால மக்கள் உணர்ந்து செயல்பட்டுள்ளனர்.’’[71]

‘‘கைபூண் பகட்டின் வருந்தி

வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே’’ (அகநா. 140: 14–15)

மக்கள் எருதுகளை வண்டி இழுக்கும் தொழிலுக்காக இன்றளவும் பயன்படுத்துகின்றனர். அவ்வாறு பயன்படுத்தும்போது மாட்டுவண்டியின் சக்கரம் பள்ளத்தில் சிக்கினால் வண்டிய மீட்க மாடுகள் மக்களுக்கு உதவுகின்றன. ‘‘மாடுகள் மிகவும் துன்பமுற்று உப்பு வண்டியை இழுக்கின்றன.’’[72] எருதுகள் மக்களுக்கு உதவத் தான் துன்பப்படுகின்றன.

2.15.3. காலநிலை மாற்றத்தால் ஆக்களுக்கு ஏற்படும் துன்பம்

விலங்குகளுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் இயற்கை நிகழ்வுகளில் முதன்மையானது காலநிலை மாற்றமே ஆகும். கோடைகாலத்தில் உணவு, நீர் கிடைக்காமல் துன்பப்படும். மழைக்காலத்தில் உணவு கிடைத்தும் உண்ண இயலாநிலை ஏற்படுகின்றது.

‘‘கன்றில் ஓர்ஆ விலங்கிய

புன்தாள் ஓமைய சுரனிர்ந் தோரே’’ (குறுந். 260: 7–8)

பாலை நிலத்தில் வெயில் மிகுதியாக உணரப்படும். அங்கு பசுக்கள் வெப்பம் தாங்காமல் ஓமை மரத்தின் நிழலை விட்டு நீங்காமல் உள்ளன. ‘‘கோடை காலத்தில் அருவிநீர் வறண்டு அனைவருக்கும் அச்சமுண்டாக்கும் பசுக்களின் நிலை மிகவும் துன்பமானது. இக்காலத்தில் வேங்கைமர இலைகளை வெட்டி ‘ஆ’க்களுக்குக் கொடுத்து காக்கின்றனர்.’’[73] ‘‘நீரில்லாத காரணத்தால் பசியால் வாடிய பசு.’’[74] என்ற கருத்துக்கள் பசுக்களின் துன்பத்தை கூறுகின்றன.

‘‘பாமா நல்லேறு சிலைப்பச் சேனின்

றிழுமென விழிதரு மருவிப்

பழமுதிர் சேலை மலைகிழ வோனே’’ (திருமுருகு. 315–317)

என்ற திருமுருகாற்றுப்படை அடிகளில் மழையும் துன்பத்தைக் கொடுக்கின்றது. பெருமழையால் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. அதனால் நீர் உண்ண முடியாமல் எருதுகள் கதருகின்றன.

2.15.4. ஒட்டகத்தின் துன்பம்

ஒட்டகங்கள் பாலை நிலத்தில் வாழ்பவை. அவை தான் உண்ணும் உணவையும் நீரையும் நீண்ட நாட்கள் சேமித்து வைத்துப் பயன்படுத்தும் தன்மை கொண்டது. ஒட்டகங்கள் பாறையில் காயவைத்துள்ள எழும்புகளைத் தனது நீண்டநாள் பசியை போக்கிக்கொள்ள உண்ணும் அளவிற்கு கொடுமையை அனுபவித்துள்ளது. இதனை,

‘‘குறும்பொறை யுணங்குள் ததர்வெள் என்பு

கடுங்கால் ஒட்டகத் தல்குபசி தீர்க்கும்’’ (அகநா. 245: 17–18)

என்ற அடிகள் உணர்த்தும்.

2.15.5. கழுதைகளுக்கு மக்களால் ஏற்படும் துன்பம்

சங்ககால மக்கள் கழுதையைச் சுமை சுமக்கப் பயன்படுத்தினர். இன்றும் சாலைவசதி இல்லாத மலைக் கிராமங்களுக்குப் பொருட்களை எடுத்துச் செல்ல போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. உமணர்கள் கழுதைகளின் முதுகில் உப்பு மூட்டைகளை அடுக்குவர். அவற்றைச் சுமந்து செல்லும்போது அவற்றின் குளம்புகள் உதைப்பதால் பரல்கற்கள் பிறழ்ந்து கிடக்கும். இதனால் போக்குவரத்து இடையூரின் காரணமாக கழுதைகள் துன்பப்பட்டதை,

"நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம்பு உதைத்த கற்பியுழ் இயவின்
வெஞ்சுரம் போழ்ந்த அஞ்சுவரு கவலை" (அகநா. 207: 5–7)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. மேலும்,

"இல்போல் நிழற் செல்வெயில் ஒழிமார்
நெடுஞ்செவிக் கழுதைக் குறுங்கால் ஏற்றைப்
புறநிறை பண்டத்துப் பொறையசாஅக் களைந்த
பெயர்படை கொள்ளார்க் குயவுத்துணை யாகி" (அகநா. 343: 11–14)

பொருள்வயின் பிரிவில் செல்வோர் தங்களின் உடைமைகளைக் கழுதையின் மீது ஏற்றிச் செல்கின்றனர். அவர்கள் தாங்கள் இளைப்பாரும் பொழுது கழுதையையும் இளைப்பாரச் செய்கின்றனர். மக்கள் தங்களின் பணி நிறைவடைய கழுதையைத் துன்பப்படுத்தினாலும் அதன் துன்பத்தை உணர்ந்து அவற்றிற்கு ஓய்வும் கொடுக்கின்றனர்.

2.15.6. கழுதைக்கு மற்ற விலங்குகளால் ஏற்படும் துன்பம்

விலங்குகளுக்கு மக்களாலும் தன் இனத்தினாலும் மற்ற இன விலங்குகளாலும் துன்பம் ஏற்படுகின்றன. நெய்தல் நிலத்தலைவன் கடற்கரை ஓரமாகக் கோவேறு கழுதையின் மேல் வருடுகிறான். அப்போது சுறாமீன் தாக்கியதால் கழுதை புண்பட்டு விடுகிறது. அதனால் கழுதைக்கு துன்பம் ஏற்படுகின்றது. இதனை,

''கழிச்சுறா எறிந்த புட்டாள் அத்திரி'' (அகநா. 120:10)

என்ற அடி புலப்படுத்தும்.

2.15.7. குதிரைகளின் துன்பவுணர்வு

குதிரைகள் மக்களுக்கு மிகவும் நட்பான விலங்கு சங்ககாலத்தில் போக்குவரத்திற்கும் போர் செய்யவும் மிகவும் உதவியது. அதன் விரைந்து ஓடும் தன்மை அனைவராலும் வியக்கும் வண்ணம் உள்ளன. இன்றும் குதிரைப்பயணம், குதிரைவண்டிப் பயணம் போன்றவை உள்ளன.

''முள்ளிட் டூர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே'' (ஐங் .481: 2–4)

மேற்கண்ட அடிகளில் தேரில் பூட்டப்பட்ட குதிரை வேகமாக ஓடுவதற்குத் தாற்று முள்ளிட்ட குச்சியை பயன்படுத்திச் செலுத்துகின்றனர். அதனால் குதிரை துன்பப்படுகின்றது.

''தீண்டா வைம்முள் தீண்டி நாம்செல்ற்கு
ஏமதி வலவ தேரே யுதுக்காண்'' (நற். 21: 4–5)

என்ற அடிகளிலும் தாற்று முள்ளிட்ட குச்சியை பயன்படுத்துவதால் துன்புறுவது கூறப்பட்டுள்ளது.

"படுநீர்ப் பனித்துறைச் சேர்ப்பன்
நெடுந்தேர் துண்ணுகம் பூண்ட மாவே" (நற். 58:10–11)

தேர் நுகத்தில் பூட்டப்பட்ட குதிரை அடிப்பட்டதால் துன்பப்படுகின்றது. தேரில் பூட்டப்பட்ட குதிரை உப்பங்கழி பிரியும் துறைமுகத்தில் வந்து கொண்டிருக்கும் போது சுறாமீன் தாக்கியது. அதனால் பாகன் தேரை நிறுத்துகிறான் குதிரையும் சட்டென நின்றது. குதிரைக்கு சுறாமீன் தாக்கியதால் துன்பம் ஏற்படுகின்றது. இதனை,

"வயற்சுறா எறிந்ததென வலவன் அழிப்ப
எழில்பயங் குன்றிய சிறையழி தொழில்
நிரைமணிப் புரவி வரைநடை தவிர
இழுமென் கானல் விழுமணல் அசைஇ
ஆய்ந்த பரியன் வந்திவன்" (அகநா. 190: 12–16)

என்ற அடிகள் எடுத்துரைக்கும். குதிரைகள் மக்களாலும்மற்ற விலங்குகளாலும் துன்பமடைகின்றன.

2.15.8. குரங்குகளின் துன்பவுணர்வு

குரங்குகள் மனித குலத்தின் மூதாதையர் என்றாலும் அவைகள் தம்மை மேம்படுத்திக் கொள்ளும் அளவிற்கு அறிவாற்றல் பெற்று விளங்கவில்லை என்பதே உண்மை.

"படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்" (குறுந். 249:2)

பருமழையின் காரணமாக குரங்கு தனது குட்டிகளோடு நடுங்கித் துன்பப்பட்டது.

குரங்குக் குட்டி அனுபவம் இல்லாததால் உயரமான மலையில் ஏறி தேனெடுக்க முயல்கின்றது. அப்போது தேனீக்கள் கிளம்பியதால் கொட்டிவிடும் என்ற அச்சத்தால் மலை உச்சியில் இருந்து குதித்து துன்பப்படுகின்றது. இது குரங்கின் அறியாமையினால் ஏற்பட்ட துன்பமாகும். இதனை,

"கருவிரன் மந்திக் கல்லா வன்பறழ்
அருவரைத் தீந்தே னெடுப்பி யயல
துருகெழு நெடுஞ்சியைப் பாயு நாடன்" (ஐங். 272: 1–3)

என்ற அடிகள் சுட்டும்.

2.15.9. நாய்களின் துன்பவுணர்வு

நாய்கள் இல்லத்திலும் காட்டிலும் வாழ்கின்றன. வீட்டு விலங்காக இருந்தாலும் தெருவில் வாழக்கூடிய யாரும் வளர்க்காத தெருநாய்கள் இன்றும் உணவு கிடைக்காமல் துன்பப்படுகின்றன.

"டிறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்த னோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசவர்க் கணச்சித லரித்த
பூமி பூத்த புழற்கா ளாம்பி
யொல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்கில்" (சிறுபாண். 130–135)

என்ற அடிகளில் குட்டிகளை ஈன்ற நாய்க்கு உண்ண உணவுக் கிடைக்கவில்லை. அதனால் பால்சுரப்பு நின்றுவிடுகின்றது. அதன் குட்டிகள்

பால்குடிக்க முயலும்போது துன்பத்தால் குரைக்கின்றது. குட்டி ஈன்ற விலங்குகள் அதிகமாக உண்டால்தான் பால்சுரப்பு இருக்கும். இங்கு பசியாறக்கூட உணவு இல்லாமல் துன்பப்படுகின்றது.

"நீரற வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
கள்ளியங் காட்ட கடத்திடை உழிஞ்சில்" (அகநா. 53: 5–7)

என்ற அகநானூற்றுப் பாடலடிகளிலும் ஆணும் பெண்ணுமாகிய செந்நாய்கள் பசியால் துன்பப்படுவதைக் காண இயலும். எந்த துன்பத்தை விடவும் பசித்துன்பம் மிகவும் கொடுமையானது. இதனால் தான் "பசிவந்தால் பத்தும் பறந்துபோகும்" என்ற பழமொழி தோன்றியிருக்கக் கூடும்.

2.15.10. மான்களின் துன்பவுணர்வு

மான்கள் அழகானவை மானைக் கண்டவுடன் மனதில் இனம்புரியாத இன்பம் தோன்றும். அவ்வாறு அழகு மிகுந்த மான் செழிப்பான இடங்களில் தான் வாழும் என்றாலும் அதற்குப் பல துன்பங்கள் உள்ளன.

"ஏமான் பிணையின் வருந்தினெ னாகத்
துயர்மருந் தறிந்தனள போல அன்னை" (நற். 61:3–4)

என்ற அடிகளில் அம்புப்பட்ட மான் துன்பமுறுவது போல தலைவி பிரிவால் துன்பப்பட்டால் என்ற செய்தி உள்ளது. மான்கள் மக்களால் துன்புறுவது கூறப்பட்டுள்ளது. இணையாக சென்ற மான்களில் ஆண்மானை செந்நாய் கொன்றது ஆண் மானின் குரலைக் கேட்டுப் பெண்மான் துன்பக்குரலில்

அலறுகின்றது. எதிரிக்கு இணை உணவானதால் மானுக்குத் துன்பம் உண்டானது. இதனை,

"ஊனசைப் பிணவின் உறுபசி கலைஇயர்
காடுதேர் மடப்பினை யலறக் களைஇயர்
ஓடுகுறங்கு அறுத்த செந்நா முயற்றை" (அகநா. 285: 4–6)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

"பெருநீர் ஒப்பின் போய் வேண்டேர்
மரனில் நீளிடை மான்நசைஇ யுறூஉம்" (நற். 84: 4–5)

வறட்சி மிகுந்த காலத்தில் கானல் நீரை கண்டு மான்கூட்டங்கள் ஓடி ஏமாறுகின்றன. நீர் இன்றி வாடுவது துன்பத்திலும் துன்பம் .

"மூங்கில் இளமுளை திரங்கக் காம்பின்
கழைநரல் வியலகம் வெம்ப மழைமறந்து
அருவி யான்ற வெருவரு நனந்தலைப்
பேஎய் வெண்தேர்ப் பெயல்செத் தோடித்
தாஅம் பட்ட தனிமுதிர் பெருங்கலை
புலம்பெயர்ந் துறைதல் செல்லா தலங்குதலை" (அகநா. 241: 6–11)

கானல் நீரை நீர் எனக்கருதி வெகுதொலைவு வந்துவிடுகின்றது. வந்த இடத்தில் ஏமாற்றமே மிஞ்சுகின்றது. மீண்டும் திரும்பிச் செல்வதற்கு வழிதெரியாமல் துன்பமுறுகின்றது. "மான்கள் உணவும் நீரும் இல்லாமல் பலவாறு துன்பப்படுவதுமுண்டு."[75] மான்கள் இயற்கையின் நிகழ்வுகளால் மிகவும் துன்புறுகின்றன.

2.15.11. யானைகளின் துன்பவுணர்வு

யானைகள் உருவில் பெரியன. காலநிலை மாற்றமே அதன் துன்பத்திற்கு முதல் காரணமாக அமைகின்றது.

2.15.11.1. யானைகளுக்கு மக்களால் ஏற்படும் துன்பம்

யானைக்குடும்பம் காட்டுவழியில் செல்லும்பொழுது யானைகளை பிடிக்க வெட்டி வைத்த குழியில் பெண் யானை விழுந்துவிட்டதால் ஆண்யானை தன் இனத்தை அழைக்கப் பிளிறியதால் கன்று அச்சப்பட்டு ஓடியது. குடும்பமாக வாழ்ந்த யானை மக்கள் செய்த செயலால் துன்பப்பட்டு நின்றது என்பதை,

"கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்
களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ
ஒய்யென எழுந்த செவ்வாய்க் குழவி
தாதெரு மறுகின் மூதூர் ஆங்கண்
எருமை நல்ஆன் பெறுமுலை மாந்தும்
நாடுபல இறந்த நன்ன ராட்டிக்கு" (அகநா. 165: 1–6)

என்ற அடிகள் விளக்குகின்றன.

"அடுக்களி றுயவுங் கொடிகொள் பாசறைக்
குருதிப் பரப்பிற் கோட்டுமா தொலைச்சிப்
புலாக்களஞ் செய்த கலாஅத் தானையன்" (புறநா. 69: 9–10)

வேந்தனின் பாசறைச் சிறப்பைக் கூறும்போது போரில் யானை புண்பட்டுத் துன்பப்படுவது கூறப்பட்டுள்ளது. மக்கள் தங்களின் பணிகளைச் செய்வதற்கு

விலங்குகளைப் பயன்படுத்துகின்றனர். ‘‘மன்னன் வெற்றிச் சிறப்பைக் கொண்டாட பகை மன்னர்களின் பட்டத்து யானையின் கொம்பை அறுத்து அதனை துன்பப்படுத்தியுள்ளனர்.’’[76] என்பதில் யானைகளை மக்கள் பணிகள் செய்ய துன்புறுத்தியுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

2.15.11.2. யானைகளுக்கு இயற்கையால் ஏற்படும் துன்பம்

காட்டில் யானைகளுக்கு இயற்கையாலும் துன்பம் ஏற்படுகின்றது. வறட்சயான காலங்களில் உணவும் நீரும் இல்லாமல் துன்பமடையும் காட்டில் வாழும் இறைச்சி உண்ணிகளாலும் துன்பம் ஏற்படுகின்றது. தலைவன் கடந்து சென்ற நிலத்தின் தன்மையை,

‘‘வறுங்கயம் துழைஇயை இலங்குமருப்பு யானை
குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்’’ (குறுந். 215: 4–5)

என்று கூறப்பட்டுள்ளது. யானையானது நீரற்ற குளத்தினைத் துழாவும் துன்பத்தை உடையது. ‘‘யானை கன்றொடு நீர் இல்லாமல் நிழலில் வருந்துகின்றன.’’[77] பெண் யானை தாகம் கொண்டு வெம்மை மிக்க சிறிய குன்றுகளைக் கடந்து தண்ணீருக்காகச் செல்கின்றது. அதன் குட்டி அதனுடன் செல்ல முடியாமல் பசுவுடன் செல்கின்றது என்பதை,

‘‘நீர்நசைக் கூக்கிய உயவல் யானை
வேனிற் குன்றத்து வெல்வரைக் கவாஅன்
இடஞ்செல்ச் செல்லாக் கயந்தலைக் குழவி
சேரியம் பெண்டிரின் அஞ்சித் திரிய
ஊரான் கன்றொடு புகுதரும் நாடன்’’ (நற். 171:1–5)

என்ற பாடலடிகள் புலப்படுத்தும்.

“கொம்மை வாடிய இயவுள் யானை

நீர்மருங்கு அறியாது தேர்மருங்கு ஓடி

அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்” (அகநா. 29:16–18)

என்ற அடிகளில் தலைவன் பொருளீட்டச் சென்று திரும்பிய காட்டுவழி வெம்மை தாங்காமல் கானல் நீரால் அலைப்புரண்டு துன்பப்படும் யானைகள் உள்ளதாகும். “நீரின்மையால் ஆண்யானை காய்ந்த சுனைகளில் உள்ள நீர்ப்பாசியைத் தின்று பசியோடு உள்ள பெண் யானையோடு துன்பப்படுகிறது”[78] மேலும் யானைக்குடும்பம் ஒன்று பசியால் வருந்தி நீரைத் தேடித் துன்பப்படுகின்றது”[79] “பசியால் பனங்குருத்தைத் தின்னும் யானையின் பசிமிகுதியை அதன் பசலைபாய்ந்த கண்கள் காட்டும். இரவு முழுவதும் உறங்காது திரிந்து காலையில் ஞாயிறு எழுச்சியின் போது உறங்காது திரிந்து காலையில் ஞாயிறு எழுச்சியின் போது செயலற்று உறங்கி நிற்கும்”[80] “பசியினால் யானைகள் துன்பப்படுவதும் யானைகள் உண்ண உணவுக்கிடைக்காமல் அழைவதும் சங்கப்பாடல்களில் எடுத்துரைக்கப்படுகின்றன.’’[81] மேலும் தலைவன் தலைவி உடன்போக்குச் செல்லும்வழி,

“மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து

நாரரை மருங்கின் நீர்வரப் பொறித்துத்

களிறுசுவைத் திட்ட கோதுடைத் ததரல்” (அகநா. 257: 14–16)

குடிக்க நீர் இல்லாமல் யானைகள் மரத்தின் அடியை குத்தி பட்டையை உரித்து அதில் உள்ள நீரை உறிஞ்சி குடிக்கும் துன்பம் நிறைந்தது.

“பொறிவரித் தடக்கை வேத லஞ்சிச்

சிறுகண் யானை நிலந்தொடல் சொல்லா

வெயின்முளி சோலைய வேயுயர் சுரனே” (ஐங். 327: 1–3)

யானையின் துதிக்கைத் தரையைத் தொடும்பொழுது வெந்துவிடும் என்று அஞ்சி தலைமேல் தூக்கி வைத்துக்கொள்ளும். இதுபோன்று வெயிலால் துன்பம் நிறைந்தது தலைவன் சென்றவழி. ‘‘யானைநீர் வேட்கையால் துன்பமடையும் வழியில் தலைவி உடன்போக்குச் சென்றதை தாய் கூறுகிறாள். யானைகள் துன்பமடைகின்ற செய்தி பிற புலவர்களாலும் பாடப்பட்டுள்ளது.’’[82] மேலும்,

‘‘இருமு ணெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரந் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடுநவ்வை யாராற் றறுசுனை முற்றி
யுடங்குநீர் வேட்ட வுடம்புயங் கியானை’’ (கலித். 12:1–4)

என்ற பாடலடிகள் நீர் வேட்கையால் தன் துதிக்கையை வறட்சியான சுனையில் பதித்துச் சுட்டுக்கொண்டன. வேதனை பொறுக்க முடியாமல் கூட்டத்தைப் பிரிந்து சிதரின. ‘‘நீர் கிடைக்காமல் சேற்றைச் சுவைத்து உயிர் வாழ்வதும் கானல் நீரைப் பார்த்து ஓடுவதும் உண்டு.’’[83] உணவு இல்லாமல் கூட சில நாட்கள் வாழமுடியும் நீர் இல்லாமல் வாழ்வது இயலாத செயல் அதனால் நீர் இன்மை என்பது மிகவும் துன்பம் கொடுக்கக் கூடியது.

‘‘மராஅ யானை மதந்தப ஒற்றி
உராஅ ஈர்க்கும் உட்குவரு நீத்தங்’’ (அகநா. 18:4–5)

என்பதில் காட்டாற்று வெள்ளம் ஆண் யானைகளை துன்பப்பட செய்கின்றது. ‘‘யாளியால் தாக்கப்பட்ட யானை துன்பப்படுகிறது. இதேபோல் புலியால் தாக்கப்பட்ட யானை புண்பட்டுத் துயரம் அடைகின்றது.’’[84] யானைகள் இயற்கை நிகழ்வுகளாலும் மற்ற விலங்குகளாலும் துன்பமடைகின்றன.

2.16. விலங்குகளின் வருத்தவுணர்வு

உணர்வுகள் சூழலுக்குத் தகுந்தாற்போல் மாற்றமடையும். விலங்குகளுக்கும் வருத்தம் காணப்படுகின்றன. அவற்றை சங்கப்புலவர்கள் உணர்ந்து உற்றுநோக்கி தங்களின் பாடல்களில் எடுத்துரைத்துள்ளனர்.

2.16.1. ஆக்களின் வருத்தவுணர்வு

'ஆ'க்களுக்கு சூழலை உணரும்திறன் நன்கு உள்ளது. மக்களிடம் மிகுதியாகப் பழகுவதால் இந்திறன் காணப்படுகின்றது. 'ஆ'க்களை வளர்க்கும் பாதுகாவலர்களுக்குத் துன்பம் ஏற்பட்டால் 'ஆ'க்கள் வருத்தமுற்று இருக்கும். தன்வருத்தத்தைக் கண்ணீர்விட்டும் தலைகுனிந்தும் வெளிப்படுத்தும்.

''பல்லா நெடுநெறிக் ககன்று வந்தெனப்
புன்றலை மன்றம் நோக்கி மாலை
மடக் கண் குழவி அலம்வந்தன்ன'' (குறுந். 64: 1–4)

மேய்ச்சலுக்குச் சென்ற தாய்ப் பசுவின் வரவை எதிர்பார்த்துப் பாசமிகுந்த கன்றுகள் காத்திருந்து தம்தலைத் தூக்கிப் பார்த்து வருத்தமுறும்.

2.16.2. குரங்குகளின் வருத்தவுணர்வு

குரங்குகள் மலைகளில் வாழும் விலங்கு. இவைகளுக்கும் காலநிலை மாற்றம் பல இடர்பாடுகளைக் கொடுக்கும். மழை இன்மையினால் நிலத்தின் தன்மையில் மாற்றம் காணப்படும் போது விலங்குகளின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. பாலை நிலத்தின் கொடுமை தாங்காமல் மந்திகள் துன்புறுகின்றன என்பதை,

''மரல்சால், மலை வெம்ப, மந்தி உயங்க'' (கலித். 41:5)

என்ற பாடலடிகள் விளக்கும்.

''மாமேயல் மறப்ப மந்தி கூர'' (நெடுநல். 9)

என்ற அடியில் குரங்குகள் குளிரால் வருந்தின என்பதை அறியமுடிகின்றது. குரங்குகள் காலநிலை மாற்றத்தால் வருத்தமுறுகின்றன.

2.16.3. மான்களின் வருத்தவுணர்வு

மான்கள் காட்டுப்பகுதியில் வாழும் விலங்காகும். எனவே இவற்றிற்கு காலநிலை மாற்றம் உணர்வுகளின் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

''உவரி ஒருத்தல் உழாஅது மடியப்
புகரி புழுங்கிய புயல்நீங்கு புறவில்'' (குறுந். 391: 1–2)

கார்காலத்தில் மழைப்பொழிவு இல்லாததால் புள்ளி மான்கள் வெப்பம் தாங்காமல் வாழ வருத்தமுற்றுக் காணப்படுகின்றது. ''பாலை நிலத்தின் வெம்மையால் வருந்தும் விலங்குகளின் வருணனைகள் அவல உணர்ச்சியைத் தூண்டுகின்றன.''[85] மழை இல்லாமல் வறண்டதால் வெப்பம் தாங்காமல் உயிரினங்கள் வருத்தமுறுகின்றன.

2.17. விலங்குகளின் வெறுப்புணர்வு

எந்த உயிரினமாக இருந்தாலும் தனக்குப் பிடிக்காத செயல்பாடுகள் நடந்தால் அவற்றை வெறுக்கும் தன்மை தோன்றும்.

2.17.1. குதிரைகளின் வெறுப்புணர்வு

குதிரைகள் பழக்கப்படுத்தப்பட்ட காட்டுவிலங்கு அவற்றின் பார்வைகளை நேராக்கக் 'கடுவாளம்' பயன்படுத்துகின்றனர்.

"புரவியும் பூணிறின் தண்ணென யூரனைப்" (நற். 380:11)

என்ற பாடலடியில் பாணனின் பாட்டை கேட்டுத் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் வெறுத்துக் கணைக்கின்றன.

2.18. விலங்குகளின் அச்சவுணர்வு

அச்சம் என்பது மனம் தொடர்பான உணர்வு. ஏதாவது ஒரு செயல்பாட்டால் தாங்கமுடியாத துன்பம் வரும் பொழுதும் முன்பு நடந்த பாதிப்பைபோல் தற்போது நடக்கும் என்ற எண்ணமும் விலங்குகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தும். சங்ககாலப் புலவர்கள் விலங்குகளின் அச்ச உணர்வைப் பலவாறு பாடியுள்ளனர்.

2.18.1. ஆவின் அச்சவுணர்வு

'ஆ'க்கள் சிறு நிகழ்வு, ஒலி போன்றவற்றிற்குக் கூட அச்சப்படும். காட்டுப்பசுவின் கன்றானது கானவர் காட்டைக் கலைக்க ஒலி எழுப்புதலினால் அச்சம் கொண்டு தன் இனத்திடம் இருந்து நீங்கி பக்கத்தில் இருந்த சிற்றூரிடத்தே சென்று அவ்வூர் மக்களிடம் அகப்பட்டது என்பதை,

"அமர்க்கண் ஆமான் அம்செவிக் குழவி
கானவர் எடுப்ப வெரீஇ இனம்தீர்ந்து
கானம் நண்ணிய சிறுகுடிப் பட்டென" (குறுந். 322: 1–3)

என்ற பாடலடிகள் சுட்டும்.

2.18.2. எருமைகளின் அச்சவுணர்வு

எருமைகளைக் கண்டால் அனைவரும் அச்சப்படுவர்கள் அதுவும் காட்டெருமைகள் மிகவும் பலமானவை. அவற்றைக் காணும்போதே உடலில்

நடுக்கம் ஏற்படும். எருமைகள் மேய்ச்சலுக்கு சென்று திரும்பும் போது பகன்றையில் மலரைத் தம் கொம்பால் மாட்டிக் கொண்டு வருவதை கண்டு அதன் கன்றே அஞ்சுகின்றது. எருமையின் தோற்றம் தெளிவாக அறிய முடியாததால் கன்றுகள் அச்சப்படுகின்றன. இதனை,

"பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருத்தா ளெருமைக் கன்று வெரூஉம்" (ஐங். 97: 1–2)

என்ற பாடலடிகள் புலப்படுத்தும்.

2.18.3. கரடிகளின் அச்சவுணர்வு

கரடிகளைக் கண்டால் பல உயிரினங்கள் அஞ்சும் ஒரு கரடியைக் கண்ட மற்றொரு கரடியும் அஞ்சும் நிலையும் காணப்படுகின்றது. "அருவி வீழ்வது கண்டு பனைமரத்தின் செறும்பிடை ஒத்த மயிர்களையுடைய கரடிகள் அஞ்சிக் குகையில் தங்கிவிடுகின்றன"[86] அருவியின் ஓசை, கரடிகளை அச்சமடைய செய்கின்றன.

2.18.4. குரங்குகளின் அச்சவுணர்வு

மிகுந்த ஒலியும் எதிரி விலங்குகளும் குரங்குகளை அச்சமூட்டுள்ளன. நாய்களுக்குக் குரங்குகள் அஞ்சும்.

"பலவில் சேர்ந்த பழம்ஆர் இனக்கலை
சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருஉறு குதிரையின் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடுஅமை தயங்கப் பாயும்" (குறுந். 385: 1–4)

குரங்குகள் வேட்டுவனது அம்பிற்கு அஞ்சும். ஆனால் இன்றளவும் குரங்குகள் வேட்டையாடப் படுவதில்லை.

"மந்திக் கணவன் கல்லா கடுவன்
ஒண்கேழ் வயப்புலி குழுமலின் விரைந்தூண்
குன்றுய ரடுக்கங் கொள்ளும் நாடன்" (ஐங். 274: 1–3)

என்ற பாடலடிகளில் மந்தியின் கணவனான கடுவன் மிகவும் திறம் வாய்ந்த வலிமை மிக்க புலியின் முழக்கத்தைக் கேட்டு விரைவாக அஞ்சிக் குன்றில் ஏறி மலையின் உச்சியை அடைகிறது. "சிறுத்தைப் புலி வேங்கைப்புலி ஆகிய விலங்குகளுக்கு குரங்குகள் மிகவும் அஞ்சுமென விலங்கு நூலாரும் வேட்டையாடும் (Hunters) கூறுவர். குரங்குகள் கடிய உரப்பான ஓசை கேட்டாலும் அஞ்சி ஓடுமெனக் கூறுவர்."[87] குரங்குகள் தன்னை விட வலிமையான விலங்காகிய புலிக்கு அஞ்சுகின்றன.

2.18.5. நரிகளின் அச்சவுணர்வு

நரிகள் தந்திரம் மிக்கவை. என்றாலும் மனிதர்களைக் கண்டு மிகவும் அஞ்சுகின்றன.

"தெறிமறி பார்க்குங் குறுநரி வெரீஇ
முள்ளுடைக் குறுந்தூறு கிரியப் போகுந்" (அகநா. 274: 10–11)

என்ற அடிகளில் நரி ஆடுகளைப் பிடித்து உணவாக்கி கொள்கின்றது. இதனால் ஆட்டின் பாதுகாவலர் ஆட்டுக்கிடைக்குக் காவல் இருப்பர். அவ்வாறு காவலிருக்கும் இடையர்கள் வாயை மடித்து சீழ்கை ஒலி எழுப்பினாலே நரிகள்

அஞ்சி ஓடி முட்புதரில் மறையும். நரிகள் இறைச்சி உண்ணிகள் விலங்குகளை வேட்டையாடி உண்டாலும் மக்களின் சீழ்கை ஒலிக்கு அஞ்சுகிறது.

2.18.6. புலிகளின் அச்சவுணர்வு

தீயைக் கண்டால் காட்டு விலங்குகள் அச்சமடையும். கோடையில் மூங்கில்கள் ஒன்றுக்கொன்று உரசித்தீப்பற்றும். அத்தீ ஓசையோடு எரியும். அதைக்கண்டு வலிமைமிக்க புலிகளும் அச்சப்பட்டு ஓடுகின்றன. இதனை,

"ஞெலிகழை முழங்கழல் வலமா வெரூஉம்
குன்றுடை யருஞ்சுரஞ் செலவயர்ந் தனையே" (ஐங். 307: 1–2)

என்ற அடிகள் விளக்கும்.

2.18.7. கேழல்களின் அச்சவுணர்வு

பன்றிகள் காட்டுப்பன்றிகள், வளர்ப்புப் பன்றிகள் முள்ளம் பன்றிகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றில் காட்டுப்பன்றிகளும், முள்ளம் பன்றிகளும் மலைப்பகுதிகளில் வளர்கின்றவையாகும். "வேட்டை நாய்களுடன் வேடனைக் கண்ட முள்ளம்பன்றி அஞ்சி மல்லிகைப் புதரில் மறைந்து நின்றது"[88] வேட்டையாளர்களைக் கண்டவுடன் ஆண்பன்றி அஞ்சி பெண்பன்றியும் குட்டிகளையும் பாதுகாப்பாக அழைத்துச் சென்று தானும் மறைந்து கொள்கின்றது. பன்றியின் அச்சத்தைக் கண்டவுடன் வேட்டைக்காரன் அம்பு எய்தாமல் பன்றிகளைத் தப்பிக்கவிட்டுச் செல்கின்றான். இதனை,

"நான்முலைப் பிணவல் சொலியக் கானொழிந்து
அரும்புழை முழுக்கர் ஆட்குறித்து நின்ற

தறுகட் பன்றி நோக்கிக் கானவன்

குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி'' (அகநா. 248: 4–7)

என்ற அடிகள் புலப்படுத்தும்.

2.18.8. மான்களின் அச்சவுணர்வு

மான்கள் சில வேறுபாடான ஒலிகளைக் கேட்டாலே அஞ்சும் தன்மை கொண்டவை. மான்கள் வாழும் சூழலில் பல எதிரி விலங்குகளும் வாழ்கின்றன.

''மான்அமர்ப் பன்ன மையல் நோக்கமொடு'' (நற். 179: 4)

''வெரூஉமான் பிணையன் ஒரீஇ'' (நற். 250:10)

ஆகிய அடிகளில் மான்களின் அச்சம் வெளிப்படுத்தப்படுகின்றது. ''மேய்ந்து கொண்டிருக்கும் மான் கூட்டங்கள் செந்நாயைக் கண்டவுடன் எங்கு தங்களைப் பிடித்து உணவாக்கிவிடுமோ என்ற அச்சத்தில் விரைந்து ஓடுகின்றன.''[89] மேலும் ''ஆண்மான் புலியிடத்து அகப்பட்டதால் சிறிய குட்டியை அணைத்துக் கொண்டு அஞ்சி நடுங்கி பெண்மான் பூளைச் செடிகள் நிரம்பிய இடத்தில் மறைந்திருக்கின்றன.''[90]

''கலைநின்று விளக்குங் கானமூ ழிறந்த

சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை

தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்'' (மலைபடு. 405–407)

என்ற அடிகளில் புலிக்கு அஞ்சியும் வில்லின் ஓசைக்கு அஞ்சியும் மான்கள் ஓடின. மான்கள் மற்ற விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் உணவாக இருப்பதால் அவை வேட்டையாடப்படுகின்றன. எனவே தான் வேட்டையாடப்படுகின்றோம் என்பதை உணரும் போதே மான்கள் அஞ்சுகின்றன.

2.18.9. யானைகளின் அச்சவுணர்வு

காட்டில் மிகப்பெரிய விலங்காக உள்ள யானைகளும் அஞ்சுகின்றன. தினைப்புனம் காப்பவர்கள் விலங்குகளை விரட்டக் கவன் வைத்திருப்பர். அக்கவனின் ஒலிக்கு யானைகள் அஞ்சுவதை,

''ஏனல் காவலர் கவயொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை'' (குறுந். 54: 2–3)

என்ற அடிகள் புலப்படுத்தும். கவனின் கொள்ளியால் வடுபட்டுத் திரும்பிய களிறு எரிகொள்ளியைக் கண்டதும் அச்சமடைவதை,

''ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடர்ஒளி வெரூஉம்'' (குறுந். 357: 6–7)

என்ற பாடலடிகள் சுட்டும்.

''ஞால்வாய் களிறு பாந்தள் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை வடரகத்து இயம்பும்
கடுமான் புல்லிய காடிறந் தோரே'' (நற். 14: 8–11)

என்ற அடிகளில் களிறு பாம்பின் வாயில் அகப்பட்டது. அதனைக் கண்டு அஞ்சிய பிடியானை பிளிறி அச்சத்தை வெளிப்படுத்துகின்றது. புலி, ஆண்யானையைக் கொன்றதைக் கண்ட பெண்யானை அஞ்சி மேகத்தில் தோன்றும் இடிபோலப் பிளிறியதை,

''பெருங்களிறு உழுவை தாக்களின் இரும்பிடிக்' (நற். 144: 4)

என்ற அடி உணர்த்தும்.

''காண்டொறும் பொலியும் கதழ்வரல் வேழம்
இருங்கேழ் வயப்புலி வெரீஇ அயலது
கருங்கால் வேங்கை ஊறுபட மறலிப்
பெருஞ்சினம் தனியும் குன்ற நாடன்'' (நற். 217: 2–5)

என்ற நற்றிணைப் பாடலடிகளில் புலியைக் கண்டதும் யானை அச்சமடைகின்றது. இதே போன்று புலிக்கு அஞ்சிய யானைக் கூட்டத்தை (அகநா. 39:11–12) அறிய இயலும். சினத்துடன் புலி முழங்கியதால் பெண் யானைகள் அஞ்சி ஓடுகின்றன. இதனை,

''களிற்றை பிழைத்தலிற் கயவாய் வேங்கை
காய்சினஞ் சிறந்து குழுமலின் வெரீஇ
இரும்பிடி யுரியுஞ் சோலை'' (அகநா. 221: 11–13)

என்ற பாடலடிகள் எடுத்துக்காட்டும். உயிர்பயம் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதாகும். வேங்கைப் பூக்கள் புலியின் புள்ளிபோல தோற்றமளித்து யானைகளை அச்சப்படுத்தி ஓடச் செய்தமையை,

''ஓங்கல் மிசைய வேங்கை யொள்வீப்
புலிப்பொறி கடுப்பத் தோற்றலிற் கயவாய்
இரும்பிடி இரியுஞ் சோலைப்'' (அகநா. 228: 12–13)

என்ற அகநானூற்றடிகள் சுட்டும். ''இடியோசையை கேட்ட யானை அவ்வோசையை புலியின் முழக்கம் எனக் கருதி அஞ்சி அவ்யானையும் பிளிறிக்கொண்டு ஓடியது.''[91] ''யாளி யானைக் கூட்டத்தைத் தாக்குகின்றது. யானைகள் யாளியின் தாக்குதலுக்கு அஞ்சிப் பிளிறுகின்றன''[92] யானைகள் தன்னைவிட வலிமையான விலங்குகளைக் கண்டு அச்சமடைகின்றன.

2.18.10. மக்களால் யானைகளுக்கு ஏற்படும் அச்சம்

யானைகள் காட்டு விலங்காக இருந்தாலும் அவற்றைப் பிடித்து பழக்கப்படுத்திப் பயனடைகின்றனர். அவ்வாறு பழக்கப்படுத்தி யானையைப் பணிசெய்யத்துண்டும் பொழுது அவை அச்சப்படுகின்றன.

''உளங்கழி சுடர்ப்படை யேந்திரம் பெருவிறல்
ஒச்சினன் நுர்ந்த காலை மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே'' (புறநா. 308: 8–11)

என்ற புறநானூற்றடிகளில் போரில் தலைவன் ஒளியமைந்த வேலை ஓங்கி எறிய பகைவேந்தனின் ஆண்யானைகள் அனைத்தும் அச்சப்பட்டு அவற்றின் பெண் யானைகள் நாணம் கொள்ளப் புறங்கொடுத்து ஓடின. யானைகள் உயிருக்குப் பயந்து அச்சப்பட்டு ஓடுகின்றது.

''ஒன்னார் தேய வோங்கி நடந்து
பாடியோர்த் தேய்ந்து வடிமணி யிரட்டும்
கடாஅ யானைக் கணநிரை யலற
வியலிரும் பரப்பின் மாநிலங் கடந்து'' (பதிற். 20: 11–14)

பகைவர்கள் அழியும்படி எழுச்சியோடு சென்று அவர்களை அழித்து யானைகளின் கூட்டம் கதறி ஓடும்படி பெரிய பரப்புடைய நிலத்தை வென்று அகப்படுத்தினான். மக்களிடம் கொண்ட அச்சத்தின் காரணமாகவே யானைகள் பணி செய்கின்றன.

2.19. விலங்குகளின் வீர உணர்வு

வீரம் இருபாலர்களிடமும் இருந்தாலும் ஆண்கள் தான் உடனடியாக வெளிக்காட்டக்கூடியவர்கள். பெண்கள் இடர்பாடான சூழலில்தான் வெளிக்காட்டுவார்கள். இடர்பாடான சூழல் அமையவில்லையெனில் அவர்களின் வீரம் அவர்களை அறியாமலேயே மறைந்துவிடுகின்றது. அதுபோலவே தான் விலங்குகளும் தன்னிச்சையாகக் காடுகளில் வாழும் விலங்குகளுக்கும் விலங்குகள் காப்பகத்தில் வாழும் விலங்குகளுக்கும் வீரத்திலும் மற்ற தன்மைகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

2.19.1. ஆக்களின் வீர உணர்வு

ஆக்களில் அனேறுக்குத்தான் வீரம் மிகுதி. ஏறுதழுவுதல் என்ற வீர விளையாட்டு காளைக்கும் காளையர்களுக்குமிடையே நடைபெறுகின்றது. இதனை கலித்தொகைப் (101, 102, 103) பாடல்கள் தெளிவாக்குகின்றன. நல்ல வீரம் பொருந்திய எருதின் தோலில் முரசு செய்யப்படுவதை,

‘‘ஓடா நல்லேற்று றுரிவை தைஇய
ஆடுகொண் முரசம் இழுமென முழங்க
நாடுதிறை கொண்டன மாயின் பாக’’ (அகநா. 334: 1–3)

என்ற பாடலடிகள் புலப்படுத்தும்.

2.19.2. புலிகளின் வீர உணர்வு

காட்டில் பல பெரிய விலங்குகள் இருந்தாலும் வீரத்திற்கு எடுத்துக்காட்டாகப் புலியைத் தான் கூறுவர். ‘‘புலிகளின் வீரம் கருதியே பண்டைக்காலத்தில் புலிகள் பற்றிய செய்திகள் இலக்கியத்தில்

இடம்பெற்றுள்ளன. புலி வீரம் மிக்கது என்றாலும் கொடுமையான குணம் கொண்டது. சிங்கம் பசித்தால் தான் வேட்டையாடும். ஆனால் புலியோ எதிர்படும் விலங்ககளை எல்லாம் அடித்துக் கொல்லும் அதன்வீரம் கருதியே சோழர்களின் கொடியில் புலி இடம்பெற்றது போலும்''[93] இன்றும் இந்திய தேசிய விலங்கு வங்கப்புலியே ஆகும். புலியின் வீரம் கருதியே புலியைத் தேசிய விலங்காக குறிப்பிட்டுள்ளனர்.

புலிகள் கரிய கடலின் அலைபோல முழங்கி வலப்புறமாக எழுந்து பாய்ந்து கொல்லும் என்பதை,

''மாக்கடல் திரையின் முழங்கி வலன்ஏர்பு
கேட்புலி வழங்கும் சோலை'' (குறுந். 237: 5–6)

என்று குறுந்தொகையடிகள் உணர்த்தும். ''புலிகளில் வலிமை மிக்க ஆண் தன் வீரத்தின் செருக்கால் மதம் கொண்ட யானையைத் தாக்கச் சென்று தான் மாய்ந்தது.''[94] புலி தன் செருக்கால் மாய்ந்தது. ''தலைவன் வரும் வழியில் புலி ஆண் யானையினை கதறக் கதறக் கொன்றது அதைக்கண்ட பெண் யானை அஞ்சியது என்பதை நற்றியை பாடல்கள் உணர்த்துகின்றன.''[95]

''மஞ்சுதவழ் இறும்பிற் களிறுவலம் படுத்த
வெஞ்சின உழுவை பேழ்வாய் ஏற்றை
அஞ்சுதக உரறும் ஓசை கேளாத்
துஞ்சுதியோ.....'' (நற்றி. 154: 4–7)

''விடர்முகைச் செறிந்த வெஞ்சின இரும்புலி
புகர்முக வேலம் புலம்பத் தாக்கிக்

குருதி ஆடிய கொழுங்கவுள் கயவாய்

வேங்கை முதலொடு துடைக்கும்'' (நற். 158: 5–8)

என்ற பாடல்கள் புலி யானையைத் தாக்கிக் கொன்றுள்ளமையை அறிய இயலும். மேலும் புலியின் முழக்கம் கேட்டு யானைகள் கதறுவதை,

''வல்லாய்க் கவனின் கடுவெடி ஒல்லென

மறப்புலி உரற வாரணம் கதற'' (அகநா. 392: 15–16)

என்ற அடிகள் புலப்படுத்தும். புலியால் யானைக் கொல்லப்படுவதை,

''குரூஉப்புலி பொருத பலவுறு திருமணி'' (மலைபடு. 517)

என்ற மலைபடுகடாம் அடியும், கடலும் புலியின் வீரம் அதற்கு இணையான யானையினை வீழ்த்துவதாக உள்ளது.

2.19.8. கேழலின் வீர உணர்வு

மனிதர்களைப் போலவே தன் குடும்பத்தை காக்க பன்றியும் வீரத்துடன் எதிர்த்து நிற்கின்றது என்பதை,

''நான்முலைப் பிணவல் சொலியக் காணொழிந்து

அரும்புழை முடுக்கள் ஆட்குறித்து நின்ற

தறுகட் பன்றி நோக்கிக் கானவன்

குறுகினன் தொடுத்த கூர்வாய் பகழி'' (அகநா. 248: 4–7)

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன.

2.20. விலங்குகளின் தற்காப்புணர்வு

விலங்குகள் தங்களின் உயிரைக் காத்துக்கொள்ள தற்காப்பை மேற்கொள்கின்றன.

“மால் வரைச் சீறூர் மருள் பல் மாக்கள்
கோள் வல் ஏற்றை ஓசை ஓர்மார்
திருத்திக் கொண்ட அம்பினர் நோன்சிலை
எருத்தந்து இரீஇ இடந்தொறும் படர்கலின்
கீழ்ப்படு தாரம் உண்ணா மேற்சினைப்
பழம்போல் சேற்ற தீம்புழல் உணீஇய
கருங்கோட்டு இருப்பை ஊரும்” (அகநா. 171: 10–14)

என்ற பாடலடிகளில் தலைவன் பொருள் தேடச் சென்ற வழியில் புலியின் ஓசைகேட்டு மக்கள் வில்லும் அம்பும் ஏந்திச் சுற்றியதால் கரடி இருப்பை மரத்தில் ஏறி நல்ல பழத்தைப் பறித்து உண்டு தன்னைப் பாதுகாத்தது.

2.21. புலியின் தன்மானவுணர்வு

புலிகள் தான் அடிக்கும் விலங்கு வலப்பக்கம் வீழ்ந்தால் உண்ணும் வழக்கம் உள்ளது.

“கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ னுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்” (புறநா. 190: 6–9)

என்ற அடிகளில் புலியானது இடப்பக்கம் வீழ்ந்த உணவை உண்ணாமல் கிடந்து அடுத்தநாள் பெரிய யானையை வலப்பக்கம் வீழ்த்தி உண்டது என்ற செய்தி காணப்படுகின்றது. “புலியைப் பற்றிக் கூறும் போதெல்லாம் புலி தான் வேட்டையாடும் விலங்கு தனக்கு இடப்புறம் விழுந்தால் அதைத் திண்ணாமல் மேலே செல்லும் என்ற செய்தியைத் தான் முதலில் கூறுவார்கள். பண்டை

இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது இச்செய்தி எந்த அளவிற்கு உண்மை என்பது கேள்விக்குரியது எனினும் இச்செய்தி பல பாடல்களில் இடம்பெற்றுள்ளது''[96] என்கிறார் டாக்டர் இரா. வசந்தகுமார்.

2.22. விலங்குகளின் போர் உணர்வு

விலங்குகளில் பெரும்பாலானவை மூர்க்கக் குணம் கொண்டவையாக இருக்கின்றன. அவைகளுக்கு இடையில் உணவுக்காக, தங்களின் இருப்பிடத்திற்காக, தலைமைக்காக என பல தேவைகளுக்காக சண்டைகள் ஏற்படுகின்றன. மக்களிடம் நெருங்கிப் பழகும் விலங்குகளைப் பழக்கப்படுத்திப் போர்தொழிலுக்காகப் பயன்படுத்துகின்றனர். விலங்குகள் தங்களுக்காகவும் மக்களுக்காகவும் போர் செய்கின்றன.

2.22.1. ஆக்களுக்கு இடையேயான போர் உணர்வு

ஆநிரைகள் மக்களிடம் ஒன்றி வாழக்கூடிய விலங்குகள். எனினும் காட்டில் தனித்து வாழவே விரும்பும் தன்மை கொண்டது. அவ்வாறு காட்டில் வாழும் மாடுகளில் ஆண் மாடுகள் பெண் மாடுகளை அடையவும் தன்னைக் காத்துக் கொள்ளவும் போராட வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

''மன்கொள வரிந்த வைந்நுதி மருப்பின்
அன்ன னல்லே நிரண்டுடன் மடுத்து
வென்றதன் பச்சை சீவாது போர்த்த
தீண்பிணி முரச மிடைப்புலத் திரங்க'' (புறநா. 288: 1–4)

என்ற அடிகளில் காளைகளைப் பழக்கப்படுத்தும் போதே அவைகள் கொம்புகளை மண்ணில் குத்தித்தூக்கும். எனவே போரிடும் சூழல் ஏற்படும்

போது காளைகள் அவற்றின் உணர்வை வெளிப்படுத்தும் விதமாக தனது கூர்மையான கொம்புகளை மண்ணில் குத்திப் போரைத் தொடங்கும். அவ்வாறான இரண்டுகாளைகளைப் போரிட வைத்து அவற்றில் வெற்றி கொண்ட காளையின் தோலைக் கொண்டு போர் முரசு செய்துள்ளனர். இதன்வழிப் பழங்காலத்தில் காளைகளுக்கான போர் நடைபெற்றதை அறிய இயலும்.

2.22.2. புலிகளின் போர் உணர்வு

புலிகள் தனக்கான வாழ்விட எல்லையைப் பாதுகாக்கவும் உணவை வேட்டையாடவும் சண்டையிடுகின்றன. அவ்வாறு சண்டையிடும் சூழல் புலிகளுக்கும் யானைக்கும் இடையே மிகுதியாக அமைகின்றன.

2.22.2.1. புலிகளுக்கும் யானைகளுக்குமான போர் உணர்வு

புலிகளின் உணவுத் தேவைக்காக யானைகளைக் கொல்ல முயற்சிக்கும். பலம் கொண்டவையான யானைகளும் அவற்றை எதிர்த்துப் போரிட்டு தன் உயிரைக் காத்துக்கொள்ள முயற்சி செய்யும் என்பதால் அவற்றிற்கு இடையே போர் நடைபெறுகின்றது. தலைவன் வரும் வழியில் இடையூராக பெரிய யானை வலிமையுடைய புலியால் தாக்கப்பட்டு வலிமை இல்லாமல் காணப்படும். புலிக்கும் யானைக்கும் போர் நடைபெறுவதை,

> ‘‘சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
> தொல்முரண் சோருந் துன்னருஞ் சாரல்’’ (குறுந். 88: 2–3)

என்ற பாடலடிகளில் காண இயலும். ‘‘வலிமையுடைய புலியின் அனேறு மதம் கொண்ட யானையின் மேல் பாய்ந்தது. யானைக்கும் புலிக்குமான போரில்

யானையே வெற்றி பெற்றுள்ளது. மதம் கொண்ட யானையின் வலிமை புலியின் உயிரை எடுத்தது.''[97] ''கண்களுக்கு உவமை கூறும்போது புலியைக் குத்திய யானையின் தந்தத்தைக் கூறியுள்ளார் புலவர்''[98]

''பூம்பொறி உழுவைப் போழ்வாய் ஏற்றை
தேங்கமழ் சிலம்பிற் களிற்றொடு பொரீனே'' (நற். 104:1–2)

என்ற அடிகளில் ஆண்புலி களிற்றுடன் போர் செய்யும் என்ற செய்தி உள்ளது. புலிக்கும் யானைக்குமான போரில் யானை புலிக்கு உணவாகியுள்ளது.

''அறியாய் வாழிதோழி பொறவரிப்
பூநூதல் யானையோடு புலிபொரக் குழைந்த
குருதிச் செங்களம் புலபொரக் குழைந்த'' (அகநா. 268: 1–3)

என்பதில் யானையும் புலியும் போரிட்டு அப்பகுதி குருதி கலந்த சகதியாகக் காணப்படுகின்றது. தலைவனின் நாட்டில் இவ்வாறான செயல்கள் நடைபெறுவது வழக்கம். ''பொருள்வயிற் பிரிந்து செல்லும் வழியில் புலிக்கும் யானைக்கும் போர் நடைபெற்ற அடையாளச் சுவடுகள் காணப்பட்டதை தலைவன் கூறுகின்றான்.''[99] தலைவன் இரவுக்குறி வரும் வழியில் புலியுடன் யானை போர் செய்ததால் யானையின் மத்தகத்தில் புண் ஏற்பட்டது.''[100] தலைவன் வரும் வழியின் இன்னல்களாகவே புலிக்கும் யானைக்குமான போர்கள் கூறப்பட்டுள்ளது. இரண்டு வலிமை வாய்ந்த விலங்குகள் போரிடும் பொழுது இடையில் மக்கள் தென்பட்டால் உயிர் பிழைப்பது அரிது. எனவே இது அச்சத்தை ஏற்படுத்தப் பாடப்பட்டுள்ளவை புலனாகும்.

“கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கின் நிறம்பார்த் தொடுங்கிய
பொருமுரண் உழுவை தொலைச்சிக் கூர்நுனைத்
குருதிச் செங்கோட் டழிதுளி கழாஅக்
கண்முகை அடுக்கத்து மென்மெல இயலிச்
செறுபகை வாட்டிய செம்மலொ டறுகால்” (அகநா. 332: 2–7)

தலைவி தோழியிடம் தலைவனின் நாட்டு வளத்தை கூறும் பொழுது நீர் வேட்கையால் செல்லும் யானையை நீர்த்துறை அருகில் தாக்குவதற்காகப் புலி போர்க்குணம் கொண்டு பதுங்கி போர் செய்கின்றது. அப்போரில் புலி யானையால் கொல்லப்படுகின்றது. “புலித் தாக்கியதால் ஆண்யானை தாங்க முடியாமல் பிளிறியது.”[101]

“ஆங்கு இரும்புலித் தொகுதியும் பெருங்களிற் றனமும்
மாறுமா றுழக்கியாங் குழக்கிப் பொதுவரும்” (கலி. 103: 56–57)

என்னும் அடிகளில் புலிக்கூட்டமும் யானைத்தொகுதியும் ஒன்றொடொன்று எதிர்த்துப் போரிட்டது போல் என்ற உவமை கூறப்பட்டுள்ளது.

காடுகளில் காணப்படும் விலங்குகளில் உருவத்தல் பெரியதும் வலிமை வாய்ந்ததும் யானை, அவ்யானைகளில் பழக்கப்படுத்திய யானைகளைக் குழந்தைகள் கூட வழிநடத்தி செல்ல முடிகின்றது. அதே யானைக்கு மதம்பிடித்தால் யாராலும் கட்டுப்படுத்த இயலாது. சில வேளைகளில் பாகனையே கொன்றுவிடுகின்றது. மதம் பிடித்தால் யானைக்கு சினம் மிகுதியாகின்றது. யானைகள் தங்களின் எதிரி விலங்குகளிடம் போரிட வேண்டியுள்ளது. மேலும் அரசர்கள் தங்களின் கோட்டைக்களைக் காக்கவும்

போர்மூழும் போதும் போர்ப்படைக்காகவும் யானைகளைத் தந்திரமாக பிடித்து பழக்கப்படுத்திப் பயன்படுத்துகின்றனர்.

"சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொல்முரண் சோருந் துன்னருஞ் சாரல்" (குறுந். 88: 2–3)

என்ற அடிகளில் யானை புலியினால் தாக்கப்பட்டுத் தனது வலிமை குறைந்து காணப்படுகின்றது. செங்காந்தள் மலர்போல போரிட்ட யானையில் முகம் இருந்தமையை,

"பொருத யானைப் புகர்முகம் கடுப்ப" (குறுந். 284:1)

என்ற குறுந்தொகையடி கூறும். மேலும்,

"குறுக்கை யிரும்புலி கோள்வல் ஏற்றை
பூநுதல் இரும்பிடி புலம்பத் தாக்கித்
தாழ்நீர் நனந்தலைப் பெருங்களி றரூஉம்" (நற். 36: 1–3)

என்ற அடிகளில் ஆண்புலியின் முன்னங்கால் சிறியது என்றாலும் வலிமையுடையது அது யானையைத் தாக்கியதால் துன்பம் தாங்க முடியாமல் பிளிறியது. "புலியுடன் போரிட்டதால் யானையின் உடம்பில் புண் ஏற்பட்டதுண்டு."[101] உடலில் ஏற்பட்ட புண் யானைகளுக்கு துன்பத்தை கொடுக்கின்றது.

"கொன்முரண் இரும்புலி அருமுழைத் தாக்கிச்
செம்மறுக் கொண்ட வென்னோட் டியானை" (நற். 151: 2–3)

இவ்வடிகளில் ஆண்யானை புலியைத் தாக்கியதால் தனது வெண்மையான தந்தங்களில் கறைபடிந்தது. அதனால் தந்தங்களை அருவியில் கழுவியது.

"முருகுறழ் முன்பொடு கடுஞ்சினம் செருக்கிப்
பொருத யானை வெண்கோடு கடுப்ப" (நற். 225:1–2)

என்பதும் யானையின் போர் உணர்வை விளக்கும்.

"பூநுதல் யானையொடு புலிபொடு துன்னும்" (நற்.)

என்பதிலும் பருக நீர் இன்மையினால் சிறிய பருகைக் கற்கள் மிகுந்து காணப்படும் பள்ளத்தில் ஊறும் நீருக்காகப் புலி யானையோடு போரிடுகின்றது. இதே போல "உணவுக்காக போர்செய்து புலியால் யானை கொல்லப்பட்டதும் உண்டு"[103] மேலும் "மலையில் கூட்டமாக இயங்கும் யானைகளில் ஓர் ஆண் யானை நெடுநாட்களாகத் தங்களை மோப்பம் பிடித்து வந்த புலியை தாக்கி வெற்றிபெற்றது. அதனால் பெண்யானையும், யானைக்கூட்டமும் மகிழ்ந்தன."[104] மேலும் யானையின் போர் குணத்தை நற். 202: 1–6 , 247:1, 255: 4, 294:3–5, 353: 9, 104: 1–2, 144: 7–9, 148: 7–9, 158: 5 ஆகிய பாடலடிகளும் அகநா. 88: 9, 94:4, 119: 16–19 ஆகிய அடிகளிலும் கலி. 45: 12, 46: 4–9, 48: 7 மற்றும் புறநா. 100: 6–7 ஆகிய அடிகளிலும் புலவர்கள் பலவாறு பாடியுள்ளனர். இவற்றின் மூலமாக புலிக்கும் யானைக்குமான போர் உணர்வை அறியமுடிகின்றது.

2.22.3. யானைக்கும் யானைக்குமான போர் உணர்வு

யானைகள் சேர்க்கை இன்பத்தைத் துய்க்கத் தங்களுக்குள் போரிடுகின்றன. "யானை தன்னை விரும்பக்கூடிய பெண்யானை அருகில் இருக்க மற்றொரு யானைமீது பகை கொண்டு அதன் நெற்றியில் புண்

உண்டாகும்படிக் குத்தியது. இங்கு பெண்யானைக்காக ஆண் யானைகள் போரிடுகின்றன.''[105]

2.22.4. போர்க்களங்களில் யானைகளின் உணர்வுகள்

சங்ககால மன்னர்கள் யானைகள் காட்டுவிலங்காக இருந்தாலும் அவற்றையும் பிடித்துப் பழக்கிப் போர் பயிற்சிக் கொடுத்துப் படை அமைத்துப் போர்செய்துள்ளனர்.

''மலையன் மாவூர்ந்து போகிப் புலையன்
பெருந்துடி கறங்கப் பிறபுலம் புக்கவர்
அருங்குறும் பெருக்கி அயாவொழித் தாஅங்கு'' (நற். 77: 1–3)

எனும் அடிகளில் வீரர்கள் யானைமீது ஏறிப் போரிட்டனர். யானைகளைப் போர் செய்ய பயிற்சி கொடுத்து அதன் மீதேறி போர் செய்து கோட்டையை அழித்துள்ளமை புலனாகும்.

''ஏத்துகோட் டியானை இசைவெங் கிள்ளி'' (நற். 141:9)

என்ற அடியில் போர் யானைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. என்பது புலனாகின்றது. ''மன்னர்கள் யானைப்படை வைத்திருந்தனர்.''[106] யானையை வீரன் கொன்ற செய்தி உள்ளது.''[107] மன்னன் யானை மேல் வேலெறிந்து கொன்று வெற்றிவாகைச் சூடியுள்ளான்''[108] என்ற செய்தியும் காணப்படுகின்றது.

''யானைக்குப் போர்ப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது''[109] என்ற செய்தி அகநானூற்றில் காணப்படுகின்றது.

“காய்சின யானை கங்குல் சூழ

அஞ்சுவர இறுத்த தானை

வெஞ்சின வேந்தன் பாசறை யோரே” (அகநா. 264: 13–15)

வீரர்கள் வேந்தனின் கட்டளைக்காகச் சேனைகளோடு போர்க்களம் சென்று அங்கு பாசறைக்குச் காவலாக யானைகளை நிறுத்தித் தங்கியுள்ளனர். யானைகளுக்குக் காவல் காக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அப்பயிற்சியை பெற்ற யானைகள் அவற்றை நினைவில் வைத்துக் கொண்டே செயல்படுகின்றன. “வலிமையுடைய யானை போரை விரும்பும், பாசறையில் இடிபோல் வெற்றி முரசம் ஒலிக்கும்.”[110] “கிள்ளியின் யானை அரனை அழித்து இடையில் உள்ள பொருட்களை வாரிக்கொண்டு கோட்டைக்குள் நுழைந்தது”[111] “தலைவனுக்குப் போர் யானையை உவமை கூறுவர்.”[112] மேலும் கலித்தொகை,

“நிரைகளி றிடைபட நெறியாத்த இருக்கைபோல்” (கலித். 132:5)

என்ற அடியில் யானைப்படைகள் வரிசையாகக் கட்டிவைக்கப்பட்டுள்ளமை புலனாகும். “யானைகள் கோட்டைக் கதவை மோதுகின்றது.”[113] மேலும் “புலியோடு போரிட்ட யானைபோல நீங்காத சினம் காணப்படுகிறான் அதியமான்.”[114] “யானைகளைத் தொழுவில் காவலுக்காகப் பயன்படுத்தினர். பாகர்கள் வாய்மொழிச் சொற்களைக் கூறி யானைகளைப் பழக்கினார்கள்.”[115] “போர்த் தொழிலுக்கு பயன்படுத்தும் யானையை அதற்கான இலக்கணங்கள் பார்த்து பழக்கிப் பயன்படுத்தியுள்ளனர்.”[116] இன்றும் யானைகளைப் பயன்படுத்திப் பணிகளைச் செய்வதும் தெருவில் காட்சிப்பொருளாகவும், மிருகக் காட்சிசாலைகளிலும் யானைகள் பயன்படுத்தப்படுகின்றது. கோயில்களிலும் யானைகளைப் பயன்படுத்துகின்றனர். அங்கு யானை கடவுளின் அடையாளமாக உயர்வாக நடத்தப்படுகின்றது.

தொகுப்புரை

பசு தன் இணையைப் பிரிந்து கதறியதும் ஆண்குரங்கு பெண் குரங்கை காணாமல் தேடியதும் ஆண் பன்றியும் பெண்பன்றியும் இணையாகத் திரிவதும் ஆண்நாய் பெண்நாயின் பசியை நீக்குவதும் பெண்புலிக்கு ஆண்புலி உணவுத்தேடி வேட்டையாகக் கொடுப்பதும் அடிப்பட்ட ஆண்புலியை பெண்புலி பாதுகாப்பதும் ஆண்பூனை பெண் பூனையின் பசியைப் போக்குவதும் உணவைக் கண்டவுடன் ஆண்மான் பெண்மானை அழைப்பதும் விலங்குகளின் காதல் வெளிப்பாடாக உள்ளது.

யானைகளின் காதலில் தான் உணவு இல்லாமல் இருந்தாலும் தன் காதலியான பெண்யானையின் பசியையே முதன்மையாகக் கருதி கிடைத்த உணவை பெண் யானையை உண்ணச் செய்கிறது. அதேபோல் பெண்யானையும், ஆண் யானைக்கு இடர் ஏற்படும் பொழுது அதனை மீட்க உதவுகின்றது. இச்செயல்கள் யானைகளின் காதல் உணர்வை எடுத்துக்காட்டுகின்றன.

ஆக்கள் பருவகாலத்தில் எதிர்பாலினத்தை விரும்பி இன்பம் துய்க்கின்றது. குரங்குகள் தன் இனத்திற்குத் தெரியாமல் இன்பம் துய்க்க விரும்புகின்றன. இன்ப உணர்வால் கிடைத்த உணவைக் கூட உண்ணாமல் இருக்கின்றது நாய். மான்களின் புணர்வு மறைவான இடங்களில் தான் காணப்படும் என்பதை அன்றே சங்கப்புலவர்கள் அறிந்து கூறியுள்ளனர். கார்காலத்தில் மான்கள் இனச்சேர்க்கை நடைபெறும் என்பதை அறிந்துள்ளனர். அதனால் தலைவன் தேரின் ஒலி அவற்றிற்கு இடையூறு தரும் என்பதையும் அவ்விடையூறு ஏற்படக்கூடாது என்பதிலும் அவர்களின் கவனம் இருந்துள்ளது.

இது அவர்கள் விலங்குகளின் மேல் கொண்ட அன்பும் அவற்றின் வாழ்வியலை அறிந்துள்ள அறிவியல் நுட்பமும் தெளிவாகக் காணப்படுகின்றது.

யானைகள் இணைவிழைச்சு ஏற்படும் காலத்தில் மதநீர் சுரக்கும் என்பது ஆய்வாளர்களால் முடிபாகக் கூறப்படவில்லை. தழைஉணவை உண்டதால் மதம் ஏற்பட்டுள்ளது. மதம் பிடித்த யானையை மற்ற யானைகளால் தனிமைப்படுத்துகின்றது. தனிமையில் கோபமும், வலிமையும் அதிகமாகின்றது.

காட்டு விலங்குகளிடமே குடும்ப அமைப்பைக் காணமுடிகின்றது. பழங்காலத்தில் பசுக்களை ஆண், பெண், கன்று என்று குடும்பமாகப் பரிசளித்துள்ளனர். குரங்குகளின் குடும்ப அமைப்பில் ஆண் குரங்கு தலைமையேற்று நடத்துகின்றது. அவை பொறுப்புடன் குடும்பத்தை நடத்தியுள்ளன. புலிகள் தங்களின் குடும்பத்திற்காக ஆண்புலி இரைதேடி வேட்டையாடிக் கொடுக்கின்றது. மான்களின் குடும்பம் மானிடர்களின் குடும்ப அமைப்பை வலுப்படுத்துகிறது. யானைக் குடும்பத்தில் ஆண் யானையே தலைமையேற்கின்றது. அதனால் உணவு நீர் போன்ற அனைத்திலும் குட்டிகளுக்கும் பெண்யானைகளுக்கும் கொடுத்தபின் மீதியைத் தான் எடுத்துக்கொள்கிறது. இதில் யானைகளின் பொறுப்பு வெளிப்படுகிறது. காட்டுப்பசுக்கள் கன்றுகளைத் தன்னுடன் வைத்துக்கொள்கின்றன. வீட்டுப்பசுக்களின் கன்றுகள் பசுக்கள் மேய்ச்சலுக்கு ஓட்டும்பொழுது பிரிக்கப்படுகின்றது. பிரிவில் பாசவுணர்வு அதிகமாகின்றது. குரங்குகள் தம் குட்டிகளை அணைத்தவாறு இருக்கின்றது. விலங்குகளின் உணர்வில் காலம் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

புலியின் தாய்மையுணர்வு அரசனின் ஆட்சிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. யானைக்குடும்பத்தில் குழந்தைகளை வளர்ப்பது உறவுகளுடன் இணைந்தே நடைபெறுகின்றது. இருந்தாலும் தாயே அதிக அக்கரையுடன் செயல்படுகின்றது. ஆண்யானையும் தம் கன்றைப் பாதுகாப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

மனித இனம் சமூகமாக வாழ்வதுபோல் விலங்குகளுக்கும் சமூக அமைப்புக் காணப்படுகின்றது. அவைகள் தங்களின் சமூகத்துடன் இனக்கமாக வாழ்கின்றன. பசுக்களில் சமூகத்தில் ஆணினம் தலைமையேற்று அக்கூட்டத்தை வழிநடத்துகின்றது. குரங்குகள் தனித்தனிக் கூட்டமாகவே வாழ்கின்றன. பன்றி, பூனை, மான், யானை போன்றவை கூட்டமாகச் சமுதாய அமைப்புடனேயே வாழ்கின்றன.

நாய்களுக்கு இயற்கையாகவே வேட்டையாடும் உணர்வு காணப்படுகிறது. அத்துடன் நன்றியுணர்வும் இயற்கையாக உள்ளது. எனவே அதனைப் பழக்கப்படுத்தி வேட்டையாடப் பயன்படுத்துகின்றனர். இன்றும் நாய்களை வேட்டைக்குப் பழக்கப்படுத்தி பயன்படுத்துகின்றனர். செந்நாய் உணவுக்காக வேட்டையாடுகிறது.

எலிகளிடம் சேமிக்க வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு காணப்படுகின்றது. விலங்குகளுக்குப் பழக்கத்தின் அடிப்படையில் மனிதர் கொடுக்கும் சைகை மற்றும் ஒலியை அறிந்து அதற்கான வினையைக் கொடுக்கின்றன. யானைகள் நீர்நிலையில் அதன் ஆழத்தை அறிந்தே இறங்குகின்றது. தனக்கு ஏற்பட்ட இன்னல்களைச் சமாளிக்கும் திறன் யானைகளுக்கு உள்ளது.

விலங்குகளுக்கு நல்ல உணவுக்கிடைத்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றன. யானைகள் தனது எதிரிவிலங்கான புலியைக் கொன்றதால் வெற்றிக் களிப்பில் இருக்கின்றது.

விலங்குகள் தனக்கு இடையூறு ஏற்படுத்தும் விலங்கிடம் பகைகொள்ளும். மனிதர்களால் பழக்கப்படுத்தி பயன்படுத்தப்படும் விலங்குகளுக்கு துன்பம் அதிகமாக இருக்கின்றது. அவை கட்டுப்பாட்டில் செயல்பட வேண்டியுள்ளது. காட்டு விலங்குகளுக்கு இயற்கை நிகழ்வுகள் துன்பத்தை ஏற்படுத்துகின்றன.

வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள் வளர்ப்பாளர்களுக்கு இன்னல் ஏற்படும் பொழுது வருத்தப்படுகின்றன. காட்டுவிலங்குகள் காலநிலை மாற்றத்தால் வருத்தமுறுகின்றன.

காட்டு விலங்குகள் மிகையான ஒலி, தீ, வேடையாளர்கள், மானிடர்கள், போன்றவற்றிற்கு அச்சமடைகின்றன.

காட்டில் வாழும் விலங்குகள் வளர்ப்பு விலங்குகளை விட வீரம் உடையனவாக உள்ளது. விலங்குகள் தேவை ஏற்படும் இடத்தில்தான் வீரத்தை காட்டுகின்றன. தன்னைவிட பலமான விலங்கிடம் கரடிகள் மறைந்து தற்காப்பு உணர்வுடன் செயல்படுகின்றது.

விலங்குகள் தங்களின் இனத்திற்குள்ளும் போரிட்டுக் கொள்கின்றன. எதிரி இனத்துடனும் போரிட்டுக் கொள்கின்றன. பாதுகாப்பிற்காகவும் போர்கள் நிகழ்கின்றன. பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் மனிதர்களுக்காகவும் போர் செய்கின்றன.

சான்றெண்விளக்கம்

1. தமிழண்ணல் (உ.ஆ.), தொல்காப்பியம், ப.528
2. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், பக்.8–9
3. அகநா. 378:20–23
4. ஐங். 262:1–2
5. மேலது, 264:1–2
6. அகநா. 285:1–3
7. ஐங். 323:1–4
8. அகநா. 283:1–9
9. மேலது, 357:3–7
10. மேலது, 184:11–14
11. மேலது, 321:4–5
12. குறுந். 37
13. நற். 137:6–9
14. மேலது, 186:1–4
15. அகநா. 8:9–12
16. தமிழண்ணல் (உரை.ஆ.), தொல்காப்பியம், 6, ப.398.
17. கலித். 113:25–29
18. நற். 334:1–5
19. தமிழண்ணல், சங்கமரபு, ப.12
20. அகநா. 134:10–15, 139:10–13
21. மேலது, 234:9–11
22. குன்றில் குமார், யானை – வாரணம் பற்றிய பூரணத்தகவல்கள், ப .117

23. மேலது, ப.62

24. முகமது அலி, ச. யோகானந்த், அறியும் பேருயிர், யானைகள், ப.36

25. அகநா. 298:4–9

26. குன்றில்குமார் , யானை, வாரணம் பற்றிய பூரணத் தத்துவங்கள், பக்.67–68

27. நற். 232:1

28. ரமேஷ்பேடி, (தமிழாக்கம், ஹென்றி பிரான்சிஸ். ஓ. யானை காடுகளின் அரசன், ப.22

29. பரி. 10:41–55

30. எங்கெல்ஸ். ப, குடும்பம், தனிசொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.42

31. பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், ப.42

32. ஐங்.247

33. நற். 383: 1–6, 29: 2–6, அகநா. 258:1–9

34. ta.m. wikipedia.org (வ்மில்ஸ் ஸ்டீபன், 2004, டைகர், பக்.89 BBC புக்ஸ், லண்டன்.

35. அகநா. 314:5–6

36. நற். 202:1–6, அகநா. 218:1–2

37. நற். 398: அகநா. 85:6–8

38. அகநா. 121:3–8

39. குன்றில் குமார், யானை வாரணம் பற்றிய பூரணத் தகவல்கள், ப.15

40. கலித். 9–10, குறிஞ்சி.217.218

41. கலித். 109:4

42. ச.முகமது அலி, க. யோகானந்தன், அழியும் பேரூயிர் யானைகள், ப.76

43. மேலது, பக்.76–77

44. ஆசிரியர் குழு, Tamil lexicon, Vol.11, ப.1302

45. முனைவர் ஆல்ஃபிரட் மோகன்தாஸ், விலங்குகளின் சமுதாய வாழ்க்கை, ப.3

46. அகநா. 275:12

47. அகநா. 331:2–3

48. அகநா. 205:21–24

49. புறநா. 378:18–25

50. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், ப.158

51. ச. முகமது அலி, மற்றும் க. யோகானந்த், அழியும் பேரூயிர், யானைகள், ப.75

52. அகநா.334:4–6, 357:8–10

53. அகநா.188:5

54. மேலது, 118:5

55. குன்றில் குமார், யானை வாரணம் பற்றிய பூரணத் தகவல்கள், ப.108

56. மேலது, ப.144

57. அகநா. 56:3–5

58. மேலது, 300:20–22

59. ஹென்றி ஓ, புலிகளுக்கும் கொம்பன் யானைகளுக்கும் நடுவில், ப.39

60. அகநா. 178:1–13

61. அகநா. 202:1–4

62. பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், ப.149

63. அகநா.388:14

64. அகநா.325:19

65. அகநா.164:11–14

66. ஐங்.314:3, 352:3–5

67. புறநா.4:9–12

68. சீவக.750

69. குறுந்.136:3–6

70. ஐங்.493:1

71. அகநா.259:9–12

72. அகநா.329:5–7

73. புறநா.224:13–17

74. நற்.37:2

75. கலித்.13:1–3

76. பதிற்.77:8–12

77. நற்.105:4–5

78. அகநா.91:5–7

79. அகநா.155:9–10

80. அகநா.187:18–25

81. அகநா.233:4–5, 335:4–9, ஐங். 304:1–3, 305:1–3

82. ஐங்.337:1–4

83. கலித்.7:1, 8:1–4

84. கலித்.13:6–9,24:10

85. மு. வரதராசனார், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.33

86. திருமுருகு, 313

87. பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், பக்.13–14

88. அகநா.182:7–12

89. அகநா.199:6–12

90. புறநா.23:19–22

91. அகநா.232:2–4

92. பெரும்பாண்.257–259

93. டாக்டர் இராவசந்தகுமார், சங்க இலக்கியத்தில் விலங்குகள், பாகம்.2, ப.97

94. குறுந்.343:2–3

95. நற்.144:1–5, 148:10

96. டாக்டர் இரா. வசந்தகுமார், சங்க இலக்கியத்தில் விலங்குகள், பாகம், 2, ப.95

97. குறுந்.343:3–4

98. நற்.39:4–6

99. அகநா.291:5–7

100. அகநா.308:1

101. அகநா.347:11–14

102. நற்.65:5–8

103. அகநா.112:5–6

104. அகநா.202:1–5

105. கலித்.53:1–7

106. நற்.150:2

107. நற்.349:7

108. அகநா.177:15–17

109. அகநா.201:3, 213:1

110. அகநா.354:1

111. ஐங். 75:2

112. கலித். 61:18, 66:3

113. கலித். 135:5

114. புறநா. 100:7–8

115. முல்லை. 30–36

116. மதுரைக். 43–48

இயல் – 3

பறவைகளின் உணர்வுகள்

பொருளடக்கம்

3.0. முன்னுரை

3.1. தொல்காப்பியத்தில் பறவைகள்

3.2. பறவைகளின் காதல் உணர்வு

3.2.1. அன்றில் பறவையின் காதல் உணர்வு

3.2.2. அன்னப்பறவையின் காதல் உணர்வு

3.2.3. காக்கையின் காதல் உணர்வு

3.2.4. கூகையின் காதல் உணர்வு

3.2.5. நாரையின் காதல் உணர்வு

3.2.6. பருந்தின் காதல் உணர்வு

3.2.7. புறாவின் காதல் உணர்வு

3.2.8. மயில்களின் காதல் உணர்வு

3.3. பறவைகளின் இன்பவுணர்வு

3.3.1. அன்றில் பறவையின் இன்பவுணர்வு

3.3.2. அன்னப்பறவையின் இன்பவுணர்வு

3.3.3. குயிலின் இன்பவுணர்வு

3.3.4. குருவியின் இன்பவுணர்வு

3.3.5. கூகையின் இன்பவுணர்வு

3.3.6. பருந்தின் இன்பவுணர்வு

3.3.7. புறாக்களின் இன்பவுணர்வு

3.3.8. மயில்களின் இன்பவுணர்வு

3.4. பறவைகளின் குடும்ப உணர்வு

3.4.1. காக்கையின் குடும்ப உணர்வு

3.4.2. குருகின் குடும்ப உணர்வு

3.4.3. குருவியின் குடும்ப உணர்வு

3.4.4. பருந்தின் குடும்ப உணர்வு

3.4.5. புறாவின் குடும்ப உணர்வு

3.5. பறவைகளின் தாய்மை உணர்வு

3.5.1. அன்னப்பறவையின் தாய்மை உணர்வு

3.5.2. கொக்கின் தாய்மை உணர்வு

3.5.3. நாரையின் தாய்மை உணர்வு

3.5.4. பருந்தின் தாய்மை உணர்வு

3.6. பாற்பின் பாசவுணர்வு

3.7. பறவைகளின் மகிழ்வுணர்வு

3.7.1. காக்கையின் மகிழ்வுணர்வு

3.7.2. கிளிகளின் மகிழ்வுணர்வு

3.7.3. குயிலின் மகிழ்வுணர்வு

3.7.4. குருகின் மகிழ்வுணர்வு

3.7.5. மயில்களின் மகிழ்வுணர்வு

3.8. பறவைகளின் சமூகஉணர்வு

3.8.1. அன்னத்தின் சமூகஉணர்வு

3.8.2. காக்கையின் சமூகஉணர்வு

3.8.3. கிளிகளின் சமூகஉணர்வு

3.8.4. குருகின் சமூகஉணர்வு

3.8.5. குருவியின் சமூகஉணர்வு

3.8.6. கூகையின் சமூகஉணர்வு

3.8.7. நாரையின் சமூகஉணர்வு

3.8.8. பருந்தின் சமூகஉணர்வு

3.8.9. மயில்களின் சமூகஉணர்வு

3.9. பறவைகளின் பாதுகாப்பு உணர்வு

3.9.1. காக்கையின் பாதுகாப்பு உணர்வு

3.9.2. கோழியின் பாதுகாப்பு உணர்வு

3.10. பறவைகளின் வீர உணர்வு

3.11. பறவைகளின் அறிதல் உணர்வு

3.11.1. கிளியின் அறிதல் உணர்வு

3.11.2. கோழியின் அறிதல் உணர்வு

3.11.3. பருந்தின் அறிதல் உணர்வு

3.11.4. முதுசிரலின் அறிதல் உணர்வு

3.11.5. மயில்களின் அறிதல் உணர்வு

3.12. பறவைகளின் அச்சவுணர்வு

3.12.1. கிளிகளின் அச்சவுணர்வு

3.12.2. கோழியின் அச்சவுணர்வு

3.12.3. பருந்துகளின் அச்சவுணர்வு

3.12.4. புறாவின் அச்சவுணர்வு

3.12.5. மயில்களின் அச்சவுணர்வு

3.12.6. நாரைகளின் அச்சவுணர்வு

3.13. பறவைகளின் துன்பவுணர்வு

3.13.1. அன்றில் பறவையின் துன்பம்

3.13.2. குருகின் துன்பவுணர்வு

3.13.3. கொக்கின் துன்பவுணர்வு

3.13.4. கூகையின் துன்பவுணர்வு

3.13.5. நாரையின் துன்பவுணர்வு

3.13.6. பருந்தின் துன்பவுணர்வு

3.13.7. புறாவின் துன்பவுணர்வு

3.13.8. மயில்களின் துன்பவுணர்வு

3.14 தொகுப்புரை

இயல் – 3

பறவைகளின் உணர்வுகள்

சங்கம் வைத்து தமிழ்வளர்த்தப் பழங்கால மக்கள் தங்களின் வாழ்வில் இயற்கையை ஓர் அங்கமாகவே கொண்டு வாழ்ந்துள்ளனர். மக்கள் இயற்கையிடம் பல்வேறு பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளனர். பறவை, விலங்குகளிடம் இருந்துதான் மொழியே தோன்றியது. அவற்றின் ஒலியைக் கேட்டுத்தான் மக்கள் பேசக்கற்றுக் கொண்டனர். விசத் தன்மையுள்ள காய்கனிகளைப் பறவை விலங்கு கொண்டே அறிந்து கொண்டனர். பறவைகள் விலங்குகளை உற்றுநோக்கி அவற்றின் செயல்பாடுகளைக் கொண்டே தன் வாழ்வியலை உயர்த்திக் கொண்டனர். பறவைகள் ஐந்தறிவு கொண்டவை. ஐம்புல உணர்வுகளைக் கொண்டே அவற்றின் வாழ்வியலை அமைத்துக் கொள்கின்றன. பறவைகளின் உணர்வுகள் பெரிதும் வியப்பளிக்கின்றன. மனிதர்களைப் போலவே காதல், குடும்பம், தாய்மை போன்ற பல உணர்வுகளைக் கொண்டுள்ளது. பறவைகளைக் கொண்டு சகுனம் பார்க்கவும் செய்கின்றனர். அவ்வாறு பறவைகளின் செயல்பாடுகளை உற்றுநோக்கும் பொழுது அவற்றின் உணர்வுகளையும் அவர்களால் அறியமுடியும். அவ்வாறு அறிந்த மக்களில் கல்வியில் சிறந்து கவிபாடும் ஆற்றல் கொண்ட புலவர்கள் பறவைகளின் உணர்வுகளை மானிட உணர்வுகளை வெளிக்காட்டவும் மானிடர்களின் உணர்வுகளை பறவைகளின் உணர்வுகளோடு இணைத்தும் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர் அவ்வகையில் பறவைகளின் உணர்வுகளை விளக்குவது இவ்வியலின் நோக்கமாகும்.

3.1. தொல்காப்பியத்தில் பறவைகள்

தொல்காப்பியர் பறவைகளின் இளமைப்பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்களைப் பகுத்துக்கூறியுள்ளார்.

''பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை'' (சொல். 1503)

சேவல் பெயர்க் கொடை சிறகொடு சிவனும்
மாயிரும் தூவி மயில் அலங் கடையே'' (தொல். 1548)

''ஒட்டகம் குதிரை கழுதை மரை இவை
பெட்டை என்னும் பெயர்க்கொடைக்கு உரிய
புள்ளும் உரிய அப்பெயர்க்கு என்ப
பேடையும் பெடையும் நாடின் ஒன்றுமே'' (தொல். 1552– 1554)

''கோழி கூகை ஆயிரண்டு அல்லவை
சூழும் காலை அளகு எனல் அமையா'' (தொல். 1555)

போன்ற நூற்பாக்களில் பறவைகளின் இளமைப்பெயராகப் பார்ப்பு, பிள்ளை, என்றும் மயிலைத் தவிர மற்ற ஆண்பறவைகளுக்கு சேவல் என்றும், பெண்பாற் பெயராகப் பெடை, பேடை என்றும் கூகைக் கோழியைத் தவிர மற்றவற்றிற்கு அளகு என்றும் கூறியுள்ளார். உயிரினங்களில் அறிவைப் பற்றி கூறும் பொழுது விலங்குகளும் பறவைகளும் ஐந்தறிவு கொண்டவை என்பதை,

''மாவும் புள்ளும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' (தொல். 1531)

என்ற நூற்பாவில் விளக்குவர்.

3.2. பறவைகளின் காதல் உணர்வு

பல வகைப் பறவைகள் இணையாக வாழ்பவை அவைகளின் காதல் வாழ்க்கை மிகவும் சிறப்பு வாய்ந்தது. பெண்பறவையின் உணர்வை அதன் எதிர்ப்பாலினம் உணர்ந்து கொள்கிறது. அவற்றின் புரிதல் வியக்கத்தக்க வகையில் உள்ளது.

3.2.1. அன்றில் பறவையின் காதல் உணர்வு

அன்றில் பறவை நெய்தல் நிலப்பறவை இது தன் இணையைப் பிரியாமல் இணைந்து வாழும் என்பதை,

"மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்
துணையொன்று பிரியினுந் துஞ்சா கானெனக்
கண்ணிறை நீர்கொடு காக்கும்" (அகநா. 50: 11–13)

என்ற பாடலடிகள் உணர்த்தும்.

அன்றில் பறவை ஒன்று பிரிந்தால் மற்றொன்று உறங்காமல் காத்திருக்கும்.

"பெண்ணை ஓங்கிய வெண்மணற் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்
சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே"(அகநா. 120: 14–16)

என்ற பாடலடிகளில் பனந்தோப்பில் அன்றில்தன் துணையை அழைக்கும்.

"இன்துணை யன்றில் இரவின் அகவாவே
அன்றுதான் ஈர்த்த கரும்பனி வாடான்
மென்தோள் நெகிழ்த்தான் துறை" (கலி. 131: 28–30)

என்ற அடிகளில் தலைவனைப் பிரிந்து வருத்தத்தில் இருக்கும் சூழலில் துணையோடு கூடி வாழும் அன்றில் பறவை தன் துணையை கூவி அழைத்தால் தலைவி வருந்துவாள் என்று அன்றில் கூவி அழைக்காமல் இருந்தது. இச்செயல் நம் வருத்தத்திற்கு அப்பறவையும் வருந்தியது போல் இருந்தது.

3.2.2. அன்னப்பறவையின் காதல் உணர்வு

அன்னப்பறவை ஆண்பெண் என்று இணைந்தே வாழும். ‘‘அன்னப்பறவைகள் ஏகப்பத்தினி (ஒருவனுக்கு ஒருத்தி) விரதம் பறவைகள் என்பதாலும் இந்துக்கள் விரும்புவர். பிரமாவுக்கும் சரஸ்வதிக்கும் வாஹனம். விஷ்ணுவின் பல அவதாரங்களின் ஒன்று ஹம்சாவதாரம். குட்டிகள் இடத்திலும் மனைவி இடத்திலும் பாசம் உடைய பறவை என்பதால் இந்திய இலக்கியங்கள் இவற்றை உவமையாகப் பயன்படுத்தும்’’[1] என்கிறார் லண்டன் சுவாமிநாதன்.

‘‘ஆய்தூவி அன்னந்தன் அணிநடைப் பெடையோடு
மேகத் திரிதரூஉம் மிகுபுனல் நல்லூர’’ (கலித். 69: 6–7)

என்ற அடிகளில் மணமக்கள் மணமேடையில் கைகோர்த்துத் தீயை வலம் வருவதைப் போல அழகிய அன்னம் தன் இணையான அழகுநடைப் பேடையோடு பொய்கையில் தாமரை மலரை வலம் வருகின்றது. இவ்வாறு அன்னம் இணையாக வாழ்வதைக் கூறுகின்றது.

‘‘மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அனைந்தன்
அணிமிகு சேவலை அகலடை மறைத்தெனத்
கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை
மதிநிழல் நீருட்கண் டதுவென் உவந்தோடித்

துன்னத்தன் எதிர்வரூஉத் துணைக்கண்டு மிகநாணிப்

பன்மல ரிடைப்புகூஉம் பழனஞ்சேர் ஊரகேள்'' (கலித். 20:1–6)

என்ற கலித்தொகைப் பாடலடிகளில் அழகிய மலர்கள் நிறைந்த பொய்கையில் ஒருபெண் அன்னமும் அதன் இணையான ஆண் அன்னமும் உலாவுகிறது. அவ்வகையில் ஆண் அன்னத்தைத் தாமரை இலை மறைக்கிறது. உடனே தன் இணையைக் காணாமல் கலங்கிய பெண் அன்னம் நிலவின் நிழலைத் தண்ணீரில் கண்டு தன்துணை என்று எண்ணி ஓடுகின்றது. இச்சூழலில் மற்றொரு பக்கத்தில் ஆண் அன்னம் வர பெண் அன்னம் நாணி மலர்களின் இடையே மறைந்து கொள்கிறது. இக்காட்சியில் சிறிது காலம் தன் இணையைப் பிரிந்தாலும் காணாமல் தேடும் இயல்புடையது அன்னம் என்ற செய்தியை அறியமுடிகின்றது.

3.2.3. காக்கையின் காதல் உணர்வு

பொதுவாகக் காகங்களுக்குப் பகிர்ந்துண்ணும் இயல்பு காணப்படுகின்றது. காகம் மக்கள் வாழும் பகுதியில் இயல்பாக வாழும் பறவை. ''காகங்கள் சேர்ந்திருக்கும் போது ஒரு காகம் மற்றொரு காகத்தின் அலகு, உடல் போன்ற பகுதிகளில் உள்ள கடினமான பகுதிகளையும் பேன்களையும் சுத்தம் செய்யும் இச்செயல் ஆண் காகங்களுக்கும் , பெண் காகங்களுக்கும் இடையோன ஓர் ஈர்ப்பு நிகழ்வாகும்''[2] காக்கை இறால்மீனைப் பிடித்துவந்து தன் பெடையை அழைத்து அதன் வாயில் இரையை கொடுத்து காதல் வெளிப்படுத்தப்படுதலை,

''சேயிறா வெறிந்த சிறுவெண் காக்கை

பாயிரும் பனிக்கழி துழைஇப் பைங்கால்

தான்வீழ் பெடைக்கு பயிரீடுச் சுரக்குஞ்

சிறுவீ ஞாழல் துறையுமா ரினதே'' (நற். 31: 2–5)

என்ற அடிகள் விளக்கும். ''சிறுவெண்காக்கை ஆணும் பெண்ணும் பல ஒருசேர ஆடுகின்றது''[3] காக்கை உணவை பகிர்ந்து தன் காதலை வெளிப்படுத்துகிறது.

3.2.4. கூகையின் காதல் உணர்வு

ஆந்தைகள் காடு, பாலைவனம், புல்வெளி, வயல்வெளி, ஆகிய அனைத்து வகையான நில அமைப்புகளிலும் வாழும் பறவையாகும். ''கூகை இடிந்த கட்டிடங்களிலும் நெற்கலஞ்சியங்களிலும் காணப்படும். ஒருவகை ஆந்தையாகும் . இது மஞ்சளும் வெண்மையும் கலந்த நிறத்தோடு காணப்படும். இதற்குப் பெரிய வட்டவடிவான தலையும் குரங்கு முகம் போன்ற வெள்ளையான தட்டையான முகமும் உண்டு. இஃது இருட்டில் எலி முதலியவற்றை வேட்டையாடும் இதை மனிதர்கள் வாழும் சூழ்நிலையில் பெரும்பாலும் காணமுடியும்.''[4] கூகை தன் பெட்டையோடு நாற்சந்தியில் கூவுவதை,

''கூகைச் சேவல் குராஅலொ டேறி

ஆரிருஞ் சதுக்கத் தஞ்சுவரக் குழலும்'' (நற். 319: 4–5)

என்ற அடிகள் புலப்படுத்தும்.

''பராரை வேம்பின் படுசினை யிருந்த

குராஅல் கூகையும் இராஅ இசைக்கும்'' (நற். 218: 7–8)

என்ற அடிகளில் ஆந்தையின் சேவல் மகிழ்ச்சியால் தன்பெடையை அழைக்கின்றது. ஆந்தைகள் இரவு நேரங்களில் தான் கூட்டைவிட்டு வெளியில்

வரும் அதனால் அதன் காதல் வாழ்க்கையும் இரவில் கூறப்பட்டுள்ளது பொருத்தமாக உள்ளது.

3.2.5. நாரையின் காதல் உணர்வு

நாரைகள் நீர்நிலையின் அருகில் வாழும் ஓர் உயிரினம். இவைகளின் செயல்பாடுகளைச் சங்கப்புலவர்கள் நன்கு உற்றுநோக்கியுள்ளனர். பெண்நாரை சூழ்அடைந்ததால் இரைதேட இயலவில்லை. அதனால் ஆண் நாரை மீனைக் கொத்திக்கொண்டு கொடுத்து அதன் காதலை வெளிப்படுத்துவதை,

''கடுஞ்சூழ் வயவொடு கானவெய் தாது
கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதர் நாரை கடல்மீன் ஓய்வும்'' (நற். 263: 5–8)

என்ற பாடலடிகள் கூறும். ''பனைமரத்தில் அமர்ந்து தன் பேடை வந்து தனக்கு இன்பந்தரும் வரையில் உயிர் போகும் அளவுக்குக் கூவுகின்றது''[5] என்கிறது நற்றிணை.

3.2.6. பருந்தின் காதல் உணர்வு

பருந்துகள் உயரமாகப் பறக்கும். உயரத்தில் பறந்தாலும் தனக்கான இரையைக் கூர்மையான பார்வையால் அறிந்து கொள்ளும் இயல்புடையது.

''விளைப் பருந்தின் கோள்வல் சேவல்
வளைவாய்ப் பேடை வருதிலும் பயிரும்'' (அகநா. 33: 5–6)

என்ற அடிகளில் ஆண்பருந்து தனக்குக் கிடைத்த உணவாகிய சில்வண்டுகளை உண்ணுவதற்குத் தன் பேடையை அழைக்கும். உணவு

கிடைக்காத பாலை நிலத்தில் துன்பத்திலும் காதல் கொள்ளும் பருந்தின் அன்பை உணரமுடிகின்றது.

''ஆளழித் துயர்த்த அஞ்சுவரு பதுக்கைக்
கூர்றுதிச் செவ்வாய் எருமைச் சேவல்
படுபிணைப் பைந்தலை தொடுவன குழீஇ
மல்லன் மொசிவிரல் ஒற்றி மணிகொண்டு
வல்வாய்ப் பேடைக்குச் சொரியும் ஆங்கண்'' (அகநா. 215:11–15)

என்னும் பாலைத்திணைப்பாடலில் ஆண் பருந்து தன் பேடையின் மீதுள்ள காதலால் தனக்குக் கிடைத்த உணவைத் தன் இணைக்குக் கொடுக்கின்றது.

3.2.7. புறாவின் காதல் உணர்வு

புறாக்கள் இணைபிரியாக் காதல் பறவையாகத் திகழ்கின்றன. ''தன் காதல் துணையைப் பிரியாது சேர்ந்து வாழ்கின்றது''[6] ''புறாக்கள் இடைவிடாது புல்லிப் புணருமியல்பின. அவற்றை நோக்குவோர்க்குக் காமவின்பம் மீதூரு மாதலின் அதன் பொருட்டும் புறாவளர்பது மக்களுக்கு இயல்பு''[7] என்கிறார் உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். மேலும், ''கள்ளின் கிளைகளில் தனியே அமர்ந்திருக்கும் புறா தான் விரும்பிய பெடையை புணர்ச்சிக் குறிப்பால் அழைக்கும்.''[8] இதேபோன்று அகநானூற்றில் ''புறாக்கள் இணையாகச் செல்லும் போது அவைகளைக் காணும் தலைவி என்னை நினைத்துத் தனது தனிமையை எண்ணியும் வருந்துவாள் என்கிறான் தலைவன்''[9] புறாக்கள் பெட்டைகளுடன் பொதுமன்றத்தில் கடவுள் நீங்கிய கந்து எனப்படும் சிறுதூணில் கூடிவாழ்வதை

“பொறிவரிப் புறவின் செங்கால் சேவல்
சிறுபுண் பெடையொடு சேட்புலம் போகி
அரிமணல் இயவிற் பரல்தேர்ந் துண்டு
வரிமரல் வாடிய வான்நீங்கு நனந்தலைக்
குறும்பொறை மருங்கிற் கோட்சுரம் நீந்தி
நெடுங்சேன் வந்த நீர்நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்
பல்காய் அஞ்சினை யகவும் அத்தம்
சென்றுநீர் அவனி ராகி நின்றுதரும்
நிலையரும் பெருட்பிணி நினைத்தணி ரெனினே” (அகநா. 271: 1–10)

தலைவன் பிரிந்து செல்லும் வழியில் புறாக்கள் இணையாக வாழும். ஆண்புறா தன் பெடையுடன் நெடுந்தொலைவு சென்று மணல் பகுதியில் கூழாங்கற்களைப் பொறுக்கி உண்டு நெல்லிமரக் கிளையில் அமர்ந்து கூவும் காதல்நிகழ்வு வெளிப்படுகின்றது. “இணைபிரியா காதலுக்கு எடுத்துக்காட்டாக லவ்பேர்ட்ஸ் விளங்குகின்றது. எந்த நேரத்திலும் ஒன்றாகவே இருக்கும் இணைகளில் புறாபோன் சிறப்புறுவது இவைதான்”[10] என்பர் ரவி. கே. ஆத்மா. புறாக்கள் எப்பொழுதும் இணைப்பிரியாமல் இணைந்தே வாழ்கின்ற பறவை என்பதால்தான் இன்றும் வீடுகளில் விருப்பப்பறவையாக வளர்க்கின்றனர்.

3.2.8. மயில்களின் காதல் உணர்வு

பெண்இனம் அழகானது என்பது பெரும்பாலான உயிரினத்திற்கு பொருந்தும். மயிலினத்தில் ஆண்மயிலுக்கு அழகான தோகை உண்டு. ஆண்மயில், பெண்மயிலை அடைய தோகையை விரித்து ஆடும் என்பதை,

‘‘..... ஓங்குசினைப்

பீலி மஞ்ஞை பெடையோடு டாடும்’’ (நற். 288: 2–3)

என்ற பாடலடிகள் உணர்த்தும். காதலில் அழகுக்கும் முக்கியத்துவம் உண்டு. இங்கு பெடையை அடைய ஆண்மயில் தோகையை விரித்து ஆடி தன் காதலை வெளிப்படுத்தியுள்ளது.

‘‘புன்புறப் பேடை சேவ லின்புற

மன்ன ரியவரி னிரங்குங் கானம்’’ (ஐங். 425: 1–2)

என்ற பாடலடிகள் எடுத்துக்காட்டும். ஆண்மயில் இளம்வெய்யிலில் தன் பெடையோடு காதல் கொண்டு மகிழ்வாக ஆடும்.

3.3. பறவைகளின் இன்பவுணர்வு

மெய்யுணர்வு என்பது மரம் செடி கொடிகள் போன்ற அனைத்து உயிரினங்களுக்கும் அடிப்படை உணர்வாக அமைந்துள்ளது. ‘‘மெய் என்பதற்கு தமிழ் லெக்சிகன் (Tamil Lexican) Truth, Reality, உண்மை soul ஆன்மா corsciousness உணர்ச்சி Body உடம்பு cinsinont ஒற்றெழுத்து என்றும், மெய்யுணர்தல் என்பதற்கு மெய்யுணர்வு என்றும் மெய்யுறுபுணர்ச்சி என்பதற்கு சரீரத்தாள் கூடுங்கூட்டம்’’[11] என்றும் கூறுகிறது. மெய்யுறு புணர்ச்சி என்பது உயர்திணைக்கு உரைக்கக் கூடியது அஃறிணையாகிய பறவைக்கு உடல் உணர்வு என்று கூற இயலும்.

3.3.1. அன்றில் பறவையின் இன்பவுணர்வு

அன்றில் பறவைகளின் ஒலியைக் கொண்டே சங்கப்புலவர்கள் அதன் இன்பவுணர்வைக் கூறியுள்ளனர். ‘‘நெருப்புப் போன்ற செந்தலை அன்றில் பறவை பெடையோடு கூட்டிலிருந்து நரலுகின்றது’’[12]

“முழவுமுதல் அரைய தடவுநிலைப் பெண்ணெக்
கொழுமடல் இழைத்த சிறுகோற் குடம்பைக்
கருங்கல் அன்றில் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை அகவும் பானாட் கங்குல்” (குறுந். 301: 1–4)

என்ற அடிகளில் பனைமரத்தின் ஓலையின் கண்ணே, சிறுகுஞ்சுகளைக் கொண்டு அன்றில் பறவைகள் கூடுகட்டியிருக்கும். பாதியிரவாகிய நேரத்திலே ஆண் அன்றிலான விருப்பத்தையுடைய பெட்டை அகவிக் கொண்டிருக்கும். “கடவுளுக்குரிய பனைமரத்திலும், பொது மன்றத்திலிருந்த பனையிலும் இப்பறவை கூடுகட்டி வாழ்ந்ததாகத் தெரிகின்றது. கடவுள் உரையும் மரத்திலும், மன்றப் பனையிலும் மனிதர் இடையூறு இல்லையாதலால் அன்றில் அங்கே கூடுகட்டி வாழ்வதை வழக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு இடையூறில்லாமல் கூடுகட்டி வாழ்வதைத் தமிழ்நாட்டில் சில ஊர்களில் காணலாம். இது பறவை நூலில் காணப்படும் செய்தியொடு ஒத்திருக்கின்றது. பனைமரத்தில் இப்பறவை காணப்படுவதாகக் கூறப்பட்ட செய்தி சிறிது காலத்திற்கு முன் நாட்டுப்புற இயற்கைச் சூழ்நிலை பற்றி எழுதப்பெற்ற ஒரு புத்தகத்திலும் காணப்படுகின்றது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் கண்டு கூறப்பட்ட செய்தி இன்றும் ஓரளவு உண்மையாக இருப்பது வியப்பைத் தருவதாகும்”[13] என்கிறார் பி.எல்.சாமி. மாலைநேரத்தில் அன்றில் பறவை தன் துணையைப் பிரியாது. அதனால் மணல் மேட்டில் பனைமரத்தின் கட்டிய கூட்டில் புகுந்து துணையை அனைத்து உப்பங்கழிக் கரையில் மலர்கள் தம் இதழ்க் கைகளால் முகத்தை மூடிக்கொண்டன என்பதை,

"செக்கர் தோன்றத் துணைபுணர் அன்றில்
எக்கர் பெண்ணை அகமடல் சேரக்" (அகநா. 260: 6–7)

என்ற அடிகள் சான்றளிக்கும். "பறவை நூலில் இப்பறவை பகலில் வெளியே போகாது இரவில் இரைதேடப் போவதாகக் கூறப்படுகின்றது. பகலெல்லாம் வெளியே போகாதிருப்பதால் இரவில் துணையைப் பிரிந்திருக்க வேண்டியதான்றது. இதைப் பார்க்கச் சங்கப் புலவர்கள் இரவில் அன்றில் பறவை தனித்திருப்பதாகவும், துணைக்கு ஏங்கி குரலிடுவதாகவும் கூறியிருக்கின்றனர். ஆனால் இப்பறவைகள் இரவில் குரலிடுவதற்குக் காரணம் துணையைப் பிரிவதால் ஏற்படும் துன்பமன்று, இரவில் இரைதேடப் போகும்போது ஒன்றிற்கொன்று தொடர்பு வைத்துக் கொள்ளவே 'க்வாக், க்வாக்' என்று குரலிட்டுச் செல்லும். இதையே அன்றில் துணைக்கு ஏங்குவதாகக் கற்பனையாகக் கூறினர்"[14] என்பர் பி.எல்.சாமி.

சங்கப்புலவர்கள் இயற்கையை உற்றுநோக்கி அவற்றைச் செய்யுள்களில் கொண்டுவந்திருந்தாலும் சில இடங்களில் அவற்றிற்கான புரிதல் மாறுபட்டுக் காணப்படுகின்றது. "அவற்றின் குரல் அழுவது போலவும் ஏங்குவது போலவும் இருந்ததை வெளிநாட்டு வேட்டையாளர் கூறியுள்ளார். அதே போன்றுதான் சங்கநூல்களும் கூறியுள்ளன என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்."[15] அன்றில் பறவையின் ஒலியின்வழி அதன் உணர்வுகளை அறிய இயலும்.

3.3.2. அன்னப்பறவையின் இன்பவுணர்வு

"அன்னம் கடல் சங்கு என்று அறியாது தன் பெட்டை என்று கருதி இணையும்"[16] மேலும் பிரிவுத்துயரால் மனம் வருந்தி கண்ணீர் விட்டு அழுகின்ற

தலைவியின் முன் அன்னப்பெடை ஒன்று தன்னை விரைந்து வந்தடைந்த ஆண் அன்னத்தோடு புணர்ந்து மகிழ்கின்றது என்பதை,

''அன்னையோ எல்லீருங் காண்மின் மடவரல்
மென்னடைப் பேடை துனைதரத் தற்சேர்ந்த
அன்னவான் சேவர் புணர்ச்சிபோல் ஒண்ணுதல்
காதலன் மன்ற அவனை வரக்கண்டாய்'' (கலி. 147: 64–67)

என்ற கலித்தொகை அடிகள் விளக்கும்.

3.3.3. குயிலின் இன்பவுணர்வு

குயில்கள் ஒன்றுடன் ஒன்று மாறி மாறிக் கூவி இன்புற்று இருக்கின்றன என்பதை,

''செங்கண் இருங்குயில் எதிர்குரல் பயிற்றும்
இன்ப வேனிலும் வந்தன்று நம்வயிற்
பிரியலம் என்று தெளிந்தோர் தேஎத்த'' (நற். 224: 5–7)

என்ற அடிகள் விளக்குகின்றன. குயில்கள் தம் பெடையை அழைத்துக் கூவும் இளவேனிற் காலம் மயக்கத்தை உண்டாக்குகின்றது.

3.3.4. குருவியின் இன்பவுணர்வு (ஊர்குருவி)

பறவைகள் பசியின்றி உண்டு இன்பியல் உணர்வுடன் வாழும் ஊர் செழிப்பானது என்பதை,

''பசித்தன் நம்ம பெருந்தகை யூரே
மனையுறை குரீஇக் கரையணற் சேவல்

பாணர் நரம்பின் சுகிரொடு வயமான்

குரற்செய் பீலியி னிழைத்த குடம்பைப்

பெருஞ்செய் நெல்லி னரிசி யார்ந்துதன்

புன்புறப் பெடையொடு வதியும்'' (புறநா. 318: 3–8)

என்ற புறநானூற்றடிகள் உணர்த்தும். வேந்தன் போரில் துன்பப்படுவானாயின் பசியால் வருந்தும் வீட்டுக் குருவியின் கரிய கழுத்தையுடைய ஆண்குருவி அரிமாவின் மயிர் கொண்டு செய்த கூட்டில் அரிசியைத் தின்று தன்பெட்டையொடு தங்கும். குருவிகளின் இன்பவியல் வாழ்க்கையைக் கொண்டு ஊரின் சிறப்பை விளக்குவர்.

3.3.5. கூகையின் இன்பவுணர்வு

கூகையின் ஒலி மக்களை அச்சப்படுத்தும். ஆனால் அவை இன்பத்தில் தான் குரல் கொடுக்கின்றன. ''கூகைக்கு வெவ்வேறு வகையான குரல்கள் உண்டு. நீண்ட அழுகுரல் போன்ற ஓசையும் குழறுவது போன்ற ஓசையும் குறட்டை விடுவது போன்ற ஓசையும் செய்யும்''[17] என்று பி.எல். சாமி கூறுவர். பறவைகளின் குரல் ஓசையை வைத்துத்தான் அதன் செயல்களைக் கூற இயலும்.

''கூகைச் சேவல் குராஅலொ டேறி

ஆரிருஞ் சதுக்கத் தஞ்சுவரக் குழறும்'' (நற். 319: 4–5)

என்பதில் கூகை தன்னுடைய பெட்டையோடு இரவு நேரங்களில் நாற்சந்தியில் கூவி நிற்கும். இது கூகை இன்பம் துய்த்தலுக்கான ஒலியாகக் கூறப்படுகின்றது. ''எல்லா உயிர்களும் உணர்வை வெளிப்படுத்த குரலைப்

பயன்படுத்துகின்றன.''[18] உயிரினங்கள் தங்களின் உணர்வை வெளிப்படுத்தும் கருவியாக ஒலியே அமைகின்றது.

3.3.6. பருந்தின் இன்பவுணர்வு

பருந்துகள் மலைப்பகுதியில் அடர்ந்த காடுகள் நிறைந்த வனப்பகுதிகளிலும் காணப்படும். இதன் உணர்வுகளை அறிவதுமிகவும் அரிது. பருந்தின் இன்பவுணர்வை,

''கருங்கால் ஓமை யேறி வெண்டலைப்
பருந்துபெடை பயிரும் பாழ்நாட் டாங்கண்
பொலந்தொடி தெளிர்ப் வீசச் சேவடிச்
சிலம்புநக இயலிச் சென்றஎன் மகட்கே'' (அகநா. 117: 6–9)

என்ற பாடலடிகள் குறிப்பிடும். ஓமை மரத்தில் ஆண் பருந்து இருந்து தன் பெண் பருந்தை அழைக்கும் பாழான நாடுகளை உடைய பாலை நிலம். இதில் ஆண்பருந்து பெண்பருந்தை இன்ப உரவுதக்கு அழைப்பது தலைமக்களின் உள்ளத்து உணர்வைக் கூறுவதாக உள்ளது.

போர்க்களத்தில் பெடையோடு கூடிய ஆண்பருந்தின் இனம் தசை உணவினை உண்ணும் காட்சியை,

''..... வியன்களத்
தளகுடைச் சேவற் கிளைபுகா வாரத்' (பதிற். 35:4–5)

என்ற பதிற்றுபத்து அடிகள் விளக்கும்.

''பொறத்த போலும் புள்ளி யெருத்திற்
புன்புற வெருவைப் பெடைபுணர் சேவல்
குடுமி யெழாலொடு கொண்டுகிழக் கழிய'' (பதிற். 36: 8–10)

என்ற அடிகளில் போர்க்களத்தில் விலங்குகளும் வீரர்களும் இறந்து பட்டமையால் கிடக்கும் பிணங்களை உண்பதற்காகப் புள்ளிக் கழுத்தினையும் பொலிவற்ற உடலையும் கொண்டு பெட்டையொடு கூடிய பருந்தும் கழுகும் கீழே இறங்கின. பருந்தின் சேவல் பெடையோடு கூடியபின் உணவு வேட்கைக் கொண்டு போர்க்களத்திற்கு வந்து பிணங்களை உணவாக கொண்டதை அறியமுடிகின்றது.

3.3.7. புறாக்களின் இன்பவுணர்வு

இன்பவுணர்வு அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. அவற்றின் கலவி செயல்பாடுகளின் தன்மையை அறிந்திருந்தால் மட்டுமே அவற்றின் இன்பவுணர்வை வெளிப்படுத்திக் கூற இயலும். ‘‘பறவைகளில் அதிகமான இடம்பெயர்வாற்றலினாலும் (Mobiltty) ஆண் பறவை பெண்பறவையை இறுக்கப்பிடிக்க முடியாததாலும் காட்சியளிப்பு (display) காதலூட்டமும் (Courtship) மிகவும் இன்றியமையாதாயிருக்கின்றன. பெண்பறவையைக் கலவிபுரிதல் பொருட்டு முழு இணக்கத்துக்குக் கொண்டுவர இவைகள் துணைபுரிகின்றன. இந்தப் பாலினத் தூண்டுதல் (Sexual stimilation) மட்டுமல்லாது சம்பந்தப்பட்ட பறவைகளைக் கூடு கட்டுவதிலும் (Next bulaling) அடைகாப்பதிலும் (Inculation) முட்டைகளையும், குஞ்சுகளையும் கண்காணிப்பதிலும் ஈடுபடுத்துவதற்கு தேவையான உணர்ச்சி கொண்ட நிலையை (State of excitablity) இவை உருவாக்கித் தருகின்றன. இந்தத் தூண்டுதல் போதுமான அளவு இல்லாவிட்டால் இனவிருத்திச் செயல்முறைகள் (Process) பாதியிலிலேயே நின்று போய்விடும். இது புறாக்களில் மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றது’’[19] என்கிறார் ஆல்ஃபிரப் மோகன்தாஸ்.

இவ்வாறான பறவைகளின் நடத்தைகளை உணர்ந்தே புலவர்கள் தங்களின் பாடல்களில் கூறியுள்ளார். வீட்டின் முற்றத்தில் மேய்யும் புறாக்கள் மாலைநேரத்தில் சேவலும் பெடையும் அன்பால் இணைந்திருக்கும் இனிமையான மாலை நேரத்தை,

''மனையுறை புறவின் செங்காற் பேடைக்
காமர் துணையொடு சேவல் சேரப்
புலம்பின் நம்ம புன்கண் மாலை
தனியே இருத்தல் ஆற்றேன் என்றுநின்'' (நற். 162: 1–4)

என்ற பாடலடிகள் கூறும்.

''குறுநடைப் புறவின் செங்காற் சேவல்
நெடிநிலை வியனகர் வீழ்துணைப் பயிரும்
புலம்பொடு வந்த புன்கண் மாலை'' (அகநா. 47: 11–13)

என்ற அடிகளில் மாலைப்பொழுதில் வீட்டில் வளரும் ஆண்புறா பெண்புறாவை இன்பவேட்கைக்காக அழைக்கும் காட்சியைக் காண இயலும். ''புறாவின் பெட்டை அழகில்லாத வெள்ளச்சிறகினை உடையது அது தன்னுடைய சேவலை மகிழ்விப்பதற்காக மன்னருக்கு பக்கத்தில் வாத்தியங்களை முழங்கும் வாத்தியக்காரர்களைப் போல இசையை எழுப்பும் தன்மை கொண்டது.''[20] இதே செய்தியை ''ஆண்பறவை கழுத்து முடியைச் சிலுப்பிக் கொண்டுசோடிப் புறாவிடம் குனிந்து, நிமிர்ந்து அதன்முன் சுற்றும்போது கூவும்''[21] என்று கூறுகிறார் ஸலீம் அலி.

3.3.8. மயில்களின் இன்பவுணர்வு

மயில்கள் கார்காலத்தில் தான் இணைச்சேருகின்றன என்பதை,

"நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தின் நாறுஇணை யிருந்து
துணைப்பயிர்ந் தகவுந் துணைதகு தண்கார்" (அகநா. 85: 11–13)

என்ற பாடலடிகள் குறிப்பிடும். மயில்கள் குருந்த மரக்கிளையிலிருந்து தன் துணையை அழைக்கும். "பறவைகளில் ஆண் பறவைகள் தங்களுக்கு உரியதென்று ஒரு குறிப்பிட்ட பரப்புடைய இடத்தை உரிமையாக்கிக் கொண்டு தங்களிடத்தில் பிற ஆண்பறவைகளை நெருங்க விடுவதில்லை. ஆனால் பெண் பறவைகளை அவ்விடத்திற்கு விரும்பி அழைக்கும். ஆண் மயிலிற்கு இந்தக் குணம் உண்டு என்பதைப் பறவை நூலார் தெரிந்துள்ளனர்"[22] என்று பி.எல்.சாமி கூறுகிறார். எனவே ஆண் மயில்கள் இணைச்சேர பெண்மயில்களை அழைக்கும் என்பது தெளிவாகின்றது.

3.4. பறவைகளின் குடும்ப உணர்வு

மக்கள் குடும்ப அமைப்புடன் வாழ்கின்றனர். அதேபோல் அஃறிணை உயிரினங்கள் பலவற்றில் குடும்ப அமைப்புக் காணப்படுகின்றது. ஆனால் அவை மக்கள் குடும்பம் போல் மேம்பட்ட குடும்ப அமைப்பைக் கொண்டவை அல்ல. அவற்றின் குடும்பம் இனவிருத்தியை அடிப்படையாக கொண்டுள்ளது. சில பறவைகளின் குடும்பம் நீண்ட பரம்பரையைக் கொண்டது. "கதிரவன் மறையுங்கால் பறவைகளெல்லாம் தத்தம் கூடுகளில் துணையோடு வதியவும் குஞ்சுகளைக் காணவும் ஆர்வத்தோடு பறக்கின்றன. இன்னும் நெய்தற் காட்சிகள் யாவும் தனிமையுணர்ச்சியைப் பெருக்கித் துணைநாடும்

வேட்கையை வளர்க்கவல்லனவாய் உள்ளன.''[23] என்று மு.வ. கூறுவது பறவைகளின் உணர்வுகள் மனித மனதை மாற்றும் வலிமை கொண்டதாக உள்ளது என்பதை அறிய இயலும்.

3.4.1. காக்கையின் குடும்ப உணர்வு

பகிர்ந்துண்ணும் பழக்கத்திற்கு எடுத்துக்காட்டாகக் காக்கையை கூறுவர். பலிச்சோற்றை உண்ட காக்கை மாலையில் தன்துணையை தேடிச் சென்று சுற்றத்துடன் அடையும் காட்சியை,

''நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொகுகருங் காக்கை
புன்கண் அஞ்சிக் கிளையொடுஞ் செறியப்
படையொடு வந்த பையுண் மாலை'' (நற். 343: 4–7)

என்ற பாடலடிகள் விளக்கும்.

3.4.2. குருகின் குடும்ப உணர்வு

குருகிப் பல இனங்கள் உண்டு. மருதமரக்கிளைகளில் குருகுகள் தங்களின் குடும்பத்துடன் வாழ்வதை,

''உளைப்பூ மருதத்துக் கிளைக்குருகு கிடுக்கும்'' (ஐங். 7:4)

என்ற ஐங்குறுநூற்றடி விளக்கும்.

3.4.3. குருவியின் குடும்ப உணர்வு

குருவிகளில் பல இனங்கள் உள்ளன. ஒவ்வொரு இனமும் வாழ்வியலில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. பறவைகள் குடும்பமாக இணைந்து வாழ்ந்து

அவற்றின் இளம் உயிரிகளைக் காக்கின்றன. ஆம்பற் பூவினது வாடலையொத்த கூம்பிய சிறகுகளையுடைய குருவி மனையிடத்தே முற்றத்தில் காயப்போட்டிருக்கும் தானியங்களை தின்றனவாய் தெருவில் புழுதியில் விளையாடிக் களித்தபின் மாலையில் வீட்டிறைப்பினிடத்துள்ளது தம்முடைய கூட்டில் குஞ்சுகளோடு தங்கும். இதனை,

''ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து
எருவினுள் தாது குடைவன ஆக
இலிளைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்'' (குறுந். 46:1–5)

என்ற பாடலடிகள் விளக்கும். குருவிகள் மாலையில் தம் இல்லமாகிய கூட்டிற்குச் சென்று தம் குடும்பத்துடன் இணைவது கூறப்பட்டுள்ளது. அவற்றின் குடும்ப உணர்வை வெளிப்படுத்துகின்றது. குருவிகளின் குடும்ப உணர்வை குறுந்தொகைப் பாடலும்,

''யாரினும் இனியன், பேரன் பிணனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கினி லிழைஇயர்
தேம்பொதி கொண்ட தீங்கழைக் கரும்பின்'' (குறுந். 85: 1–4)

என்று குறிப்பிடும். மனையுள்ளே வாழ்கின்ற ஊர்க்குருவியினது சேவல் கருமுதிர்ச்சி பெற்றிருக்கும் தன் பேடைக்கு முட்டையிடுவதற்குரிய இடத்தை அமைத்துக்கொடுக்கும் குருவியின் இச்செயல் அதன் குடும்பப் பிணைப்பைக் காட்டுகின்றது.

3.4.4. பருந்தின் குடும்ப உணர்வு

கழுகும் பருந்தும் ஒரே இனத்தைச் சேர்ந்த பறவைகள் ஆகும். அவற்றின் வாழ்வியல் முறைகளிலும் மாற்றங்கள் ஏதும் இல்லை.

''ஆளழித் துயர்த்த அஞ்சுவரு பதுக்கைக்
கூர்நுதச் செவ்வாய் எருவைச் சேவல்
படுபிணப் பைந்தலை தொடுவன குழிஇ
மல்லன் மொசிவிரல் ஒற்றி மணிகொண்டு
வல்வாய்ப் பேடைக்குச் சொரியும் அங்கண்'' (அகநா. 215: 11–15)

வழிப்பறிக் கொள்ளையர்கள் வழிச் செல்வோரைக் கொன்று பிணங்களின் மீது கற்களைக் குவிப்பர். அக்கற்குவியலின் மீது கூர்மையான முனையைக் கொண்ட சிவந்த வாயை உடைய ஆண் பருந்துகள் அமர்ந்து பிணத்தின் தலையைத் தோண்டி எடுக்கும் வலிமையான கால் விரல்களால் கண்களைத் தோண்டிக் கொண்டு சென்று கூட்டில் வாழும் தன் பேடைகளுக்கு ஊட்டும்.

குருதி படிந்த புலால் நாறும் சிறகுடன் கூடிய ஆண் பருந்தின் சுற்றத்தோடு கூடிய கூட்டம் யானையின் பசுமையான ஊனின் மிகுதியை அறிவித்துப் பறந்து எழுந்து, செவ்வானம் போல வானத்தில் செல்லும் காட்சியை,

''எருவைச் சேவல் ஈண்டுகிளைத் தொகுதி
பச்சூன் கொள்ளை காற்றிப் பறைநிவந்து
செக்கர் வானின் விசும்பனி கொள்ளும்'' (அகநா. 381: 10–12)

என்ற அடிகள் புலப்படுத்தும். பருந்துகள் உறவுகளோடு கூடி வாழ்கின்ற தன்மையை கொண்டது என்பதை அறியமுடிகிறது.

3.4.5.புறாவின் குடும்ப உணர்வு

இலக்கியங்களில் புறாக்கள் தூதுப் பறவையாகவும் வளர்ப்புப் பறவையாகவும் கூறப்பட்டுள்ளது. காடுகளில் வாழும் புறாக்கள் தன்னிச்சையாக மரக்கிளையில் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரித்துக் குடும்ப அமைப்பைக் கொண்டு வாழ்கின்றன.

‘வெண்புறாப் புறவின் செங்காற் சேவல்
களரி ஓங்கிய கவைமுப் கள்ளி
முளரியங் குடம்பையின் ஈன்றிளைப் பட்ட
வயவுநடைப் பேடை உணீஇய மன்னர்’‘ (நற். 384: 1–4)

என்ற அடிகளில் பெண்புறா அடை காக்கும்பொழுது ஆண்புறா இரை தேடிக் கொடுப்பதை அறியமுடிகின்றது.

3.5. பறவைகளின் தாய்மை உணர்வு

தாய்மையே உலகில் உயர்வாகக் கருதக்கூடிய உணர்வாகும். உலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவான மனவுணர்வும் தாய்மை உணர்வுமே உலகம் இன்றளவும் இயங்கக் காரணம். இத்தாய்மை உணர்வு பெண் இனத்தை மிகவும் சிறப்பிக்கின்றது. பறவைகளின் தாய்மை உணர்வு பாதுகாப்பிற்கு முதன்மை இடம் கொடுக்கின்றது. ‘‘கூர்ந்து கவனித்தால் பறவைகளைப் பற்றிச் சுவையான பல உண்மைகளை நாம் தெரிந்து கொள்ளலாம். மரத்திற்கு மரம் பறந்து திரியும் பறவைகள் வேலையில் தான் ஈடுபட்டிருக்கின்றன. மக்களைப் போலவே அவை வீடுகட்டித் தம் குஞ்சுகளை வளர்க்கின்றன. அவற்றுக்கென்றே தனித்தனியான பேச்சுமொழியும் உண்டு’’[24] என்கிறார் ஜமால் ஆரா. மேலும் பறவைகள் தம் குஞ்சுகளைப் பாதுகாப்பதில்

முனைப்புடன் செயல்படும் என்பதை, "கூடு கட்டும் இடத்தை ஒவ்வொரு பறவையும் நன்கு ஆராயந்த பிறகே தேர்ந்தெடுக்கும் குஞ்சுகளுக்குப் போதுமான உணவு அருகிலேயே கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தையும் அது முக்கியமாகக் கொண்டிருக்கும்"[25] என்கிறார் ஜமால் அரா. பறவைகள் தங்களின் இனத்தைப் பாதுகாப்புடன் வளர்க்க மிகவும் இன்னல்படுகின்றது.

3.5.1. அன்னப்பறவையின் தாய்மை உணர்வு

அன்னப்பறவை பாலையும் நீரையும் பிரித்து எடுக்கும் என்ற செய்தி அனைவர் மனதிலும் வியப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ளது. அன்னப்பறவை இருந்தது என்பதை சங்கப்பாடலடிகள் உறுதிப்படுத்துகின்றன. அன்னப்பறவை இமயத்து உச்சியில் உள்ள தன் பார்ப்புகளுக்குக் கடலில் உள்ள இரையைக் கொண்டு செல்லுவதை,

"நிலந்தாழ் மருங்கில் தென்கடல் மேய்ந்த
விலங்குமென் தூவிச் செங்கால் அன்னம்
பொன்படு நெடுங்கோட்டு இமயத்து உச்சி
வானர மகளிர்க்கு மேவல் ஆகும்
வளராப் பார்ப்பிற்கு அல்கிரை ஓய்யும்" (நற். 356: 1–5)

என்னும் நற்றிணை அடிகள் விளக்கும். அன்னம் தன் பார்பின் மீது கொண்டுள்ள பாச உணர்வைக் காட்டுகின்றது.

3.5.2. கொக்கின் தாய்மை உணர்வு

கொக்கும் நாரையும் ஒன்றே போல இருந்தாலும் வேறுவேறான பறவைகள் ஆனால் இரண்டுமே நீர்வளம் நிறைந்த பகுதிகளில் தான் வாழ்கின்றன. கொக்குகளின் தாய்மை உணர்வை,

''பைங்காற் கொக்கின் பகுவாய்ப்பிள்ளை
மென்கேற் றடைகரை மேய்ந்துண் டதற்பின்
ஆர லீன்ற வையவி முட்டை
கூர்ந லிறவின் பிள்ளையொடு செறூஉம்'' (புறநா. 342: 8–11)

என்ற பாடலடிகள் சுட்டும். கொக்குகள் கூடுகட்டி முட்டையிட்டு குஞ்சுபொறிக்கும். அக்குஞ்சுகள் சிறிது வளர்ந்ததும் அவற்றைச் உணவு தேட பழக்கும். தாய்மை என்பது குழந்தைகளை வளர்ப்பது மட்டுமன்று. அவற்றைச் சமுதாயத்தில் வாழப்பழக்குவதும் தாய்மையின் முதன்மையான செயல்களில் ஒன்று என்பதை மக்களுக்குக் கூறுவதாக உள்ளது.

3.5.3. நாரையின் தாய்மை உணர்வு

நாரைகள் நீர்நிறைந்த பகுதிகளில் வாழும் பறவை. சங்க இலக்கியத்தில் நெய்தல் நில பகுதியில் காணப்படும் பறவையாக உள்ளது. ''கடற்கரையில் தன் கூட்டத்தோடு இரை தேடுகின்ற நாரைச் சிறிய மீன்களைப் பிடித்துத் தான் உண்ணாமல் கிளைமேல் உள்ள கூட்டின்கண் இருந்து தாயை அழைக்கும் தன் பிள்ளையின் வாயில் கொடுக்கும்.''[26] நாரை தான் பசியில் இருந்தபோதும் தன்பிள்ளைக்கு உணவுத் கொடுப்பதையே முதன்மையாகக் கருதியமை அதன் தாய்மை உணர்வின் வெளிப்பாடு ஆகும்.

பறவைகள் எப்பொழுதும் முட்டை இடும் பருவத்தில் அதற்கான பாதுகாப்பு மிகுந்த இடர்ததைத் தேடிக் கண்டு முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். இதனை,

“கனங்கொள் உமணர் உயங்குவயின் ஒழித்த

பண்ணழி பழம்பார் வெண்குருகு ஈனும்” (நற். 138: 3–4)

என்ற அடிகளும் சான்றாக்கும். பழைய உப்பு வண்டியின் மேல் நாரை தன் பார்ப்பினை வளர்க்கின்றது. பறவைகள் முட்டையிடும் பருவத்தில் மற்ற உயிரிகளிடம் இருந்தும், இயற்கையிடம் இருந்தும் வரும் இன்னல்களை உணர்ந்து செயல்பட வேண்டும். இயற்கையாகவே பறவைகளிடம் இவ்வுணர்வு காணப்படும். ஐங்குறுநூறு 151–160 வரை உள்ள பாடல்களில் நாரை வெள்ளங்குருகின் பார்பினைத் தனது பார்பென நினைத்து காணச் சென்றது என்று கூறப்பட்டுள்ளமை சிந்திக்க வைக்கின்றது. பறவை தனது கூட்டையும் பார்பையும் அறிந்து கொள்ளும் திறன் உள்ளது. காக்கைக் கூட்டில் குயில் முட்டையிடும் என்பதும் அது பொரிந்தவுடன் காக்கை குயிலின் குஞ்சினைத் தன்இனம் இல்லை என அறிந்து கொத்தி விரட்டும் என்பதும் கிராமப்புரத்தில் வாழும் அனைவரும் அறிந்த செய்தி ஆனால் நாரை வெள்ளாங்குருகின் பார்ப்பைத் தன் பிள்ளையாகக் கருதுகின்றது.

3.5.4. பருந்தின் தாய்மை உணர்வு

பருந்துகள் காட்டிலும் காட்டை சுற்றியுள்ள ஊர் பகுதிகளிலும் காணப்பட்டாலும் கூடுகளை மறைவான இடத்திலேயே கட்டுகின்றன. ஓமை மரங்கள் மிகுந்த மலைப்பிளவுகளை உடைய பகுதிகளில் குஞ்சுகளை ஈன்ற பருந்து தங்கியிருக்கும். இதனை,

“பருந்தினைப் பரூஉம் பாறுதலை ஓமை

இருங்கல் வடரகத் தின்றினைப் பட்ட” (அகநா. 21: 15–16)

என்று அகநானூறு சுட்டும்.

பருந்துகள் கூடு கட்டி அடைகாக்கும் இடம் மிகவும் அச்சம் நிறைந்த அடர்ந்த காட்டுப்பகுதி என்பது தெளிவாகின்றது. பருந்துகள் தங்கள் பார்ப்பின் பாதுகாப்பிற்காகவே அடர்ந்த காட்டுப்பகுதியைத் தேர்வு செய்திருக்கின்றன என்பது அதன் தாய்மை உணர்வை காட்டுகின்றது. ‘‘பாலை வழியில் வழிப்பறி கள்வர்கள் எதிர்ப்பட்ட பயணிகளை எதிர்த்துப் போரிட்டு அவர்களின் உடம்பினின்று பெருகிய இரத்தத்தை பருகுவர். பருந்துகள் சிறிய குன்றுகளில் நீண்டுயர்ந்த பாமரத்தின் கிளைகளில் உள்ள கூட்டில் வாழும் தம் குஞ்சுகளுக்கு இறந்த உடம்பில் உள்ள கண்களைக் கொத்திச் செல்கின்றன’’[27] பருநது தம் குஞ்சுகளின் மேல் உள்ள பாசத்தின் காரணமாக நல்ல உணவாகத் தேடி கொடுக்கின்றது.

3.6. பார்ப்பின் பாசவுணர்வு

தாய், பார்பின் மீது கொண்டுள்ள அன்பைப் போல பார்பும் தாயின் மீது அன்பு கொண்டுள்ளது. நாரையின் பார்ப்புகள் தன் தாயை அழைக்கும். இரைதேடச் சென்ற தாய்ப்பறவை கூடு திரும்ப காலம் தாழ்த்தியமையால் அவற்றின் மீது உள்ள பாசத்தின் காரணமாக பார்ப்புகள் குரல் எழுப்பியதை,

‘‘வெண்டலைக் குருகின் மென்பறை விளக்குற
னீள்வய னண்ணியிழு மூர’’ (நற். 91: 1–2)

என்ற அடிகள் குறிப்பிடும்.

3.7. பறவைகளின் மகிழ்வுணர்வு

ஒருவர் மனதில் ஏற்படக்கூடிய இன்பம், உவகை மகிழ்ச்சி போன்றவை ஏதேனும் ஒரு நிகழ்வைச் சார்ந்து எழும் உணர்வு ஆகும். பறவைகளின்

செயல்பாடுகள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். சங்கப்புலவர்கள் பறவைகளின் மகிழ்வை உற்றுநோக்கி அவற்றைத் தம் பாடல்களில் தகுந்த இடங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

3.7.1. காக்கையின் மகிழ்வுணர்வு

தனக்கு வேண்டியது கிடைத்து விட்டால் அனைவர் மனதிலும் மகிழ்ச்சி தோன்றும். அதுபோலவே காக்கையின் மகிழ்வு தனக்கான உணவில் உள்ளது என்பதை

"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீந்துநீர் இருங்கழி இரைதேர்ந்து உண்டு
புக்கமழ் பொதும்பர்ச் சேர்க்கும் துறைவ னோடு" (குறுந். 313: 1–3)

என்ற அடிகள் உணர்த்தும். காக்கைக்குத் தனக்குறிய நல்ல உணவாகிய மீன் கிடைத்ததும் மகிழ்ச்சி கொள்கின்றது. அதைவிட தங்குவதற்குப் பூமணம் கொண்ட சோலை இருந்தால் மிகவும் மகிழ்கின்றது.

"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
யிருங்கழி யினக்கொடி றாருந் துறைவன்" (ஐங்குறு. 167: 1–2)

காக்கைக்குத் தான் வாழும் இடத்தின் அருகிலேயே உணவு கிடைத்தால் மகிழும் என்பதை அறியமுடிகின்றது.

3.7.2. கிளிகளின் மகிழ்வுணர்வு

தினைக்கதிர்களைத் தின்றபின்னர் மலைச்சாரலில் உள்ள பாறைகளின் மீது அமர்ந்து ஒலிக்கும் அவை ஒன்றையொன்றைக் கூவி அழைத்து மகிழ்கின்றது என்பதை,

“வாரல் மென்திணைப் புலவுக்குரல் மாந்திச்
சாரல் வரைய கிளையுடன் குழிஇ
வளியொறி வயரின் கிளிவிளி பயிற்றும்
நளயிருஞ் சிலம்பின் நன்மலை பயிற்றும்” (நற். 304: 1–4)

என்ற அடிகள் விளக்குகின்றன. உணவுக்கிடைத்த செய்தியையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்த அவை கூவுகின்றன.

3.7.3. குயிலின் மகிழ்வுணர்வு

குயில் கூவும் ஒலி அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்தும். மகிழ்ச்சியில் தான் அவை கூவுகின்றன. இளவேனிற் காலத்தைக் குறிக்க முருங்கை பூத்தது. அதைத் தின்று குயில் மகிழ்வாகக் கூவுவதை,

“பாசரும்பு ஈன்ற செம்முகை முருக்கினப்
போதவிழ் அலரி கொழுதித் தாதருந்து
அந்தளிர் மாஅத்து அலங்கண் மீமிசைச்
செங்கண் இருங்குயில் நயவரக் கூஉம்
இன்னிள வேனிலும் வாரார்” (அகநா. 229:15–19)

என்ற அடிகள் சுட்டும்.

நல்ல உணவு உண்ட குயில் மகிழ்ச்சியை வெளிப்படுத்த கூவுகின்றன. “இளவேனில் கால வைகறைப் பொழுதில் சீறியாழ் விளரிப்பண் இசையோடு, பூங்கொம்புகளில் இருந்து பாடும் குயிலின் இசையும் அமையும் காலைப் பொழுதில் குயில்கள் மகிழ்ச்சியாக வாழும்”[28] என்பதை அகநானூற்று அடிகள் விளக்குகின்றன.

3.7.4. குருகின் மகிழ்வுணர்வு

உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு என்பது போல உண்ட மயக்கத்தில் குருகுகள் உறங்குகின்றன. "அகன்ற நீர்நிலையில் இருக்கும் பிரம்போடு கூடிய ஈங்கை பூவும் மாமரத்தில் இருக்கும் இளமையானத் தளிரும் தடவுதலால் மீனை உண்ட நாரை உறக்கம் கொள்ளும். மிகவும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் நாரை உறக்கம் கொள்கின்றது."[29] நிறைவான உணவு கிடைத்தால் நாரைகள் நிம்மதியாக மகிழ்ச்சியாக இருக்கின்றன.

3.7.5. மயில்களில் மகிழ்வுணர்வு

மயிலுக்குக் கார்மேகமும் மழைவரவும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. இவற்றைக் கண்டால் மயில் தன் இன்பத்தை வெளிப்படுத்தத் தோகை விரிந்து ஆடும். மழையில் நனைந்து தோகையை விரித்து மகிழ்ச்சியாக மயில் ஆடிக்கொண்டிருக்கும் காட்சியை,

"சேனுறத் தோன்றும் குன்றத்துக் கவாஅன்
பெயலுழந்து உலறிய மணிப்பொரிக் குடுழிப்
பீல மஞ்ஞை ஆலுஞ் சோலை" (நற். 357: 6–8)

என்ற அடிகள் புலப்படுத்தும். மயில் தானும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விக்கின்றது.

மயில்கள் ஒலி வேறுபாட்டை அறியாமல் தனது உவகையை வெளிபடுத்துகின்றது. மழைமேகத்தின் பொய்யான இடியைக் கண்டு கார்காலம் என்று கருதி மயில்கள் கூவியதை,

''பொய்யடி அதிர்குரல் வாய்செத்து ஆலும்

இனமயில் மடக்குணம் போல'' (நற். 248: 7–8)

என்று நற்றிணை கூறும். ''புலிகள் முழங்கியதும் யானைகள் அச்சப்பட்டுக் கதறின. அதைக் கேட்டு மயில்கள் இடியோசை என எண்ணி ஆடியது.''[30] மயில்கள் களிற்றின் பிளிறலை இடியோசை என்று எண்ணி மகிழ்ந்து ஆடியுள்ளது.

''கழனி யழவர் தண்ணுமை யிசைப்பிற்

பழன மஞ்ஞை மழைசெத் தாலும்

தன்புன லாடுந ரார்ப்பொடு மயங்கி'' (பதிற். 90: 42)

என்ற அடிகளில் உழவர்கள் தண்ணுமைப் பறையினை இசைத்ததால் அவோசையை மேகத்தின் ஒலி எனக் கருதி மயில்கள் ஆரவாரம் செய்கின்றன. தண்ணுமை என்னும் கருவியின் ஒலி மேகத்தின் ஒலி போன்று இருந்ததால் மயில்கள் மயங்கி ஆடியுள்ளது.

3.8. பறவைகளின் சமூக உணர்வு

பறவைகள் கூட்டமாக வாழும் இயல்புடையவை. தனக்குக் கிடைத்த உணவைத் தன் இனமான மற்ற பறவைகளை அழைத்து பகிர்ந்துண்ணும் பண்பாடு உடையவை. இரைதேடிப் பல இடங்களுக்கு சென்றாலும் மாலையில் தங்களின் இருப்பிடம் நோக்கி வந்து கூட்டமாகத் தங்கி வாழும் தன்மை உடையவை.

3.8.1. அன்னத்தின் சமூக உணர்வு

அன்னப்பறவைகளுக்கு இயற்கையாகவே சில அறிதல் பண்புகள் காணப்படுகின்றன. ''உப்பங்கழியில் உள்ள மீனை பிடித்து உண்ணும் அன்னம்

மணல்மேட்டில் தம் சிறகை உலர்த்தும்.''[31] குருகுகள் பெரும்பாலும் கூட்டமாகக் காணப்படும் என்று கூறுவர். ''கூட்டமாக மீன்களைப் பிடித்து உண்டபின் இறக்கைகளை விரித்துக் கோதிக்கொண்டுக் காணப்படுவதாகப் பறவை நூலார் கூறுவர். மணல் மேட்டிலோ அல்லது பாறையிலோ ஏறி இறகுகளைக் கோதி உலர்த்திக் கொண்டிருக்குமென்று கூறுவர்.''[32] சிறகை உலர்த்துவது அன்னத்தின் இயற்கை குணமாகக் காணப்படுகிறது.

''மடநடை மாயினம் அந்தி யாமைத்
திடன்விட் டியங்கா இமையத் தொருமால்'' (கலி . 92: 17–18)

என்ற அடிகளில் இரை தேடிச் சென்ற அன்னங்கள் மாலைப் பொழுதை அறிந்து தனது இருப்பிடம் நோக்கிச் சென்று தங்குவது அன்னத்தின் சமூக ஒற்றுமையை சுட்டுகின்றது.

3.8.2. காக்கையின் சமூக உணர்வு

காக்கைகள் பகிர்ந்துண்ணும் பழக்கம் கொண்டவை உணவு கிடைத்தவுடன் தன் சமூகத்தை அழைத்துண்ணும். அதேபோல் ஒரு காக்கை இறந்துபட்டால் மற்ற காக்கைகள் கரைந்து கொண்டே பறக்கும். இவைகள் காக்கையின் சமூக அமைப்பைக் காட்டுகின்றன. காக்கை கூட்டம் ஆலமரக் கிளைகளில் தங்குகின்றன. எய்னர் வில்லால் இறந்து விழுந்தவரின் பிணங்களை அக்காக்கைகள் கவர்ந்து உண்ணும் என்பதை,

''மணிவாய்க் காக்கை மாநிறப் பெருங்கிளை
பிணிவீழ் ஆலத் தலங்குசினை யேறிக்
கொடுவில் எயினர் குறும்பிற் கூக்கும்

கடுவினை மறவர் வில்லிடத் தொலைந்தோர்

படுபிணங் கவரும் பாழ்படு நனந்தலை'' (அகநா. 319: 1–5)

என்ற பாடலடிகள் சுட்டும். ''சாம்பற்கழுத்துக் காக்கைகள் சமூகங்களில் கூடி வாழும். காலையில் தங்கள் அடை மரங்களை விட்டுத் திரள் திறனாகப் பறந்து இரைதேடிச் செல்லும், மாலையில் மறுபடியும் நூற்றுக்கணக்காக அடை மரங்களில் வந்து கூடும் இவை நாட்டுப்புறங்களிலும் நகரங்களிலும் மனிதர் இருப்பிடங்களை ஒட்டி வாழும் அண்டங் காக்கைகளும் சிறு கூட்டங்களாகக் கூடி இருக்கும்''[33] இவற்றின்வழி, காக்கைகள் கூட்டமாக ஒரு சமூக அமைப்புடன் ஒற்றுமையாக வாழும் என்பதை அறியமுடிகின்றது.

3.8.2. கிளிகளின் சமூக உணர்வு

கிளிகள் மரங்களில் துளையிட்டு அதில் வாழ்பவை இவை கூட்டமாகவே இரைதேடச் செல்லும் சங்க இலக்கியங்களில் தினைப்புனம் காத்தல் இடம்பெறுகின்றது. இன்றும் தானியங்கள் விளையும் காலங்களில் கிளிகளை விரட்டுவது வழக்கம். கிளிகள் கூட்டமாக இரைதேடிச் செல்வதால் அவற்றை விரட்டுவது. ஒரு பணியாக உள்ளது. சிவப்பு வண்ண வாயையுடைய கிளியை விரட்ட கடி என்னும் கருவியைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை,

''செவ்வாய்ப் பாசினங் கடிஇயர் கொடிச்சி'' (நற். 134: 4)

என்ற அடிகள் சுட்டும். ''தினைப்புனம் காக்கக் கிளிக்கூட்டங்களை ஓட்ட கிளிக்கடிக் கருவியைக் கொண்டு செல்வர்''[34] இதன்வழி கிளிகள் கூட்டமாக ஒரு சமூகமாக வாழும் இயல்புடையவை என்பதை அறிய முடிகின்றது.

3.8.4. குருகின் சமூக உணர்வு

குருகுகள் கூட்டமாக வாழும் தன்மை கொண்டவை "நெய்தலை நீக்கி மீன் உண்ட குருகு தன் இனத்தோடு கூடிக் கானலில் தங்குகின்றது"[35] குருகுகள் ஒரே இடத்தில் ஒரு சமூகமாக தங்கும் என்ற செய்தி குறிப்பிடப்படுகின்றது. மாலைப்பொழுதில் மீன் உண்ட குருகின் கூட்டம் புன்னை மரத்தில் உள்ள கூடுகளில் சென்று சேர்வதை,

"மீனார் குருகின் மென்பறைத் தொகுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
அசைவண் டார்க்கும் அல்குறு காலைத்" (அகநா. 40:3–5)

என்ற அடிகள் உணர்த்தும்.

வெள்ளாங் குருகுகள் காலையில் கூட்டமாக எழுந்து வயலில் கதிர்களை உண்டு கடற்கரைப் பகுதியில் கூட்டமாக அமர்கின்றன இது குருகின் சமூக ஒற்றுமையைக் காட்டுகின்றன. இதனை,

"பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ
ஆர்கலி வளவயிற் போதொடு பரப்பப்
புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரப்
நலங்கவர் பசலை நலியவும் நம்துயர்" (அகநா. 273: 2–5)

என்ற அடிகள் புலப்படுத்தும்.

3.8.5. குருவியின் சமூக உணர்வு

குருவிகளில் பல இனங்கள் உள்ளன. அவை தனித்தனிக் கூட்டமாக வாழும் இயல்புடையவை. குருவிகள் கூட்டமாக இரை தேடச் செல்லும் காட்சியை,

“நிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇயர் ஓராங்கு
இறைதேர் கொட்டின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்த தாங்கு” (அகநா. 303: 11–14)

என்ற பாடலடிகள் விளக்கும். கதிர்கள் முதிர்ந்தால் நெற்கதிர்களைக் கொண்டு வர குருவிக் கூட்டம் காலையில் வரிசையாகப் பறந்து போகும். அவைகள் கூடி நெற்கதிர்கள் உள்ள இடங்களைத் தேடி அலைந்து நெற்கதிர்களுடன் மாலையில் தன் இருப்பிடம் திரும்பும். இதில் குருவிகள் உணவுதேடச் செல்லும்போது தன் இனத்துடன் ஒரே கூட்டமாக ஒற்றுமையாக செல்வதைக் காணஇயலும்.

3.8.6. கூகையின் சமூக உணர்வு

காரியாகி சிறுநாமல்லி என்ற நாட்டின் தலைவன் நிறையை மீட்க கூகை தன் இனத்தை அழைக்கும்படி அலைத்து மீட்டுத்தந்து நடுகல் ஆகினான் என்பதை,

“உழைக்குரற் கூகை யழைப்ப வாட்பூ
நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவட் டந்து நடுக லாகிய” (புறநா. 261: 12–15)

என்ற புறநானூற்றுச் செய்தி விளக்கும். இதில் கூகை தன் இனத்தை உணவு தேட அழைத்து ஒன்று சேர்ப்பது கூகையின் சமூக உணர்வைக் காட்டுகின்றது.

3.8.7. நாரையின் சமூக உணர்வு

நாரை உணவைக் கூட்டமாக இணைந்தே உண்ணுகின்றன என்பதை,

''நீர்பெயர்த்து மாறிய செறிசோற்று அள்ளல்
நெய்த்தலைக் கொழுமீன் அருந்த இனக்குருகு
குப்பை வெண்மணல் ஏறி அரைசர்
ஒண்படைத் தொகுதியின் இலங்கித் தோன்றும்'' (நற். 291: 1–4)

என்ற அடிகள் விளக்குகின்றன.

மீனை உண்ணும் பறவைக்கூட்டம் மாலை நேரத்தில் ஒன்று கூடுவதை,

''மீனார் குருகின் மென்பறைத் தொகுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர'' (அகநா. 40: 3–4)

என்ற அடிகள் குறிப்பிடும். ''நாரைகள் இனமாக ஒலி நீலி இரை கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. கூட்டமாக இரைதேடும் போது அடிக்கடி ஒருவகை ஓசை செய்யுமென்று கூறுவர்''[36] என்கிறார் பி.எல். சாமி. பறவைகள் இரவு ஒரே கூட்டமாக ஒன்றாகத் தங்குகின்றன என்பதை அறியமுடிகின்றது.

3.8.8. பருந்தின் சமூக உணர்வு

பருந்துகளும் காக்கையைப் போலவே தனக்குக் கிடைத்த உணவைத் தனித்து உண்ணாமல் தன் கூட்டமாகிய சமூகத்தை அழைத்து பகிர்ந்து உண்ணுகின்றன. இதனை,

''படுமுடை நசைஇய வாழ்க்கைச் செஞ்செவி
எருவைச் சேவல் ஈண்டுகிளை பயிரும்
வெருவரு கானம் நீந்திப் பொருள் புரிந்து'' (அகநா. 161: 5–7)

“பாறுகிளை பயிர்ந்து படுமுடை கவரும்” (அகநா. 175:5)

என்னும் அடிகள் விளக்குகின்றன.

“ஏறுவேட் டெழுந்த இனந்தீர் எருவை

ஆடுசெவி நோக்கும் அத்தம் பனைத்தோள்” (அகநா. 285: 10–12)

என்ற அடிகளில் கூட்டத்தை விட்டு இரைதேட வந்த பருந்து வானில் தன் கூட்டத்தைத் தேடும் காட்சி பருந்துகள் கூட்டமாகவே வாழும் என்பதை உரைக்கின்றன.

3.8.9. மயில்களின் சமூக உணர்வு

மயில்கள் கூட்டமாக வாழும் பறவை என்பதை,

“..... எள்ளத்

தொகுப்புடன் அகுவ போலுமயில் கையில் ” (கலித். 33: 17–18)

என்ற அடி விளக்கும்.

“கான மஞ்ஞை கானொடு சேப்ப” (புறநா. 127:4)

என்ற புறநானூற்று அடியில் மயில்கள் தங்களின் இனத்தோடு தங்கும் என்பது அதன் சமூக உணர்வை வெளிப்படுத்துகின்றது.

3.9. பறவைகளின் பாதுகாப்பு உணர்வு

உலகில் தோன்றி அனைத்து உயிரினங்களும் தங்களின் முதன்மைத் தேவைகளில் உணவுக்குப்பின் பாதுகாப்பையையே தேடுகின்றன. அவ்வகையில் பறவைகளும் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

3.9.1. காக்கையின் பாதுகாப்புணர்வு

சிறுவெண்காக்கை மரங்களில் கூடு கட்டி வாழும் பறவை. அவை "கூடுகட்டும் போதே தன் பார்பிற்குத் துன்பம் வராமல் இருக்க பாதுகாப்பான இடத்தை தேர்ந்தெடுத்து கூடுகட்டும்."[37] காக்கை தன் பாதுகாப்பை விட தன் இனம் பாதுகாப்பாக வளரவேண்டும் என்று எண்ணுவதை அறியஇயலும்.

"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
பொன்னிணர் ஞாழன் முனையிற் பொதியவிழ்
புன்னையம் பூஞ்சினைச் சேக்குஞ் துறைவ" (ஐங். 169: 1–3)

என்பதில் காக்கையானது ஞாழல் பாதுகாப்பான இடம் என்பதை உணராமல் புதிதாக இதழ்விடும் புன்னைமரக் கிளையில் சென்று உறைகின்றது. இன்றும் கிராமத்தில் பறவைகள் பாதுகாப்பு இல்லாத இடத்தில் கூடுகட்டினால் அப்பருவத்தில் மழை குறைவாகப் பொழியும் என்றும் மிகவும் பாதுகாப்பான இடம்தேடிக் கூடுகட்டினால் நல்ல மழைப்பொழிவு உண்டு என்றும் கூறுகின்றனர்.

3.9.2. கோழியின் பாதுகாப்பு உணர்வு

கோழிகள் தங்கள் வாழ்வில் எப்போதும் விழிப்புணர்வுடன் பாதுகாப்பாக இருக்கும். தன் எதிரியின் வரவை உணர்ந்தவுடன் ஒலியை எழுப்பித் தன் இனத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும். அவ்வகையில்,

"மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருசினம் மாலை உற்றெனப்
புகுமிடன் அறியாது தொகுப்புடன் குழிஇய

பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு

இன்னாது இசைக்கும் அம்பலொடு

வரால் வாழியர் ஐய எம்தெருவே'' (குறுந். 139: 1–6)

என்று கோழி காட்டுப்பூனையின் வருகையை அறிவித்துக் கூவும் ஓசை அக்குஞ்சுகளுக்கு துன்பத்தைத் தருகின்றது. தாயின் ஓசையை குஞ்சுகள் அறிந்துகொள்கின்றன. ''குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காகப் பறவைகள் பகைவரை எதிர்த்து மிகத் துணிச்சலுடன் போராடும். சிறிய கொண்டைக்குருவி ஒன்று பருந்தொன்றைத் தாக்கி துரத்தியடித்ததை நான் பார்த்திருக்கின்றேன். ஆபத்து வரும் என்று தெரிந்தால் பறவைகள் ஓர் எச்சரிக்கை ஒலி கொடுக்கும். உடனே சிறு குஞ்சுகள் தங்கள் தாயின் சிறகுகளுக்குள் புகுந்து கொள்ளும்''[38] தாய்ப்பறவை எழுப்பும் விழிப்புணர்வு ஒலியைக் கேட்டவுடன் இளம்பார்ப்புகள் தங்களைப் பாதுகாத்து கொள்ளவேண்டும் என்ற உணர்வுடன் செயல்படுகிறது.

3.10. பறவைகளின் வீர உணர்வு

பாம்பைக் கண்டால் படையே நடுங்கும் என்பர். ஆனால் பாம்பு மயிலைக் கண்டு அஞ்சுகின்றது.

''விரவுப்பொறி மஞ்ஞை வெரீஇ யரவின்

அணங்குடை யருந்தலை பைவிரிப் பவைபோல்

காயா மென்சினை தோய நீடிப்'' (அகநா. 108: 13–15)

என்பதில் மயிலின் வீரத்தை பார்த்துப் பாம்பு அஞ்சிப் படமெடுப்பது போல காயா மரத்தின் பூக்களை வண்டுகள் குடைகின்றன. ''சிறிதோ பெரிதோ எல்லா பாம்புகளுக்கும் மயிலும் எமன் என்பது ஊரறிந்த உண்மை.''[39]

“பாம்பைக் கொல்வதிலும் கொன்று கூறுபோடுவதிலும் மயிலின் தீரம் பற்றி அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ளது.”[40] மயில்கள் பாம்பைக் கொல்லும் திறம் கொண்டவை.

3.11. பறவைகளின் அறிதல் உணர்வு

பறவைகளுக்குத் தங்களின் வாழ்வியல் சிக்கலைத் தீர்த்துக் கொள்ளவும். பாதுகாத்துக் கொள்ளவும் அறிதல் உணர்வுகள் இயற்கையாக அமைந்துள்ளது.

3.11.1. கிளியின் அறிதல் உணர்வு

கிளிகள் தங்களுக்குத் தேவையான உணவுகள் எந்த காலத்தில் எங்கு விளைந்திருக்கும் என்பதை அறிந்து செயல்படுகின்றது. இதனை,

“எய்யா வரிவில் அன்ன பைந்தார்ச்
செவ்வாய்ச் சிறுகிளி சிதைய வாங்கிப்
பொறைமெலிந் திட்ட பண்புறம் பெருங்குரல்
வளைசிறை வாரணங் கிளையொடு கவர” (அகநா. 192: 5–8)

என்ற அடிகளில் விளக்குகின்றன. பயிர்கள் விளையும் காலத்தை அறிந்து கொண்டுதான் அவற்றைக் கிளிகள் உண்ணுகின்றன.

3.11.2. கோழியின் அறிதல் உணர்வு

கோழிகள் தங்கள் எதிரியின் வரைவையுணர்ந்து இளங்குஞ்சுகளைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் இயற்கையையும் உணர்ந்து செயல்படுகின்றது.

''குவியினர்த் தோன்றி ஒன்பூ வண்ண
தொருசெந் நெற்றிக் கனம்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்எலி பார்க்கும்
பிள்ளை பெருகிற் கல்திரை யாகிக்
கடுநவைப் படஇயரோ நீயே நெடுநீர்
யாணர் ஊரன் தன்னோடு வதிந்த
ஏமஇன் துயில் எழும்பி யோயே'' (குறுந். 107: 1–7)

கோழி சேவல் பகலவன் உதிக்கும் முன்பே கூவி அதிகாலைப் பொழுதை அறிந்து அனைவருக்கும் அறிவிக்கும். அதனால் அனைவரும் அதிகாலைப் பொழுதை அறிந்து கொள்வர். சேவல்கள் தினமும் ஒரே நேரத்தில் கூவுகின்றன. இந்நிகழ்வு அனைவரையும் வியப்பிற்குள்ளாக்குகின்றன.

வைகறைக் காலத்தைச் சேவல்கள் கூவி அனைவருக்கும் அறிவித்தன. சேவல்கள் விடியற்காலைப்பொழுதை அறிந்து அதை அனைவருக்கும் அறிவிப்பதை,

''பொறமயிர் வாரணம் வைகறை இயம்ப'' (மதுரைக். 673)

என்ற அடி சுட்டும்.

3.11.3. பருந்தின் அறிதல் உணர்வுகள்

பருந்துகள் மிகுந்த உயரத்தில் பறந்தாலும் தரையில் உள்ள தனது உணவை அறிந்து குறிபார்த்து வேட்டையாடும் தன்மை கொண்டது.

''உலறுகுடை வம்பலர் உயர்மரம் ஏறி
ஏறுவேட் டெழுந்த இனந்தீர் எருவை
ஆடுசெவி நோக்கும் அத்தம் பணைத்தோள்'' (அகநா. 285: 10–12)

என்ற அடிகளில் பருந்துகள் செல்லும் திசையைக் கொண்டு வழிச்செல்வோர் அங்கு சடலம் உள்ளதை அறிந்து கொள்வர். இதனை பாலை வழியின் தன்மையை கூறுமிடத்து கூறப்பட்டுள்ளது. பருந்துகள் காடுகளின் இயற்கைத் துப்புறவாளர்கள் என்று கூறுவர். பருந்துகள் காடுகளில் எங்கு சடங்கள் இருந்தாலும் பருந்துகள் அங்கு கூட்டமாகச் சுற்றும்.

3.11.4. முதுசிரலின் அறிதல் உணர்வு

ஒவ்வொரு பறவையும் தனது வாழ்வியல் தேவைக்கான உணவு, உறையுள் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் அறிவைப் பெற்றுள்ளன. முதுசிரல் என்பது மீன்கொத்திப்பறவை.

> ‘‘எரியகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
> பொரியகைந் தன்ன பொங்குபல சிறுமீன்
> வெறிகொள் பாசடை யுணிஇயர் பைப்பயப்
> பறைதபு முதுசிரல் அசைபுவந் திருக்குந்
> துறைகே முரண் பெண்டுதன் கொழுநனை
> நம்மொடு புலக்கும் என்ப நாமது’’ (அகநா. 106: 1–6)

மீன்கொத்திப் பறவை மீனை பிடித்து உண்ணுவதற்கு ஏதுவாக தாமரை இலையில் நின்று மீனைப் பிடிக்கின்றது. இச்செயலானது மீன்கொத்தியின் அறிவை வெளிப்படுத்துகின்றது. பீனீக்கல் பறவை வலசை வரும்போது தன் அலகில் ஒரு சிறு குச்சியை கவ்விக் கொண்டு கடற்மேற்பறக்கும். கடலில் உணவுக்கும் ஓய்விற்கும் அவற்றைப் பயன்படுத்தி கொள்ளும். இது பறவைகளின் நுண்ணறிவைக் காட்டுகிறது.

3.11.5. மயில்களின் அறிதல் உணர்வு

மயில்கள் இயற்கையின் மாறுபாட்டை எளிதாக உணர்ந்து செயல்படுகின்றன. அவற்றைக் கண்டு மக்களும் தனது வாழ்வியலை அமைத்துக் கொள்கின்றனர். கார்காலம் என்பது அனைத்து உயிரினங்களும் கூடி இன்புறும் காலம். அக்கால வரவை உணர்ந்த மயில்கள் அதற்கான ஒலியை எழுப்புகின்றன. இதனை,

"நல்குடன் பூண்ட கானவில் புரவிக்
கொடிஞ்சி நெந்தேர் கடும்பரி தவிராது
இனமயில் அகவும் கார்கொள் வியன்புனத்து
நோன்சூட் டாழி ஈர்நிலம் துமிப்ப
ஈண்டே காணக் கடவுமதி பூங்கேழீப்" (அகநா. 344: 11–15)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இதே போன்று கார்ப்பருவ வரவை ஐங்குறுநூறு 413: 1–2 என்னும் அடிகளும் விளக்குகின்றன. மயில்கள் தாளத்திற்கேற்ப ஆடும் இயல்பினது என்பதை,

"நீலம் தன்ன நிறங்கிளர் எருத்திற்
காமர் பீலி ஆய்மயிற் றோகை
இன்றிங் குரல துவன்றி மென்சீர்
ஆடுதகை எழினலங் கடுப்பக் கூடிக்
கண்ணேர் இமடி தண்ணறுங் குவளைக்
குறுந்தொடர் அடைச்சிய நறும்பல் கூழை
நீடுநிர் நெடுஞ்சுணை ஆயமொ டாடாய்" (அகநா. 358: 1–7)

என்ற அடிகள் குறிப்பிடும்.

3.12. பறவைகளின் அச்சவுணர்வு

அச்சவுணர்வு புற செயல்பாட்டின் வழி அகத்தே தோன்றும் உணர்வு. எதிர்பாராமல் நடக்கும் நிகழ்வு, முயன்று ஏற்பட்ட செயலின் விளைவு மனதில் ஏற்படுத்திய தாக்கம் போன்றவை இதற்குக் காரணமாகலாம். பறவைகளின் வாழ்வியல் கூறுகளில் அச்சவுணர்வை அவற்றின் செயல்பாட்டின் வழி அறியமுடியும்.

காடுகளில் பறவைகள் கூட்டமாக இருக்கும் இடத்தில் மனித நடமாட்டத்தைக் கண்டாலே அஞ்சுகின்றது. பறவைகள் சரணலாயம் இருக்கும் இடங்களில் தீபாவெளி அன்று வெடிகள் வெடிப்பதில்லை. நன்நிகழ்ச்சிகளில் இசைகருவிகள் வாசிப்பதில்லை. ‘‘பறவைகளை அச்சமடையச் செய்யும் என்பதால் தீபாவளி போன்ற பண்டிகைகளின் போது கூத்தங்குளத்தில் யாரும் பட்டாசு கூட வெடிப்பதில்லை. கூந்தங்குளத்தில் இதுபோன்ற பல ஊர்க் கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. இப்படிப்பட்ட அக்கறை மிகுந்த பாதுகாப்பால் பறவைகள் தொந்தரவைச் சந்திப்பதில்லை மக்களுடன் இணக்கமாக வாழ்கின்றன.’’[41] ‘‘பறவைகளுக்குத் தொந்தரவு என்று தீபாவளியின் போது பட்டாசு வெடிக்காத கிராமங்களில் பெயர் பெற்றவை சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடி பறவை சரணாலயம் அமைந்துள்ள கிராமங்கள். தமிழகத்தின் இரண்டாவது பழமையான பறவை சரணலாயமாக இது 1977 இல் உருவாக்கப்பட்டது.’’[42]

இன்று பறவைகளின் வாழ்வியல் என்பது மிகவும் இடையூறுகள் நிறைந்ததாக உள்ளது. அதிகப் பறவைகள் உணவுக்காக வேட்டையாடப் படுவதால் பல இனங்கள் அழிந்து பட்டது. பல இனங்கள் அழியும் தருவாயில்

உள்ளது. எனவே பறவைகளைப் பாதுகாக்கச் சரணாலயங்கள் அமைக்க வேண்டியுள்ளது.

3.12.1. கிளிகளின் அச்சவுணர்வு

சங்ககால மக்கள் தினைப் பயிரை உண்ணும் கிளிகளை விரட்ட ''தட்டை'' என்னும் கருவியால் ஒலியெழுப்பி விரட்டியுள்ளனர். இதனை,

''ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறும்
கிளிகடி மகளிர் வளிபடு பூசல்'' (மலைபடு. 328–329)

என்ற அடிகள் குறிப்பிடும். அகநானூற்றிலும் ''கிளியை விரட்ட தட்டை என்னும் கருவியை பயன்படுத்தியமை கூறப்பட்டுள்ளது.''[43]

''உண்கிளி கடியும் கொடிச்சிகைக் குளிறே'' (குறுந். 360: 6)

என்னும் அடியில் கிளிகளை விரட்ட குளிர் என்ற கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது இது சிலம்பை போல் ஒலியை உண்டாக்கும் தன்மை கொண்டது.

''தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது
பைந்தாள் செந்தினைப் படுகிளி ஒப்பும்'' (நற். 104: 5–6)

என்ற அடிகள் தினைக்கதிரை உண்ணவந்த கிளிகளை தொண்டகப் பறை கொண்டு அச்சுறுத்தி ஓட்டியுள்ளமையை அறிய இயலும்.

''அவல் இடிக்கும் ஓசைக்கும் கிளி அச்சப்பட்டுள்ளது''[44] கிளிகள் தங்களுக்குப் பழக்கமில்லாத ஒலிகளுக்கு அச்சமடைகின்றன என்பதை

அறிந்து கருவிகளில் ஒலியெழுப்பி கிளிகளை விரட்டியுள்ளனர் சங்ககால மக்கள்.

3.12.2. கோழியின் அச்சவுணர்வு

கோழிகள் ஒலியைப் பிரித்து உணரும் தன்மை கொண்டவை. புதிய ஒலியைக் கேட்டால் அவை அச்சப்படும்.

"முதல்வநின் யானை முழக்கம் கேட்ட
கதியிற்றே காரின் குரல்
குரல்கேட்ட கோழி குன்றதிரக்கூவ
மதநனி வாரணம் மாறுமா றதர்ப்ப
எதிர்குதிர் ஆகின் றதர்ப்பு மலைமுழை" (பரி. 8: 17–21)

என்ற அடிகளில் யானை பிளிரும் ஒலிகேட்டுக் கோழிகள் அஞ்சிக் கூவியுள்ளன. "பழமுதிர்சோலை அருவியின் ஓசைக்கு அஞ்சி கோழிகள் ஓடின."[45] யானையின் பிளிரலுக்கும் அருவி ஓசைக்கும் கோழிகள் அஞ்சுகின்றது.

3.12.3. பருந்துகளின் அச்சவுணர்வு

பருந்தைக் கண்டு சிறிய பறவைகள் அஞ்சும். ஆனால் சில வேளைகளில் பருந்தும் அஞ்சுகின்றது என்பதை,

"செங்கணை தொடுத்த செயல்நோக்கு ஆடவர்
மடிவாய்த் தண்ணுமைத் தழங்குகுரல் கேட்ட
எருவைச் சேவல் கிளைவயிற் பெயரும்
அருஞ்சுரக் கவலை யஞ்சுவரு றனந்தலைப்" (நற். 298: 2–5)

என்னும் நற்றிணை அடிகள் உணர்த்தும் தண்ணுமை கருவிக்கு பருந்துகள் அஞ்சுகின்றன.

"எருவை யிருஞ்சிறை யிரீஇய விரியிணர்த்
தாஆண் தும்பி முரலிசை கடுப்பப்
பரியின துயிர்க்கும் அம்பினர் வெருவர" (அகநா. 291: 10–12)

என்ற அடிகள் பிணங்களை உண்ணவரும் பருந்துகள் கள்வர்கள் செலுத்தும் அம்புகள் விரைந்து செல்லும் ஓசையினால் அஞ்சி ஓடும் என்கின்றது.

"அழல்போல் செவிய சேவல் ஆட்டி
நிழலொடு கதிக்கும் நினம்புரி முதுநரி
பச்சூர் கொள்ளை மாந்திவெய்து உற்றுத்" (நற். 352: 4–6)

என்ற அடிகளில் பிணங்களை உண்ணவந்த கழுகை அச்சமுற்று ஓடுமாறு நரி விரட்டியது என்பதில் நரிக்குக் கழுகு அஞ்சியதை அறியஇயலும்.

3.12.4. புறாவின் அச்சவுணர்வு

புறாக்கள் முன்பு நடந்த இன்னல்களை மனதில் வைத்துக்கொண்டு அதுபோன்ற செயல்களை எண்ணி அச்சமுறுகின்றன. "புறாக்கள் சிலந்தி வலைகளைக் கண்டு அஞ்சும்."[46] வேட்டுவன் வலையில் சிக்கித் தப்பிய புறா சிலந்தியின் வலையைக் கண்டு அச்சமுறுகின்றது.

"கூருகிர்ப் பருத்தி னேறுகுறித் தொரிஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் கீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக" (புறநா. 43: 5–8)

என்ற அடிகளில் சிபி மன்னனின் பெருமையைக் கூறும்போது பருந்துக்கு அஞ்சிய புறாவை காக்க துளாக்கோல் ஏறியவன் என்று கூறுவதில் பருந்துக்குப் புறா அஞ்சுவதைக் காணஇயலும்.

3.12.5. மயில்களின் அச்சவுணர்வுகள்

தன் விடத்தின்மையால் பிற உயிரினங்களில் உயிரைக் கொல்லும் பாம்புகளையே கொல்லும் தன்மை கொண்டது. மயில் ஆனால் மயில்களும் சில செயல்களைக் கண்டு அச்சப்படும்.

''காமர் பீலி ஆல்மயிற் றோகை
வேறுவே றனத்த வரைவாழ் வருடைக்
கோடுமற் றிளந்தகர் பாடுவிறந் தியல
ஆடுகள வயிரின் இனிய ஆலிப்
பசுபுற மென்சீர் ஓசிய விசும்புகந்து
இருங்கண் ஆடமைத் தயங்க இருக்கும்
பெருங்கல் நாடன் பிரிந்த புலம்பும்'' (அகநா. 378: 5–11)

அனைவரும் விரும்பக்கூடிய தோகையை உடைய மயில்கள் வருடையின் ஒலியைக் கேட்டு அஞ்சி ஒலியெழுப்பியபடி வானில் பறந்தது மூங்கிலில் அமர்ந்து கொண்டது. ''அருவியின் ஒலிக்கும் மயில்கள் அஞ்சுவதுண்டு.''[47] மேலும்

''புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை'' (ஐங் 295:3)

என்ற அடியில் குறவர்கள் காட்டிற்கு மூட்டிய தீக்கு அஞ்சி மயில்கள் விரைந்து ஓடின. மயில்கள் மிகுதியான ஒலிக்கும் காட்டுத்தீக்கும் அஞ்சுகின்றன. ஆனால் பழக்கப்பட்ட ஒலிக்கு அஞ்சுவதில்லை.

3.12.6. நாரைகளின் அச்சவுணர்வு

நீர்வளம் நிறைந்த பகுதிகளில் நாரைகள் வாழும் அந்நீரின் ஒலியை கேட்டு நாரைகள் அச்சம்கொள்கின்றன. "மருதநிலத்தில் கரும்பு, நெல் அறுவடை செய்வோர் பாடும் பாட்டின் ஒலியைக் கேட்டு அஞ்சி நாரைகள் அவ்விடமிருந்து நீங்கின. கடல் அலையின் ஒலி மகுதியாகியதால் அச்சப்பட்டு பனைமரங்களில் சென்று தங்கின."[48] நாரைகள் பழக்கப்பட்ட ஒலிக்கு அஞ்சுவதில்லை. பழக்கத்திற்கு மாறாக மிகுதியாகக் கேட்டாலும் நாரைகள் அஞ்சுகின்றன.

3.13. பறவைகளின் துன்ப உணர்வு

துன்பங்கள் சூழலுக்கு ஏற்றவாறு மாறுபடும் தன்மை கொண்டது. அதுபோல ஒவ்வொரு தனிப்பட்ட உயிர்களுக்கும் உணர்வுநிலைகளில் மாற்றம் காணப்படும். துன்பம் என்பது மனநிலையைப் பொருத்தது. "இழப்பு, நோய், மோசமான நிகழ்வுகள் போன்றவற்றால் ஒருவருக்கு ஏற்படும் மனத்தை வருந்தச் செய்யும் உணர்வு. மனத்துக்கு மகிழ்வு தராத உணர்வு, Misery suffering Pain. யாருக்கும் எந்தத் துன்பமும் இருக்கக் கூடாது"[49] என்று விளக்கம் தருகின்றது க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. துன்பம் என்பது பறவைகளிடத்தும் காணப்படுகின்றது. பறவைகளின் துன்பத்தைப் புலவர்கள் உணர்ந்து தங்களின் பாடல்களில் கையாண்டுள்ளனர். பறவைகளின் வாழ்வே ஒரு போராட்டத்தில் தான் அமைந்துள்ளது. எந்த நேரத்திலும் அவற்றிக்கு இன்னல்கள் ஏற்படும். அவ்வின்னல்களை எதிர்கொண்டு திறமையாக வாழ்ந்தாலும் சில சூழல்களில் அவையும் துன்பப்படுகின்றன.

3.13.1. அன்றில் பறவையின் துன்பம்

அன்றில் பறவை தன் துணையின் பிரிவை எண்ணி வருந்துகின்றது.

''மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத்
துணைபுணர் அன்றில் உயவுக்குரல் கேட்டொறும்
துஞ்சாக் கண்ணள் துயரடச் சாஅய்'' (நற். 303: 3–6)

என்ற அடிகளில் பனைமரத்தின் கிளையில் துணையைப் பிரிந்த அன்றில் பறவை துயரக்குரல் எழுப்புகிறது.

''மையிரும் பனைமிசைப் பைதல உயவும்
அன்றிலும் என்புறம் நரலம் அன்றி
விரல்கவர்ந்து உழந்து கவர்வின் நல்யாழ்
யாமம் உய்யாமை நின்றது'' (நற். 335: 7–9)

என்ற அடியிலும் துணையைப் பிரிந்த அன்றில் பறவையின் சோகக்குரல் வெளிப்படுகின்றது. ''இரவில் துணையோடு சேர வாய்ப்புக் கிடைக்காத அன்றில் துன்பத்தோடு வருந்தக் கொண்டிருக்கும் நிலையைக் காணஇயலும்.''[50] ''அன்றில் பறவையின் துன்பக்குரல் தலைவியை துன்பப்படுத்தியதுமுண்டு.''[51]

''பலவே யாமம் பையுளு முடைய
சிலவே நம்மோ டுசாவு மன்றில்
அழலவிர் வயங்கிழை யெலிப்ப உலமந்'' (கலி. 137: 3–5)

இப்பாடலடிகளில் தலைவியின் பிரிவுத் துன்பத்தை அன்றில் பகிர்ந்து கொள்வதாக கூறுகிறார். இவற்றிலிருந்து அன்றில் பறவை துணையைப் பிரிந்து துன்பப்படுகிறது.

3.13.2. குருகின் துன்ப வுணர்வு

குருகு இயற்கையாக ஏற்பட்ட வறட்சியால் துன்பப்படுகிறது என்பதை,

"நீந்து குருகுருகும் என்றூழ் நீளிடை
உளிமுக வெம்பரல் அடிவருந் துறாலில்
விளிமுறை அறியா வேய்கரி கானம்" (அகநா. 55: 2–4)

என்ற பாடலடிகள் விளக்கும். பறவைகள் வருந்த ஞாயிற்றின் வெப்பம் மிகுதியாகக் காணப்படுகின்றது. பறவைகள் எப்போதும் இயற்கையின் மாற்றத்திற்கு ஏற்றவாறு இடம்பெயரும் தன்மை கொண்டது. அவ்வாறு பறவைகள் வருந்தும் நிலமாகப் பாலைநிலம் உள்ளது. பறவைகளின் வாழ்வியலில் பாலைநிலத்தின் தன்மை உரைக்கப்படுகிறது. துணையைப் பிரிந்து வாழும் பெண்குருகு பற்றி

"இன்றுணை நீநீப்ப இரவினுல் துணையாகித்
தன்றுணைப் பிரிந்தயாஅந் தனிக்குரு குசாவுமே
ஒண்சுடர் ஞாயிற்று விளக்கத்தான் ஒளிசாம்பு" (கலித். 121: 15–18)

என்ற கலித்தொகைப் பாடலடிகள் சுட்டும். குருகிற்கு இயற்கையினாலும் துன்பம் உண்டாகின்றது. தன் இணையைப் பிரிந்தும் துன்பப்படுகின்றது என்பதை சங்கப்புலவர்கள் விளக்கியுள்ளனர்.

3.13.3. கொக்கின் துன்பவுணர்வு

கொக்கு நீர்வளம் மிகுந்த பகுதியில் வாழும் பறவை. சில வேலைகளில் அவற்றிற்கு உணவு கிடைக்காமல் துன்பப்படும் அவலநிலையும் ஏற்படும்.

“குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை
இருஞ்சேற்று அள்ளல் நாட்புலம் போகிய
கொழுமீன் வல்சிப் புன்தலைச் சிறாஅர்
நுண்நான் அவ்வலைச் சேவல் பட்டென
அல்குறு பொழுதின் மெல்திரை மிசையாது
பைதற் பிள்ளை தழீஇ ஒய்யென
அங்கப் பெண்ணை யன்புற நரலுஞ்” (அகநா. 290: 1–7)

தலைவனின் ஊரை கூறும் பொழுது மீன்பிடிக்கச் சிறுவர்கள் வைத்த வலையில் ஆண்கொக்கு அகப்பட்டது. அதன் பேடை ஆண் கொக்கை காணாமல் கூட்டில் இரை எடுக்காமல் குஞ்சுகளை அனைத்துக் கொண்டு துன்பக் குரலோடு கூவுகின்றது. ஆண்கொக்கிற்கு நேர்ந்த நிகழ்வு பற்றித் தெரியாமல் பெண் கொக்குத் தவிக்கின்றது. பெண்கொக்கிற்கு உணவு கொடுக்க முடியவில்லை என்று ஆண்கொக்கும் துன்பப்படுகிறது.

3.13.4. கூகையின் துன்ப வுணர்வு

மற்ற பறவைகளைப் போலன்றி கூகையின் துன்பத்தைப் புலவர்கள் பல்வேறு கோணங்களில் அழகாகப் பாடியுள்ளனர். பரணரின்,

“கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் ஞிமிலியொடு பொருதுகளம் பட்டெனக்
காணிய செல்லாக் கூகை நாணிக்
கடும்பகல் வழங்கா தாஅங்கு இடும்பை” (அகநா. 148: 7–8)

என்ற பாடலடிகள் கூகையின் துன்பத்தை வெளிப்படுத்துகின்றது. ஆஅய் எயினன் பறவைகளின் பாதுகாவலனாக விளங்கியவன். அவன் ஞிமிலியோடு

போரிட்டு இறக்க அனைத்துப் பறவைகளும் இறப்பு நிகழ்வில் கலந்து கொள்கின்றன. ஆனால் பகற்குருடாகிய கோட்டான் தனது குறைபாட்டிற்காக மனத்துன்பம் அடைந்தது. இவ்வாறு பறவைகளின் உணர்வுகளையும் அதன் தன்மையையும் அறிந்துகொள்ள இயலும்.

"ஒழுகை யுய்த்த கொழுவில் பைந்துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றுங் குராலம் பறந்தலை" (பதிற். 44:17–19)

என்ற அடிகளில் தனது உணவாகிய இறச்சித் துண்டினை வைத்த இடம் தெரியாமல் மறந்துவிட்ட ஆண் கூகை தேடுகின்றது. தன்குறைபாட்டாலும் பசியாலும் கூகை துன்பமடைகின்றது.

3.13.5. நாரையின் துன்பவுணர்வு

நாரை தன் உணவைத் தேடுவது மிகவும் கடினமான செயலாக உள்ளது. வாடைக்காற்று வீசுவதால் நாரைகள் உணவுத் தேடுவதற்கு மிகவும் துன்பப்படுவதை,

"கடும்புனல் தொகுத்த நடுங்கஞர் அள்ளல்
கவரிதழ் அன்ன தூவிச் செவ்வாய்
இரைஞர் நாரைக் கெவ்வமாகத்
தூஉந் துவலைத் துயர்கூர் வாடையும்" (குறுந். 103:1–4)

என்ற அடிகள் உணர்த்தும். "கடல் அலைகள் மோதுகின்ற மரத்தில் நாரை அமர்ந்திருகிறது. அதன் சிறகுகள் வலிமை இல்லாததால் அத்துன்பத்தில் இருந்து மீளமுடியாமல் இருக்கின்றது."[52] நாரைகள் இயற்கை நிகழ்வுகளால் உணவுக் கிடைக்காமல் துன்பப்படுகின்றன.

3.13.6. பருந்தின் துன்பவுணர்வு

பருந்துகள் திடமான மனம் கொண்ட பறவை என்று கூறப்படுகின்றது. அப்பருந்தே துன்பப்படும் சூழல் காணப்படுகின்றது.

‘‘..... செகுந்த
பருமுடைப் பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ திடைய நீர்இல் ஆறே’’ (குறுந். 283: 6–8)

பருந்துகள் உணவு இல்லாமல் வழிப்போக்கர்களைக் கள்வர்கள் கொன்று போரிடுவதினால் உண்டாகும் புலாலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவலநிலை வெளிபடுகின்றது. பருந்துகள் உணவு இல்லாமல் துன்பப்படும் வழி சித்தரிக்கப்படுகின்றது. மேலும் பருந்துகள் கிடைத்த அனைத்து உணவுகளையும் உண்ணும் அவைகளும் உணவு இல்லாமல் துன்பப்பட்ட காலங்கள் இருந்திருக்கின்றன.

‘‘நீளெரி பரந்த நெடுந்தா ளியாத்துப்
போழ்வளி முழங்கும் புல்லென் உயர்சினை
முடைநகை இருக்கைப் பெடைமுகம் நோக்கி
ஊன்பதித் தன்ன வெருவரு செஞ்செவி’’ (அகநா. 51: 2–6)

வெப்ப மிகுதியால் வாடிய யாமரக் கிளைகளில் புலால் விருப்பத்தால் பெண்பருந்து அமர்ந்திருக்க, வெப்பமிகுதியால் பறந்து செல்ல முடியாமல் ஆண்பருந்து பெண் பருந்தின் முகம் பார்த்து அமர்ந்திருக்கும். வெப்ப மிகுதியால் பருந்துகள் துன்பப்படுகின்றன. வெப்ப மிகுதியால் உணவு தேடகூட

இயலாமல் துன்பப்படுகின்றது. இது இயற்கையினால் பருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள துன்பமாகும்.

பருந்துகள் பாலைநிலத்தில் தனிமையாய் வருந்துகின்றமையை,

''..... மராஅம் ஏறிப் புலம்புகொள

எறிபருந் துயவும் என்றூழ் நீயிடை'' (அகநா. 81:9)

என்ற அகநானூற்றுப் பாலைப்பாடல் விளக்கும். துணையை நினைத்துத் தனித்து வாழும் பெட்டைப் பருந்தின் புலம்பலை,

''உலறுதலைப் பருந்தி னுளிவாய்ப் பேடை

யலறுதலை யோமை யங்கவட் டேறிப்

புலம்புகொள விளிக்கு நிலங்காய் கானத்து

மொழிபெயர் பன்மலை யிறப்பினு

மொழிதல் செல்லா தொண்டொழ குணனே'' (ஐங். 381: 1–5)

என்ற அடிகள் விளக்கும். பருந்து தன் துணையைப் பிரிந்ததால் வருந்துகிறது.

3.13.7. புறாவின் துன்பவுணர்வு

பறவைகள் காலமாற்றத்திற்கு ஏற்றவாறு உணவு தேடும் இடங்களை மாற்றும் தன்மை உடையன. அவ்வாறு உணவுதேடும் இடங்களை அறிவதற்கும் செல்வதற்கும் துன்பப்படுகின்றன. மணற்பாங்கான இடத்தில் கிடைக்கும் கூழாங்கற்களை உண்ணும் வெப்பம் மிகுந்த மழை இல்லாத அச்சம் நிறைந்த காட்டுப்பகுதியில் இணையாக வாழும் அன்புறா தன் பெடையுடன் உணவு கிடைக்காமல் நெடுந்தொலைவு பறந்து சென்றமையை,

“நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்
பல்காய் அஞ்சினை யகவும் அத்தம்” (அகநா. 271: 1–8)

என்ற அடிகள் சுட்டும். புறாக்கள் உணவுக்காக நெடுந்தொலைவு அழைந்து திரிகின்றது. அவ்வாறு நெடுந்தொலைவு சென்றும் உணவுகிடைக்காமல் துன்பப்படுகின்றது.

“மனையுறை புறவின் செங்காற் சேவ
லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்” (நெடுநல். 45–47)

என்ற அடிகளில் ஆண்புறா தம் இணையோடு இணையாமலும் இரைதேடி உண்ணாமலும் இரவு பகல் தெரியாமலும் குளிரால் கால் கடுப்பதால் காலை மாற்றி அமர்ந்திருந்தன இயற்கையாக ஏற்படும் குளிர் புறாவிற்குத் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

3.13.8. மயில்களின் துன்பவுணர்வு

மயில்கள் அழகான பறவை என்பதாலும், அதன் இறைச்சி மருத்துவக் குணம் கொண்டது என்பதாலும் அதற்கு மக்களால் துன்பம் ஏற்படுகின்றது. தற்காலத்தில் மயில் தேசியப்பறவை என்பதால் அதனை பிடிக்கவும் ஊறுவிளைவிக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீறுபவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்படுகின்றது. மயிலை வலை கொண்டு பிடித்தமையை,

“ஓரி முருங்கைப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்கு யாம்” (குறுந். 244: 4–5)

என்ற பாடலடிகள் குறிப்பிடும். மயில் தனது தலைக்கொண்டை சிதைய பீலிகள் சாய வலையில் அகப்பட்டு துன்பப்பட்டது. சங்ககாலத்தில் மயில்களை வலைவிரித்துப் பிடித்துள்ளனர்.

''..... ஏகல் நெறியிடைப்
பைங்கொடிப் பாகல் செங்கனி நசைஇச்
கான மஞ்ஞைச் காமஞ்சூல் மாப்பெடை
அயிரியாற்று அடைகரை வயிரின் நரலுங்''(அகநா. 177: 8–11)

என்ற பாடலடிகளில் கோடை காலத்தில் மாலைப்பொழுதில் பாறைகளின் சூடு தாங்காமல் கருபத்தில் இருந்த பெண்மயில் நீர் வேட்கையால் துன்பப்படுகின்றது. கோடைகாலம் மயில்களை மிகவும் துன்பப்படுத்துகின்றது என்பதை அறியமுடிகின்றது.

தொகுப்புரை

பறவைகள் இணைபிரியாமல் காதலுடன் வாழ்கின்றது. சிறிதுநேரம் ஏற்படும் பிரிவையும் தாங்கிக்கொள்ளாமல் ஏக்கம் கொள்கின்றது. தன் காதல் இணையருக்கு உணவைத் தேடிக் கொடுத்து தங்களின் காதலை வெளிப்படுத்துகின்றது. ஆண்பறவைகள் பெண்பறவைகளைக் கவர்வதற்காக அழகாகக் கூடுகட்டுவது உடல் அழகை வெளிப்படுத்துவது போன்றவற்றைச் செய்கின்றன.

இன்பவுணர்விற்கு ஆண்பறவை பெண்பறவையை அழைப்பதாக சங்கப்புலவர்கள் கூறுகின்றனர். பறவைகளில் பெண் இன்பவுணர்விற்கான தன் இணையை தேர்ந்தெடுக்கின்றது. இதில் பெண் பறவைக்கு சுதந்திரம் உண்டு.

பறவைகள் தனித்தனிக் குடும்பமாக வாழ்கின்றன. அவைகளில் பார்ப்பை வளர்ப்பதில் தாய்ப்பறவை சிறப்பாகச் செயல்படுகிறது. தனித்து வாழும் திறமை வளரும்வரை இளம்பறவை தாயின் அரவணைப்பில் வளர்கின்றது.

பறவைகள் தங்களுக்கான நல்ல உணவும் பாதுகாப்பான உரையுளும் கிடைத்துவிட்டால் மகிழ்கின்றது. இவைகள் தங்களின் வாழ்வியலில் தங்களுக்கான கூடு அமைத்தல், இனப்பெருக்கக் காலத்தில் பெண்பறவைக்கான இருப்பிடம் மற்றும் உணவுகளைத் தேடுதல் போன்ற குடும்பப் பண்புகள் இப்பறவைகளிடம் காணப்படுகின்றது.

பறவைகள் எப்பொழுதும் தங்களின் சமூகத்துடன் ஒற்றுமையாக வாழ்கின்றன. அவைகள் தனித்தனிச் சமூக அமைப்புக் கொண்டே வாழ்கின்றன. பறவைகள் தங்களுக்கு இன்னல் ஏற்படும் பொழுது ஒலியெழுப்பித் தன் இனத்தை எச்சரிக்கையடைய வைக்கின்றன. தங்களுக்கு இடையூறு செய்யும் உயிரிகளை எதிர்த்து வீரத்துடன் போரிடுகின்றன.

பறவைகள் இயற்கை நிகழ்வுகளையும், திசைகளையும் தனக்கான உணவுக்கிடைக்கும் இடத்தையும் அறிந்து கொள்கின்றன.

பறவைகள் மிகையான ஒலிக்கும், இசைக்கருவிகளின் இசைக்கும் அச்சமடைகின்றன. முன்பு நடந்த நிகழ்வை மனதில் கொண்டு அதேபோன்ற பொருளையோ செயலையோ கண்டால் அச்சமடைகின்றன.

பறவைகளுக்கு இயற்கையினாலும் மனிதர்களாலும் துன்பம் ஏற்படுகின்றது.

சான்றெண் விளக்கம்

1. லண்டன் சுவாமிநாதன், ஆய்வுக்கட்டுரை, tamilan and vedas.com கட்டுரை எண்.115
2. Nishuis. Michell – August 25. 2008 Friend or feo. crows Never forgert a Face; it Seems – The Newyork Times – விக்கிப்பீடியா
3. நற்.231:4–5
4. சாமி. பி.எல். சங்க இலக்கியத்தில் புள்ளினவிளக்கம், ப.280
5. நற்.338:7–12
6. நற்.71:7–9
7. நற்.ப.360
8. நற்.314:9–12
9. அகநா.287:7–9
10. ரவி. கே. ஆத்மா, பறவை விலங்குகளின் நடத்தைகள், ப.46
11. ஆசிரியர் குழு, தமிழ் லெக்சிகன், (Tamil Lexicon) பக்.3338, 3340
12. குறுந். 160:1.5
13. சாமி. பி.எல். சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், ப.55
14. மேலது, ப.57
15. மேலது, ப.57
16. ஐங். 106:1–4
17. சாமி. பி.எல். சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், ப.283
18. ரவி. கே. ஆத்மா, பறவை விலங்குகளின் நடத்தைகள், ப.76
19. ஆல்ஃபிரட் மோகன்தாஸ், விலங்குகளின் சமுதாய வாழ்க்கை, ப.157
20. ஐங். 425:1–4

21. ஸலீம் அலி (தமிழாக்கம் பேரா. இராசேந்திரன். எம்.வி), பறவை உலகம், ப.68

22. சாமி, பி.எல். சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், ப.196

23. வரதராசனார், மு. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.30

24. ஜமால் ஆரா, பறவைகளைப் பார், ப.12

25. மேலது, ப.26

26. நற்.91:1–7

27. அகநா.193: 5–10, 31:10–12

28. அகநா.279: 12–15, 317:6, 355:1–2

29. அகநா.308: 1–6

30. அகநா.392: 14–18

31. அகநா.320: 8–9

32. வரதராசனார், மு. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.31

33. பெருமாள் முருகன், (ப.ஆ.), பறவைகளும் வேடந்தாங்களும், ப.42

34. நற். 206:4

35. ஐங். 184:1–2

36. சாமி, பி.எல். சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், ப.90

37. ஐங். 168:1–3

38. ஜமால் ஆரா, பறவைகளைப் பார், ப.33

39. ஷாஜஹான், ஆர். மயில் நமது தேசியப்பறவை, ப.10

40. மேலது, ப.24

41. ஆதி.வள்ளியப்பன், நாராய் நாராய் பறவை சரணாலயங்கள், வழிகாட்டி, ப.25.

42. மேலது, ப.49.

43. அகநா.32:5–6

44. பெரும்பாண்.227

45. முருகு. 310–318

46. பதிற். 39:10–13

47. முருகு.310

48. பொருந.193–24

49. எஸ். ராமகிருஷ்ணன், க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, ப.751

50. அகநா. 270:12–15

51. மேலது, 305:13–15

52. குறுந். 125:4–6

இயல் – 4

நீர்வாழ் உயிரினங்களின் உணர்வுகள்

பொருளடக்கம்

4.1. தொல்காப்பியத்தில் நீர்வாழ் உயிரினங்கள்

4.2. சங்க இலக்கியத்தில் நீர்வாழ்உயிரினங்கள்

4.3. நீர்வாழ் உயிரினங்களில் காதல் உணர்வு

4.3.1. நண்டின் காதல் உணர்வு

4.3.2. நீர்நாயின் காதல் உணர்வு

4.4. நீர்வாழ் உயிரினங்களின் இன்பவுணர்வு

4.4.1. சங்குப்பூச்சியின் இன்பவுணர்வு

4.4.2. நண்டுகளின் இன்பவுணர்வு

4.4.3. நத்தையின் இன்பவுணர்வு

4.4.4. நீர்க்கோழியின் இன்பவுணர்வு

4.5. நீர்வாழ் உயிரினங்களின் குடும்ப உணர்வு

4.5.1. ஆமையின் குடும்ப உணர்வு

4.5.2. நீர்நாய்களின் குடும்ப உணர்வு

4.6. நீர்வார் உயிரினங்களின் தாய்மையுணர்வு

4.6.1. ஆமைகளின் தாய்மையுணர்வு

4.6.2. முதலையின் தாய்மையுணர்வு

4.7. நீர்வாழ் உயிரினங்களின் மகிழ்வுணர்வு

4.7.1. ஆமையின் மகிழ்வுணர்வு

4.7.2. நீர்நாயின் மகிழ்வுணர்வு

4.8. நீர்வாழ் உயிரினங்களின் வீரவுணர்வு

4.8.1. சுறாமீனின் வீரவுணர்வு

4.8.2. முதலையின் வீரவுணர்வு

4.9. நீர்வாழ் உயிரினங்களின் போர் உணர்வு

4.9.1. நீர்நாயின் போர் உணர்வு

4.9.2. சுறாமீனின் போர் உணர்வு

4.10. நீர்வாழ் உயிரினங்களின் அச்சம்

4.10.1. நண்டுகளின் அச்சவுணர்வு

4.10.2. மீன்களின் அச்சவுணர்வு

4.11. நீர்வாழ் உயிரினங்களின் அறிதல் உணர்வு

4.11.1. நண்டுகளின் அறிதல் உணர்வு

4.11.2. தவளைகளின் அறிதல் உணர்வு

4.11.3. மீன்களின் அறிதல் உணர்வு

இயல் – 4

நீர்வாழ் உயிரினங்களின் உணர்வுகள்

நீரில் வாழும் உயிரினங்களை நீர்வாழ் உயிரினங்கள் என்கின்றோம். நீர்வாழ் உயிரின ஆராய்ச்சியாளர்கள் நீர்வாழ்வனவற்றில் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், பூச்சிகள், நன்னீர்வாழ்வன. உப்பு நீர் வாழ்வன. சதுப்பு நிலங்களில் வாழ்பவை என்று பகுக்கின்றனர். நீர்வாழ்வனவற்றிற்கு அவற்றின் வாழ்விடமாக நீர் உள்ளது. இது நிலப்பரப்புச் சூழலில் இருந்து வேறுபட்டது. நீர்வாழ்வனவற்றின் வாழ்வியல் நீரின் தன்மை, வெப்பநிலை போன்றவை காரணமாக உள்ளது. இன்று நீர்வாழ் உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சிகள், நீர்வாழ் உயிரின காட்சிச்சாலைகள், பூங்காக்கள் போன்றவை காணப்படுகின்றன. ஆனால் பலநூறு ஆண்டுகளுக்கு முன் பண்டைய தமிழ்ச்சான்றோர் அளித்த கொடை சங்க இக்கியம். இவ்விலக்கியத்தில் அக்கால மக்களின் காதல், வீரம் போன்ற வாழ்வியல் உணர்வுகளைக் கூறப் புலவர்கள் இயற்கையைப் பின்புலமாகப் பயன்படுத்தி உள்ளனர். இயற்கை மக்களின் உணர்வுகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. மனதில் அமைதியையும் தெளிவையும் ஏற்படுத்தும் தன்மை கொண்டது இயற்கை. இச்செயல்பாட்டில் உயிரினங்களின் பங்கு மிகுதி. உயிரினங்களின் வாழ்வியல் செயல்பாடுகள் மக்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்தே சங்கப் புலவர்கள் அவற்றைத் தமது பாடல்களில் பாடியுள்ளனர். அவ்வாறு பயன்படுத்திய நீர்வாழ் உயிரினங்களின் உணர்வுகளை விளக்குவது இவ்வியலின் நோக்கமாகும்.

4.1. தொல்காப்பியத்தில் நீர்வாழ் உயிரினங்கள்

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் இறுதி இயலான மரபியலில் உயிரினப்பாகுபாடு, இளமைப்பெயர்கள், ஆண்பாற்பெயர்கள், பெயர்பாற் பெயர்கள் போன்றவற்றைக் குறிப்பிடும் இடத்து நீர்வாழ் உயிரினங்களைப் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளார்.

''நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய'' (தொல். 1542)

இந்நூற்பாவிற்கு உரை கூறும் தமிழண்ணல். ''நீரில் வாழும் சாதியாகிய சுறா, முல்லை, இடங்கள், காராம், வாரல், வாளை என்னும் ஆறும் போத்து என்னும் இளமைப் பெயர் பெறும்''[1] என்கிறார். இவை ஆறும் நீர்வாழ் உயிரினங்கள் என்பதை அறியஇயலும்.

கடல்வாழ் உயிரினமான சுறாவின் ஆண்பாற் பெயர் ஏறு என்பதை,

''கடல்வாழ் சுறாவும் ஏறு எனப்படும்'' (தொல். 1540)

என்ற தொல்காப்பிய நூற்பா சுட்டும்.

நீர்வாழ் உயிரினங்களுள் நந்து என்பது நத்தையின் பெண்பால் பெயராகும். இதனை,

''நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே'' (தொல். 1563)

என்ற நூற்பா விளக்கும். மேலும் நீர்வாழ் உயிரினமான நத்தை இரண்டு அறிவுடையது என்பதை,

''நந்தும் முரளும் ஈர் அறிவினவே
பிறவும் உளவே அக்கிளை பிறப்பே'' (தொல். 1528)

என்ற நூற்பா குறிப்பிடும்.

4.2. சங்க இலக்கியத்தில் நீர்வாழ் உயிரினங்கள்

சங்க இலக்கியங்களில் உவமையாகவும் உள்ளுறையாகவும் குறிப்புப் பொருளிலும் உயிரினங்களைப் புலவர்கள் கூறியுள்ளார். அவ்வாறு குறிப்பிட்டுள்ள பாடல்களில் நீர்வாழ் உயிரினங்களின் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் மருதம், நெய்தல் திணைப் பாடல்களில் மிகுதியாகவும் குறிஞ்சி, முல்லைத் திணைப் பாடல்களில் அரிதாகவும் நீர்வாழ் உயிரினங்கள் கூறப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் காணப்படும் உயிரினங்களில் நீர்வாழ் உயிரிங்கள் மற்ற உயிரினங்களைவிடக் குறைவாகவே பாடப்பட்டுள்ளன. ‘‘சங்க இலக்கியங்களிலும் குறிஞ்சி, முல்லை இவை திரிந்த பாலை ஆகியவற்றின் பின்னணியில் தீட்டப்பட்டுள்ள உயிரின ஓவியங்களை நோக்க மருதம், நெய்தல் ஆகிய நிலங்களுக்கு உரிய உயிரினங்கள் மிகச்சிலவே ஆகும்’’[2] நிலவாழ் உயிரினங்களோடு ஒப்பிடுகையில் நீர்வாழ் உயிரினங்கள் குறைவாகவே சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

4.3. நீர்வாழ் உயிரினங்களில் காதல் உணர்வு

காதல் என்பதற்கு மிகையான அன்பு என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. காதல் என்ற மிகையான அன்புதான் மெய்யுறு புணர்ச்சியைத் தூண்டும் முதற்படி ஆகும். அதனால் இவ்வுணர்வானது அனைத்து உயிரினத்திற்குமான முதன்மையான உணர்வாகும்.

4.3.1. நண்டின் காதல் உணர்வு

நீர்நிலையில் உள்ள நண்டின் செயலை,

‘‘அகலிலை நாவல் உண்டுறை உதிர்த்த

கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டு

தாழை வேரளை வீழ்துணைக் கிடூஉம்

அலவற் காட்டி நற்பாற் றிதுவென

நினைந்த நெஞ்சமொடு நெடிதுபெயர்ந் தோனே'' (அகநா. 380 : 4–8)

என்ற பாடலடிகள் விளக்கும். அகன்ற இலைகளை உடைய நாவல் மரத்தின் பழத்தை ஆண் நண்டு தன் அழகு கெடுமாறு இழுத்துச் சென்று தாழையின் வேர்ப்பகுதியில் அமைத்துள்ள வளையிலுள்ள தன் பெண் நண்டிற்குக் கொடுக்கும். அவ்வகையில் நண்டின் காதல் வெளிப்படுகிறது.

4.3.2. நீர்நாயின் காதல் உணர்வு

இன்பவுணர்விற்கு முன்தான் காதல் தோன்றும் என்பதை,

''பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்த

உண்ணாப் பிணவின் உயக்கஞ் சொலிய

நாளிரை தரீஇய எழுந்த நீர்நாய்

வாளையோ டூழப்பத் துனாகலுழ்ந் தமையின்'' (அகநா. 336: 2–5)

என்ற பாடலடிகள் உணர்த்தும். சேம்பின் மடலில் உள்ள இலையுடன் கூடிய பாகி படர்ந்திருக்கும் நீர்ப் பரப்பில் குட்டியை ஈன்ற நீர்நாய் குட்டியை விட்டு நீங்கி இரைதேட முடியாமல் பசிந்திருக்கும் வருத்தத்தைப் போக்க எண்ணிய ஆண்நாய் தன் காதலை வெளிப்படுத்த இரை தேடிச் செல்கின்றது.

4.4. நீர்வாழ் உயிரினங்களின் இன்பவுணர்வு

இன்பவுணர்வு என்பது இனப்பெருக்கத்திற்கு உரிய உணர்வு. இவ்வுணர்வு பூமியில் உயிரின் நிலைபாட்டிற்கு முக்கியப் பங்காற்றுகிறது. இன்பவுணர்வே மெய்யுறு புணர்ச்சியின் தூண்டுதலாக உள்ளது.

4.4.1. சங்குப்பூச்சியின் இன்பவுணர்வு

சங்கு புழங்கு பொருளாகும். தற்காலத்தில் சங்கால் அழகிய பொருட்களையும், அலங்காலப் பொருட்களையும் செய்வர். பழங்காலத்தில் இருந்தே சங்கின் பயன்பாடு தமிழர் மரபில் காணப்பட்டுள்ளது. கடிகாரம் இல்லாத காலக்கட்டத்தில் நேரத்தை அறிவிக்க கோயில்களில் சங்கை ஊதி ஒலியெழுப்பி வந்தனர். குழந்தைகளுக்கு பால் கொடுக்க சங்கைப் பயன்படுத்தியுள்ளனர். இச்சங்கு நீர்நிலையில் வாழும் தகவமைப்பைப் பெற்றிருக்கும் ஓர் உயிரினமாகும்.

''பிணர்மோட்டு நத்தின் பேழ்வாய் ஏற்றை
கதிர்மூக்கு ஆரல் கள்வ னாக
நெடுநீர் பொய்கைத் துணையொடு புணரும்'' (அகநா. 264: 1–3)

என்ற பாடலில் ஆண் சங்குப் பூச்சி பொய்கையில் தன் துணையைத் தழுவி மகிழ்கின்றது. அதற்கு கூர்மையான மூக்கை உடைய ஆரல் மீன் சாட்சி. சங்குப் பூச்சி தன் இணையுடன் வாழும்நிலை கூறப்படுகின்றது. இதன்வழி, சங்குப் பூச்சியின் இனப்பெருக்க முறையை அறிய இயலும். துணையுடன் இணைந்து வரும் வலம்புரிச் சங்குகள் யானையின் தந்தம்போல காட்சியளிக்கும் என்பதை,

''துணைபுணர்ந் தெழுதரும் தூநிற வலம்புரி
இணைதிரள் மருப்பாக எறிவளி பாகனா'' (கலித். 135: 1–2)

என்ற அடிகள் குறிப்பிடும். சங்குகள் இணை சேர்ந்து வாழ்கின்றது என்பதைக் காணமுடிகின்றது.

4.4.2. நண்டுகளின் இன்பவுணர்வு

நண்டுகள் இறைச்சி உணவுப் பொருளாகப் பயன்படுகின்றது. அவற்றின் செயல்பாடுகளை உற்றுநோக்கிக் கூறியுள்ளது மிகவும் வியப்பாகவே உள்ளது.

"உக்கான் இஃதோ உடம்புயிர்க் கூற்றாகக்
செக்கரும் புள்ளித் திகிரி அலவனொடியான்
நக்கது பன்மாண் நினைந்து" (கலித். 146: 22–24)

மேற்கண்ட பாடலடிகளில் கடற்கரையில் திரிந்த ஆண் நண்டும், பெண் நண்டும் துய்க்கும் இன்பச் செயல்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. இதன்வழி நண்டுகளின் இன்பவுணர்வு வெளிப்படுகின்றது.

4.4.3. நத்தையின் இன்பவுணர்வு

நத்தை நீர்வாழ் உயிரினத்தில் சதுப்பு நிலத்தில் காணக்கூடியது. தொட்டால் சினுங்கி போன்றது. தொட்டால் தன் உடலை ஓட்டினுள் இழுத்து மறைத்துக் கொள்ளும். இதன் உடலை உற்றுநோக்கிய புலவர்,

"கதிர்க் கோட்டு நந்தின் சுரிமுக ஏற்றை
நாகிள வளையொடு பகல்மணம் புகூஉம்" (புறநா. 266: 4–5)

என்ற புறநானூற்று அடிகளில் பாடுவர். ஆண் நத்தை இளமை மிக்க பெண் நத்தையுடன் பகற்பொழுதில் கூடும் காட்சியை விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

4.4.4. நீர்க்கோழியின் இன்பவுணர்வு

இக்கோழி பறவை இனத்தை சேர்ந்தது. இது நீர்நிலைகளில் தான் வாழும். நீர்நிலைகளை விட்டு மேடான பகுதிக்கு வந்தாலும் நீர்நிலை வற்றி

விட்டாலும் இக்கோழிகள் இறந்துபடுகின்றன. இவை சதுப்புநிலங்களில் கூடுகட்டி அடைகாத்து குஞ்சுகளைப் பராமரிக்கும்.

"பழனக் கம்புள் பயிர்ப்பெடை யாகவும்
கழனி யூரநின் மொழிவ லென்றும்" (ஐங். 60: 1–2)

என்ற அடிகளில் பழனங்களில் வாழும் கம்புட்கோழியின் சேவல் தனது இணையான பெடையைத் தனது புணர்ச்சித் தேவைக்கு அழைக்கின்றது. இன்பம் துய்க்கும் கோழிகளின் கொக்கரிப்பு மாற்றத்தை மிகவும் நுட்பமாக உற்றுநோக்கினால் புரியும். அதனுடன் பலநாட்கள் பழகினால் அதன் ஒலி வேறுபாடுகளை அறிய இயலும்.

"நீருறை கோழி நிலச் சேவல்
கூருதிர் பேடை பெயாஅ முர" (ஐங். 51: 1–2)

என்பதில் நீரில் வாழும் சம்பங்கோழிச் சேவல் அதன் பேடையை நினைத்து வேட்கை மிகுந்து காத்திருந்தமை நன்கு புலப்படும். கோழியின் வேட்கை உணர்வை அதன் செயல்பாட்டைக் கொண்டு அறிந்துள்ளார் புலவர். அதை தலைவியின் வேட்கையை கூறப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

4.5. நீர்வாழ் உயிரினங்களின் குடும்ப உணர்வு

நீர்வாழ் உயிரினங்கள் இளம் உயிரினங்களை உண்டாக்கி அவற்றைப் பாதுகாத்து வளர்க்கின்றது.

4.5.1. ஆமையின் குடும்ப உணர்வு

ஆமையின் குடும்பத்தில் ஆணுக்கே மிகுதிப் பொறுப்பு உள்ளது என்பதை,

''அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணல் பக்கஞ் சேர்த்தி
நிறைச்சூழ் யாமை மறைத்தீன்று புதைத்த
கோட்டுவட் டுருவின் புலவுநாறு முட்டைப்
பார்பிட னாகும் அளவைப் பகுவாய்க்
கணவ னோம்புங் காலைஞ் சேர்ப்பன்'' (அகநா. 160: 3–8)

என்ற பாடலடிகள் உணர்த்தும்.

பெண் ஆமை அடுப்பங்கொடியில் மணல் குவிந்த இடத்தின் கரையில் மறைவாக முட்டையிட்டு புதைத்து வைத்திருக்கின்றது. அதனை ஆண் ஆமை பாதுகாக்கின்றது. ஆண்களின் பாதுகாப்பு குடும்பத்திற்கு வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. ஆனால் ஆமையின் இச்செயல்பாட்டைக் குறித்து பி.எல்.சாமி, ''பெண் ஆமை முட்டைகளை மணலில் மறைத்துப் புதைத்துவிட்டுப் போய்விடுகின்றது. அவைகளைப் பற்றிக் கவலைப்படுவது தில்லை. ஆண் ஆமையும் அதைப் பாதுகாப்பதும் இயற்கையில் இல்லை. இயற்கையில் இச்செய்தி கற்பனையாகும் மற்றும் ஒரு பரம்பரைச் செய்தி வழங்குவதையும் காணலாம். ஆமை தன் முட்டைகளைக் கண்ணாலே பார்த்தே பொரிக்க வைப்பதாகவும் ஒரு நம்பிக்கை மக்களிடையே நிலவுகின்றது. இதுவும் உண்மைச் செய்தியன்று''[3] என்கிறார். எனினும் ஆணினத்தில் சில பொறுப்புகளும் இருப்பதை அறிய இயலும்.

4.5.2. நீர்நாய்களின் குடும்பவுணர்வு

நீரில் வாழக்கூடிய ஒருவகை விலங்கு நீர்நாய். இது குட்டிப்போட்டு வளர்க்கும் இனத்தைச் சேர்ந்தது. இதன் குடும்பத்தைப் பற்றி,

''குழர்காற் சேம்பின் கொழுமடல் அகலிலைப்
பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்து
உண்ணாப் பிணவின் உயக்கஞ் சொலிய
நாளிரைத் தரீஇய எழுந்த நீர்நாய்
வாளையோடு டுழப்பத் துறைகலுழ்ந் தமையின்'' (அகநா. 336: 1–5)

என்ற பாடலடிகள் விளக்கும். குட்டிகளை ஈன்ற தாய் நீர்நாய் பசியுடன் இருப்பதைப் பொறுத்துக்கொள்ள இயலாமல் ஆண் நாய் இரைதேடச் செல்கின்றது. இதில் ஆண் நீர் நாயின் குடும்பப் பண்பு காணப்படுகின்றது.

4.6. நீர்வாழ் உயிரினங்களின் தாய்மையுணர்வு

தாய்மை என்பது அனைவரும் போற்றத்தக்க ஓர் உணர்வு ஆகும். இவ்வுணர்வு நீர்வாழ் உயிரினங்களிடத்தும் காணப்படுகின்றது.

4.6.1. ஆமைகளின் தாய்மை யுணர்வு

ஆமைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் முறையில் இனப்பெருக்கம் செய்வன. பெண் ஆமை முட்டைகளை இட்டு நீர்நிலைக்குள் செல்லும். நாட்கள் ஆனதும் முட்டையில் இருந்து குஞ்சுகள் வெளிவந்து நீர்நிலையை நோக்கி செல்கின்றது.

''தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்பு
தாய்முக நோக்கி வளர்ந்தின னாஅங்'' (ஐங். 44: 1–2)

என்ற அடிகளில் இளம்பார்ப்புகள் தம்தாயின் பாதுகாப்பில் வளராவிட்டாலும் தாயின் முகம் நோக்கி வளர்ந்தன. இளம்பார்ப்புகள் வெளியுலகிற்கு வந்தவுடன் தாய் சென்ற நீர்நிலையை நோக்கிச் செல்கின்றன.

"நெடுங்கால் மாஅத் தூழ்உறு வெண்பழம்
கொடுந்தாள் யாமை பார்ப்பொடு கவரும் " (அகநா. 117: 15–16)

என்ற அடிகள் கரையோரமான மாமரத்திலிருந்து விழும் மாம்பழத்தைக் குட்டியுடன் ஆமைகள் உண்ணும். அந்நீர்நிலை ஆழமானது ஆமையும் குட்டிகளும் ஒன்றாக வாழ்ந்துள்ளன. ஆழமான நீர்நிலைகளிலே ஆமைகள் பெரும்பான்மை வாழும். "நீர்விழும் மாம்பழத்தை ஆமை நின்றதாகக் கூறியதும் இயற்கையான செய்தியே" [4] என்கிறார் பி.எல். சாமி.

"அம்பணத் தன்ன யாமை யேற்றிச்
செம்பி னன்ன பார்ப்புப்பல துஞ்சும்" (ஐங். 43: 1–2)

ஆமைப் பார்ப்புகள் மரக்கால் போன்ற தன் தாய் ஆமையின் மேல் ஏறி உறங்கும்.

4.6.2. முதலையின் தாய்மையுணர்வு

தாய்மை உணர்வே இல்லாத உயிரினம் முதலை. தன் பார்ப்பையே உண்ணும் குணம் கொண்டது. இதனை,

பிள்ளை தின்று முதலைத் தவனூர்" (ஐங். 24:2)
"தன்பார்ப்பத் தின்னு மன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவ னூரென்ப வதனால்" (ஐங். 41:1–2)

போன்ற ஐங்குறுநூற்றடிகள் உணர்த்துகின்றன. முதலைகள் தன் பார்பை தானே தின்னும் என்ற செய்தி உள்ளது. "ஜெய்ப்பூரில் உள்ள உயிர்க் காட்சிச்சாலையில்

முதல் தடவையாக முட்டைகளிலிருந்து முதலைக் குட்டிகள் பிறந்தன. உடனே முதலைகளின் குட்டிகளைத் தாயினிடமிருந்து அப்புறப்படுத்தினர். ஏனென்றால் தாயே தன்னுடைய பிள்ளைகளைத் தின்றுவிடும் என்று கண்டறிந்த அனுபவத்தால் தாயோடு குட்டியை விடவில்லை''[5] என்கிறார் பி.எல்.சாமி. சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள இச்செய்தி உண்மையாகவே உள்ளது. இதன்வழி முதலைகளுக்குத் தாய்மை உணர்வு இல்லை என்று உறுதியாகக் கூற இயலும்.

4.7. நீர்வாழ் உயிரினங்களின் மகிழ்வுணர்வு

மகிழ்ச்சி என்பது அனைத்து உயிரினங்களுக்கும் பொருந்தும் உணர்வு. நீர்வாழ் உயிரினங்களின் மகிழ்ச்சியைப் புலவர்கள் குறிப்புப் பொருளில் பாடியுள்ளனர்.

4.7.1. ஆமையின் மகிழ்வுணர்வு

ஆமைகளுக்குத் தன்னிச்சையான இடமும், நல்ல உணவும் மகிழ்ச்சியினை உண்டாக்குகின்றன என்பதை,

''பிணங்களில் வள்ளை நீடிலைப் பொதும்பின்
மடிதுயின் முனைஇய வள்ளூரிர் யாமை
நொடிவிடு கல்லிற் போது அகன்றுளைப்
பகுவாய் நிறைய நுங்கிற் கள்ளின்
உருவா ரருந்து மகிழ்பியங்கு நடையொடு
தீம்பெரும் பழன முழக்கி அயலது
அம்பன் மெல்லிடை யொருங்கும் ஊர'' (அகநா. 256: 1–7)

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் உணர்த்தும். ஓர் ஆமை வள்ளிக்கொடி இலையில் நிழலில் நெடுநேரம் உறங்கிற்று. பின் கூழாங்கற்கள் நிறைந்த வழியில் சென்று குளக்கரையில் நீர் பருகிக் கொண்டிருந்தவர்கள் சிந்திய துளிகளை உண்டு மயக்கத்தோடு வயல்களைக் கலக்கி குளத்தில் உள்ள ஆம்பல் இலைகளிலே மீண்டும் உறங்கிற்று. இதில் ஆமையின் மகிழ்வு கூறப்பட்டுள்ளது.

4.7.2. நீர் நாயின் மகிழ்வுணர்வு

எந்த உயிரினமாக இருந்தாலும் நல்ல உணவுக் கிடைத்தால் மனதில் ஓர் மகிழ்வு உண்டாகும். இதே போன்ற மகிழ்வு நீர்நாயிடம் காணப்படுகிறது.

"அருளாய் அகலோ கொடிதே இருணிறக்
குருளை நீர்நாய் கொழுமீன் மாந்தித்
தில்லையம் பொதும்பிற பள்ளி கொள்ளும்" (நற். 195: 1–3)

என்ற அடிகளில் நீர்நாயின் குட்டிகள் நல்ல மீன்களை உண்டு மகிழ்ச்சியாகத் தில்லை மரங்கள் நிறைந்த காணற் சோலையில் உறங்குகின்றது. இதில் நீர்நாய் நல்ல உணவும் ஓய்வும் கிடைக்கும் பொழுது அவை மகிழ்ச்சியாக இருக்கின்றன. வாளைமீன் பொய்கையில் துள்ளி விளையாடுகின்றது. அவற்றை உண்ணாமல் நீர்நாய் தூங்கும். இதில் நீர்நாய் செழிப்பான பகுதியில் வாழ்கின்றது. அதனால் அதற்கு உணவு எளிதாக கிடைக்கின்றது. நல்ல உணவு கிடைத்தனால் வாளைமீனை உண்ணாது மகிழ்ச்சியாக உறங்குகின்றது. இதனை,

“வாளை வாளிற் பிறழ நாளும்

பொய்கை நீர்நாய் வைடுதுயில் ஏற்கும் ” (நற். 390: 1–2)

என்ற பாடலடிகளில் விளக்கப்படுகிறது.

4.8. நீர்வாழ் உயிரினங்களின் வீரவுணர்வு

தனக்கு இடர்ப்பாடு என்ற நிலையில் பூனையும் புலியாகும் என்பது போல மீன்களும் இடர்ப்பாடு ஏற்படும் பொழுது அதன் வீரத்தை வெளிப்படுத்துகிறது. நீர்வாழ்வன என்பதில் நீரில் வாழக்கூடிய அனைத்தும் அடங்குகின்றன.

4.8.1. சுறாமீனின் வீரவுணர்வு

சுறாவை கடல்வாழ் விலங்கு என்று கூறுவர். மீன் இனத்தில் மிகப்பெரியதும் திறன் மிக்கதுமாக கருதப்படுகின்றது. எதிர்பட்டவரைத் தாக்குகின்ற தன்மை கொண்ட சுறாமீன்கள் மிகுதியாக உள்ளமையை,

“எறிசுறாக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்

நறுவி ஞாழலொடு புன்னை தாஅய்” (குறுந். 318: 1–2)

என்ற அடிகள் குறிப்பிடும்.

மீன்பிடிக்கச் செல்வோரை சுறாமீன் தாக்கும் என்பதை,

“வயச்சுறா எறிந்த புண்தணிந்து எந்தையும்

நீர்நிறப் பெருங்கடல் புக்கனன்.....” (குறுந். 269: 3–4)

என்ற குறுந்தொகையடிகள் சுட்டும்.

மீன்பிடிக்க வருவோரின் மீன்வலையை அறுக்கும் தன்மை கொண்ட சுறாவினை,

“வன்கைப் பரைதவர் இட்ட செங்கோல்
கொடுமுடி யவ்வலை பரியப் போகிக்
கடுமுரண் எறிசுறா வழங்கும்
நெடுநீர்ச் சேர்ப்பன்தன் நெஞ்சத்தானே” (நற். 303: 9–12)

என்ற அடிகள் எடுத்துக்காட்டும். “சுறாமீன்கள் தனது வலிமையால் மீன் வலையைக் கிழித்துக் கொண்டு எதிர்த்த உயிரினங்களைத் தன் கொம்பினாலேயே கொல்லக்கூடிய வீரம் பொருந்தியது.”[6] மேலும் “சுறாமீனின் தொழிலே கொலை செய்வது”[7] என்கிறது நற்றிணை. “சுறாமீன் வர கொக்குகளும் பறந்தன”[8] சுறாமீன் மக்கள் உட்பட அனைத்து உயிரினங்களையும் அச்சப்படுத்தித் தன் வீர உணர்வை வெளிப்படுத்துகின்றது.

4.8.2. முதலையின் வீரவுணர்வு

முதலை என்றாலே அனைவரின் மனதிலும் ஓர் அச்சம் ஏற்படுவது இயல்பு. அம்முதலையின் வீரம் நீரில் மட்டும் தான் வெற்றி பெறும். முதலைக்கு தன் வீரத்தைக் காட்ட சிறிதாவது நீர் வேண்டும் என்பதை,

“நாட்படு சின்னீர் களிநட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன என்று” (புறநா. 104: 3–4)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. “நெடும்புனலுள் வெல்லும் முதலை”[9] என்ற குறளில் நீர்நிலையில் முதலை வெற்றி பெறும் என்று கூறப்பட்டுள்ளது. அதனால் முதலையின் வீரம் நீர்நிலையில் தான் உள்ளது என்பதை அறிய இயலும்.

“கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன்வழங்கும்
இருங்கழி யிட்டுச்சுறம் நீந்தி யிரவின்” (அகநா. 80: 1–2)

என்ற அடிகளில் முதலையின் அச்சமூட்டும் தன்மை குறிப்பிடப்படுகின்றது. இதன்வழி மக்களை முதலைகள் அச்சமூட்டியமையைக் காண இயலும்.

4.9. நீர்வாழ் உயிரினங்களின் போர் உணர்வு

விலங்குகளுக்கு இடையே பிணக்கு ஏற்படுவது இயல்பு. ஏதேனும் காரணத்தால் அவை தமக்குள் சண்டையிடும். விலங்கு, பறவைகளுக்கு உணவுச் சங்கிலி பகைமை உணர்வு தோன்ற முதன்மைக் காரணமாகின்றது.

4.9.1. நீர் நாயின் போர் உணர்வு

நீர் நாய் தன் துணையின் பசியைப் போக்க வாளை மீனுடன் போரிடுகின்றது என்பதை,

''உண்ணாப் பிணவின் உயக்கங் சொலிய
நாளிரை தரீஇய எழுந்த நீர்நாய்
வாளையோ டுழப்பத் துறைகலுழ்ந் தமையின்'' (அகநா. 336: 3–5)

என்ற அடிகள் புலப்படுத்தும். நீர்நாய் வாளைமீனுடன் போரிட்டதால் நீர்நிலை சகதியாகியது. நீர்நாயின் போர் உணவுத் தேவைக்காக நடத்தியமை புலனாகும்.

4.9.2. சுறாமீனின் போர் உணர்வு

சுறாமீன்கள் வீரம் மிக்கது. அதுபோலவே போர்க்குணமும் கொண்டது.

''இருங்கழிப் புகாஅர் பொருந்தத் தாக்கி
வயற்கள எறிந்தென வலவன் அழிப்ப
எழில்பயங் குன்றிய சிறையழி தொழில்
நிரைமணிப் புரவி விரைநடை தவிர'' (அகநா. 190: 11–14)

என்ற அடிகள் விளக்கும். சறாமீன் குதிரையைத் தாக்கும் வல்லமை பெற்றது.

4.10. நீர்வாழ் உயிரினங்களின் அச்சம்

பல்வேறு விலங்குகள் அச்சம் நிறைந்தவையாக வாழ்கின்றன. நீர்வாழ் உயிரினங்களின் வாழ்வியல் போராட்டமானது. அதன் மனநிலையிலும் அச்சவுணர்வு காணப்படுகின்றது.

4.10.1. நண்டுகளின் அச்சவுணர்வு

உயிர்பயம் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவான ஒன்று. நண்டு இனத்திற்கும் அவ்வாறான உயிர் பயமே அதன் மனதில் அச்சத்தை உண்டாக்குகின்றது.

"மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்நெண்டு
கண்டல் வேர்அறைச் செலீஇயர் அண்டர்" (குறுந். 117: 1–3)

என்ற அடிகளில் கொக்கின் பார்வைக்கு அஞ்சிய நண்டு தாழை வேரிடத்தில் உள்ள தனது வளையின் உள்ளே விரைந்து சென்று தன்னைக் காத்துக்கொள்கின்றது.

"வேப்புநனை யன்ன நெடுங்கண் நீர்நெண்டு
இரைதேர் வெண்குருகு அஞ்சி அயலது
ஒலித்த பகன்றை இருஞ்சேற்று அள்ளல்
திதலையின் வரிப்ப ஓடி விரைந்து தன்
ஈர்மலி மண்ணளைச் செறியும் ஊர" (அகநா. 176: 8–10)

என்ற அடிகளிலும் நண்டுகள் இன்பம் துய்க்கச் சென்றபோது நாரை இரைதேடிக் கொண்டிருப்பதைக் கண்டு அஞ்சி பகன்றைச் செடியில் சென்று மறைந்து கொள்கின்றது.

“நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஓரை மகளிர் அஞ்சி ஈர்நெண்டு
கூலில் பரிக்கும் துளைவனொடு ஒருநாள்” (குறுந். 401 : 2–4)

என்ற குறுந்தொகை அடிகளில் மகளிர் விளையாட்டிற்கு அச்சம் கொண்ட நண்டு கடலுக்குள் ஓடியது. மகளிர் விளையாடி சிதைத்து விடுவர் என்ற அச்சமும் கொண்டதாய் உள்ளது. நண்டு மக்களைக் கண்டால் அஞ்சி ஓடிவிடும் தன்மை கொண்டது. அதையும் வலைகொண்டு பிடித்து விடுகின்றனர்.

4.10.2. மீன்களின் அச்சவுணர்வு

மீன்கள் சிறிய அசைவுகள் ஏற்பட்டாலும் அச்சப்பட்டு ஓடிவிடும்

“நீளரும் பொய்கை யிரைவேட் டெழுந்த
வாளை வெண்போத்து உணீஇய நாரைதன்
அடியறிவு உறுதல் அஞ்சிப் பைப்பயக்
கடியிலம் புகூஉங் கல்வன் போலச்” (அகநா. 276: 1–4)

என்ற அடிகளில் நாரை தனக்கு இரையான மீனைப்பிடிக்கத் தனது காலடியோசை கேட்காதபடி மெதுவாகச் செல்கின்றது. மீன்கள் சிறிய அசைவு தெரிந்தாலும் அச்சப்பட்டு ஓடிவிடும் என்பதால் தன் இரையைப் பெற மெதுவாக அடியெடுத்து நடந்தது. வயல்களில் மீன்கள் உலவும் என்பதை,

“சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து

கூர்முள் வேலி கோட்டின் நீக்கி

நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய'' (அகநா. 46: 1–4)

என்ற பாடலடிகள் குறிப்பிடும். அம்மீன்கள் கயிரை அறுத்துக் கொண்டு வேலியையும் நீக்கி வயலில் புகுந்த பசுவால் அஞ்சி ஓடியுள்ளது.

குருகிற்கு இரையாகாமல் தப்பிய கெண்டை மீன் தாமரையின் வெண்முகையைக் கண்டு அஞ்சியதை,

''கொடுங்கழி மருங்கின் இரைவேட் டெழுந்த

கருங்கார் குருகின் கோள்உய்ந்து போகிய

முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை

எரிதரை தொகுத்த ஏக்கர் நெடுங்கோட்டுத்

துறுமடல் தலைய தோடுபொதி தாழை

வண்டுபடு வான்போது வெரூஉம்'' (நற். 211: 3–8)

என்னும் நற்றிணைப் பாடலில் கொக்கிடம் இருந்து தப்பிய இறால் மீனின் ஆண் தாழையின் பூவினை வெண்குருகு என்று எண்ணி அச்சம் கொண்டு ஓடியது. மீன்கள் தங்களின் உயிரை பாதுகாத்துக் கொள்ள சிறு செயல்களுக்கும் அஞ்சுகின்றன.

4.11. நீர்வாழ் உயிரினங்களின் அறிதல் உணர்வு

நீர்வாழ் உயிரினங்களுக்கு அறிதல் உணர்வு மிகுதி. இயற்கை நிகழ்வுகளை அறியும் தன்மை அவற்றிற்கு உண்டு.

4.11.1. நண்டுகளின் அறிதல் உணர்வு

நண்டுகள் இயற்கையை நன்கு அறிந்து செயல்படுகின்றன என்பதை,

கண்டற் கானற் குருகினம் ஒலிப்பக்
கரையா டலவன் அறைவயிற் செறியத்'' (அகநா. 260: 3–4)

என்ற அடிகள் உணர்த்தும். மாலைப்பொழுதின் வரவைக் கூற தலைவி பல செயல்களைக் கூறுகிறாள். நண்டுகள் மாலையில் தன் இல்லமான வளைக்குச் சென்றுவிடும். சிறு உயிரினங்களும் இரவு தொடங்குமுன் தத்தம் வீட்டை அடைந்து விடுகின்றன.

''செந்நெலஞ் செறுவிற் கதிர்கொண்டு கள்வன்
தண்ணக மண்ணளைச் செல்லு மூரற்'' (ஐங். 27: 1–2)

என்ற அடிகளில் அலவன் நெற்கதிர்களைக் கவர்ந்து தன் வளையில் சேமிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இயற்கை நிகழ்வை அறிந்து தனக்கான உணவைச் சேமிக்கின்றது என்பதை அறிய இயலும்.

4.11.2. தவளைகளின் அறிதல் உணர்வு

இன்று முதியவர்கள் தவளையின் ஒலியைக் கொண்டு மழைவரவை கூறுகின்றனர். அதைப்போன்று,

''வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்டக்
கார்தொடங் கின்றே காலை யின்றின்'' (ஐங். 468: 1–2)

என்ற அடிகளில் தலைவன் வரும் காலத்தை அறிதற்காகத் தலைவி தவளைகளும், தேரைகளும் ஒலிக்கின்ற கார்காலம் தொடங்கிவிட்டது.

அதனால் தலைவன் இன்றே வருவான் என்கிறாள் பழங்காலம் முதல் தவளைகள் ஒலி எழுப்பினால் மழைபொழியும் என்று நம்பப்படுகின்றது.

4.11.3. மீன்களின் அறிதல் உணர்வு

மீன்கள் நீர்நிலையில் உள்ள நீர் குறைய நீர் உள்ள இடம்நோக்கி செல்லும் என்பதை,

"கணநிரை மணியி னார்க்குஞ் சுரனிறந்து
அழிநீர் மீன்பெயர்ந் தாங்கவர்
வழிநடைச் சேறல் வலித்திசின் யானே" (அகநா. 303: 18–20)

என்ற அகநானூற்றுப் பாடடிகள் விளக்குகின்றது. இவ்வாறு நீர்வாழ் உயிரினங்களின் பல்வேறு உணர்வுகளை அறிந்து கொள்ள இயலும்.

தொகுப்புரை

சங்க இலக்கியத்தில் விலங்குகள், பறவைகளை விட நீர்வாழ் உயிரினங்களின் குறிப்புகள் உள்ள பாடல்கள் குறைவாக உள்ளன. தொல்காப்பியர் நீர்வாழ்வனவற்றுள் சுறாவை விலங்கு என்கிறார்.

நீர்வாழ் உயிரினங்களில் ஆண் இனம் தன் காதலை வெளிப்படுத்தப் பெண் இனத்திற்கு உணவு சேகரித்து கொடுக்கின்றது.

நீர்வாழ்வனவற்றின் இன்பவுணர்வுக்கு ஆண் இனம் பெண் இனத்தைத் தூண்டுகின்றது. நீர்வாழ் உயிரினங்களிலும் குடும்ப அமைப்புக் காணப்படுகிறது.

நீர்வாழ்வனவற்றில் ஆமை அடைகாத்து குஞ்சுபொரிப்பது இல்லை என்றாலும் குஞ்சுகளை வளர்க்கின்றன. முதலைகள் குட்டிகளைத் தானே தின்றுவிடுகின்றன. தாய்மை உணர்வு இனத்திற்கு இனம் மாறுபடுகின்றது. நீர்வாழ் உயிரினங்கள் உணவு கிடைத்தால் மகிழ்ச்சியாக வாழ்கின்றன.

நீர்வாழ் உயிரினங்கள் நீரில் மட்டுமே வலிமையாகச் செயல்படுகின்றன. உணவுச் சங்கிலியே அஃறிணை உயிரினங்களைப் போர் செய்யத் தூண்டும் முதல் தூண்டல் ஆகும். நீர்வாழ் உயிரினங்களும் அவ்வாறே செய்கின்றன. சுறாமீன் மனிதனையும் தாக்குகின்றது.

மீன்கள் சிறு அசைவுக்கும் அச்சமடைகின்றன. முன்பு நடந்த நிகழ்வுகளின் நினைவு அவைகளின் மனதில் அச்சத்தைத் தூண்டுகின்றன. தவளைகள் மழைப்பொழிவை முன்கூட்டியே அறிந்து கொள்கின்றன.

சான்றெண் விளக்கம்

1. தமிழண்ணல், (உ.ஆ.) தொல்காப்பியம், ப.531
2. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.314
3. சாமி. பி.எல்., சங்க நூல்களில் சில உயிரினங்கள், ப.55
4. மேலது, ப.54
5. மேலது, ப.24
6. அகநா.340
7. நற்.78:1
8. நற்.27:1
9. குறள்.495

இயல் – 5

பிற உயிரினங்களின் உணர்வுகள்

பொருளடக்கம்

5.0. முன்னுரை

5.1. தொல்காப்பியத்தில் பிற உயிரினங்கள்

5.2. நன்னூலில் பிற உயிரினங்கள்

5.3. பிற உயிரினங்களின் இன்பவுணர்வு

5.3.1. பல்லியின் இன்பவுணர்வு

5.4. பிற உயிரினங்களின் குடும்பவுணர்வு

5.4.1. தேனீக்களின் குடும்பவுணர்வு

5.5. பிற உயிரினங்களின் மகிழ்வுணர்வு

5.5.1. அணிலின் மகிழ்வுணர்வு

5.5.2. தம்பளப்பூச்சியின் மகிழ்வுணர்வு

5.6. பிற உயிரினங்களின் ஒற்றுமையும் சேமிப்பும்

5.6.1. எறும்புகளின் சேமிப்பு உணர்வு

5.7. பிற உயிரினங்களின் சினவுணர்வு

5.7.1. பாம்பின் சினவுணர்வு

5.8. பிற உயிரினங்களின் அச்சவுணர்வு

5.8.1. தேன்வண்டின் அச்சவுணர்வு

5.8.2. பாம்பின் அச்சவுணர்வு

5.8.3. வண்டின் அச்சவுணர்வு

5.9. பாம்பின் வீரம்

5.10. பிற உயிரினங்களின் துன்பவுணர்வு

5.10.1. பாம்புகளின் துன்பவுணர்வு

5.10.2. வண்டின் துன்பவுணர்வு

5.11. வாவலின் அறிதல் உணர்வு

5.12. அசுணத்தின் அறிதல் உணர்வு

5.13. தொகுப்புரை

இயல் – 5

பிற உயிரினங்களின் உணர்வுகள்

சங்க இலக்கிய நூல்கள் சங்ககால மக்களின் வாழ்வியலைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. சங்ககால மக்களின் வாழ்வியலில் இயற்கை நிகழ்வுகள் முக்கிய இடம் பிடித்துள்ளது. சங்கப்புலவர்களும் இயற்கை நிகழ்வுகளை தங்களின் பாடல்களில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளனர். சில உணர்வுகளைக் கூறப்பட வேண்டிய சூழலில் வெளிப்படையாகக் கூறுவது அக்கால மரபில்லை. அவற்றைக் குறிப்பால் உணர்த்திச் சென்றுள்ளனர். அவ்வாறு குறிப்பாக மானிட செயல்பாடுகள் உணர்வுகளைக் கூறப்பட வேண்டிய இடங்களில் ஊர்வன, பூச்சிகள், வண்டுகள் போன்ற அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளையும் பயன்படுத்தியுள்ளனர். இயற்கையோடும் பொதுமக்களோடும் ஒன்றிவாழ்ந்த சங்கப்புலவர்கள் தங்களின் பாடல்களில் குறிப்பாக வெளிப்படுத்தியுள்ள சிறு உயிரினங்களின் உணர்வுகளை விளக்குவது இவ்வியலின் நோக்கமாகும்.

5.1. தொல்காப்பியத்தில் பிற உயிரினங்கள்

தொல்காப்பியர் ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு உயிர் வரை வகைப்படுத்திக் கூறியுள்ளார்.

‘‘சிதலும் எறும்பும் மூஅறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே’’ (தொல். 1529)

இவை தொடுதல், சுவைத்தல், மோத்தல் ஆகிய மூன்று அறிவுகளை உடையவை என்கிறார். சிதல், எறும்பு, பூச்சி இனங்களையும் இதில் அடைக்கியுள்ளார்.

“வண்டும் தும்பியும் நான்கு அறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே” (தொல். 1530)

மேற்கூறியவற்றுடன் பார்வை உணர்வுடையதையும் சேர்த்து நான்கு அறிவுடையன என்கிறார். பொறி உணர்வைக் கொண்டு தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ளார்.

5.2. நன்னூலில் பிற உயிரினங்கள்

நன்னூல் சொல்லதிகார உரியியலில் ஐந்து பொறிகளிலும் ஐந்து புலன்களையும் அறியும் வகையில் ஓரறிவு முதலாக ஐந்தறிவு ஈறாக வகைப்படுத்தியுள்ளார் பவணந்தி முனிவர்.

“சிதல் எறும்பு ஆதிமூக்கு அறிவின்மூ அறிவுஉயிர்‘‘ (நன். 427)

சிதல், எறும்பு முதலிய உயிரினங்கள் ஊறு, சுவை, நாற்றம் ஆகியமூன்றறிவு உடைய உயிரினம் என்கிறார் நன்னூலார்.

“ஆதி எனக் கூறியதால் ஈயல், மூதா, அட்டை போன்றவற்றையும் கொள்ளல் வேண்டும்”[1] என்று விளக்கம் கொடுக்கிறார் திருஞானசம்பந்தம்.

“தும்பி , வண்டு போன்றவை ஊறு, சுவை, நாற்றம், ஒளி ஆகிய நான்கு அறிவுடைய உயிர்களாகும். தொல்காப்பியர் கூறியுள்ள மூன்றறிவு, நான்கறிவு உயிரினங்களையும் அதன் உணர்வுகளையும் நன்னூலார் கூறியுள்ளார். இவற்றுடன் ஊர்வனவற்றையும் இணைத்துப் பிற உயிரினங்கள் என்று பகுத்து அவற்றின் உணர்வுகள் விளக்கப்படுகின்றன.

5.3. பிற உயிரினங்களின் இன்பவுணர்வு

இன்பவுணர்வு இனப்பெருக்கத்திற்கானது. அதனால், ஊர்வன, பூச்சிகள் என சிறு உயிரினங்களிடத்தும் காணப்படுகின்றது.

5.3.1. பல்லியின் இன்பவுணர்வு

சங்ககாலம் முதல் தற்காலம் வரை சகுனம் பார்க்கப்படுகின்றது.

"பொன்னை பகழி செப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளிஅம் காடுஇறந் தோரே" (குறுந். 16:2–5)

அம்பைத் தீட்டிக் கூர்மை செய்வதற்கு நக நுனியில் புரட்டுகின்ற போது ஏற்படுகின்ற ஓசையைப் போன்று ஆண்பல்லி பெண்பல்லியை இன்பவுணர்வுக்கு அழைக்கின்றது. பல்லிகளின் உணர்வுகளுக்கு ஏற்ப ஓசையில் மாறுபாடுகள் காணப்படுகின்றது. பல்லிகள் புணர்விற்காக அழைக்கும் ஓசையை அக்கால புலவர்கள் உணர்ந்து எழுதியுள்ளனர். மேலும் பல்லியின் புணர்விற்கான ஓசை தலைவன் மனதில் காமத்தையும் தலைவியின் நினைவையும் தூண்டுகின்றது. இது அஃறிணை உயிரினங்களின் உணர்வு, மனிதர்களின் உணர்வைத் தூண்டுவதாக உள்ளது. ஒலி மட்டுமல்லாமல் உடற்கூறு மொழிகளையும் செய்கின்றன. "பல ஊர்வனவற்றில் காதலூடாட்டமும் (Couetship) காட்சியளிப்பும் (display) காணப்படுகின்றன. பொதுவாகப் பெண்ணினத்தை ஈர்ப்பதற்காகவோ அல்லது போட்டிக்கு வந்திருக்கும் ஆண் உறுப்பினரைத் துரத்துவதற்காகவோ காட்சியளிப்புகள் நடைபெறுகின்றன. இது சில பல்லிவகைகளில் இக்குவானிட் (Iguanid)

அகாமிட் (Agamid) ஆகிய பிரிவுகளில் சிறப்பாகக் காணப்படுகின்றது. இவற்றின் ஆண்கள் பளிச்சென்ற நிறமுடையவனவாயும் தலையின் மேற்புறத்தில் கொண்டை போன்ற அமைப்புகளையும் கழுத்தின் கீழ்புறத்தில் விரியக்கூடிய விசிறிபோன்ற அமைப்புகளையும் கொண்டிருக்கின்றன. தலையின் மேற்பகுதியையும் உடம்பின் முன்பகுதியையும் முன்னும் பின்னுமாக அசைப்பது இவற்றின் காட்சியளிப்பில் முக்கிய அம்சமாகும்.''[2] இவற்றில் இருந்து பல்லிகள் இனச்சேர்க்கைக்கு ஆண்பல்லி பெண்பல்லியை அழைக்கும் என்பதை அறிய இயலும்.

5.4. பிற உயிரினங்களின் குடும்ப உணர்வு

தேனீ, கரையான், குளவி போன்ற சிறிய உயிரினங்களும் குடும்ப அமைப்பைக் கொண்டு வாழ்கின்றன.

5.4.1. தேனீக்களின் குடும்ப உணர்வு

தேனீக்களின் கூட்டுக்குடும்ப வாழ்வியலைக் கொண்டது. தேனீக்களின் குடும்ப அமைப்பை உணர்ந்து கொள்வது ஒரு சிக்கலான தன்மை கொண்டது. தேனீக்கள் தேன்களைச் சேகரித்து வைக்கின்ற இயல்புடையன. இது அதன் இனப்பெருக்கத்தையும் குடும்ப அமைப்பையும் காட்டுகின்றது. இதனை,

''பறவை இழைத்த பல்கண் இறாஅல்
தேனுடைக் கவாஅன் தெய்வம் எழுதிய'' (நற். 185: 9–10)

என்ற அடிகள் உணர்த்தும். ''தேனீக்களின் கூட்டுக் குடியிருப்புகள் இனவிருத்தி வளம்கொண்ட பெண்களையும், ஆண்களையும் வளம் அற்ற (மலட்டு) பெண்களையும் கொண்டுள்ளனவென்பதையும் இவை முறையே,

அரசிகளாகவும், ஆண்களாகவும் பணியாட்களாகவும் சாதி அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும் ஏற்கனெவே கண்டுள்ளோம். அரசித்தேனீ, வாழ்க்கையில் ஒரே ஒருமுறை தான் கருவுறுகின்றது. இளவேனிற் காலத்தில் ஒரு நிமித்திற்கு ஒரு முட்டை என்ற விகிதத்தில் முட்டையிடுகின்றது. முட்டையிடும் பொழுது ஆண் உயிரணுவைக் கலந்து கருவுற்ற முட்டையாகவோ அல்லது ஆண் உயிரணுவைக் கலந்துமால் கருவுற்ற முட்டையாகவோ இட்டுக் கொண்டேயிருக்கும். இவ்வாறு செய்வதிலிருந்து கூட்டுக்குடியிருப்பின் ஆண், பெண் விகிதத்தை நிர்ணயம் செய்கிறது. ஏனென்றால் ஹைமெனாப்பிரா (Hymenoptera) விற்கு உள்ள தனிச்சிறப்பாகும். மேலும், அறைகளின் அளவுகளையும் நிர்ணயம் செய்கின்றது. பெரிய அளவுள்ள அறைகளில் ஆண்களும் சிறிய அளவுள்ள அறைகளில் பணியாட்களும் வளர்ச்சியுறுகின்றன.”[3] இதன்வழி தேனீக்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்கின்றன என்பதை அறிய இயலும். அவைகளின் இனப்பெருக்கத் தேவைகளுக்காக தேனைச் சேகரித்து வைக்கின்றன.

5.5. பிற உயிரினங்களின் மகிழ்வுணர்வு

உயிர்கள் அனைத்திற்குமான அடிப்படைத் தேவை உணவு, உறையுள். இவை இரண்டும் கிடைத்துவிட்டால் சிறு உயிரினங்கள் மகிழ்ச்சியாக வாழும்.

5.5.1. அணிலின் மகிழ்வுணர்வு

அணில்களை அணிற்பிள்ளை என்றே அழைக்கின்றோம். அணிலின் தோற்றம் அனைவர் மனதிலும் மகிழ்ச்சியை உண்டாகின்றது. அம்மகிழ்ச்சி உண்டாக பல காரணங்கள் உள்ளன. அதன் விளையாட்டுத் தன்மையை,

‘‘காடுகால் யாத்த நீடுமரச் சோலை

விழைவெளில் ஆடுங் கழைவளர் நனந்தலை’’ (அகநா. 109: 5–6)

என்ற பாடலடிகள் குறிப்பிடும். அணில்கள் சோலைகளில் விளையாடுகின்றன. அணில்களின் மகிழ்ச்சியான விளையாட்டு இன்பத்தை ஏற்படுத்துகின்றது. அணில்கள் எப்போதும் விளையாட்டுத்தன்மை கொண்டதாக உள்ளன.

5.5.2 . தம்பளப்பூச்சியின் மகிழ்வுணர்வு

பூச்சி இனங்கள் சுறுசுறுப்புடன் செயல்படக் கூடியவை. ஓர் உயிர் மகிழ்ச்சியாக இருந்தால் தான் சுறுசுறுப்பாக இயங்க முடியும்.

‘‘செறமணல் நிவந்த களர்தோன்று இயலில்

குறுமோட்டு மூதாய் குறுகுறு ஓடி

மணிமண்டு பவழம் போலக் காயா

அணிமிகு செம்மல் ஒளிப்பன மறையக்’’ (அகநா. 374: 11–14)

குறுமோட்டு மூதாய் என்ற சொல்லுக்குத் ‘‘தம்பளப்பூச்சி’’[4] என்று உரையாசிரியர்கள் பொருள் உரைக்கின்றனர். தம்பளப்பூச்சிகள் மகிழ்ச்சியாக வழியில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த மகிழ்ச்சி தலைவன் மனதில் தலைவியைக்கானும் ஆவலை ஏற்படுத்தியுள்ளது. பட்டாம்பூச்சிகள் பூவில் தேனெடுக்கப் பரவி கிடக்கின்றன. பூச்சுகளும் மகிழ்ச்சியாக விளையாடும் கார்காலம் தொடங்கியதை,

‘‘ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்பப்

புலனணி கொண்ட காரெதிர் காலை

ஏந்துகோட் டியானை வேந்தன் பாசறை

விளையொடு வேறுபுலத் தல்கி நன்றும்'' (அகநா. 304: 15–18)

என்ற அடிகள் விளக்கும். சிறு உயிரினங்களின் மகிழ்வுணர்வு மக்களின் மனதில் மகிழ்வையும் ஏக்கத்தையும் வருத்தத்தையும் ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

5.6. பிற உயிரினங்களின் ஒற்றுமையும் சேமிப்பும்

சிறு உயிரினங்களின் பலமே அதன் ஒற்றுமை என்று கூற இயலும். தங்களுக்கான உணவையும் அவை ஒற்றுமையாகச் சேமிக்கின்றன.

5.6.1. எறும்புகளின் சேமிப்பு உணர்வு

எறும்புகள் தங்களின் எதிர்காலத் தேவைக்காகச் சேமிக்கும் பழக்கம் உடையவை அவை தங்களுக்கான உணவுச் சேமிப்பில் ஒற்றுமையுடன் பணியாற்றுகின்றன.

''கோடை நீடலின் வாடுபுலத் துக்க

சிறுவுல் லுணவு நெறிபட மறுகி

நுன்பல் எறும்பு கொண்டளைச் செறிந்த

வித்தா வல்கி வீங்குசிலை மறவர்'' (அகநா. 377: 1–4)

என்ற அடிகளில் கோடையில் வெப்பமிகுதியால் புல் அரிசியை எறும்புகள் சேகரித்து வைக்கின்றன. வறட்சியால் விதைத்து விளையாத விதைப் பொருளை உண்டனர் என்று கோடையின் தாக்கத்தை கூறும்போது எறும்புகளின் சேமிப்பையும் சேர்த்து கூறுகிறார் நப்புலத்தார். ''பெரும்பாலான எறும்புகள் மண்ணில் கூடுகட்டுகின்றன. இக்கூடுகள் முறைவரம்பற்ற

குகைகளையுடையதாகவுள்ளன. மேலும், சிலவற்றில் வாயிலில் புற்று போன்ற அமைப்பு உடையனவாயும், மற்றவற்றில் இல்லாமலும் இருக்கின்றது. குகைகள் படி அடுக்குகளாகவோ அல்லது தொடர்பு கொள்ளும் வழிகளாகவோ அமைந்துள்ளன. உள் அறைகள் இவற்றின் மூலமாக ஒன்றுக்கொன்று அல்லது வெளி உலகத்துடனே தொடர்பு கொள்கின்றன. உள் அறைகள் அடை வளர்ப்பு அரங்கங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதுமட்டுமன்றி, தானியங்கள் சேமித்து வைக்கும் களஞ்சியங்களாகவும், காளான் வளர்க்கும் தோட்டங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன''[5] என்று மோகன்தாஸ் கூறுவர்.

மேலும், ''மெஸ்ஸார் (Messor) என்ற இனத்தில் கூட்டுக் குடியிருப்பிற்காகக் களங்சியங்களில் தாவர விதைகளை எறும்புகள் சேமித்து வைக்கும் பொழுது விதைகள் முளைத்து விடாதபடி அவ்விதைகளின் முளைவேரை (radicle) கடித்தெறிந்து விடுகின்றன. மேலும் விதைகளில் ஈரம் பட்டு விட்டால் அவை முளைத்துவிடாத வண்ணம், தரை மட்டத்திற்குக் கொண்டு வந்து வெய்யிலில் உலர்த்திப் பின் உளே எடுத்துச் சென்று சேமித்து வைப்பதாக மோக்கிரிட்ஸ் (Moggridge) ஆய்ந்தறிந்துள்ளார்''[6] என்று மோகன்தாஸ் கூறியுள்ளார். ''எறும்புகளும் அணில்களும் எதிர்காலத் தேவைக்காக சேமித்து வைக்கும் உயிரிகளாக விளங்குகின்றன. எறும்புகள் குளிர் மற்றும் பனிக்காலங்களில் புற்றைவிட்டு வெளியே வரமுடியாத நேரங்களில் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்களின் மாவுப் பொருட்களைப் பங்கிட்டுக் கொள்கின்றன.''[7] சிறு உயிரினமான எறும்புகள் தங்களின் எதிர்காலத் தேவைக்காக சேமிக்கின்றன. அன்று சங்கப்புலவர் உற்றுநோக்கி கூறியுள்ள எறும்புகளின் சேமிப்பின் வளர்ச்சியாக இன்று ஆய்வாளர்கள் தங்களின்

ஆய்வகங்களில் எறும்புகளின் நடத்தைகளை உற்றுநோக்கி அவற்றின் சேமிப்புத் திறனைப் பதிவிட்டுள்ளனர்.

5.7. பிற உயிரினங்களின் சினவுணர்வு

சிறு உயிரினங்களுக்கும் ஊர்வனவற்றிற்கும் சினம் உண்டு என்பதை தற்கால நிகழ்வுகளில் காண இயலும்.

5.7.1. பாம்பின் சினவுணர்வு

பாம்பு தனது சினத்தை தனது செயல்கள் மூலமாக வெளிப்படுத்துகின்றன.

''வெஞ்சின அரவின் பைஅணந் தன்ன
தன் கமழ் கோடல் தாதுபிணி அவிழத்'' (அகநா. 154: 6–7)

என்ற அடிகளில் காந்தள் மலர்போல பாம்பு தன் சினத்தைப் படமெடுத்து வெளிப்படுத்துகின்றது.

''நஞ்சுடை வாலெயிற் றைந்தலை சுமந்த
வேக வெந்நிற னாகம் புக்கென'' (புறநா. 37: 1–2)

என்ற வாகைதிணைப் பாடலடிகள் அரசனின் திறனையும் வேகத்தினையும் குறிப்பிட சினம் மிக்க பாம்பினையும், இடியின் வேகத்தினையும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. பாம்பிற்கு நஞ்சுண்டு. இடையூறு ஏற்படுகின்ற பொழுது சினம் கொள்கின்றது. ''காதலுடாட்ட காலங்களில் ஆண்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தங்கள் பரப்பெல்லையாகக் கொண்டுள்ளன. அந்த எல்லைக்குள் பெண்களைத் தவிர, மற்ற ஆண்களை நுழைய அனுமதிப்பதில்லை இந்தப்

பரப்பெல்லைத் தன்மை, பாம்புகளின் அளவுகளுக்குத் தக்கவாறு பெரிதாகவோ சிறிதாகவோ ஆக்கிரமித்துக் கொள்ளப்படுகிறது''[8] இதுபோன்ற நிலையில் மற்ற ஆண்பாம்பு உள் நுழைந்தால் சினம் கொண்டு தாக்கச் செய்யும் என்பதை உணரமுடிகின்றது.

''பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன
அம்கோட்டுச் செறித்த அவிழ்ந்துவீங்கு தீவவின்''

(சிறுபாண். 221–222)

என்ற அடிகளில் குரங்கு பாம்பின் தலையைப் பற்றுகின்றது. அந்த பாம்பு சினம் கொண்டாலும் அது அக்குரங்கிடம் இருந்து விடுபடுவதற்காக சினத்துடன் இறுகப்பிடிக்கும். அவ்வாறு இறுக்குவதால் குரங்கின் பிடி தளரும். பிடியில் இருந்து விடுபடும்படி நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையைக் கூறப்பட்டுள்ளது. மேலும் பாம்பு சினந்து சீறும் தன்மையைக் கொண்டது என்பதை,

''பாம்புவெகுண் டன்ன தேறல்நல்கிக்'' (சிறுபாண். 237)

என்ற அடி புலப்படுத்தும்.

''இரும்புனம் நிழத்தலின் சிறுமை நோனாது
அரவுஉறழ் அம்சிலை கொளீஇ நோய்மிக்கு
உரவுச்சின முன்பால் உடல்சினம் செருக்கிக்
கனைவிடு புடையூக் கானங் கல்லென'' (குறிஞ்சிப். 157– 160)

என்ற அடிகள் யானையின் மீது பாம்பு சினம் கொண்டது என்பதை விளக்குகின்றது. கடுமையான சினம் கொண்ட மலைப்பாம்பு களிறை விழுங்கும் என்பதை,

"களிறகப் படுத்த பெருஞ்சின மாசுணம்" (நற். 261: 6)

என்ற அடி குறிப்பிடும். பாம்பு தனது இடர் ஏற்படும் பொழுது சினம் கொள்கின்றது. சினம்கொண்ட நிலையிலும் சிக்கலில் இருந்து விடுபட தந்திரமாக செயல்படுகிறது.

5.8. பிற உயிரினங்களின் அச்சவுணர்வு

பறவைகளும், விலங்குகளும் இயற்கையாகக் காட்டில் கேட்கும் ஒலியைத் தவிர வேறுபாடான ஒலி கேட்டால் அச்சமடைகின்றன. சிறு அதிர்வையும் உணரும் ஊர்வனவும் பூச்சிகளும் அச்சம் கொள்வது இயற்கையாகும்.

5.8.1. தேன்வண்டின் அச்சவுணர்வு

தேன்வண்டு மிகச்சிறிய உயிரினம். இவ்வண்டு தேனை உணவாகக் கொள்ளும். இவ்வண்டின் ஒலி இசையை, போன்று இருப்பதை,

"மணிகடல் யானை வளர்குழல் மேக
மணி வண்டு தும்பி வளைவரிகையாழ்
தணித்தெழு நாதங்கள் தாழிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க வெண்ணாதே" (திருமந். 606)

என்ற திருமந்திர அடிகள் உணர்த்தும். இசைக்கு தேனீக்கள் அச்சம் கொள்கின்றன என்பதை,

"வெண்ணெல் லரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்" (புறநா. 348: 1–2)

என்ற அடிகள் குறிப்பிடும் அறுவடைக்காலத்தில் பறவை, வண்டு போன்ற உயிரினங்களுக்குத் தீங்கு ஏற்படக் கூடாது என்பதற்காகத் தண்ணுமை இசைப்பது பண்டைய மரபு. அவ்விசைக்கு அஞ்சி தேனீக்களும் கூட்டைவிட்டு சென்றுவிடும். இசைக்குத் தேனீக்கள் அஞ்சி ஓடுவிடுகின்றது. இவ்விசை இசைக்கத் தெரிந்திருந்தால் தேன் எடுப்பவர்கள் தேனீக்களுக்கு ஊறு இல்லாமல் தேனை எடுக்கப் பயன்படுத்தியிருக்க இடமுண்டு.

5.8.2. பாம்பின் அச்சவுணர்வு

பாம்பைக் கண்டால் அனைவரும் அச்சம் அடைவர். ஆனால் பாம்பும் அச்சம் நிறைந்த உயிரினம். பாம்பு தன்னைத் தாக்குபவரை மட்டும் கடிக்கும் இயல்புடையது. தனக்குத் தீங்கு ஏற்படாத நிலையில் பாம்பு தன்விடத்தை உணவுச் செரிக்கப் பயன்படுத்துகின்றது.

நஞ்சுடைய பெரும்பாம்புகளும் அச்சம் கொள்ளும். கருடனைக் கண்டால் பாம்பு மிகவும் அஞ்சும் என்ற செய்தியை,

"அழல்என உயிர்க்கும் அச்சுவரும் கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள் அணி நீள்கொடிச் செல்வனும்" (திரு. முருகு. 149–151)

என்ற அடிகள் விளக்கும். மயிலைக்கண்டு பாம்பு அஞ்சி படமடுப்பதை,

"அருளான் வாழி தோழி யாவதும்
விரவுப்பொறி மஞ்ஞை வெரீஇ யரவின்" (அகநா. 108: 12–13)

என்ற பாடலடிகள் குறிப்பிடும். எனவே பாம்பு அஞ்சம் கொண்டால் படமெடுக்கும் என்பதை அறியமுடிகிறது.

''காம்புடை விடரகம் சிலம்பப் பாம்புடன்று
ஓங்குவரை மிளிர வாட்டி வீங்குசெலற்'' (நற். 51: 2–3)

''முழங்குகடல் முகந்த கமஞ்சூன் மாமழை
மாநிர நனந்தலை புதையப் பாஅய்
ஓங்குவரை மிளிர வாட்டிப் பாம்பெறிபு
வான்புகு தலைய குன்றம் முற்றி
அழிதுளி தலைஇய பொழுதிணு புலையன்'' (நற். 347: 1–5)

என்ற அடிகளில் இடி, மின்னல் போன்றவை ஏற்பட்டு ஒலி உண்டாகும் பொழுது பாம்பு மிகவும் அச்சமடைகின்றது. அச்சத்தின் காரணமாக பாம்பு இறந்துள்ளதும் விளக்கப்பட்டுள்ளது.

''..... தொளிறுப்பு மின்னிப்
பெயல்கான் மயங்கிய பொழுதுகழி பானாள்
திருமணி யரவுத்தேர்ந் துழல'' (நற். 255: 8–10)

என்ற அடிகளில் முதிர்ச்சியடைந்த பாம்புகள் மணியை கொண்டிருக்கும் என்றும் இரவில் உணவு தேடும் பொழுது அம்மணியை உமிழ்ந்து அதன் வெளிச்சத்தை பயன்படுத்திக் கொள்ளும் என்றும் மணியை இழந்த நாகம் மிகவும் வருந்துமென்பறும் கூறப்பட்டுள்ளது. ''நல்ல பாம்பிற்கு மணியிருப்பதாகக் கூறிய செய்தி முற்றிலும் கற்பனைச் செய்தியாகும்''[9] என்று அறிஞர் பி.எல். சாமி குறிப்பிட்டுள்ளார். மேலும் இடியின் ஓசை பாம்பை அச்சுறுத்தியமையை,

''பாம்புடன் றிடிக்கும் உருமோ'' நற். 383: 9)

என்ற அடி உணர்த்தும்.

போர் முரசின் ஓசை கேட்டும் பாம்பு அச்சம் கொண்டதை

''அஞ்சுவடு மரபின் வெஞ்சினப் புயலே

றணங்குடை யரவி னருத்தலை துமிய'' (புறநா. 211: 1–2)

என்ற அடிகள் விளக்கும்.

''விழுக்கடிப் பறைந்த முழுக்குரண் முரசம்

ஒழுக்குடை மருங்கி னொருமொழித் தாக

அரவெறி யுருமி னுரறுபு சிலைப்ப'' (புறநா. 366: 1–3)

என்ற அடிகளிலும் முரசத்தின் ஒலிக்கு, பாம்பை நடுங்கச் செய்யும் இடி முழக்கம் உவமையாகக் கூறப்பட்டுள்ளமையை அறிய இயலும்.

''குருதிப் பலிய முரசுமுழக் காக

அரசராப் பனிக்கு மணங்குறு பொழுதின்'' (புறநா. 369: 6–7)

இடி முரசின் முழக்கமாகவும், அதைக் கேட்டு அஞ்சும் அரசர்கள் பாம்பாகவும் கூறுவதில் இடி முழக்கத்திற்கு பாம்பு அஞ்சும் என்று கூறப்பட்டுள்ளது. ''மயிலுக்கு பல பெயர்கள் உண்டு. வடமொழியில் 'மயூரா' என்கிறோம். மயூரா என்றால் கொலையாளி. மயில் கொலையாளியையே (பாம்பு) கொல்வது என்பது இதன் உட்பொருளாகும்.''[10] மேலும் ''சிறிதோ, பெரிதோ எல்லா பாம்புகளுக்கும் மயிலும் எமன் என்பது ஊரறிந்த உண்மை''[11] என்கிறார் அஜித்குமார் முகர்ஜி. கழுகு, மயில் முதலிய பறவைகளுக்கும் இடிமுழக்கத்திற்கும் பாம்பு அஞ்சுகிறது.

5.8.3. வண்டின் அச்சவுணர்வு

வண்டுகள் சிறு ஒலிக்குக் கூட அச்சம் கொள்ளும். அச்சம் கொள்ளும்படி தேரொலி கேட்டது.

“கொய்சுவல் புரவிக் கைகவர் வயங்குபரி

வண்பெயற்கு அவிழ்ந்த பைங்கொடி முல்லை

வீகமழ் நெடுவழி ஊதுவண் டிரியக் ” (அகநா. 124: 10–13)

என்ற அடிகளில் முல்லைக் கொடியின் விரிந்த பூக்களில் தேன் உண்ணும் வண்டுகள் விரைவாக ஓடும். தேரின்ஒலி கேட்டு அச்சப்பட்டு ஓடியமை கூறப்படுகின்றது. இதன்வழி வண்டுகளின் அச்சவுணர்வு வெளிப்படுகின்றது.

5.9. பாம்பின் வீரம்

பாம்பு மக்களையும் எதிரிகளையும் எதிர்க்கும் ஆற்றல் கொண்டது. பாம்பைத் தடி கொண்டு தாக்க முயலும் பொழுது எதிர்த்துச் சீறும் ஆற்றல் உடையது என்பதை,

“எறிகோ லஞ்சா வரவி னன்ன

சிறுவன் மள்ளரு முளரே யாதோஅன்று” (புறநா. 89: 5–6)

என்ற பாடலடிகள் குறிப்பிடும்.

5.10. பிற உயிரினங்களின் துன்பவுணர்வு

துன்பம் என்ற உணர்வு தானாகத் தோன்றாது. ஒரு துன்பச் செயல்தான் அதைத் தூண்டும். அனைத்து உயிரினங்களுக்கும் துன்பம் தானாகத் தோன்றாது. மற்றவை தான் காரணமாக அமையும். அஃறிணை உயிரினங்களுக்கு மக்கள் இனமே மிகுதியான துன்பத்தை ஏற்படுத்துகின்றனர். இயற்கையாகவும் துன்பப்படுவது முண்டு.

5.10.1. பாம்புகளின் துன்பவுணர்வு

பாம்புகளுக்கு இயற்கை நிகழ்வுகள் துன்பத்தை ஏற்படுத்துவதை,

''நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇ'' (குறுந். 158: 1–2)

என்ற அடிகள் விளக்கும். பாம்புகள் இடிமின்னலால் இறக்கும் துன்பத்தை அடைந்துள்ளன. பாம்பின் தலை துண்டாகும்படி இடிமுழங்கியதை,

''யாங்குச்செய் வம்கொல் தோழி பாம்பின்
பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு'' (குறுந். 268: 3–4)
''கடிதுஇடி உருமின் பாம்புபை அவிய'' (குறுந். 391:3)

என்ற பாடலடிகள் உணர்த்தும்.

''..... மான்றுடன்
உரவுரும் உரறும் நீரிற் பாந்தள்
விரிநிறம் மழுங்க லன்றியும்'' (நற். 238: 7–9)

என்ற அடிகள் கடிய இடியின் முழக்கம் பாம்பின் படத்தை அடக்கும் துன்பத்தை செய்யும் என்பதை உணர்த்துகின்றன.

5.10.2. வண்டின் துன்பவுணர்வு

வண்டு மிக சிறிய உயிரினம். எனினும் அவை உயிர்வாழ சோலைகளும், தேன்நிறைந்த மலர்களும் தேவைப்படுகின்றன. சோலைகள் வேண்டுமாயின் நல்ல மழைவளம் வேண்டும் மழைப்பொழிவு இன்றி வண்டுகளின் வாழ்வு துன்பமடைவதை,

“வேனில் ஓர்இனர் தேனோடு ஊதி

ஆராது பெயரும் தும்பி

நீர்இல் வைப்பின் சுரன்இறந் தோரே” (குறுந். 211: 5–7)

என்ற பாடலடிகள் விளக்கும்.

5.11. வாவலின் அறிதல் உணர்வு

வௌவால்கள் பழங்கள் பழுக்கும் காலத்தை அறிந்துதான் மரத்தை நோக்கி வரும்,

“தாஅ அஞ்சிறை நொப்பறை வாவல்

பழுமரன் படரும் பையுள் மாலை” (குறுந். 172: 1–2)

“குறுஞ்சிளை வேம்பி னறும்பழ முணீஇய

வாவ லுகக்கு மாலையும்

இன்றுகொல் காதலர் சென்ற நாட்டே” (ஐங். 339: 2–4)

என்ற பாடலடிகளில் வாவல்கள் மாலை வேளையில் பழ மரத்தை நோக்கிச் செல்லும். வேப்பம்பழத்தின் இனிமையையும் மணத்தையும் அறிந்து அப்பழத்தை உண்ணும் பொருட்டு மாலைவேளையில் செல்லும். பகலில் வாவல்களுக்குப் பார்வைத்திறன் இல்லை.

“வேம்பின் ஒண்பழம் முனைஇ இருப்பைத்

தேம்பால் சென்ற தீம்பழன் நசைஇ

வைகுபனி உழந்த வாவல் சினை தொறும்” (நற். 279:3)

வௌவால்கள் சுவையை அறிந்துள்ளன எள்பதை வேப்பம்பழத்தை வெறுத்து இழுப்பை பழத்தை உண்ணுகின்றன. வௌவால்கள் எப்போதும் சுவை மிகுந்த கனிகளையே உண்ணும்.

5.12. அசுணத்தின் அறிதல் உணர்வு

அசுணம் பறவையா ? விலங்கா என்பதில் அறிஞர்களிடத்தில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளது. ‘‘அசுணத்தை விலங்கு என்றும் பறவை என்றும் குறிப்பிடுவதாலும் மலைக்குகைகளில் தங்கியிருந்ததாலும் இதனை வாவலின் ஒரு வகையாகக் கருத இடமுண்டு. எனவே அசுணம் என்பது ஒரு பறக்கும் விலங்கு என்பது நன்கு விளங்கும்’’[12] என்கிறார் ஆசிரியர்.

அசுணம் மிகவும் வலிமையான விலங்கு ஆனால் இசைக்கு மயங்கும்.

‘‘அசுணம் கொல்பவர் கைபோல் நன்றும்
இன்பமும் துன்பமும் உடைத்தே’’ (நற். 304: 8–9)

அசுணம் இசைக்கு மயங்கும் தன்மை வாய்ந்தது. அவ்விலங்கை கொல்ல விரும்புகிறவர்கள் இனிய இசையை எழுப்பி அதைக் கேட்டு அசுணம் மகிழ்ந்து மயங்கும்பொழுது கடுமையான பறையோசையை எழுப்பி அதனைக் கொல்வார்கள். அதுபோல தலைவன் மார்பு அசுணத்தை கொல்லுபவரின் கைபோல உள்ளது என்கிறாள் தலைவி.

‘‘மறையின்கண் யாழ்கேட்ட மானை அருளாது
அறைகொன்று மற்று அதன் ஆர்உயிர் எஞ்ச
பரை அறைந் தாங்கு ஒருவன் நீந்தான்....’’ (கலி. 143:10–12)

என்ற அடிகளிலும் யாழ் வாசித்து அசுணம் கொல்லப்பட்டது கூறப்படுகின்றது. ‘‘அசுணமா என்றதொரு பறவை உண்டு. அது யாழிசை கேட்டு இன்பமுறும். அதனைப் பிடிக்க வேண்டுமானால் இனிய யாழிசையால் அதனை இன்புறுத்த வேண்டும். திடுமென அவ் யாழிசையை நிறுத்திவிட்டுப் பறையைத் தட்ட வேண்டும். ஓசை மாற்றத்தால் அதிர்ச்சியுற்ற அப்பறவை இறந்துவிடும்.’’[13]

‘‘நவீன கால ஆராய்ச்சிகள் இது உண்மை என்றே காட்டுகின்றன. 185 டெசிபல் சப்தத்துக்கு மேல் கேட்டால் உடனே மரணம் சம்பவிக்கும்’’[14] ‘‘டால்பின் எனப்படும் மிக புத்திசாலியான கடல் விலங்கும் திமிங்கிலங்கலும் கூட்டமாகக் கடற்கரைக்கு வந்து தற்கொலை செய்து கொள்வதற்கு நீர் மூழ்கிக் கப்பலின் ஒலி அலைகளே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.’’[15] எனவே அதீத இசை உயிரினங்களைக் கொல்லும் என்பதை அறியமுடிகிறது.

தொகுப்புரை

விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் தவிர்த்த பிறவற்றை பிறஉயிரினங்கள் என்று பகுக்கப்பட்டுள்ளது. பல்லிகள் இன்பத்திற்காக ஒலியெழுப்பியும் உடல் கூறுமொழி காட்டியும் எதிர்ப்பாலினத்தை அழைக்கின்றன.

தேனீக்கள் கூட்டுக் குடும்ப வாழ்வியலைப் பின்பற்றுகின்றன. சிறு உயிரினமாக அணில், தம்பளப்பூச்சியின் மகிழ்ச்சி தலைவனின் மனதில் மகிழ்ச்சியையும் ஆவலையும் ஏற்படுத்தியுள்ளது.

எறும்புகளின் ஒற்றுமையும் சேமிப்பும் மானிடர்கள் ஒற்றுமையுடன் வாழவும், எதிர்காலத் தேவையையும் உணர வைக்கின்றது.

பாம்புகள் தங்களுக்கு இடையூறு ஏற்படும் பொழுதுதான் சினம் கொள்கின்றன. பாம்பின் சினம் அனைத்து உயிரினங்களையும் அச்சம் கொள்ள வைக்கின்றது. பாம்பும் அச்சம் கொள்கின்றது.

தேன் வண்டுகள் மாறுபட்ட இசையாகிய தண்ணுமைக்கு அச்சம் கொள்கின்றன. பாம்பு, கழுகு, மயில் போன்ற பறவைகளுக்கு அஞ்சுகின்றன. இயற்கையாக ஏற்படும் இடிமுழக்கம் பாம்புகளுக்குத் துன்பத்தையும் அச்சத்தையும் உண்டாக்கியுள்ளது.

வறட்சியால் உணவு கிடைக்காமல் தேன் வண்டுகள் துன்பமடைகின்றன.

சான்றெண்விளக்கம்

1. திருஞானசம்பந்தம் .ச. (உரை.ஆ.), நன்னூல், ப.129
2. மோகன்தாஸ் (ஆலுஃபிரட்), விலங்குகளின் சமுதாய வாழ்க்கை, பக்.140–141
3. மேலது, ப.102
4. கந்தையா, ந.சி. (உரை.ஆ.) அகநானூறு, ப.564
5. மோகன்தாஸ் (ஆலுஃபிரட்), விலங்குகளின் சமுதாய வாழ்க்கை, பக்.78–79
6. மேலது, ப.81
7. இரவி, கே, பறவை விலங்குகளின் நடத்தைகள், ப.20
8. மோகன்தாஸ் (ஆலுஃபிரட்), விலங்குகளின் சமுதாய வாழ்க்கை, ப.142
9. சாமி. பி.எல்., சங்க நூல்களில் சில உயிரினங்கள், ப.64
10. அஜித்குமார் முகர்ஜி, மயில் நமது தேசியப்பறவை, ப.4
11. மேலது, ப.10
12. தேவணன் ரா.முனைவர் சங்ககால மக்களின் வாழ்வியலில் விலங்குகள் முனைவர்பட்ட ஆய்வேடு, ப.88
13. சம்பசிவனார்.ச, தமிழ் இலக்கியத்தில் நெய்தல் திணை, ப.145
14. லண்டன் சுவாமிநாதன், சப்தம் கேட்டால் இறந்துவிடும் அதிசய மிருகம் அசுமணா, கட்டுரை எண்–980, 15.4.2014 tamila dvedas.com
15. மேலது

முடிவுரை

முடிவுரை

நிலத்தை ஐவகைத் திணைகளாக்கி முதல், கரு, உரிப்பொருள்களை வகுத்துக் கருப்பொருளில் அந்தந்த நிலச் சூழலில் வாழும் உயிரினங்களைக் கூறியுள்ளனர்.

பகுத்தறிவிலும் அனுப அறிவிலும் சிறந்துவிளங்கும் உயர்திணையாகிய மக்கள் தொடக்க காலத்தில் தமக்கான வாழ்வியல் அறிவினை அஃறிணை உயிரினங்களிடம் இருந்து கற்றுக்கொண்டு அறிவு வளர்ச்சியின் மூலம் மேம்பட்டு வளர்ந்து வருகின்றனர்.

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்வதற்கு அஃறிணை உயிரினங்கள் நடத்தைகளையும் வாழ்வியல் உணர்வுகளையும் அறிந்து செயல்பட்டதே காரணமாக அமைந்திருக்கின்றன. அதனால் தான் மனிதனைச் சமுதாய விலங்கு என்றே குறிப்பிடுகின்றனர்.

சங்க இலக்கியங்கள் மானிட உணர்வுகளை வெளிப்படுத்தி உணர்த்த அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளை உள்ளுறையாகவும் இறைச்சியாகவும் குறிப்பாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

அஃறிணை உயிரினங்களின் வாழ்வியல் உணவு தேடுவதே முதன்மையானது. உணவைத்தேடிக்கொடுத்தும் தனது அழகை வெளிப்படுத்தியும், அழகிய இருப்பிடங்களை அமைத்தும் எதிர்ப்பாலினத்தை ஈர்க்கின்றன. இவற்றின் காதலுணர்வுகள் மக்களின் உள்ளத்திலும் காதலுணர்வைத் தூண்டுகின்றன. அஃறிணை உயிரினங்கள் உணவுகளைப்

பகிர்ந்தும், இளம் உயிரியைப் பாதுகாத்தும் தனது குடும்ப அன்பை வெளிப்படுத்துகின்றன.

அஃறிணை உயிரினங்களில் இளம் உயிரினத்தைப் பாதுகாத்து வளர்ப்பதில் தாய்க்கு முதன்மையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. விலங்குகள் கூட்டுக்குடும்ப அமைப்புடன் வாழ்கின்றன. பறவைகள் தனிக்குடும்ப அமைப்புடன் வாழ்கின்றன. விலங்குகளின் குழந்தை வளர்ப்பில் உறவு விலங்குகளும் பங்குகொள்கின்றன என்றாலும் தாயே அதிக அக்கரையுடன் செயல்படுகின்றது.

பறவைகள் பார்புகள் தனித்துவாழும் திறன் உருவாகும்வரை தாயின் அரவணைப்பிலேயே வளர்கின்றன. ஆனால் நீர்வாழ்வனவற்றில் ஆமை அடைகாத்து குஞ்சுகள் பொரிப்பதில்லை. முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் நீர்நிலையை நோக்கிச் சென்றுவிடுகின்றன. முதலைகள் தன்குட்டிகளைத் தானே தின்றுவிடுகின்றன. பூச்சிகள் வண்டுகள் போன்ற சிறு உயிரினங்களின் தாய்மை உணர்வைச் சங்கப்புலவர்கள் பாடவில்லை, தாய்மை உணர்வு இனத்திற்கு இனம் மாறுபடுகின்றது.

அஃறிணை உயிரினங்கள் தங்களுக்குத் தேவையான உணவு கிடைப்பதால் மகிழ்கின்றன. இவை ஏதாவது ஒரு தூண்டலின் காரணமாகவே சினம் கொள்கின்றன. உணவுச் சங்கிலியே இவை போர்செய்ய காரணமாகின்றன. தங்களின் வாழ்வில் இடையூறு ஏற்படுத்தும் விலங்குகளிடம் எதிர்த்து வீரத்துடன் போரிடுகின்றன. அஃறிணை உயிரினங்கள் தங்களின் சமூகத்துடன் ஒற்றுமையாக வாழ்கின்றன. அவை தங்களுக்கு இன்னல் ஏற்படும் பொழுது ஒலியெழுப்பித் தன் இனத்திற்கு எச்சரிக்கை செய்கின்றன.

அஃறிணை உயிரினங்கள் இயற்கை நிகழ்வுகளையும் திசைகளையும் அறிந்து செயல்படுகின்றன.

மக்களால் பழக்கப்படுத்தி பயன்படுத்தப்படும் உயிரினங்கள் ஒரு கட்டுப்பாட்டில் செயல்பட வேண்டியுள்ளது. அவற்றிற்கு மக்களால் துன்பம் ஏற்படுகின்றது. காட்டு விலங்குகளுக்கு இயற்கை நிகழ்வுகள் துன்பத்தை ஏற்படுத்துகின்றன.

அஃறிணை உயிரினங்கள் இசைக்கு மயங்குகின்றன. அதே சமயத்தில் சில இசைகளை வெறுக்கவும் செய்கின்றன. மிகையாக ஒலி, தீ, ஆகியனவற்றிற்கும் வேட்டையாளர்களுக்கும் அச்சமடைகின்றன.

சங்கப்புலவர்கள் பறவைகளின் ஒலியைக் கொண்டு அவைகளின் உணர்வுகளை அறியமுற்பட்டுள்ளனர்.

வீட்டில் வளரும் அஃறிணை உயிரினங்களை விட காட்டில் வாழும் உயிரினங்கள் வீரத்துடன் காணப்படுகின்றன.

அஃறிணை உயிரினங்களின் ஒற்றுமை, வீரம், அச்சம், பகை போன்ற உணர்வுகளை மக்களின் அதே உணர்வை குறிக்கப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

சங்கப்புலவர்கள் அஃறிணை உயிரினங்களை உற்றுநோக்கி அதன் உணர்வுகளைப் பாடல்களில் பதிவுசெய்திருக்கின்றனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. என்றாலும் அதன் உணர்வுகளைச் சில இடங்களில் மிகப்படுத்தியும் கூறியுள்ளனர்.

மேலாய்வுக் களங்கள்

சங்கப்புலவர்கள் அக்கால மக்களின் வாழ்வியலைக் கூறும் பொழுது அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளையும் அவற்றின் வாழ்வியலையும், வாழ்வியல் சூழலையும் விளக்கியுள்ளனர். அவ்வகையில்,

1. சங்ககால மக்களும் அஃறிணை உயிரினங்களின் உணர்வுகளும் ஒப்பீடு
2. சங்ககால அஃறிணை உயிரினங்களின் வாழ்வியல்
3. சங்ககால அஃறிணை உயிரினங்களின் வாழ்வியல் சூழல்

போன்றவை மேலாய்வுக் களங்களாக அமைகின்றன.

துணைநூற்பட்டியல்

முதன்மை சான்றாதாரங்கள்

1. அண்ணாமலை . சுப. (உரை.ஆ.) – கலித்தொகை
கோவிலூர் மடலாயம்
கோவிலூர் – 630307
2008

2. கந்தையா. ந.சி. (உரை.ஆ.) – பத்துப்பாட்டு
தமிழ்மண் அறக்கட்டளை
பெரியார் குடில்
பி.11, குலமெலர் குடியிருப்பு
செவாலியே சிவாசி கணேசன் சாலை
தியாகராயர் நகர்
சென்னை–600017
2008

3. கந்தையா. ந.சி. – அகநானூறு
தமிழ்மண் அறக்கட்டளை
சென்னை– 600 017

4. சக்திதாசன் சுப்பிரமணியன் (உரை.ஆ.) – கலித்தொகை
தமிழ்மண் அறக்கட்டளை
சென்னை– 600 017
2008

5. சாரங்கபாணி . இ.ரா. (உரை.ஆ.) – பரிபாடல்
கோவிலூர் மடலாயம்
கோவிலூர் – 630 307
2003

6. சிங்காரவடிவேலன்.அர. (உரை.ஆ.) – ஐங்குறுநூறு
கோவிலூர் மடலாயம்
கோவிலூர் – 630 307
2003

7. சுப்பிரமணியன். ச.வே. (உரை.ஆ.) – பத்துப்பாட்டு
கோவிலூர் மடலாயம்
கோவிலூர் – 630 307
2003

8. சோமசுந்தரனார். பொ.வே. (உரை.ஆ.) – குறுந்தொகை
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
522 டி.டி. கே.சாலை
சென்னை–18
2007

9. சோமசுந்தரனார். பொ.வே. (உரை.ஆ.) – பரிபாடல்
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
522 டி.டி. கே.சாலை
சென்னை–18
2007

10. சோமசுந்தரனார். பொ.வே. (உரை.ஆ.) – ஐங்குறுநூறு
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
522 டி.டி. கே.சாலை
சென்னை–18
2007

11. நச்சினார்க்கினியர். (உரை.ஆ.) – கலித்தொகை
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
522 டி.டி. கே.சாலை
சென்னை–18
2007

12. நாராயணசாமி ஐயர் (உரை.ஆ.) – நற்றிணை
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
522 டி.டி. கே.சாலை
சென்னை–18
2007

13. தமிழண்ணல் (உரை.ஆ.) – குறுந்தொகை
கோவிலூர் மடலாயம்
கோவிலூர்– 630 307
2004

14. துரைசாமிப்பிள்ளை. சு. (உரை.ஆ.) – ஐங்குறுநூறு தொகுதி 1,2
தமிழ்மண் அறக்கட்டளை
சென்னை–600 017
2008

15. துரைசாமிப்பிள்ளை. சு. (உரை.ஆ.) – நற்றிணை
தமிழ்மண் அறக்கட்டளை
சென்னை–600 017
2008

16. துரைசாமிப்பிள்ளை. சு. (உரை.ஆ.) – புறநானூறு தொகுதி 1,2
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
522 டி.டி. கே.சாலை
சென்னை–18
2007

17. துரைசாமிப்பிள்ளை. சு. (உரை.ஆ.) – பதிற்றுப்பத்து
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
522 டி.டி. கே.சாலை
சென்னை–18
2007

18. மீனவன். நா. – அகநானூறு
களிற்றியானை நிரை
கோவிலூர் மடலாயம்
கோவிலூர் – 603 307
2004

19. மீனவன். நா. – அகநானூறு
மணிமிடை பவளம்
கோவிலூர் மடலாயம்
கோவிலூர் – 603 307
2004

20. மீனவன். நா. – அகநானூறு
நித்திலக்கோவை
கோவிலூர் மடலாயம்
கோவிலூர் – 603 307
2004

21. வேங்கடசாமி நாட்டார். ந.மு. (உரை.ஆ.)– அகநானூறு
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
522. டி.டி.கே. சாலை
சென்னை–18
2007

துணைமைச் சான்றாதாரங்கள்

1. அஜித்குமார் முகர்ஜி – மயில் நமது தேசியப் பறவை
இயக்குனர்
பப்ளிகேஷன் டிவிஷன்
தகவல் ஒலிபரப்பு அமைச்சகம்
சூச்னா பவன்,
சி.ஜி. ஓ.காம்பிளக்ஸ்
லோதி ரோட்
புதுதில்லி– 110003
2007

2. ஆதி வள்ளியப்பன் – நாராய் நாராய் (பறவை சரணாலயங்கள் வழிகாட்டி)
புக்ஸ் ஃபேர் சில்ரஸ்
பாரதி புத்தகாலயத்தின் ஓர் அங்கம்
7, இளங்கோ சாலை
தேனாம்பேட்டை
சென்னை–600 018
1997

3. ஆல்ஃபிரல் மோகன்தாஸ் – விலங்குகளின் சமுதாய வாழ்க்கை
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை
1972

4. இரவி. கே. ஆத்மா – பறவை விலங்குகளின் நடத்தைகள்
புக்ஸ் ஃபார் சில்ரன்
பாரதி புத்தகாலயத்தின் ஓர் அங்கம்
7, இளங்கோ சாலை
தேனாம்பேட்டை
சென்னை– 600 018
2003

5. இரவிக்குமார். துரை – சங்க இலக்கியத்தில் விலங்குப் பெயர்
காவியா பதிப்பகம்
16, இரண்டர் குறுக்குத் தெரு
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024
2013

6. இரவிக்குமார். துரை – சங்க இலக்கியத்தில் பறவைப் பெயர்
காவியா பதிப்பகம்
16, இரண்டர் குறுக்குத் தெரு
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024
2013

7. இராசமாணிக்கம் – உளவியல் துறைகள்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை
1974

8. இராமசுப்பிரமணியம். வ.த. – நம்பியகப்பொருள் விளக்கம்
முல்லை நிலையம்
9, பாரதி நகர் முதல்தெரு
தி.நகர்
சென்னை– 600 017
2002

9. எங்கெல்ஸ் – குடும்பம், தனிச்சொத்து, அரசு
ஆகியவற்றின் தோற்றம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
41, பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர்
சென்னை–600 098
2008

10. கார்த்திகேசு சிவத்தம்பி – பண்டைத் தமிழ்ச் சமூகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
அம்பத்தூர்
சென்னை – 600 008
2017

11. கிருஷ்ணன். மா. – பெருமாள் முருகன் ப.அ.
பறவைகளும் வேடந்தாங்களும்
3/58 கொங்குநகர்
மோகனூர் சாலை, நாமக்கல் – 637 002
2010

12. குருசாமி. சோ. – இலக்கியங்களில் இயற்கை
அறிவுப் பதிப்பகம்
16 (142) ஜானி ஜான்கான் சாலை
ராயப்பேட்டை,
சென்னை– 600 014
2012

13. குன்றில் குமார் – யானைகள் (வாரணம் பற்றிய
பூரணத் தகவல்கள்)
செந்தமிழ் பதிப்பகம்
15/21 டீச்சர்ஸ் கில்டு காலணி
2வது தெரு, இராஜாஜி நகர்,
வில்லிவாக்கம், சென்னை– 600 049
2014

14. கோவிந்தராச முதலியார். க.ர. – அகப்பொருள் விளக்கம்
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்பு கழகம்
154 டி.டி.கே சாலை
சென்னை– 18
1997

15. சங்கரன். எஸ் – உயிர்களின் தோற்றமும் வளர்ச்சியும்
அமராவதி பதிப்பகம்
59, இடம்தெரு
மயிலாப்பூர்
சென்னை– 600 004
2012

16. சண்முக சுந்தரம். சு. – சங்க இலக்கிய வரலாறு
மா.ரா. களஞ்சியம்
காவியா பதிப்பகம்
16, இரண்டாம் குறுக்குத்தெரு
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024
2018

17. சாமி. பி.எல். – சங்க நூல்களில் சில உயிரினங்கள்
சேகர் பதிப்பகம்
66, பெரியார் தெரு
எம்.ஜி. ஆர். நகர்
சென்னை– 600 078
1981

18. சாமி. பி.எல். – சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
சென்னை–1
1970

19. சாமி. பி.எல். – சங்க இலக்கியத்தில் புள்ளின
விளக்கம்
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
சென்னை–1
1976

20. சாரங்கபாணி. இரா. – இயற்கை விருந்து
மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கிதெரு
சென்னை– 600 001
1991

21. சாரங்கபாணி. இர. – சங்க இலக்கிய தேற்கோள்கள்
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு
சிதம்பரம்– 608 001
2008

22. சிங்காரவடிவேலன். அர. – வாழ்க வையகம் இலக்கிய
வாழ்வியல் கட்டுரைகள்
வெற்றிவேல் அறக்கட்டளைப் பதிப்பகம்
106, வ.உ.சி. தெரு
கண்டனூர்– 630 104
1991

23. சிதம்பரனார். சாமி. – பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்
நாம் தமிழர் பதிப்பகம்
10/14 தோப்பு வேங்கடாசலம் தெரு
திருவல்லிக்கேணி
சென்னை–5
2012

24. சீனிவாசன். ச.பொ. – சங்க இலக்கியத்தில் அகவுணர்வு
உயிரினப் பாகுபாடு
சேகர் பதிப்பகம்
66, பெரியார் தெரு
சென்னை– 600 078
2005

25. சுப்ரமண்யன். நா. – சங்ககால வாழ்வியல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
அம்பத்தூர்
சென்னை– 600 098
2017

26. சுப்பிரமணிய பிள்ளை. – பழந்தமிழர் நாகரிகம்
சாரதா பதிப்பகம்
சென்னை–14
2018

27. செல்வஇருளப்ப சாமி – உலகில் உள்ள உயிரினங்கள்
பார்த்திபன் பப்ளிகேஷன்ஸ்
பழவந்தாங்கல்
சென்னை– 600 014
2009

28. செல்வராசு. நா. சிலம்பு. – அகப்பொருள் கோட்பாடு
(தொல்காப்பியம் – சங்க இலக்கியம் ஒப்பீடு)
அம்பத்தூர்
சென்னை
1997

29. திருநாவுக்கரசு – தமிழக வனவிலங்கு பறவைகள் சுற்றுலா
மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு
பாரிமுனை
சென்னை– 600 108
2016

30. நாராயணன். இர. – திருக்குறளில் உயிரினங்கள்
பூங்கொடி பதிப்பகம்
மயிலாப்பூர்
சென்னை–4
2012

31. பரிமளா – மீன்கள் அன்றும் இன்றும்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
மறுதோன்றி அச்சகம்
தஞ்சாவூர்
1991

32. பாலசுப்பிரமணியன். கு.வெ. – சங்க இலக்கியத்தில் சமூக அமைப்பு
தமிழ் பல்கலைக் கழக வெளியீடு
தஞ்சாவூர்
1994

33. மாணிக்கம். வ.சுப. – தமிழ்காதல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர்
சென்னை–600 098
2012

34. முகமது அலி. ச. – அழியும் பேருயிர் யானைகள்
இயற்கை வரலாறு அறக்கட்டளை
அம்பராம்பாளையம்
பொள்ளாச்சி – 642 103
2009

35. மோகன்தாஸ் ஆல்ஃபிரட் – விலங்குகளின் சமுதாய
வாழ்க்கை
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை–2
1972

36. ரத்தினம். க. – சங்க இலக்கியத்தில் யானைகள்
மணிவாசகர் பதிப்பகம்
பாரிமுனை
2005

37. ரத்தினம். க. – தமிழ்நாட்டுப் பறவைகள்
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு
சிதம்பரம்– 608 001
2013

38. ரத்தினம். க. – தமிழ் செவ்வியல் இலக்கியத்தில் பறவைகள்
ஆர். கே. பிரிண்டஸ்
சென்னை–14
2014

39. ரவிசங்கர். செ. – தமிழ் இலக்கியத்தில் உவமை
திருக்குறள் பதிப்பகம்
எம்.ஜி. ஆர் .நகர்
சென்னை– 600 078
2009

40. ராசமாணிக்கனார். மா. – பத்துப்பாட்டு ஆராய்ச்சி
சாகித்திய அகாதெமி
புதுதில்லி– 110 001
2016

41. ரமேஷ் பேடி – யானை காடுகளின் அரசன்
நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா
5, நேருபவன்
புதுதில்லி – 110 070
2001

42. ரமேஷ் பேடி – புலிகளுக்கும் கொம்பன் யானைகளுக்கும் நடுவில்
நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா
5, நேருபவன்
புதுதில்லி – 110 070
2016

43. ராஜாராம். கு. – பறவைகள் பற்றிய அறிவியல்
நாகு வெளியீடு
அண்ணாநகர் மேற்கு
சென்னை– 600 040
2008

44. வசந்தகுமார். இரா. – அறிவியல் கண்ணோட்டத்தில்
சங்க இலக்கியத்தில் விலங்குகள் தொகுதி.1
எம். கலைவாணன்
மனைஎண்.9, கதவுஎண்–26
ஜோசப் காலனி, ஆதம்பாக்கம்
சென்னை– 600 008
2002

45. வசந்தகுமார். இரா. – அறிவியல் கண்ணோட்டத்தில்
சங்க இலக்கியத்தில் விலங்குகள் தொகுதி.2
வசந்தாபதிப்பகம்
ஜோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம்
சென்னை– 600 008
2006

46. வரதராசன்.மு. – பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை
பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை–108
2011

47. வானிஸ்ரீ. பா. – சங்க அகப்பாடல்களில் விலங்குகள்
MJ Publication House
9. Saint john church complex
Rockins road
Trichy -1
2018

48. வெள்ளைவாரணன். க. – சங்ககாலத் தமிழ் மக்கள்
நாம் தமிழர் பதிப்பகம்
4/7 ராஜா அனுமந்தா தெரு
திருவல்லிக்கேணி
சென்னை–600 005
2015

49. வேங்கடசாமி . மயிலை. சீனி. – பழங்காலத தமிழர் வாணிகம்
நாம் தமிழர் பதிப்பகம்
திருவல்லிகேணி
சென்னை–600 005
2007

50. ஸலீம் அலி. – பறவைகள் உலகம்
டைரக்டர்
நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா
ஏ–5 கிரீன் பார்க்
புதுடில்லி 110 016
1991

51. ஜமால் ஆரா – பறவைகளைப் பார்
நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
ஏ–5 கிரீன் பார்
புதுதில்லி
1970

பின்னிணைப்பு – 1

I. தொல்காப்பியத்தில் விலங்குகள்

வ.எண்	தொல்காப்பியர்	இளமைப்பெயர் (நூற்பா எண்)	ஆண்பாற் பெயர் (நூற்பா எண்)	பெண்பாற் பெயர் (நூற்பா எண்)
1	அணில்	பறழ் (1506) குட்டி (1505)		
2	ஆடு	குழவி (1519) மறி (1511)	ஆண் (1550) மேத்தை (1547) தகர் (1547) உதள் (1547) அப்பர் (1547) ஏற்றை (1549)	முடு (1564) கடமை (1564)
3	ஆநிரை	கன்று (1514) குழவி (1519)	ஏறு (1531) போதது (1541) ஏற்றை (1549) ஆண் (1550)	ஆ (1560) நாகு (1562)
4	எருமை	குழவி (1519) கன்று (1515)	ஒருத்தல் (1537) ஏறு (1539) போத்து (1541) ஆண் (1550) கண்டி (1568)	ஆ (1560) நாகு (1562)
5	எலி	பறழ் (1506) குட்டி (1505		
6	ஒட்டகம்	கன்று (1516)		பெட்டை (1552)
7	கழுதை	கன்று (1514)		பேடை (1552)
8	கவரி	கன்று (1516)	ஏறு (1538) ஒருத்தல் (1535) ஏற்றை (1549) ஆண்(1550)	பிணை (1557)
9	குதிரை	மறி (1511) குட்டி(1512) கன்று (1514)	சேவல் (1568)	பேடை (1552)
10	குரங்கு ஊகம் முசு	பார்ப்பு (1513) பறழ் (1513) பிள்ளை (1513) மகவு (1513) குழவி (1521) குட்டி (1521) குழவி (1521) குழவி(1521)	கடுவன் (1568) ஆண் (1550) ஏற்றை(1549) ஆண் (1550) ஏற்றை (1549) கலை (1546) ஏற்றை (1549) ஆண் (1550)	மந்தி (1567) மந்தி (1567) மந்தி (1567)
11	கேழல்	குருளை (1507) பறழ் (1509)	ஏறு(1538) ஏனம் (1538)	பிணவு (1538) பிணவல் (1559)

		குட்டி (1509) பிள்ளை (1510)	ஒருத்தல் (1536) ஏற்றை (1549) ஆண் (1550) கன்று (1536)	பாட்டி (1565)
12	நரி	பறழ் (1507) குட்டி (1509) பிள்ளை (1510) குருளை (1509)	–	பாட்டி (1566)
13	நாய்	குருளை (1507) பறழ் (1509) குட்டி (1509)	–	பிணவு (1558) பாட்டி (1565) பிணவல் (1559)
14	புலி	குருளை (1507) பறழ் (1509) குட்டி (1509) பிள்ளை (1510)	ஒருத்தல் (1535) இரலை (1544) போத்து (1541) கலை (1544) ஆண் (1550) ஏறு (1538) ஏற்றை (1549)	–
15	மான் (i) உழை	மறி(1511) குட்டி (1512)	ஏறு (1538) ஒருத்தல் (1545) ஏற்றை (1549)	பிணை (1557)
	(ii) நவ்வி	குழவி (1519) கன்று (1515)		பிணை(1557)
	(iii) கடமை	கன்று (1514) குழவி (1519)		
	(iv) மரை	கன்று (1515) குழவி(1519)	ஒருத்தல் (1535) ஏறு (1538) போத்து(1541)	பெட்டை (1552) ஆ(1560) நாகு(1562)
	(v) புள்வாய்	மறி (1511)	ஆண் (1550) ஒருத்தல்(1535) ஏறு (1538) ஏற்றை (1549) போத்து(1541) இரலை (1544) கலை (1544)	பிணை (1557) பிணவு (1558) பிணவல் (1559)
16	முயல்	பறழ் (1509) குருளை (1507) பிள்ளை (1510) குட்டி (1509)	–	–
17	மூங்கா	பறழ் (1506) குட்டி (1505)	–	–
18	யானை	கன்று 1514 குழவி 1518 குஞ்சரம் 1518	ஒருத்தல் 1536 களிறு 1533 ஏற்றை 1549 ஆண் 1550	பிடி 1551
19	வெருகு	குட்டி 1505 பறழ் 1506	பூசை 1568	–

II. தொல்காப்பியத்தில் பறவைகள்

வ.எண்	பொதுப்பெயர்	இளமைப்பெயர் (நூற்பா எண்)	ஆண்பாற்பெயர்கள் (நூற்பா எண்)	பெண்பாற் பெயர்கள் (நூற்பா எண்)
1	பறவைகள் அனைத்திற்மானது	பார்ப்பு (1503) பிள்ளை (1503)	மயில் தவிற்த்த மற்ற அனைத்து பறவைகளுக்கும் சேவல் (1548)	பேடை, பெடை பெட்டை (1552)
2	மயில்		போத்து (1543)	அளகு (1555)
3	கோழி			அளகு (1555)
4	கூகை			அளகு (1555)

III. தொல்காப்பியத்தில் நீர்வாழ்வன

வ.எண்	பொதுப்பெயர்	இளமைப்பெயர்கள் (நூற்பா எண்)	ஆண்பாற் பெயர்கள் நூற்பா எண்	பெண்பாற் பெயர்கள் நூற்பா எண்
1	இடங்கர்		போத்து (1542)	
2	எழால்		போத்து (1542)	
3	கராம்	கன்று (1516)	ஒருத்தல் (1535) போத்து (1542)	
4	நந்து			நாகு 1563
5	சுறா		போத்து (1542) ஏறு (1540)	
6	முதலை		போத்து (1542)	
7	வரால்		போத்து (1542)	
8	வாளை		போத்து (1542)	

ஊர்வன அனைத்திந்குமான இளமைப்பெயர்– பார்ப்பு, பிள்ளை (1504) தொல்காப்பியர் ஊர்வன என்று பொதுவாக மட்டுமே கூறியுள்ளார். ஆண்பால் பெயர், பெண்பால் பெயர்களை கூறவில்லை.

IV. தொல்காப்பியத்தில் விலங்குகளின் இளமைப்பெயர்கள்

வ.எண்	இளமைப்பெயர்	விலங்குகள் நூற்பா எண்
1	கன்று	ஆநிரை–1514 கழுதை – 1514 குதிரை –1514 கடமை –1514 யானை–1514 எருமை –1515 நவ்வி–1515

		மரை– 1515 ஒட்டகம்– 1516 கவரி– 1516
2	குஞ்சரம்	யானை– 1518
3	குட்டி	அணில்– 1505 எலி– 1505 கீரி– 1505 குதிரை– 1512 குரங்கு– 1512 நரி– 1509 கேழல்– 1509 நாய்– 1509 புலி– 1509 வெருகு– 1505
4	குருளை	கேழல்– 1507 நரி– 1509 நாய்– 1509 புலி– 1507 முயல்– 1507
5	குழவி	ஆநிரை–1519 குரங்கு –1521 ஊகம்–1521 முசு – 1521 நவ்வி– 1519 கடமை– 1519
6	பார்ப்பு	குரங்கு – 1513
7	பறழ்	அணில் (மூவரி அணில்) 1506 நரி– 1508 எலி– 1506 கீரி– (மூங்கா) 1506 குரங்கு (1513) கேழல் (1509) நாய் (1509) புலி (1509) முயல் –1509 வெருகு – 1506
8	பிள்ளை	குரங்கு– 1513 கேழல் –1510 நாய்– 1509 புலி– 1507 முயல்– 1507
9	மகவு	குரங்கு– 1513
10	மறி	ஆடு 1511 குதிரை 1511 உழை 1511 புல்வாய் 1511

V. தொல்காப்பியத்தில் விலங்குகளின் ஆண்பாற் பெயர்கள்

வ.எண்	ஆண்பாற் பெயர்	விலங்குகள் நூற்பா எண்.
1	அப்பர்	ஆடு–1547
2	இரலை	புலி– 1544 புல்வாய் – 1544
3	உதள்	ஆடு– 1547
4	ஏற்றை	ஆடு–1549 ஆநிரை–1549 குரங்கு–1549 ஊகம்–1549 முசு–1549 கேழல்–1549 புலி–1549 உழை–1549 கவரி–1549 புல்வாய்–1549 யானை–1549
5	ஏறு	கேழல்–1538 புல்வாய்–1538 உழை–1538 கவரி–1538 எருமை–1539 மரை –(காட்டுப்பசு) 1539 பெற்றம் 1539
6	ஒருத்தல்	புலி –1535 உழை– 1535 கவரி –1535 மரை–1535 புல்வாய்– 1535 யானை– 1535 கராம்– 1535 கேழல்– 1536 எருமை– 1537
7	கடுவன்	குரங்கு– 1568
8	கண்டி	எருமை– 1568
9	கலை	முசு– 1546 புலி– 1544 புல்வாய்– 1544
10	களிறு	கேழல்– 1536 யானை– 1533
11	சேவல்	குதிரை–1568
12	தகர்	ஆடு– 1547
13	போத்து	ஆநிரை– 1541 எருமை– 1541 புலி– 1541 மரை– 1541 புல்வாய்– 1541
14	மோத்தை	ஆடு 1547

VI. தொல்காப்பியத்தில் விலங்குகளின் பெண்பாற் பெயர்கள்

வ.எண்	பெண்பாற் பெயர்கள்	விலங்குகள் நூற்பா எண்
1	ஆ	ஆநிரை – 1560 எருமை– 1560 மரை–1560 (காட்டுப்பசு)
2	கடமை	ஆடு 1564
3	நாகு	ஆநிரை– 1562 எருமை – 1562 பெற்றம்–1562
4	பாட்டி	கேழல்– 1565 நரி– 1566 நாய்– 1565
5	பிடி	யானை– 1551
6	பிணவல்	கேழல்– 1559 நாய்– 1559 புல்வாய்– 1559
7	பிணவு	கேழல்– 1558 நாய்– 1558 புல்வாய்– 1558
8	பிணை	புல்வாய்– 1557 நவ்வி– 1557 உழை– 1557 கவரி– 1557
9	பெட்டை	ஒட்டகம்– 1552 மரை– 1552 கழுதை– 1552 குதிரை– 1552
10	பேடை	கழுதை– 1552 குதிரை–1552
11	மந்தி	குரங்கு– 1567 ஊகம்–1567 முசு –1567
12	மூடு	ஆடு– 1564

பின்னிணைப்புகள் – 2

எட்டுத்தொகை

I. விலங்குகள் – உணர்வுகள்

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
1	ஆ	காதல்							238: 5–9		1
		இன்பவுணர்வு		190: 67				113:25–29		339:1–2	3
		குடும்பவுணர்வு				71:13–17			64:11–14		2
		தாய்மை	57:1–2	108:2				109:4 9:10	14:9–11 56:1–12		6
		சமூகவுணர்வு	291:7–8						321:7–9 253:12–14 269:2–4		4
		அறிதல்							124:13–16		1
		மகிழ்வுணர்வு					89:5				1
		சினம்						102: 9–40			
								103: 10–80 104: 10–80			3
		செருக்கு						109:4–9			1
		துன்பம்	315:4–5						259:9–12	224:13–17	
			260:7–8						140: 14–15		
			37:2						329: 5–7		7

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
	ஆ	வருத்தவுணர்வு		64: 1–4							1
		அச்சவுணர்வு		322: 1–3							1
		வீரம்						101	334:1–3		
								102			
								103			4
		போர்								288:1–4	1
2	ஆனேறு	பகை			493:1						1
3	ஆடு	அறிதல்	142:4–7								1
4	எருமை	தாய்மை		181:3							1
		அறிதல்			95:1–2						1
		மகிழ்வுணர்வு							46:1–5		
									56: 3–5		2

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
		அச்சவுணர்வு			97:1–2						1
5	எலி	சேமித்தல்								190:1–3	1
6	ஒட்டகம்	துன்பம்							245:17–18		1
7	கரடி	குடும்பவுணர்வு							201:15–20		1
		சமூகவுணர்வு							267:5–9 275:12		2
		தற்காப்பு							171:10–14		1
8	கழுதை	துன்பம்							120:12 207:5–7 343:11–14		3
9	குதிரை	மகிழ்வுணர்வு		74:1–8					300:20–22		2
		அறிதல்							130:9–1		1
		செருக்கு								55:7–8	1
		துன்பம்	21:4–5 58:10–11		481: 2–4				190:12–16		4
		வெறுப்பு	380:11								1
10	குரங்கு	காதல்	233:1–3	69:1–4					378:20–23		3
		இன்பவுணர்வு	51: 7–11 334:1–5						378:20–22		3
		குடும்பவுணர்வு	251:1–3	278:47	247				352: 1–7		

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
					383: 1–9				238:1–9		
					29:2–6						7
		தாய்மை உணர்வு	57: 3–6	29: 5–6							2
		சமூகவுணர்வு		288:1–2					205:21–24	378:18:25 380:20:22	4
		வெறுப்பு	380:1								1
		துன்பம்		249:2	272:1–3				53:2–5		3
		வருத்தம்						41:5			1
		அச்சவுணர்வு		385:1–4	274:1–3						2
11	கேழல்	காதல்			262:1–2						
					264:1–2						2
		மகிழ்வுணர்வு								132: 4–6	1
		சினவுணர்வு	82: 7–11		266: 1–2						2
		வீரம்							248:4–7		1
		அச்சம்							182:7–12 248:4–7		2

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
12	நாய்	காதல்			323: 1–4				21:17–19		
									285:4–7		3
		நன்றி							188:5		
									388:14		2
		வேட்டை	252:10–11						199:7–10		
									28:7–8		
									107:11–8		
									118:5		
									180:5		6
		சினம்	212:5						388:14		2
13	செந்நாய்	இன்பவுணர்வு			354:1–2						1
14	நரி	சமூகவுணர்வு							375:6	168:7–9	2
		அச்சவுணர்வு							274:10–4		
15	புலி	காதல்							72:12–15		

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
									112:5–7		
									283: 1–9		
									357: 3–7		
									362:3–6		5
		தாய்மை								42:10	1
		மகிழ்வுணர்வு	344:9						178:1–13		2
		சினம்			218:2–3						1
		பகை		141: 3–8							1
		அச்சம்			307:1–2						1
		வீரம்	144:1–5	237: 5–6					392:15–16		
			148:10	343:2–3							
			154: 4–7								
			158: 1–8								7

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
	புலி	தன்மானம்								190:6–9	1
	புலி, யானை	போர்	39:4–9	88: 2–3				103:56–57	112:5–6	268:1–3	
			104:1–2	343:3–4						291: 5–7	
			36:1–3	284:1						308:1	
			65: 5–8							332:2–7	
			151:2–3							347:11–14	
			225:1–2								16
16	பூனை	காதல்							367:8–12		1
		தாய்மை		107:4							1
		சமூகவுணர்வு		139: 1–3							1
17	மான்	காதல்							74:9–4 129:3–5 184:11–14 291:16–21 321:4–5		5
		இன்பம்		250:2					145:1–6		
				256: 2–3					134: 10–15		

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
				65:1–2					139:10–13		
			256:8	319:12					287:10–17		
									234:9–8		10
		குடும்பம்							34:3–9		
									314:5–6		2
		தாய்மை		187: 1–2							1
		சமூகவுணர்வு		235:3–5							1
		மகிழ்வுணர்வு							148:1–6		1
		துன்பம்	61: 3–4						285: 4–6		
			84:4–5					13:1–3	241: 6–11		5
		அச்சம்	179:4						199: 6–12	23:19–22	
			250:10								4
		வருத்தவுணர்வு		391:1–2							1

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
18	யானை	காதல்	137:6–9	37					137:1–4		
			186:1–4						8:9–12		5
		இன்பம்	232:1	136:3–5			10:41–55		78:3–6		
				332: 3–6					298: 4–5		7
				346: 1–3							
		குடும்பம்	92:5–9						218: 1–2	369: 25–28	
			202:1–6						85: 6–8		
			398						121: 3–8		
									197: 13–15		8
		தாய்மை	85: 4–6						229: 4–6	135: 11–15	3
		சமூகவுணர்வு		255:3–5					332: 1–3		
									334: 4–6		
									357:8–10		4
		அச்சம்	14:8–11	54:2–3		20:11–14			221: 11–13	308: 8–11	
			144:1–4	357:6–7					228: 12–13		10
			217:2–5						232: 2–4		

வ.எண்	விலங்குகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
		அறிதல்	151: 2–4	170:3						17:15–19	3
		மகிழ்வுணர்வு							202: 1–4		
									279:24–26		2
		சினம்	103:2–6	348:2–5	314:3	16:6–9			247:8–9	4:9–12	
			126:3–6	136:3–6	352:3–5	41: 7–10			325:19	307:2–11	
			336: 7						388:14	337:1–5	
			360: 6–10						164:11–14		
									336:13–14		18
		செருக்கு								66:3	1
		துன்பம்	105: 4–5	215:4–5	394:1–3			7:1	165:1–6	69:9–10	
			171: 1–5		305: 1–3			8:1–4	29: 16–18		
					327: 1–3			12:1–4	91:5–7		
					337: 1–4			13:69 24:10	155:9–10 187:1–25 233:4–5 335:4–9 257:14–16 18:4–5		22
	மொத்தம்		50	38	4	4	2	18	103	26	263

II. பறவைகள் – உணர்வுகள்

வ.எண்	பறவைகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
1	அன்றில்	காதல்						131:28	50:11–13		
									120:14–16		3
		இன்பம்		160: 1–5					260: 6–7		
				301: 1–4							3
		துன்பம்	303: 3–6					137:3–5	270:12–15		
			335:2–9						305:13–15		5
2	அன்னம்	காதல்						69:6–7			
								70:1–6			2
		இன்பம்			106:1–4			147:64–67			2
		தாய்மை	356:1–5								1
		சமூகம்						92:17–18	320:8–9		2
3	காக்கை	காதல்	31:2–5								
			231:4							2	2
		குடும்பம்	343:4–7							1	1

வ.எண்	பறவைகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
		மகிழ்ச்சி		313:1–3	167:1–2						2
		சமூகம்	319:1–5								1
		பாதுகாப்பு			168: 1–3						
					169: 1–3						2
4	கிளி	மகிழ்ச்சி	304:1–4								1
		சமூகம்	206:4								
			134:4								2
		அறிதல்							192:58		1
		அச்சம்	104:5–6	360:6					32:5–6 320:8–9		4
5	குயில்	இன்பம்	224: 5–7								1
		மகிழ்ச்சி							229:15–19		
									219:10–12		
									355:1–2 317:6		4

வ.எண்	பறவைகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
6	குருகு	குடும்பம்			7:4						1
		சமூகவுணர்வு							40:3–5		1
		பார்பின் பாசம்	91: 1–2								1
		துன்பம்						121:15–18	55: 2–4		2
7	குருவி	இன்பம்								318: 3–8	1
		குடும்பம்		46:1–5							
				85:1–4							2
		மகிழ்வுணர்வு	303:11–14		184:1–3				308:1–6		3
8	கொக்கு	தாய்மை								342:8–11	1
		துன்பம்							290: 1–7		1
9	கோழி	அறிதல்		107:1–7							1
		பாதுகாப்பு		139: 1–6							1
		அச்சம்					8:7–21				1

வ.எண்	பறவைகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
10	கூகை	காதல்	218:7–8								
			319:4–5								2
		இன்பம்	319:4–5								1
		சமூகவுணர்வு								261:12–15	1
		துன்பம்				44:17–19			148:7–8		2
11	நாரை	காதல்	263:5–8								
			338:7–12								2
		தாய்மை	91:1–7 138–4		151–160 (10 பாடல்கள்)						12
		சமூகவுணர்வு	291:1–4						40:3–4		2
		துன்பம்		103:1–4							
				125:4–6							2
12	பருந்து	காதல்	33:5–6						245:11–15		2
		இன்பம்				35:4–5 36:8–10			117:6–9		3

வ.எண்	பறவைகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
		குடும்பம்							215:11–15		
									381:10–12		2
		தாய்மை							21:15–16		
									193: 5–10		
									31:10–12		3
		சமூகவுணர்வு							161:5–7		
									175:5		
									285:10–12		3
		அறிதல்							285:10–12		1
		அச்சம்	298:2–5 352:4–6						291:10–12		3
		துன்பம்		283:6–8	321:1–5				51: 2–6 81:9		4
13	புறா	காதல்	71:7–9						287:7–9		
			314:9–12						271:1–6		4

வ.எண்	பறவைகள்	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
		இன்பம்	162: 1–4		425:1–4				47:11–13		3
		குடும்பம்	384:1–4								1
		அச்சம்				39:10–13				43:5–8	2
		துன்பம்							271:1–8		1
14	மயில்	காதல்	288:2–3		425:1–2						2
		இன்பம்							85:11–13		1
		மகிழ்வுணர்வு	357:6–8						392:14–18		
			248: 7–8								3
		சமூகவுணர்வு						33:17–18		127:4	2
		வீரம்							108:13–15		
		அறிதல்			413:1–2				344:11–15		
									358:1–7		3
		அச்சவுணர்வு							378:5–11		1
		துன்பம்	177:8–11	244:4–5							2
15	முதுசீறல்	அறிதல்							106:1–6		1
	மொத்தம்		**33**	**12**	**20**	**4**	**1**	**8**	**44**	**5**	**127**

III. நீர்வாழ் உயிரினங்கள்– உணர்வுகள்

வ.எண்	நீர்வாழ்வன	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
1	ஆமை	குடும்பவுணர்வு							160:3–8		1
		தாய்மை			44: 1–2				117:15–16		
					43: 1–2						3
		மகிழ்வுணர்வு							256: 1–7		1
2	சங்கு	இன்பம்						135:1–2	264:1–3		2
3	நண்டு	இன்பம்						146: 22–24			1
		காதல்							380:4–8		1
		அச்சம்		117: 1–3					176:8–10		
				401:2–4							3
		அறிதல்			27:1–2				260:3–4		2
4	நத்தை	இன்பம்							266:4–5		1

வ.எண்	நீர்வாழ்வன	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
5	நீர்கோழி	இன்பம்			60:1–2						
					51:1–2						2
6	நீர்நாய்	காதல்							336: 2–5		1
		குடும்பம்							336:1–5		1
		மகிழ்வுணர்வு	195:1–3								
			390:1–2								2
7	தவளை				468:1–2						1

வ.எண்	நீர்வாழ்வன	உணர்வுகள்	நற்.	குறுந்.	ஐங்கு.	பதி.	பரி.	கலி.	அகநா.	புறநா.	மொத்தம்
8	மீன்	அச்சம்	211:3–8						276:1–4 46:1–4		3
